உனைச் சரணடைந்தேன்

சுபஸ்ரீ - கிருஷ்ணவேணி



முன்னுரை

அனைவருக்கும் வணக்கம்.

'உன்னைச் சரணடைந்தேன்' கதையுடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இந்த கதையின் கரு தோன்றியதில் இருந்தே எங்கள் இருவரின் மனமும் ஊசலாடிக் கொண்டு தான் இருந்தது... எழுதலாமா... வேண்டாமா என்பது மாதிரி சவாலான இந்தக் கதையை நீங்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் தர, எங்களாலான ஒரு சிறு முயற்சி.

இப்பொழுது கூட அன்றாடம் செய்திகளை வாசிக்கையில் இந்தக் கதையின் நாயகி மயூரிக்கு நடந்தது போன்ற ஏதாவது ஒரு நிகழ்வு நடந்து கொண்டிருப்பதைப் படிக்கிறோம். அதுவும் நம் சமுதாயத்தில் அந்தப் பெண்ணின் உணர்வைக் கூட புரிந்து கொள்ளாமல் பரபரப்பு செய்தியாக ஆக்கத்தான் முனைகிறார்கள்.

திரைப்படங்கள், சமுதாயப் பார்வை... எத்தனையோ பிடிக்காத விஷயங்கள். இந்த நிகழ்வின் அடிப்படையில் நடக்கின்றன. ஆனால் மயூரிக்கு... இத்தனைப் பிடிக்காத விஷயங்களையும் தாண்டி, மனம் விரும்பிய வாழ்வு அவளுக்கு சுலபமாக அமைகிறதா என்பதே கதை.

கதையைப் படித்து கருத்துக்களைத் தெரிவித்து உற்சாகப்படுத்தும் அத்தனை உள்ளங்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி!

உங்களது கருத்துகளையும், விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். எங்களது மின்னஞ்சல் skv.sriveni@ mail.com

நன்றி. வணக்கம்

- சுபஸ்ரீ - கிருஷ்ணவேணி

உன்னைச் சரணடைந்தேன்

1

''இறைவனிடம் கையேந்துங்கள்!
அவன் இல்லையென்று சொல்லுவதில்லை!!
பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள்!
அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை!!''

ஊட்டி செல்லும் வழியில் அமைந்திருந்த தேநீர் கடை வானொலியில், 'பிரார்த்தனை நேரம்' நிகழ்ச்சியிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்த பாடல், காற்றில் கலந்து மிதந்தது.

காரில் வந்து கொண்டிருந்த விஷ்ணுவின் சோர்வுற்ற கண்கள், ''ஊட்டி 15 கி.மீ.'' என்ற அறிவிப்பு பலகையைப்

பார்த்ததும் புத்துணர்ச்சி பெற்றன. குளிர்ந்த காற்றைச் குடான தேநீருடன் அனுபவிக்கத் தோன்றவும் காரை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கினான்.

விஷ்ணு சராசரியை விட உயரம் அதிகம். இங்கே உயரம் என்பது குறிப்பிடுவது வளர்த்தியை மட்டு மில்லை... குணத்தில், மனதில், நற்பண்புகளில் இப்படி எல்லா விஷயத்திலும். மேல்தட்டு வகுப்பைச் சேர்ந்தவன் என்பது அவன் வந்திறங்கிய விலை உயர்ந்த காரும், அணிந்திருந்த உடை, கைக்கடிகாரம் மற்றும் ஷூ ஆகியவை பறைசாற்றின.

காரில் இருந்து இறங்கியவன் கை, கால்களை ஸ்ட் ரெச் செய்துகொண்டு 'ஒரு ஸ்ட்ராங் டீ மாஸ்டர்' என்று சொல்லும் பொழுது அவன் கண்களில் சற்று தள்ளி யிருந்த பூச்செடி தெரிந்தது. கேமராவிற்கு வேலை வந்து விட்டது என்றெண்ணி எஸ்.எல்.ஆர். கேமராவுடன் மலர்ந்திருந்த மலரை நோக்கி விரைந்தான்.

புகைப்படம் எடுப்பது அவனுடைய பொழுதுபோக்கு. அதுவும் இயற்கையையும், யதார்த்தத்தையும் படம் பிடிப்பதில் மிகுந்த ஆர்வம். மிகுந்த ரசனையுள்ளவன் என்பதால் மனதில் மட்டும் பதிக்காது கேமராவின் கண் கள் வழியாகவும் பதித்துக் கொள்வான்.

மலர்களையும், வண்ணத்துப் பூச்சியையும் படம் எடுத்துக் கொண்டிருந்தவனை தேநீர் கடை பையன் அழைக்க, புருவத்தில் முடிச்சுடன் சென்றான் விஷ்ணு.

தேநீரை வாங்கிக்கொண்டு, ''என்ன தம்பி நீ இங்கே வேலை பார்க்கிறியா?'' என்று பேச்சு கொடுத்தான்.

''இந்தக் கடைக்குப் பின்னால் தாங்க எங்க வீடு இருக்கு. இன்னைக்கு ஸ்கூல் லீவு. அதான் அப்பாக்கு கொஞ்சம்

உதவியா இருக்கேன்'' என்று தயங்கித் தயங்கிச் சொன் னான் சிறுவன்.

பள்ளிக்குப் போகும் சிறுவனை வேலையில் அமர்த்தி இருக்கிறாரோ என்று சில நிமிடங்களுக்கு முன்னர் வந்த ஆத்திரம் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் போனது. மாறாக சிறுவனுக்கு தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் உடனே பிறந்தது.

தன் பையிலிருந்து பாக்கெட் டைரியை எடுத்தவன் அந்தச் சிறுவனிடம் விலாசத்தையும், படிப்பு பற்றிய விவரங்களையும் எழுதி தரச் சொன்னான். சிறுவனும் தந்தையிடம் கேட்டுவிட்டு விவரங்களை எழுதிக் கொடுத்தான்.

தேநீரை அனுபவித்தபடியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கவனம், எதிர்புறமிருந்த பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த ஊட்டிக்குச் செல்லும் பேருந்தில்... அதிலும் முக்கியமாக அந்த பேருந்தில் ஜன்ன லோரம் உட்கார்ந்திருந்த பெண்ணின் மேல் நிலைத்தது.

தன் தலையின் சுமையைக் கூட தாங்க முடியாமல் பேருந்து கம்பியின் மேல் தலையைச் சாய்த்து அமர்ந் திருந்தாள் அந்தப் பெண். வெளிறிய தோற்றம், உலகத் தில் உள்ள எல்லா சோகத்தையும் ஒன்றாக அனுபவிப்பது போன்ற பாவனையில் முகம், விரக்தியில் சோர்ந்த கண் கள் அல்லது ஏமாற்றத்தை பிரதிபலிக்கும் கண்கள், சிலை போன்று செதுக்கிய முக வடிவில் விஷ்ணுவின் கண்கள் நிலைத்தன.

அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்த விஷ்ணுவிற்கு ஏனோ தம்பூராவை மீட்டிக் கொண்டிருக்கும் மீரா சிலை நினைவலைகளில் வந்தது.

'எதற்காகப் பெண்ணே இத்தனை... ...து உடனடியாக மனதில் கேள்வி பிறந்தது. அவனது இயல்பான குணம் 'அந்தப் பெண்ணிற்கு உதவி செய்தால் என்ன விஷ்ணு?' என்று இரக்கப்பட்டது.

ஏனோ அவனால் யாரோ... எதற்கோ... எப்படியோ என்று இருக்க முடியவில்லை.

எஸ்டேட்டில் இருக்கும் பங்களாவிற்கு வந்து ஊட்டியைச் சுற்றிப் பார்க்க கிளம்பியதற்கு பின்னும் அந்த எண்ணத்தில் இருந்து விடுபட முடியவில்லை. மூன்று மாதத்திற்கு ஒரு முறை தேயிலை எஸ்டேட் கணக்கு வழக்குகள் மற்றும் தொழிலாளர்களுடன் கூட்டம் என்று ஏதாவது ஒரு காரணத்திற்காக வருவது வழக்கம் தான். அப்படி வரும் பொழுதெல்லாம் படர்ந்திருக்கும் இயற்கை அழகு விஷ்ணுவின் கேமராவிற்கு என்றும் தெவிட்டாமல் இருக்கும். ஆனால் இந்த முறை ஏனோ அந்தப் பெண்ணின் சோகத்தைப் பற்றியே மனம் சுற்றிக் கொண்டிருந்தது.

இதோ இப்பொழுது கூட தொட்டபெட்டா சிகரத்தின் அழகைத்தான் ரசிக்க வந்திருந்தான். ஆனால் அங்கேயும் அந்த பெண் கண் முன்னே வந்து நிற்கிறாள். காலையில் ஊட்டி ஏரியில் தெரிந்த மாதிரி தான் இப்பொழுதும் பிரமை என்று அலட்சியமாய் திரும்பிக் கொண்டான் விஷ்ணு.

பாலைவனத்தில் கண்களைக் கானல் நீர் ஏமாற்றுவது போல் இன்று இயற்கை கொஞ்சி விளையாடும் ஊட்டியில் அந்தப் பெண்ணின் பிம்பம் ஏமாற்றிக் கொண்டிருந்தது.

தன் மனதில் இருக்கும் எண்ணத்திற்கு கடிவாளமிட்டாலும் கண்கள் மீண்டும் அந்தப் பெண்ணின் பிம்பம் மெய் தானா என்று ஆங்காங்கே தென்பட்ட மக்களுக்கிடையே அலை பாய்ந்தன. இந்த முறை கண் முன்னே தெரியும் உருவம் பொய்யில்லை என்பதை மெய்ப்பிப்பது போல் அவள் சிறிது தொலைவில் நடந்து கொண்டிருந்தாள்.

கேமரா வழியாக இயற்கை அழகைக் கண்டு கொண்டிருந்தவனின் கண்களுக்கு அவள் முகத்திலிருந்த உணர்ச்சியற்ற தன்மை ஏனோ நெருடலாக இருந்தது. கேமராவை கண்களிலிருந்து எடுத்து விட்டு நாற்பது, ஐம்பது அடி தூரத்திலிருந்த அவளைப் பார்த்தான்.

பிரமை பிடித்தவள் மாதிரி சுற்றும் முற்றும் பார்க்காமல் கனவில் நடப்பது போல் நடந்துக் கொண்டிருந்தவளை நோக்கி விரைவாக நடையை எட்டிப் போட்டான் விஷ்ணு.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்து நடப்பவளைப் போன்ற பாவனையில் சென்றவளை விஷ்ணுவின் கால்கள் சிறிதே இடைவெளி கொடுத்து தொடர்ந்தன. அவளுடைய கால்கள் தற்கொலைப் பாறையை நோக்கி தான் சென்று கொண்டிருந்தன என்று விஷ்ணுவால் உணர முடிந்தது. ஆனால் அவள் சுய நினைவுடன் தான் நடக்கிறாளா என்று தெரியவில்லை.

அவன் பயந்த மாதிரியே தற்கொலைப் பாறையின் மிக அருகில் சென்றவளின் காதில் விழுமாறு சத்தமாக, பின்னால் இருந்தபடியே தன்னுடைய கைப்பேசியில் குரலை உயர்த்தி, ''ஹலோ! ஹலோ!'' என்று பேசுவது போல் வேகமாக முன்னேறினான் விஷ்ணு.

அவனின் குரலை சுற்றுப்புறம் நினைவுக்கு வந்தவளாக, 'இங்கே எப்படி...? என்ன காரியம் செய்யத் துணிந்

தேன்? இதற்காகவா ஊட்டிக்கு [illegible] கவனம் சிதறாமல் இருந்திருந்தால்...' என்ற உண்மை சுட உயரமான பாறையில் இருந்து லேசாக எட்டிப் பார்த்தவளுக்கு வயிற்றில் அமிலம் சுரந்தது.

கண்களை விரித்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வளின் அருகில் வந்திருந்த விஷ்ணு, ''கிட்டத்தட்ட ரெண்டாயிரம் மீட்டர்க்கு மேலே இருக்கும். எலும்பு கூட மிஞ்சாது'' என்று தகவல் சொன்னான்.

மிக அருகே செவியில் விழுந்த ஆழமான குரலில், கூறிய தகவலில் உச்சி முதல் பாதம் வரை நடுங்கியது. மேலும் அருகில் நின்றவன் தன் கவனத்தைச் சிதறடிக்கும் முயற்சியில் வெற்றி அடைந்திருக்கிறான் என்பதும் தெளிவாக விளங்கியது அந்த அபலைப் பெண்ணிற்கு.

அவளுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் ஆண் களையே வெறுத்து ஒதுக்கியவள், ஒன்றும் பேசாமல் யாரிடமோ அவன் பேசிக் கொண்டிருக்கிறான் என்ற பாவனையில் ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை விட்டு நகர முயன்றவளிடம், ''இந்த உலகத்தில் யாருக்கு தான் பிரச்சனையில்லை? தற்கொலை செய்வதால் மட் டும் எல்லாம் சரியாகிடுமா?'' என்று விளக்கம் கேட்டான் விஷ்ணு.

தற்கொலை செய்து கொள்ளும் எண்ணமே தனக்கு க்ஷண நேரத்தில் தோன்றிய முடிவு... என்று இவனிடம் நிலைமையை விளக்கவா முடியும்?

மௌனமாக நடப்பவளைத் தொடர்ந்து கொண்டிருந் தான் விஷ்ணு.

அவனைப் பொறுத்தவரை மரணத்தின் விளிம்பை ஒருமுறை எட்டிப் பார்த்தவர்களின் மனநிலை மீண்டும் உயிரை மாய்த்துக் கொள்ள உந்தும் என்பது அனுபவத் தில் கண்ட உண்மை. அதனால் அந்தப் பெண்ணிடம் பேசி பிரச்சனையைப் பற்றி தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அவளிடம் பேச்சுக் கொடுத்தபடியே தொடர்ந்தான் விஷ்ணு.

பொறுமை எல்லையை மீறவும் ஆவேசமாக திரும்பி, ''மிஸ்டர்! நான் உங்ககிட்ட சொன்னேனா தற்கொலை பண்ணிக்கப் போறேன்னு? நீங்களா கற்பனை செய்துட்டு பின்னாடியே வந்துட்டு இருக்கீங்க? போங்க சார். போய் உங்க வேலையைப் பாருங்க. இருக்கிற பிரச்சினையில் நீங்க வேற உயிரை வாங்கறதுக்கு...'' என்று வெடித்தாள்.

''ஏங்க பிரச்சனையை உயிர் கூடவே சம்பந்தப்படுத்தி பேசறீங்க?'' விஷ்ணு ஏற்ற இறக்கங்களுடன் கேள்வி தொடுத்தான்.

''தெரியாமல் பேசிட்டேன் சார். மன்னிச்சிடுங்க'' என்று மொழிந்துவிட்டு வேகமாக நடந்தாள்.

''ஐ அம் விஷ்ணு. நான் நேராவே விஷயத்துக்கு வரேன். உங்களுக்கு என்ன பிரச்சனை? அதுவும் உயிரை விடற அளவிற்கு...?'' பதில் கிடைக்காதா என்ற நப்பாசை யில் ஏற்கனவே தொடுத்திருந்த கேள்வியை வித்தியாச மாக வினவிக் கொண்டிருந்தான் விஷ்ணு.

'கொடுமை கொடுமைன்னு நிம்மதியா இருக்கலாம்னு இங்கே வந்தால் அங்கே ஒரு கொடுமை கேள்வி கேட்டு துளைச்சு எடுக்குதே?' என்று எண்ணியபடியே நடந்த வளை சளைக்காமல் தொடர்ந்தான் விஷ்ணு.

மாலை சூரியன் அஸ்தமிக்கும் நேரம் கடக்கும் வேளை யில் கூட பின் தொடரும் படலம் தொடரவும் அந்தப் பெண்ணிற்கு எரிச்சலாய் வந்தது.

ஒரு கட்டத்தில் விஷ்ணுவின் தொல்லை பொறுக்க முடியாமல், ''இப்போ உங்களுக்கு என்ன வேணும்? இதுக்கு மேல் என்னை தொடர்ந்தால் போலீசுக்குப் போக வேண்டியதா இருக்கும்'' என்று மிரட்டினாள்.

''போலீசுக்குத் தானே? வாங்க ரெண்டு பேருமே போக லாம். சட்டப்படி பார்த்தால் நீங்கள் தற்கொலை செய்யத் துணிந்தது குற்றம். அதையும் ஞாபகத்தில் வைச்சுக் கோங்க'' என்றான் அழுத்தம் திருத்தமாக.

அவனது கேள்வியில் உஷ்ணப் பார்வையை செலுத்திக் கொண்டிருந்தாள் அவள்.

விஷ்ணுவின் தோற்றத்தில் பரிச்சய உணர்வு தோன்று கிறதா? அல்லது அவனிடம் வெகுநாள் பழகியது போன்று எண்ணம் எழுகிறதா? அவன் கண்ணோடு கண் பார்த்துக் கேட்கும் தொனியில் கட்டாயம் கள்ளமோ, கபடமோ உணர முடியவில்லை.

அவனது கூர்ப்பார்வை அவளை ஆவேசப்பட வைத்தது. தப்பு செய்யாமல் குற்றம் சுமத்தப்பட்டதில்... சுமப்பதில் கோபம் பொங்கியது. இந்தப் பரிச்சயமும், விஷ்ணுவின் குரலில் இருந்த குற்றச்சாட்டும் அந்தப் பெண்ணின் மௌனத்தை உடைத்ததோ? இல்லை யாரிடமும் கூறா மல்... கூற முடியாமல் மனதில் அழுத்திக் கொண்டிருக் கும் உணர்வுகளுக்கு விடுதலை தேவைப்பட்டதோ?

குரலை உயர்த்தி, ''ஆமாம். நான் உயிரை விடறது தான் சட்டத்துக்கு குற்றமா படுது இல்ல? அந்தக் குற்றத்தை செய்றதுக்கு என்னை ஆளாக்கியவன் சட்டத்துக்கு முன்னாடி நிரபராதி.

உயிரை விட மானம் தான் பெருசுன்னு வளர்க்கப் பட்ட நான் குற்றவாளி! திட்டம் போட்டு என்னை நாசம்

பண்ணியவன் சட்டத்துக்கு முன்னாடி நியாயஸ்தன். அவன் உத்தமன்... யார் வேணாலும் ஏன் எல்லாருமே உத்தமனா இருந்துட்டுப் போகட்டும். உண்மையை நிரூபிக்க வழி இல்லாமல், போராடத் தெம்பு இல்லாமல் உயிரை விட நினைக்கிறவனைத் தான் இந்த சட்டம் குற்றவாளியா பார்க்குதுனா அரஸ்ட் மீ... அரஸ்ட் மீ. ஐ அம் எ கிரிமினல்... ஹேங் மீ...'' என்று முகத்தை மூடிக் கொண்டு தேம்பினாள்.

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் கோபம் வெளிப்பட்டது.

கோபத்தை மிஞ்சிய வருத்தம் அவள் மனதில் புதைந்து கிடந்தது. வருத்தத்தை யாரிடமும் பகிர்ந்து பச்சாதாபம் தேடிக் கொள்ள மயூரி என்றும் நினைத்ததில்லை. இத் தனை நாட்கள் யாரிடமுமே சொல்லாத ரகசியங்களை இதுவரை அறியாத மூன்றாம் மனிதனிடம் சொல்லிக் கொண்டிருக்கிறோமே என்ற உணர்வு கூட இப்பொழுது அவளுக்கு இல்லை.

ரசாயன மாற்றத்திலும், உணர்ச்சிகளின் போராட்டத் திலும் தத்தளித்தவளுக்கு... விஷ்ணுவிடம் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி உறைக்கவே யில்லை.

விஷ்ணுவிற்கு நிலைமை ஓரளவு புரிந்தது. சற்று முன் நிகழ்ந்தது ஆற்றாமையின் வெளிப்பாடு. ஏமாற்றத்தை மட்டும் சந்தித்துக் கொண்டிருக்கும் மனதின் ஓலம். இருக்கும் நிலைமையில் அவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று தெரியவில்லை. காலையில் பார்த்த சிறுவனுக்கு பணப் பிரச்சனை என்பதால் எளிதாக உதவி செய்வதற்கான தீர்வு காண முடிந்தது. ஆனால் இந்த பெண்ணிற்கு?

தன்னுடைய கைக்குட்டையை நீட்டியபடியே விஷ்ணு, ''ஐ அம் வெரி சாரி. அழாதீங்க. உங்க நிலைமை புரியுது. ஏதாவது யோசிச்சு நல்ல முடிவா எடுக்கலாம். ஐ அம் ரியலி சாரி.'' என்றான் ஆத்மார்த்தமாக.

இத்தனை நாள் அழாமல் இன்று கண்ணீர் வடித்தது மனதில் இருந்த பாரத்தை துளியளவு குறைத்திருந்தது என்றாலும் யாரோ ஒரு புதியவனிடம் அத்தனையையும் கொட்டி தீர்த்து விட்டோமே என்ற கவலை அதற்கு ஈடு கட்டியது.

மீண்டும் கோபம் தலைத்தூக்க ஆண்களிடமிருந்த வெறுப்பு முழு அளவில் வெளிப்பட, ''நீங்க யாரு சார்? நீங்க எதுக்கு இதைப் பத்தி யோசிக்கணும்? உங்ககிட்ட நான் எதுக்கு எதுவும் சொல்லணும்?'' என்று வார்த்தைகளே கண்களில் அனல் பறக்க கடித்துத் துப்பினாள்.

அதைப் புரிந்தவனாக, ''என்கிட்டே சொன்னது புதுசா எந்தப் பிரச்சனையையும் கிளப்பும்னு பயப்படாதீங்க. உங்க பேர் என்ன? நடந்ததைப் பத்தி கொஞ்சம் விளக்கமா சொன்னால் ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமான்னு பார்க்கலாம்'' என்று மீண்டும் பழைய பல்லவியை தொடங்கிய விஷ்ணுவின் மீது அவளுக்கு இப்போது எரிச்சல் மூண்டது.

இவன் போனால் போதுமென்ற நினைப்பில் யார், எவர் என்ற எண்ணமில்லாமல் தன் அவலத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

''என் பெயர் மயூரி'' என்று சொல்லிவிட்டு வீசிய குளிர் காற்றுக்கு ஏதுவாக தன் சால்வையை சரி செய்து கொண்டாள்.

'அதுதான் ஆத்திரத்தில் உண்மையைக் கொட்டித் தீர்த்தாச்சே? இனிமேல் என்ன தயக்கம்?' என்ற சிந்

தனை எழ மெல்லிய குரலில் தன் பிரச்சனையை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தாள் மயூரி.

''எனக்கு கோயம்புத்தூர் பக்கத்தில் அவினாசி தான் சொந்த ஊர். எங்க குடும்பம் சாதாரண மிடில் க்ளாஸ் குடும்பம். நான் தான் மூத்தவள். எனக்கு அப்புறம் ஒரு தங்கை, தம்பி இருக்காங்க. சின்ன வயசில் இருந்து டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி பக்கத்திலேயே வளர்ந்ததா என்னனு தெரியலை, எனக்கு டிரஸ் டிசைனிங் மேல் ரொம்ப ஆர்வம். அது சம்பந்தமா படிச்சு நானும், என்னோட பிரண்டும் சேர்ந்து கோயம்புத்தூரில் 'ஃபேஷன் டுடே' என்ற பொட்டிக் ஷாப் ரெண்டு வருஷமா நடத்திட்டு இருந்தோம். கடைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அந்த மாதிரி கடைக்கு வந்த கஸ்டமர் தான் பிரசாத்.''

அந்தப் பெயரைச் சொல்வதைக் கூட அருவருப்பாக உணர்ந்தாள் மயூரி.

'ஃபேஷன் டுடே' பொட்டிக் ஷாப் நடத்திட்டு இருந்தது இந்த பெண் தானா? என்ற கேள்வி மனதில் தோன்ற மௌனமாய் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான் விஷ்ணு.

''பிரசாத் கடைக்கு வரும்போது தங்கைக்குப் புடவை டிசைன் பண்ணனும் என்று சொல்லி தான் நாலஞ்சு ஆர்டர் கொடுத்தான். அப்புறம் வேலை பார்க்கிற இடம் பத்தி... வீடு மாத்தறது பத்தி ஐடியா கேட்டு, உடம்பு சரியில்லாமல் இருக்கிற அப்பா பத்தி வருத்தப்பட்டுன்னு கொஞ்சம் கொஞ்சமா நட்பா பழக ஆரம்பிச்சான். நானும் ரொம்ப மரியாதையானவன்னு தான் பிரண்டா பழகினேன். ஒரு நாள் வீட்டில் இருந்து கடைக்கு வரும் போது வழியில் பார்த்து கம்பெனி காரில் டிராப் பண்றதா சொல்லிக் கூப்பிட்டான். அது வரைக்கும் தான் தெளிவா

ஞாபகம் இருக்கு விஷ்ணு. அதுக்கப்புறம் என்ன நடந்ததுன்னே தெரியலை. நினைவு வரும்போது ஒதுக்குப்புற ஏரியாவில் இருந்த பங்களாவில் இருந்தேன். நான்... நான்... என்னை...'' முடிக்க முடியாமல் குரல் பிசிறியது. கண்களில் கண்ணீர் மின்னியது.

''மயூரி! அந்த பிரசாத் தான் திட்டம் போட்டு...?'' விஷ்ணுவிற்கும் கேள்வியை முடிக்க முடியவில்லை.

''பிரசாத்... அந்தப் பெயர் கூட உண்மையான்னு தெரியலை. ஏனா அவன் சொன்னதில் மத்த எல்லா விஷயமுமே பொய் தான். அவன் வேலை பார்த்த இடம், அவன் சொன்ன வீட்டு ஏரியா. அப்பாக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்த ஹாஸ்பிடல், தங்கை படிச்ச காலேஜ் எல்லாமே பொய். எல்லாமே அவனுடைய கற்பனை... அவனுடைய திட்டத்தில் ஒரு பாதின்னு விசாரிக்கும்போது தான் தெரிஞ்சது'' மயூரியிடமிருந்து சோர்வாக வெளி வந்தன வார்த்தைகள்.

''அந்த வீடு? அதைப் பத்தி விசாரிச்சீங்களா?''

''அதுவும் விசாரிச்சுட்டேன். அந்த வீட்டு ஓனர் வெளி நாட்டில் இருக்கானாம்.''

எடுத்த முயற்சியில் எல்லாம் முட்டுக்கட்டை விழுந்ததால்தான் இந்தப் பெண் தற்கொலை முயற்சியில் இறங்கினாளா? மனதில் தோன்றிய கேள்வியை மயூரியிடமே வினவினான் விஷ்ணு.

மயூரிக்கே பிரச்சனைகளின் சுமையை இறக்கி வைக்க ஓர் இடம் தேவைப்பட்டதா? ஆறுதலைத் தேடி தான் மனம் காலையில் இருந்து கால்கள் போன போக்கில் சென்று கொண்டிருக்கிறதா? யாரிடமாவது கொட்டினால் சிறிதாவது மன இறுக்கம் போகாதா என்ற நப்பாசையில்,

யார் எவரென்றே தெரியாத மூன்றாம் மனிதனிடம் ரயில் சிநேகிதமாய் நினைத்து அனுபவிக்கும் கஷ்டங்களைத் துளியும் கற்பனை இல்லாமல் சொன்னாள்.

''ப்ச். இல்லை. இந்த விஷயத்தைக் கெட்ட கனவா நினைச்சு மறக்கணும்னு என்னாலான முயற்சியில் இறங்கினேன். ஆனால் அந்த கசப்பான சம்பவத்தின் ஞாபகார்த்தமாக என்... என்... வயிற்றில் ஒரு ஜீவன் உருவாகியிருக்கு. அதுக்கு நாற்பது நாள் ஆயுள்'' வார்த்தைகள் தடுமாற, முகம் அவமானத்திலும் வெறுப்பிலும் சுருங்க, தன் பலம் அத்தனையும் இழந்து தொய்ந்தவள் போன்று கூறினாள்.

விஷ்ணுவிற்கு முகம் பாறாங்கல்லாய் இறுகியது. தவறே செய்யாமல் தண்டனை அனுபவிக்கும் இந்தப் பெண்ணின் நிலை கலங்க வைத்தது.

''நாங்க சமூகாயத்துக்கு பயந்து வாழும் சாதாரணமான வங்க. எங்க அம்மாக்கு இந்த விஷயம் தெரிஞ்சால்... என்னால் நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை. இந்த நிலைமையில இருந்து வெளிவரதுக்கு நான் கொலைகாரி ஆகணும். இல்லை தைரியமான பொண்ணுன்னு போர்வையில் இருந்து என் தங்கை வாழ்க்கையையும் நாசப்படுத்தணும். ரெண்டுமே சுயநலமான முடிவு. என்னால் இந்த ரெண்டு முடிவுமே எடுக்க முடியலை.''

''அதனால் தற்கொலை செய்துக்கலாம்னு முடிவு செய்துட்டீங்களா மயூரி?''

'நான் சொல்வதில் நம்பிக்கையில்லையா இவனுக்கு? எத்தனை முறை தற்கொலை செய்வதற்காகத் திட்டம் போட்டு வரவில்லை என்று சொல்லியாச்சு?' மனதில் எழுந்த ஆத்திரத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்தினாள்.

ஆனால் அவள் புருவ முடிச்சை தவறாக யூகித்த விஷ்ணு, ''மயூரி! என்னை தப்பா நினைக்காதீங்க. அங்கே என்கூட கல்யாணம் ஆன தம்பதி இருக்காங்க. இல்லாட்டி இங்கே எனக்குத் தெரிஞ்ச இடத்தில் உங்களை பாதுகாப்பா தங்க வைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?'' என்று முடிவை அவளிடமே வினவினான்.

2

மயூரியும், விஷ்ணுவும் பேசிக் கொண்டிருக்கும் போதே இருட்டி விட்டிருந்தது. தன் தோழியும் இங்கு இல்லாததால் இதற்கு மேல் எங்கு போவதென்று தெரியவில்லை. வீட்டில் ஒரு வருடப் படிப்பிற்காக வெளியூர் போவதாகச் சொன்னதால் அங்கும் திரும்பிச் செல்ல முடியாமல் யோசனையில் இருந்தவளை விஷ்ணு தன்னுடைய விருந்தினர் மாளிகையில் தங்கச் சொல்லவும் தொடக்கத்திலேயே மறுத்தாள்.

என்னதான் விஷ்ணு நல்லவனாகத் தெரிந்தாலும் சூடு கண்ட பூனையின் நிலையில் இருக்கும் பொழுது மறுக்கத்தானே அவளால் முடியும்?

அவளின் குழப்பத்தை அறிந்தவன், ''இல்லாட்டி வாங்க! ஒரு ஹோட்டலில் டிராப் செய்யறேன். காலையில் உங்க பிரண்டை பார்த்துட்டு அப்புறம் எதுவானாலும் முடிவு செய்ங்க'' என்றான்.

ஏற்கனவே லேசான அறிமுகமான ஒருவனுடன் காரில் பிரயாணம் செய்ததற்கு தான் கை மேல் பலன் கிடைத்திருக்கிறது. இதில்... இப்போது யாரென்றே தெரியாத இவனுடனா? 'போதுமடா தான் பட்டது.' என்றெண்ணம்

''உங்களை நம்பாமல் இல்லை'' என்று வார்த்தைகளில் விளக்கியவன், 'அப்போ சூசைட் பாயிண்டில் இருந்து ஊட்டி எவ்வளவு அடி உயரத்தில் இருக்குன்னு பார்த்தீங்களா?' என்று அர்த்தப் பார்வை வீசினான்.

''தற்கொலை செய்யணும்னு வரலை வி... வி... வி.''

இப்பொழுது தான் அவனது பெயரை உபயோகிக்கவே தயக்கம் வந்தது அவளிற்கு. சற்று முன் சரளமாக அவனது பெயரைக் கூப்பிட்டது. நினைவலைகளின் எல்லைக்குள்ளேயே வரவில்லை. சுமையை இறக்கி வைப்பதில் மும்முரமாய் இருந்ததில் பெயர் சொல்வது பற்றி சிந்தனை எழவில்லையோ?

''வி.வி.வி. இல்லைங்க. வி-ஷ்-ணு'' என்று சொல்பவனின் கிண்டலை அலட்சியம் செய்துவிட்டு, ''என்னுடைய பிரண்ட் மேட்டுப்பாளையத்தில் ஒரு ஆஸ்ரமத்தில் இருக்கிறாள். அவளைத் தேடித் தான் வந்தேன். ஆனால் அவள் இன்னைக்கு ஊட்டிக்கு வந்துட்டாளாம். சரி... ஊட்டியில் அவளைப் பார்த்துக்கலாம்னு ஒரு நம்பிக்கையில் கிளம்பி வந்துட்டேன். கண்ணில் ஏதோ 'ஹையஸ்ட் பாயிண்ட்' என்று அறிவிப்பு பலகை பார்த்தது வரைக்கும் நினைவு இருக்கு. அதுக்குப் பிறகு நீங்க போனில் சத்தமா பேசும் போது தான் சுய நினைவே வந்தது'' என்றாள்.

தாடையை யோசனையாக வருடியபடியே, ''யோசிச்சு முடிவு பண்ணலாம். நாளைக் காலை வரை டைம் கொடுங்க. அதுவரைக்கும் உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் என்னுடன் கெஸ்ட் ஹவுசில் தங்கிக் கோங்க'' என்று சொல்பவனை முதல் முறையாக புருவத்தில் முடிச்சுடன் பார்த்தாள்.

முதன் முறையாகப் பார்க்கும் இந்த விஷ்ணு தாடையை யோசனையாக வருடுவது கூட பரிச்சயமாகவே இருக்கிறதே?

எழு முகத்தைக் கல்லென வைத்துக் கொண்டு, ''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? நான் எப்படி வந்தேனோ அப்படியே போய் கொள்வேன்'' என்றாள் உறுதியோடு.

அவளின் எண்ண ஓட்டங்கள் புரிய விஷ்ணுவின் முகமும் இறுகியது.

''நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு புரியுது. என்னைப் பற்றி உங்களுக்கு இப்போது நல்லா தெரியாது தான். ஆனால் என்னை நம்பி வரலாம். இதுக்கு மேல் இந்த நேரத்தில், இந்த இடத்தில் தனியா இருப்பது அத்தனை நல்லதில்லை. சுற்றிப் பாருங்க'' என்றான்.

அப்போதுதான் சுற்றிலும் பார்வையை ஓட்டியவளின் கண்களில் வாட்ட சாட்டமான நாலைந்து நபர்கள் தென்பட்டார்கள். பயத்தோடு பார்த்தவளிடம், ''பயப்படாம என் கூட வாங்க'' என திரும்ப வற்புறுத்தவும் மயூரியும் அதற்கு ஒப்புக் கொண்டாள்.

ஒரு வயது பெண்ணை அந்த சூழ்நிலையில் அங்கே தனியே விட விஷ்ணுவிற்கு விருப்பமில்லை. அதுவும் இவள் வேறு தற்கொலைக்கு முயற்சி செய்தவள். அது இன்னமும் ஆபத்தானது என்றெண்ணியே மயூரியை அந்த இடத்தில் அந்த நேரத்தில் தனித்துவிட விஷ்ணு யோசித்தான்.

சீசன் நேரம் என்பதால் தரமான ஹோட்டலிலும், டூரிஸ்ட் ஹோம்களிலும் ஏற்கனவே மக்கள் நிறைந்திருக்க, இரண்டாம் தர ஹோட்டலில் மயூரிக்கோ... இல்லை அவளை அங்கு விட விஷ்ணுவிற்கோ மனமில்லாமல் மீண்டும் விருந்தினர் மாளிகையில் தங்குமாறு வற்புறுத்தினான்.

''நீங்க இன்னைக்கு மட்டும் அங்கே தங்கிக்கோங்க மயூரி. துணைக்கு உங்க கூடவே என் வீட்டில் இருக்கும்

கேர் டேக்கர் ராணியும் இருப்பாங்க. பயப்படாதீங்க'' என கொஞ்சம் வற்புறுத்தலோடு தைரியம் சொல்லி சம்மதிக்க வைத்தான்.

விருந்தினர் விடுதிக்குப் போனதும் ராணியை அழைத்து தேவையானதை மட்டும் கூறி மயூரியை அறிமுகப்படுத்தினான். மயூரிக்கு புது இடம் என்ற காரணத்தைச் சொல்லி, துணையாக ராணியை அங்கேயே இருக்கப் பணித்தான்.

ராணி இரவு உணவு எடுத்து வைக்க உள்ளே போய் விட விஷ்ணு, ''நீங்க சாப்பிட்டு படுத்துக்கோங்க. உங்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. எனக்குக் காலையில் எஸ்டேட் மேனேஜர் கூட மீட்டிங் இருக்கு. அதுக்குப் பிறகு பேசலாம். குட் நைட்'' என்று கூறி விடை பெற்றான்.

அவன் போன திசையைப் பார்த்தபடி இருந்தவள் ராணியின் குரலுக்குத் திரும்பினாள். ராணியின் பேச்சு இரவு படுக்கப் போகும் வரையில் தொடர்ந்தது.

''நல்லா அழகா இருக்கீங்கம்மா. பேரு கூட நல்லாயிருக்கு. பேருக்கு ஏத்த மாதிரியே உங்க முடி கூடம்மா.''

அழகைப் பற்றி ராணி கூறியதும் 'இது தானே எனக்கு இத்தனை கேட்டையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறது.' என எண்ணியவள் அழகு என்ற வார்த்தையையே வெறுத்து முகத்தைச் சுழித்தாள்.

ராணியும் அவளின் பேச்சிற்குப் பதில் எதையும் எதிர்பார்த்தது போல் தெரியாததால் மயூரியும் மௌனம் சாதித்தாள்.

''எங்கேம்மா அய்யாவை முதலில் சந்திச்சீங்க?'' ஏதேதோ கற்பனையில் மேலும் ஆர்வமாக துருவினாள் ராணி.

''ஊட்டியில் தான்!'' என்று ரெட்டை வார்த்தையில் பதில் அளித்தாள் மயூரி.

மேலும் பேச்சை வளர்க்காமலிருக்க உறக்கம் வருவதாக மயூரி கூற, நாளைக்கு மீதியை தொடரலாம் என்ற நினைப்போடு ராணியும் உறங்கச் சென்றாள்.

காலையில் மயூரி விழித்தெழும் போதே விஷ்ணு அவனின் காலை நேர உடற்பயிற்சியை முடித்து, வியர்வை சிந்த தோளில் ஒரு துண்டைச் சுற்றிப் போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தான்.

''குட் மார்னிங் மயூரி! நைட் நல்லா தூங்கினீங்களா?'' என வீட்டுக்கு உடையவனாக விசாரித்தான்.

தன் நிலையை எண்ணி வேதனையோடு, ''மம்'' மட்டும் கொட்டினாள் மயூரி.

''ஓகே! மயூரி! நேத்தே சொன்ன மாதிரி இப்போ இன்னும் கொஞ்சம் நேரத்தில் மேனேஜர் வருவார். அதுக்குப் பிறகு நாம கட்டாயம் பேசலாம். குளிச்சுட்டு சாப்பிடுங்க'' ராணியிடமும் கூறிவிட்டு உள்ளே சென்றான்.

ஒன்பது மணி அளவில் எஸ்டேட் மேனேஜர் ஆறுமுகம் வர, நலன் விசாரிப்பெல்லாம் முடிந்து அவருடன் அலுவலக அறையில் ஐக்கியமானான் விஷ்ணு.

ராணி காபி கொடுக்க உள்ளே சென்றபோது திறந்த கதவின் வழியாக ஆறுமுகம் பேசியது மயூரியின் செவியில் விழுந்தது.

''நீங்க போன முறை வந்திருந்தபோது சொன்னது மாதிரி குரூப் இன்சூரன்ஸ் எடுக்க நடவடிக்கை எடுத்துக்கிட்டு இருக்கேன் தம்பி. ஆனா வேலை செய்றவங்கதான் அவங்களும் பணம் போடணுமேன்னு கொஞ்சம் யோசிக்கறாங்க. நீங்க வந்து பேசினா ஒத்துக்குவாங்கன்னு நினைக்கிறேன்'' என்றார் ஆறுமுகம்.

அவர் கூறியதை காதில் வாங்கியவன், ''போன மாசம் அடிபட்ட கோபாலுக்கு இப்போ எப்படி இருக்கு? அவங்க வீட்டுக்கு தேவையானதெல்லாம் சரியான நேரத்தில் செய்துடுங்க. கோபாலையே உதாரணமா காட்டி, அவர் இன்சூரன்ஸ் வைச்சிருந்தா இப்போ இவ்வளவு செலவு செய்ய வேண்டியதில்லை. அதிலும் முக்கால்வாசிக்கு மேல நானே செய்றேன் என்று எடுத்துச் சொல்லும் போது ஒத்துக்குவாங்கன்னு தான் நினைக்கிறேன் சார்'' என்றான் விஷ்ணு.

காதில் விழுந்த இந்தப் பேச்சுகளைக் கேட்டபடி ஹாலிலிருந்த சாமான்களை மாற்றி அடுக்கிக் கொண்டிருந்தாள் மயூரி.

''சரி தம்பி! பார்க்கலாம். நீங்க வரும்போது எந்த ஃபைலாவது எடுத்து வைக்கச் சொல்வாங்க?'' என்று நினைவூட்டினார் ஆறுமுகம்.

''போன தடவை போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்கிட்ட அப்ரூவ் வாங்கின ஃபைலை எடுத்து வைங்க. கொஞ்சம் பார்க்க வேண்டியதா இருக்கு.''

''கட்டாயம்'' என்று விடைபெற்றுக் கிளம்பினார் ஆறுமுகம்.

அவர் வெளியே வந்ததும் அவசரமாக ஆறுமுகத்தை அழைத்த விஷ்ணு, ''ஒரு நிமிஷம் சார். நேத்து ஒரு பையனை இங்கே ஊட்டி வரும் வழியில் பார்த்தேன். அவன் அப்பாவோட டீ கடையில வேலை செய்துகிட்டு இருந்தான். நான் மறக்கறதுக்கு முன்னாடி இந்தாங்க அந்த பையன் பேரும், அட்ரஸும். ஆபீஸில் கொடுத்து நம்ம டிரஸ்ட் கிட்ட சேர்த்துடுங்க. அதோட ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன் பிரகாரம் அந்தப் பையனுக்கு

உதவி செய்யற மாதிரி இருந்தால் சந்தோஷம் தான்'' என்று நேற்று வாங்கியிருந்த விவரத்தை ஆறுமுகத்திடம் கொடுத்தான்.

ஆறுமுகம் அந்த குறிப்பை பத்திரப்படுத்திவிட்டுச் செல்ல, ஹாலிற்கு வந்த விஷ்ணு மயூரியின் கை வண்ணத்தில் அது அழகுற மாறியிருந்ததைப் பார்வையிட்டான்.

''உங்களுக்கு எதுக்கு மயூரி இந்த வேலையெல்லாம்? கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாமில்ல?'' என்றான் அக்கறையாக.

''எனக்கு இதான் ரொம்பப் பிடிச்ச வேலை. சும்மா இருந்தால் தான் மனசு தேவையில்லாத வேலையெல்லாம் செய்யுது'' என்றாள் வெறுப்பாக.

சிறிது நேரம் அமைதிக் காத்தவன் மென்மையாக, ''சாப்பிட்டீங்களா? வாங்க சாப்பிடலாம்'' என்று அழைத்து உணவுண்ண அமர்ந்தவன், ''இப்போ போனால் உங்க பிரண்டை பார்க்க முடியுமில்ல?'' என்று விசாரித்தான்.

உணவை முடித்து இருவரும் மயூரியின் தோழி சுமதி வேலை செய்யும் ஆதரவற்றோர் இல்லமான கருணை இல்லத்துக்குச் சென்றார்கள்.

சுமதியைப் பார்க்க வேண்டுமென்று கூறி காத்திருந்த நேரத்தில் அங்கு இருந்தவர்களைப் பார்வையிட்டனர் இருவரும். சின்னஞ்சிறு மழலைகள், பருவம் எய்திய பெண்கள், கணவனை இழந்தவர்கள் என்று அங்கு விதவிதமான மனிதர்கள். எல்லோரையும் இணைக்கும் பொதுவான விஷயம் எல்லோரும் ஒவ்வொரு விதத்தில் இந்த உலகத்தில் தனித்து விடப்பட்டவர்கள் என்பது தான்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த மதர் சுப்பீரியர் மேரி அவர்களை உள்ளே அழைத்து, ''நீங்க யாரும்மா? சுமதி இங்கே இல்லையேம்மா. அவள் நேற்று தான் இரண்டு மாதம் ட்ரைனிங்கிற்காக சென்னை சென்றிருக்கிறாள்'' என்று தகவல் கொடுத்தார் அந்த அன்பானவர்.

சுமதி இல்லையென்று கேள்விப்பட்டதும் முகம் வேதனையில் சுருங்க நின்றிருந்தவளைப் பார்த்து மனம் கனிந்தவராய், ''நான் எந்த விதத்திலாவது உனக்கு உதவ முடியுமா மை சைல்ட்?'' என்று கேட்டார்.

உடல் அவமானத்தில் குறுக, கண்கள் கலங்க, இவரை விட்டால் தனக்கு வேறு வழியில்லையென்று உணர்ந்து மெல்லிய குரலில் தன்னைப் பற்றி சுருக்கமாக கூறினாள் மயூரி.

''நீங்க தான் மதர் எனக்கு ஹெல்ப் செய்ய வேண்டும். ப்ளீஸ் ஹெல்ப் மீ'' என்றாள் குரல் கேவ.

''மை சைல்ட்! கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கட்டும். ஆனால் இங்கே எந்த சொந்தமுமே இல்லாதவர்கள் தான் இருக்க முடியும்மா. உனக்கோ திட்டினாலும் அதட்டினாலும் ஏன் என்று கேட்க பெற்றோரும், உடன் பிறந்தோரும் இருக்கிறார்கள். உனக்கு உதவ முடியவில்லை என்று எனக்கும் மிகவும் வருத்தமாகத் தான் இருக்கிறது. ஆனால் உன்னால், எங்களால் வேறு ஒரு ஜீவனுக்கு உதவ முடியாமல் போகலாம். நான் சுமதியின் விலாசம் வேண்டுமானால் கொடுக்கிறேன். இப்போதைக்கு என்னால் அதைத்தான் செய்ய முடியும். என்னை மன்னித்து விடும்மா'' என்றார் மதர்.

இருந்த கடைசி வழியும் அடைந்து விட்டதை உணர்ந்த வளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வர, அதை

கட்டுப்படுத்தி, ''மதர்! ப்ளீஸ்! உள்ளே தங்க தானே முடியாது? நான் வெளியே எங்கேயாவது தங்கிக் கொண்டு இங்கே வேலையாவது செய்கிறேன் மதர். ப்ளீஸ்!'' என்று கெஞ்சினாள் மயூரி.

அவளை இரக்கமாகப் பார்த்து, ''நாங்கள் வெளியில் இருந்து வேலைக்கு ஆள் எடுக்கும் நிலையில் இல்லை. உள்ளே இருக்கிறவர்கள் தான் வேலையையும் செய்ய வேண்டும். எங்களுக்கு ஆள் தேவைப்பட்டால் நான் சொல்லி அனுப்புகிறேன். மயூரி உன் விலாசத்தை கொடும்மா'' என்று கேட்டார்.

மயூரி ஒன்றும் கூறாமல் இருக்க, விஷ்ணு தன் எண்ணையும் விலாசத்தையும் கொடுத்து, ''மதர்! இது என்னோட அட்ரஸ். இப்போதைக்கு இவங்க என் வீட்டில் தான் இருக்காங்க. ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்க மதர். தேங்க்ஸ் ஏ லாட் மதர்!'' என்று விடை பெற்றான்.

ஆஸ்ரமத்தை விட்டு வெளியே மயூரியுடன் வந்த விஷ்ணு பக்கவாட்டில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்து ஆள் நடமாட்டமில்லாத சாலையின் ஓரத்தில் வண்டியை நிறுத்தினான்.

வண்டி நின்றது கூடத் தெரியாமல் இலக்கின்றி வெறித்த மயூரியின் பார்வையில் அவன் மனமும் தன்னை யறியாமல் வாடியதை உணர்ந்தான் விஷ்ணு.

ஆயிரமாயிரம் பெண்களுக்கு இந்த நாட்டில் தெரிந்தும் தெரியாமலும் இம்மாதிரி ஆயிரமாயிரம் கொடுமைகள் இழைக்கப்பட்டு கொண்டு தான் இருக்கின்றன. இப்போது வளர்ந்து வரும் கலாச்சாரம் என்ற பெயரில் நாடு இன்னும் சீர்கேட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்

கிறது. எப்போதும் தவறான வழி தான் சுலபமான வழி. அது முதலில் பின்பற்றப்படுவது தான் நாட்டின் தலை எழுத்தும் கூட.

பிள்ளைகளின் வளர்ப்பு சரியாக இருந்தாலும், அவர்களின் சேர்க்கை, நண்பர்களின் கூட்டம், ஆடம்பரம் எனும் பெயரால் இளமை துள்ளும் பருவத்தில் இருப்பவர்கள் வழி மாறிப் போய், தன்னோடு சேர்த்து தம்மை சுற்றி இருப்போரின் வாழ்வையும் நாசம் செய்கிறார்கள். இதற்கு தீர்வு தான் என்ன? ஆனால் விரும்பியே படுகுழியில் விழுபவர்கள் ஒரு புறமிருக்க, இப்படி தன்னையும் மீறி அதில் இழுக்கப்படுபவர்களின் நிலை தான் இன்னமும் மோசம்.

'இந்த சின்ன வயதில் இத்தனை வேதனை வேண்டாம் பாவம் இந்த பெண்ணுக்கு' என்று அவன் மனம் வருந்தியது. ஆனால் அவனால் இப்போது செய்யக் கூடியது தான் என்ன? ஒரு சிறு உதவியாவது அவளுக்கு செய்ய முடிந்தால்... அதை அவளும் ஏற்றுக் கொண்டால் சின்ன ஆறுதலாவது கிடைக்கும் என்றெண்ணினான் விஷ்ணு.

மெல்லப் பேச்சை ஆரம்பிக்கும் பொருட்டு குடி தண்ணீர் பாட்டிலை அவளிடம் நீட்டி, ''மயூரி! இந்தாங்க இதைக் கொஞ்சம் குடிங்க'' என்று கொடுத்தான்.

அதை வாங்கிப் பருகியவளிடம், ''யாருமே இல்லாதவங்கனா... உங்க பிரண்ட் சுமதி மட்டும் எங்கே இங்கே?'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் விஷ்ணு.

அவன் எதிர்பார்த்த மாதிரியே மயூரியும், ''அவள் இங்கே ஆஸ்ரமத்திலேயே வளர்ந்தவள். சின்ன வயசிலேயே பெற்றோரை இழந்தவள். அப்புறம் கல்யாணமான பிறகு ஒரு நாலு வருஷம் தான் அவள் கணவனோடு

வாழ்ந்தாள். அவள் கணவருக்கும் யாருமில்லை. ஒரு ஆக்சிடெண்டில் அவர் தவறிப் போக, இரண்டு வயசு பையன் மட்டும் தான் மீதம் அவளுக்கு. இங்கேயே வளர்ந்தவங்கறதால குழந்தை இருந்தாலும் அவளை அங்கே திரும்ப தங்க வச்சுக்கிட்டாங்க. 'நமக்கும் கீழே உள்ளவர் கோடி' அப்படின்னுதான் தேத்திக்கணும் போல?'' என்று வேதாந்தம் பேசினாள்.

பேசிவிட்டு மீண்டும் தன் கூட்டுக்குள் நுழைந்த வளை வலுக்கட்டாயமாக வெளியே இழுக்கும் முயற்சியாய். ''இப்போ என்ன செய்யப் போறீங்க மயூரி? சென்னைக் குப் போகப் போறீங்களா? இல்லை திரும்ப உங்க வீட் டுக்குப் போகப் போறீங்களா?'' என்று வினவினான்.

''சென்னைக்குப் போய் என்ன செய்ய? திரும்ப வீட் டுக்கும் போக முடியாது. அதே நிலைமை தான் இப்பவும் இருக்கு. அட்லீஸ்ட் தங்கைக்குக் கல்யாணமாவது ஆகணும். நான் சுமதியை நம்பி ஒரு வருஷம் ஃபாஷன் டிசைனிங் கோர்ஸ் செய்யப் போறேன் அப்படின்னு சொல்லிட்டு தான் வந்தேன். இப்போ வேற ஏதாவது ஒரு வேலை தேடிக்கிட்டு, ஒரு வொர்க்கிங் உமன் ஹாஸ் டலில் தான் தங்கணும்'' என்று தான் இனி செய்ய வேண்டு மென்பதை தனக்கே தெளிவு படுத்திக் கொள்ளும் வகையில் கூறிக் கொண்டாள் மயூரி.

வொர்க்கிங் உமன் ஹாஸ்டலில் மட்டும் கர்ப்பிணி பெண்ணை தங்க அனுமதிப்பார்களா என்றெண்ணி னான் விஷ்ணு. ஆனால் அதை அவளிடம் இருந்து இப் போது கூறி, மேலும் அவளை வருத்தப்படுத்த வேண்டா மென்று நினைத்துக் கூறாமல் விடுத்தான்.

இன்னுமொரு வழியிருக்கிறது. ஆனால் மிகவும் தயங்கி, சொல்வது தன் கடமை என்றெண்ணம் எழ

விஷ்ணு, ''மயூரி! நான் இப்போ சொல்லப் போறதை உணர்ச்சி வசப்படாமல் கேளுங்க. நீங்க எங்கேயாவது கவுன்சலிங் போனாலும் இதைத் தான் சொல்வாங்க'' என்று மிகுந்த யோசனையோடு, ''இதை... உங்களுக்கு விருப்பமில்லாமல் நடந்ததை... உங்கள் மேல் திணிக் கப்பட்ட இந்த கருவை...'' எப்படிச் சொல்லி முடிப்ப தென்று சொல்லாமல் நிறுத்தினான்.

ஆனால் அவன் சொல்லி முடிக்கும் வரையில் காத்திருக் காமல், அவன் சொல்ல வந்தது புரிந்து மயூரியின் இரு கரங்களும் தன்னிச்சையாக அவள் வயிற்றைப் பிடித்துக் கொண்டன. அவளின் விழிகளோ விஷ்ணுவைக் குற்றம் சாட்டியது.

''நோ! நோ! நீங்க சொன்னது மாதிரி இது என் விருப்பமில்லாமல் நடந்திருக்கலாம். ஆனால் அதற்காக ஒரு ஜீவனை எப்படி அழிப்பது? அது என்ன பாவம் செய்தது? என்னால முடியாது. இதுதான் எனக்கு எழுதப்பட்ட விதி என்று நினைத்துக் கொள்கிறேன்'' என சொன்னவள், விஷ்ணுவை 'நீ எப்படி இப்படி ஒரு வழியைச் சொல்லலாம்' என்பது போல் பார்த்தாள்.

''மயூரி! எனக்கும் இதைச் சொல்ல கஷ்டமாகத் தான் இருக்கு. ஆனா நீங்க சொன்னது வைச்சுப் பார்த்தால், நீங்க இது வரை இந்த விஷயமா யாருக்கிட்டேயும் டிஸ்கஸ் செய்த மாதிரி தெரியலை. ஒரு நண்பனா... இருக்கும் எல்லா வழியையும் சொல்ல வேண்டியது என் கடமை என்று நினைத்து தான் இதைச் சொல்றேன்'' என்று தொடர்ந்தான் விஷ்ணு.

''ப்ராக்டிகலா யோசிச்சுப் பாருங்க. இது இதோட முடிஞ்சுடாது. அதன் ஆயுசுக்கும் இது தொடரும். உலகம் ரொம்ப விசித்திரமானது மயூரி. ஆண் செய்ற தவறு

களுக்கும் பெண்ணைதான் சிலுவை சுமக்க வைக்கும் குரூரம் நிறைஞ்சது. உங்க பிற்கால வாழ்க்கையையும் யோசிங்க. இல்லை பேசாமல் உங்க வீட்டுல உண்மையைச் சொல்லிடுங்க. அவங்க சப்போர்ட்டாவது உங்களுக்குக் கண்டிப்பா வேண்டும்'' என்று தனக்குத் தெரிந்தவற்றை எடுத்துக் கூறினான்.

மயூரியை எந்த வாதமும் இளக்கவில்லை. தன் முடிவில் உறுதியாக, ''என்னால் ரெண்டுமே முடியாது சார். இது என்னோட போகட்டும். என் வீட்டையும் பாதிக்க வேண்டாம்'' என்றாள் முடிவாக.

''இந்த ஒரு வருஷம் கழிச்சு என்ன செய்யப் போறீங்க மயூரி?''

''எனக்கு நாளைக்கே என்ன நடக்கும்னு தெரியாது. இதில் ஒரு வருஷம் கழிச்சு நடப்பதை யோசிக்க என்னிடம் தெம்புமில்லை. சக்தியுமில்லை'' என்றாள் விரக்தியாக.

''உங்களுடைய முடிவில் இன்னொரு ஜீவனுடைய வாழ்க்கை ஜனனம் ஆகப் போகுது. எதையும் ரொம்ப தெளிவா திட்டம் போட வேண்டாம். ஆனால்... இந்த விஷயத்தில் யோசிக்காமல் இருக்கிறதும் நல்லது இல்லை இல்லையா?''

கண்ணை மூடித் திறந்தவள் உறுதியான குரலில், ''காலம் என்னுடைய காயத்தை குணமாக்கும். கட்டாயம் என்னால் நிமிர முடியும். நிமிருவேன்'' என்று விஷ்ணுவிடம் சொல்வதுபோல் தனக்குள் சொல்லிக் கொண்டாள் மயூரி.

பேச்சின் நடுவே, ''மதிய சாப்பாடு நேரம் ஆயிடுச்சு. இன்னும் வீட்டுக்குப் போய்ச் சேர நேரமாகும். அதுவரை பசி காங்குறதுக்கு இந்தப் பழத்தைச் சாப்பிடுங்க மயூரி.

வெளியே சீசன் டைம்ல சாப்பாடு எப்படி இருக்குமோ?'' என்று அந்த வழியாக பழம் விற்றுக் கொண்டு போன வரை நிறுத்தி கொஞ்சம் பழங்கள் வாங்கிக் கொடுத்தான் விஷ்ணு.

அவளின் நிலையை நினைத்து மிகவும் வருந்தியவனாக, ''நான் ஒரு யோசனை சொல்றேன். யோசிச்சு முடிவைச் சொல்லுங்க. எனக்கு இங்கே எஸ்டேட் கணக்கு வழக்கைப் பார்க்க ஒரு நம்பகமான ஆள் தேவையா இருக்கு. நீங்க அந்த வேலை செய்துக்கிட்டு என்னோட கெஸ்ட் ஹவுசில் இருந்துக்கோங்க'' என்றான்.

அவளின் யோசனையான முகத்தைப் பார்த்து, ''இது உங்களுக்காக ஏற்பாடு செய்த வேலையோ அப்படின்னு யோசிக்காதீங்க. நீங்க வேணுமானாலும் மேனேஜர் கிட்ட கேட்டுக்கோங்க'' ன்று மேலும் சொன்னான்.

சிறு யோசனைக்குப் பின், ''நான் இந்த வேலையை ஒத்துக்கிறேன். ரொம்ப நன்றி சார். ஆனா நான் இங்கே வாடகைக்கு வேற வீடு பார்த்துட்டுப் போற வரை உங்க வீட்டுல தங்கிக்கிறேன். அதுக்கு மேல வேண்டாம். இந்த உலகத்துல எதுவும் இலவசமில்லை'' என்று முடித்தாள்.

'இந்த மட்டுக்கும் இவள் சம்மதித்தாளே' என்று எண்ணியவன், ''உங்க இஷ்டம் மயூரி. நான் எதுக்கும் உங்களை வற்புறுத்தலை'' என்று காரைக் கிளப்பினான்.

எஸ்டேட் சென்று ஆறுமுகத்திடம் மயூரியை அறிமுகம் செய்து, அவள் நாளையிலிருந்து கணக்கு வழக்கைப் பார்ப்பாள் எனக் கூறவும், ஆறுமுகம் 'இதென்ன புது வேலை' என்பது போல் பார்த்தார்.

அவரிடம் கண் ஜாடை காண்பித்த விஷ்ணு, எஸ்டேட் சம்பந்தமாக மேலும் சில விபரங்களைக் கூறி

திரும்ப வீட்டிற்கு வரும் வழியில், ''அப்புறம் எனக்கு ஒரு சின்ன ஹெல்ப். என்னை 'சார் சார்' அப்படின்னு கூப்பிடாதீங்க. என்னமோ ரொம்ப வயசான ஒரு பீல் வருது. ப்ளீஸ்! ஃபார் மீ?'' என்று தலையை சரித்து பார்வையில் சிரிப்போடு வினவியவனை மறுத்துச் சொல்ல முடியாமல் சம்மதமென்று தலையை ஆட்டினாள் மயூரி.

''அதைக் கொஞ்சம் வாயைத் திறந்து தான் சொல்லேன் மயூரி'' என்று ஓரப் பார்வையை அவளிடம் செலுத்திக் கூறினான் விஷ்ணு.

ஆளை விட்டால் போதுமென்று, ''ஓகே!'' என்று சொன்னதுக்குப் பிறகு தான் அவன் தன்னை ஒருமையில் விளித்தது உரைக்க, எப்படியும் அவன் தன்னை விட வயதில் பெரியவன். அதிலும் தனக்கு இக்கட்டான நேரத்தில் உதவி புரிந்தவன் வேறு என்ற உணர்வில் அதைப் பெரிது படுத்தாமல் விடுத்தாள்.

இருந்தாலும் இவனிடம் எச்சரிக்கையாகத் தானிருக்க வேண்டும் என்ற உணர்வும் மனதில் ஒரு புறம் இருந்தது.

எந்தப் புற்றில் எந்த பாம்போ?

3

விஷ்ணுவிற்கு ஊட்டியில் இருந்து வந்த பிறகு வேலைப் பளு ஒருபுறம் இருந்தாலும் நினைவலைகள் மயூரியைச் சுற்றி வட்டமிடுவதைத் தடுக்க முடியவில்லை.

தோட்டத்தில் இருந்த ரோஜா மலரில், சாலையில் ஏதாவது பேருந்தைக் கடக்கும் பொழுது, ஏதாவது

பிரசவமான பெண்ணைப் பார்க்க நேர்கையில் என்று அவனுக்குக் காணும் காட்சிகள் மயூரியை நினைவு படுத்தியதும் ஒரு வகையில் காரணமாக இருக்கலாம்.

கண்ணில் தெரியும் நேர்மை கூட அந்த ஏமாற்றுக் காரனை தயங்க வைக்கவில்லையா?

இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொள்ள அந்த அபலைப் பெண் என்ன தவறு செய்தாள்?

இம்மாதிரி அவலங்களைப் பத்திரிகையில் படித்தும் கேட்டும் இருந்தாலும் நேரில் பாதிக்கப்பட்ட பெண்ணைக் காணும்போது ஆண் வர்க்கத்தை குறித்தே பெரிதும் வெட்கமாய் இருந்தது அவனுக்கு. அவனுக்கே இந்த நிலை என்றால் மயூரியின் வெறுப்பில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது? தன்னைப் பெற்றவளும், தன்னுடன் பிறந்தவளும் ஒரு பெண் தான் என்பதை எப்படி மறக்கிறார்கள்?

தன் மேல் சுமத்தப்பட்ட கருவைக் கலைக்க மனமில்லாதவள், தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்கிறாள் என்றால்... எவ்வளவு வேதனை அடைந்திருக்க வேண்டும்?

கருவினால் வரக்கூடிய பின் விளைவுகளை மயூரி முழுவதும் உணரவில்லை என்றே தோன்றியது விஷ்ணுவிற்கு. ஆனால் இதற்கு மேல் ஒரு மூன்றாம் மனிதன் எடுத்துக் கூறுவதோ, வற்புறுத்துவதோ எப்படி முடியும்? குடும்பத்தவரின் ஆதரவு இருந்தாலும் பரவாயில்லை. ஓரளவு மனதிடம் கொண்ட பெண் தான்... இருப்பினும்...?

இங்கே சென்னையில் அந்த பெண் இருந்தாலாவது அடிக்கடி சென்று பார்த்து வரலாம். ஆனால் ஊட்டிக்கு எப்படி வேலையை விட்டுவிட்டு அடிக்கடி போக முடியும்?

அவசர ஆபத்திற்கு செல்போன் நம்பரைக் கொடுத்து விட்டு வந்தாகி விட்டது. அடிக்கடி போன் செய்து நலம்

விசாரித்தாலும் அந்தப் பெண்ணிற்கு தேவையற்ற பயமும், சந்தேகமும் எழ வாய்ப்பிருக்கு என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டான் விஷ்ணு.

இதோ, இன்றும் சிந்தனையை சிதற விட்டபடி தன் இரட்டையுடன் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தான் விஷ்ணு. வைபவ் மற்றும் விஷ்ணு இருவரும் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள். இருவரின் சாயலும் சில சதவீதமே ஒத்து இருந்தாலும், இருவருக்கிடையிலும் இருக்கும் பிணைப்பு மிகவும் அதிகம்.

தொழிலில் இறங்கிய பிறகு தான் இருவரும் பிரிவையே சந்திக்கின்றனர். வைபவ் பெங்களூரில் இருக்கும் ஹோட்டலையும், குன்னூரில் இருக்கும் தேயிலைத் தோட்டத்திற்கும் பொறுப்பு வகிப்பவன் என்றால் விஷ்ணுவின் பொறுப்பில் சென்னையில் இருக்கும் ஹோட்டலும், ஊட்டியில் இருக்கும் தேயிலை தோட்டமும்.

இருவரும் தொழில் நிர்வாகத்திற்குப் பயிற்சி பெற தொடங்கியதில் இருந்து அடிக்கடி சந்திக்க முடியாமல் இருப்பது குறித்து வருத்தம் தான். தம்பி விஷ்ணு ஒரு வார்த்தை சொல்லி விட்டால் உடனே பெங்களூரில் இருந்து கிளம்பி வந்து விடுவான் வைபவ்.

''விஷ்ணு! வாட் இஸ் ஈட்டிங் யூ? உனக்கு ஆட்டத்தில் கவனமே இல்லை. நைட் வந்ததில் இருந்து பார்க்கிறேன். என்ன ஆச்சு? பிசினஸ் சம்பந்தமாகவா?'' ஆட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு சகோதரனிடம் விசாரித்தான் வைபவ்.

''நத்திங் வைபவ். கொஞ்சம் டல்லா இருக்கு. ஐ வில் பி ஆல்ரைட். விளையாடலாம். வா!'' சமாதானம் செய்து அழைத்தான் விஷ்ணு.

''சொல்றதா இருந்தால் சொல்லு. கட்டாயப்படுத்தலை'' என்று சொல்லிவிட்டு பந்தை விஷ்ணுவை நோக்கி அடித்தான் வைபவ்.

''உனக்கு ஒரு சர்ப்ரைஸ் கிப்ட் இருக்கு. என்னன்னு ஏதாவது கெஸ் சொல்லு வைபவ்?''

''ஊட்டிக்கு தானே போன? சோ எனக்குப் பிடிச்ச ப்ளம்ஸ்?''

''சாப்பிடறதிலேயே குறியா இரு. ப்ளம்ஸ் இருக்கு. அதை காமாட்சிம்மா ஃப்ரிட்ஜில் வைச்சு இருப்பாங்க. அப்புறம் சாப்பிடு. இப்போ என்ன கிப்ட் சொல்லு பார்க்கலாம்.''

''நீயே சொல்லுடா'' என்று புதுப்பந்தை எடுத்து 'சொர்வ்' செய்தான் வைபவ்.

''உனக்கு ஒரு வை.ஃபை கேம் செட் வாங்கி வைச்சிருக்கேன். வொர்க் அவுட் செய்த மாதிரியும் ஆச்சு. நீ ஆசைப்படற மாதிரி கேம் விளையாடற மாதிரியும் ஆச்சு.''

''தேங்க்ஸ்டா. தேங்க்ஸ் சோ மச்'' என்றவனிடம், ''வைபவ்! உனக்கு என்ன திடீர்னு சென்னை ப்ளான்? அம்மாக்கூட இந்த வாரம் தாத்தா ஊருக்கு கோவில் விசேஷத்துக்குப் போயிருக்காங்க'' விஷ்ணுவிற்கு மனதில் இருக்கும் சிந்தனை பற்றி எப்படித் தொடங்குவது என்றே தெரியாமல் பேச்சை மாற்றினான்.

''இன்னைக்கு நைட் பிசினஸ் தொடர்பா அறிமுகமான ஒருத்தரோட மேரேஜ் ரிசப்ஷன் சென்னையில இருக்கு விஷ்ணு. அது முடிச்சுட்டு நம்ம கோயம்புத்தூர் டீலரிடம் புது காண்ட்ராக்ட் விஷயமா நாளைக்கு ஒரு கையெழுத்து வாங்கணும். அவ்வளவு தான். கோயம்புத்தூருக்கு கூட நேரில் அலையணும்னு அவசியம் இல்லை விஷ்ணு.

கோவில் விசேஷம் முடிய இன்னும் ரெண்டு நாள் ஆகு மில்ல? அம்மாவை அடுத்த தடவை வரும் போது தான் பார்க்கணும்'' என்று தகவல் தந்தான் வைபவ்.

விஷ்ணு தன் மனதின் உந்துதலுக்கு கட்டுப்பட்டு, ''கோயம்புத்தூருக்கு நானும் போக வேண்டியதா இருக்கு வைபவ். நானே பேப்பர் வொர்க் முடிச்சு உனக்கு அனுப்பி வைச்சுடறேனே?'' என்றான் ஆர்வத்துடன்.

சில நொடிகள் யோசித்த வைபவ், ''நீ இப்போதானே ஊட்டி போயிட்டு வந்தே? அப்படியே உன் வேலையை முழுசா முடிச்சுட்டு வர வேண்டியது தானே?'' என்று விட்டு, ''சரிடா! அப்போ நான் நாளைக்கு நம்ம புது ஹைதரா பாத் அசைன்மென்ட் பத்தி கொஞ்சம் பேச்சு வார்த்தை நடத்திட்டு உன்னை ஃபாலோ அப் செய்ய சொல்றேன்'' என்று சம்மதித்தான் வைபவ்.

வைபவ்க்கு பதில் கோயம்புத்தூர் தான் செல்வதால் எழுந்த உற்சாகமா? இல்லை கோயம்புத்தூரில் வேலை முடித்துவிட்டு ஊட்டியில் தலையை காட்டிவிட்டு வருவ தாக முடிவு செய்ததில் நிம்மதியா? நீண்ட நாளாகத் திட்ட மிடும் ஹைதராபாத் அசைன்மென்ட் பற்றி பேச்சு வார்த்தை தொடங்குவதில் ஏற்பட்ட சந்தோஷமா? எல்லாம் சேர்ந்து விஷ்ணுவிற்கு புதிதாக சக்தி பிறக்க, அதன் பிறகு ஆட்டத்தில் கவனம் செலுத்தி டென்னிஸ் பந்தை விளாச முடிந்தது.

விளையாட்டு முடிந்த பிறகு, ''தட் வாஸ் எ பென் டாஸ்டிக் கேம் விஷ்ணு'' என்று சொல்லி சகோதரனை தோளில் தட்டிப் பாராட்டினான் வைபவ்.

'ஒருநாள் முன்னாலேயே கோவையில் வேலை முடிக்க லாமே?' என்ற எண்ணம் பிறக்க சில முக்கியமான உத்திரவுகளை மேலாளருக்கு பிறப்பித்து விட்டு கோவையை நோக்கிக் கிளம்பினான் விஷ்ணு.

மயூரி, காலையில் எழுந்ததில் இருந்து தனிமையாக இருப் பது போல் உணர்ந்தாள். முதல் நாள் வீட்டிற்குப் போன் செய்து பொய் மேல் பொய்யாகப் பேசியதை எண்ணி குற்ற உணர்வும் குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

கல்லூரியில் இருக்கும் ஹாஸ்டலில் சேர்ந்து விட்ட தாகவும், வகுப்புகள் இன்னும் இரண்டு நாளில் தொடங்கி விடும் என்றெல்லாம் வாய்க்கு வந்ததைச் சொல்லி, கேள்விகள் எழும் முன்னரே ஒரு வாரம் கழித்துப் பேசுவ தாக பேச்சை முடித்து விட்டு ரிசீவரை வைத்து விட்டாள் மயூரி.

இப்படி ஒரு பொய்யும், பித்தலாட்டமும் எங்கிருந்து வந்தது? மோசக்காரனின் வாரிசை வயிற்றில் சுமப்பதால் வந்ததா என்று தோன்றியதுமே மனசாட்சி அந்த எண் ணத்தை வேரோடு சாய்த்தது.

அறிவிருக்கா உனக்கு? இப்படி ஒரு அபாண்டமான பழியை அந்த பிஞ்சு ஜீவன் மேல் சுமத்துவதற்கு கொலைக் காரி என்ற பழியை ஏற்று இருக்கலாமே?

தன் இதயத்தை இரு கூராக்கி கேள்வி பிறக்கையில் மயூரியால் எண்ண ஓட்டத்தைத் தொடர முடியவில்லை. ஒருவாரம் சென்று வேலை தொடரலாம் என்று விஷ்ணு அறிவுறுத்திவிட்டுச் சென்றாலும் எஸ்டேட் மேலாளரைச் சந்தித்து முதற்கட்ட பயிற்சி வேலைகளை ஆரம்பித்தாள் மயூரி.

எஸ்டேட்டுக்கு அருகில் ஏதாவது வீடு காலியாக இருந் தால் தகவல் தர சொல்லி ஏற்கனவே பணியாள் ராணி யிடம் தெரிவித்திருந்தாலும் இன்னும் இரண்டு மூன்று

நபர்களிடமும் சொல்லி வைத்தாள். எஸ்டேட் தொழிலாளர்களும் சரி... மேலாளரும் சரி மிகுந்த மரியாதையுடனே மயூரியிடம் நடந்து கொண்டனர். மயூரிக்கு தொடக்கத்தில் சங்கோஜமாக இருந்தாலும் சில மணி நேரங்களில் சகஜமானாள்.

மதிய உணவருந்தும் வேளையில் வீட்டு உதவியாள் ராணி எஸ்டேட்டிற்கு அவளைத் தேடி வருவதைக் கண்டு ஆச்சரியத்துடன் புன்னகை உதிர்த்தாள் மயூரி.

''என்ன ராணி? நான் மதியம் சாப்பிட வர மாட்டேன்னு உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா? இப்போ தான் கிளம்பலாம்னு நினைச்சுட்டே இருந்தேன்'' என்று சிநேகமாகச் சொன்னாள் மயூரி.

''இல்லீங்கம்மா. அம்மா வந்திருக்காங்க. உங்களைப் பார்க்கணும்னு சொல்லி வீட்டில் இருக்காங்க. சாப்பாடு எல்லாம் தயாரா இருக்கும்மா. நீங்க போங்க. நான் கொஞ்ச நேரம் சென்று வரேன்'' என்று ராணி சொல்வதைக் கேட்டு முகம் வெளுத்தது மற்றவளுக்கு.

கடவுளே வீட்டில் நேத்தைக்கு போனில் பேசியதை வைச்சு நான் இருக்கிற இடத்தை கண்டு பிடிச்சு வந்துட்டாங்களா? நான் பொய் சொன்னதெல்லாம் தெரிஞ்சுடுச்சா? நான் திக்கி திக்கி பேசி சமாளிக்கிறதை வைச்சே கண்டு பிடிச்சுட்டாங்களோ?

என்னைப் பற்றிய உண்மை எதுவும் தெரியக் கூடாதுன்னு தானே நான் இப்படிக் கண் காணாமல் வந்தேன்? எதற்காக எனக்கு சோதனை மேல் சோதனை? இதயம் படபடக்க வீட்டை வந்தடைந்தாள் மயூரி.

ஜீப் சத்தம் கேட்டு வெளியில் வந்த பெண்மணியைப் பார்த்ததும் மயூரியின் முகத்தில் குழப்ப ரேகைகள் படர்ந்தன.

தலையில் இருந்து பாதம் வரை கூர் பார்வை செலுத்தி விட்டு கம்பீரமாக நின்றிருந்த பெண்மணி சொன்னதைக் கேட்டு மயக்கம் போடாத குறை தான்.

மயூரியின் முகத்தில் குழப்பம் எட்டிப் பார்ப்பதைத் தொடர்ந்து, ''நான் பிரசாத் உடைய அம்மா!'' என்று தெளிவாகச் சொல்லவும் மயக்கம் வராமல் இருப்பது ஆச்சரியம் தானே?

'இதென்னதுடா புதுக் குழப்பம்?' என்று சிலையாய் மயூரி உறைய, ''எனக்கு எல்லாம் தெரியும் மயூரி. அவன் சொல்லலை என்றாலும் எனக்கே தெரியும். என் மகன்... நான் வளர்த்தவன் இப்படியெல்லாம் செய்வான் என்று எதிர்பார்க்கலை தான்'' என்றவர் தங்க நிறத்தில் ஃப்ரேம் போட்ட கண்ணாடியை சரி செய்து கொண்டு, ''வாசலில் இருந்தே எல்லாமே பேசணுமா? பிள்ளைத்தாய்ச்சி பொண்ணு வேளாவேளைக்கு சாப்பிடாமல் இருக்கக் கூடாது. வா'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

அசைய மறுத்த கால்களை கஷ்டப்பட்டு நகர்த்தி முன்னேறிச் செல்ல, ஊட்டி தட்ப வெப்பத்திலும் வியர்வை முத்துக்கள் பூத்தன மயூரிக்கு.

உணவை மயூரியின் தட்டில் பரிமாறியபடியே முன் பேசியதின் தொடர்ச்சியாக, ''எதிர்பார்க்கலை என்பதால் நடந்தது எல்லாம் இல்லைன்னு ஆகிடுமா மயூரி? நடக்க வேண்டியது என்னன்னு பார்க்க வேண்டியது தான். தப்பு செய்துட்டு என்னிடம் எப்படிச் சொல்றதுன்னு தயங்குகிறான். என்ன நீ? எதுவும் பேச மாட்டேன்கிற?'' என்றார் புருவத்தை உயர்த்தி.

''உங்களுக்கு... எப்படி... தெரியும்?'' மயூரி வியப்பும், அதிர்ச்சியுமாக வினவினாள்.

''இது தெரிஞ்சுக்கிறது பெரிய விஷயமே இல்லை. இங்கே வந்து தலைமறைவா இருந்தால் எல்லாம் சரியாகிடுமா? என் பையனுக்குத் தான் கொஞ்சம் கூட அறிவேயில்லை. அவன் தான் அறிவு கெட்டு இப்படிச் செய்துட்டான். நீயாவது அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது தானே? உங்க வீட்டில் தெரியுமா?'' வார்த்தைகள் ஒவ்வொன்றும் தயக்கமின்றி 'நறுக் - நறுக்' என்று தெறித்தது.

வீடு என்றதும் பதட்டமாக, ''வீட்டில் யாருக்கும் தெரியாது. தெரிஞ்சால் ரொம்பப் பிரச்சனை ஆகிடும்'' என்றாள் சிரத்தை தாழ்த்தி.

இந்த நிலைமையில எப்படி கண்களைப் பார்த்துப் பேச முடியும்? அதுவும் கம்பீரமான தீட்சண்யமான பார்வை இவளிடத்தில் மூத்தவள் செலுத்திக் கொண்டிருக்கையில். அதனால் தான் சிரம் தாழ்த்தி மெல்லிய குரலில் சொன்னாள் மயூரி.

அவளுடைய குரலில் தெரிந்த வருத்தமும், தலை சாய்த்திருந்த விதமும் அந்தப் பெண்மணியை கனிவாகப் பேச வைத்தது.

''சரிம்மா. வருத்தப்படாதே மயூரி. தப்பு செய்தால் திட்டத்தான் செய்வாங்க. வாங்கிக்க தான் வேணும். எனக்கும் என் மகன் மேல ரொம்பவே வருத்தம், கோபம் தான். என்ன செய்ய? நீங்க செய்த காரியம் அப்படி. எல்லாம் நல்லபடியா கூடிய சீக்கிரம் கூடி வரும். உன் வயிற்றில் உருவாகியிருக்கிற ஜீவன் சந்தோஷத்தை வர வைக்கும். உங்க வீட்டிலும் ஏத்துப்பாங்க'' என்று மனதார வாழ்த்தினார்.

சில நிமிடங்கள் மௌனமாகக் கழிய, ''டாக்டர் செக்கப் பிற்கு எதுவும் போனியா மயூரி?'' என்று அக்கறையாக கேள்வி பிறந்தது.

அவரது கனிவும், அக்கறையும் ஏனோ மயூரிக்கு கண்ணீரைத் துளிர்க்க வைத்தது.

'என்னதிது? ஊட்டிக்கு வந்ததில் இருந்து சும்மா சும்மா கண்ணீர் வருது? இப்போ அழறதால மட்டும் என்ன மாறிடப் போகுது?' என்று தன்னையே அடக்கிக் கொள்ள முயன்றாள் மயூரி. ஆனால் மயூரியின் மன இறுக்கம் குறைய தங்கள் பணியை சிறக்கச் செய்தன அவளது கண்ணீர் சுரப்பிகள்.

அவளது கைகள் உணவில் அலைவதைப் பார்த்து புதியவர் தொடர்ந்து, ''உன்னை நிம்மதியா சாப்பிட விடாமல் நான் ஏதாவது பேசிட்டே இருப்பேன். எல்லாம் நல்லபடியா நடந்திருந்தால்... சரி விடும்மா. சாப்பிட்டுட்டு நீ ஹாலுக்கு வா. அங்கே பேசலாம்'' என்று சொல்லி விட்டு சென்றார்.

'இப்படி ஒரு அம்மாக்கு...' என்று பெருமூச்சை வெளியேற்றிவிட்டு சிந்தனை சிலந்தி எல்லா திசைகளிலும் படர தொண்டைக்குள் பருக்கை செல்லாமல் அமர்ந்திருந்தாள் மயூரி.

இரண்டு முறை மயூரி என்ற அழைப்பு காதில் விழவும் உணவை வீணடிக்க மனம் வராமல் தட்டில் இருந்த உணவை முடிந்தவரை விழுங்கிவிட்டுச் சென்றாள்.

அவளை அங்கிருந்த சோபாவில் அமரச் சொன்னவர், ''உனக்குக் காலை நேரத்தில் சோர்வெல்லாம் இருக்காம்மா? நாளைக்குக் காலையில நம்ம வீட்டுக்கு உன்னால் கிளம்ப முடியுமா? அல்லது கொஞ்சம் லேட்டா மதியம் போல கிளம்பலாமா? கோவையில் இருந்து ட்ரெயினில் கூட போய்க்கலாம் மயூரி. உன்னுடைய வசதி தான் முக்கியம்'' என்று அடுத்தக் கட்டத்திற்குத் தாவினார்.

மயூரிக்கு இருட்டிக் கொண்டு வந்தது. வந்ததில் இருந்து யோசிக்கவே விடாமல் பேசிக் கொண்டே இருக்கிறாரே? இப்பொழுது நம்ம வீட்டுக்குப் போக லாம் என்றால்... என எண்ணமிடும் போதே மூத்தவள் பேசுவது காதில் விழுந்தது.

''எதுக்கும் இங்கே ஊட்டியில் இருக்கிற டாக்டரை இன்னைக்கு சாயந்திரம் பார்த்துட்டு வந்திடலாம். பெத்த மனம் பித்து. பிள்ளை மனம் கல்லுன்னு அந்தக் காலத் தில் சும்மாவா சொல்லி வைச்சாங்க? விஷயம் தெரியலை என்றாலும் பரவாயில்லை. தெரிஞ்ச பிறகு என்னால் சும்மா இருக்க முடியலை மயூரி. அதுவும் வீட்டு வாரிசை நீ சுமந்துட்டு இருக்கறது தெரியும் போது வீம்பு பிடிக் கவும் முடியலை. பிள்ளைங்க சந்தோஷம் தான் முக் கியம்'' பேசிக் கொண்டே சென்றார் பாதி வருத்தமாக, பாதி யதார்த்தமாக.

''என்னால் எப்படிம்மா அங்கே உங்க வீட்டுக்கு வர முடியும்?'' என்றாள் மயூரி.

எந்த உரிமையில் செல்ல முடியும்? எந்த உறவில் செல்ல முடியும்? என்று அவளது மனதில் ஆயிரம் கேள்விகள்.

''என்னம்மா ஊருக்கும், உறவுக்கும் பயப்படறியா? யார் என்ன சொல்லி நமக்கு என்ன ஆகப் போறது? நம்ம வாழ்க்கையை அவங்களா வந்து வாழப் போறாங்க? மத்தவங்க... மத்தவங்கன்னு பார்த்தால் நம்ம வாழ்க்கை நமக்காக இருக்காது.''

'ஹப்பா! இந்த அம்மா இப்படி எல்லாத்துக்கும் விளக்கம் சொல்லி... என்னை யோசிக்க விடாமல் செய்யறாங் களே?' என்று மனதிற்குள் நினைத்தாள் மயூரி.

''என்னமா? எல்லாத்துக்கும் ஏதாவது விளக்கம் சொல் றேனா? வாழ்ந்து அனுபவிச்சவ சொன்னால் சரியா தான் இருக்கும்னு எடுத்துக்கோயேன் மயூரி. இன்னும் என்ன யோசனை? எனக்குப் பயணம் முடிஞ்சு வந்தது ரொம்ப அலுப்பா இருக்கு. நான் அந்த ரூமில் கொஞ்ச நேரம் தூங்கறேன். நீயும் கொஞ்சம் ரெஸ்ட் எடு. சாயந்திரம் டாக்டர்கிட்ட போயிட்டு வரலாம்'' எல்லாவற்றையுமே முடி வாகத் தான் சொன்னார். யோசனைக்கு இடமே இல்லை என்பது மாதிரி.

குழப்பத்துடன் அமர்ந்த மயூரிக்கு அந்த அம்மாவிற்கு உதவ வேண்டும் என்று தோன்ற அவர் பின்னாலேயே எழுந்து சென்றாள்.

''ஏதாவது உங்களுக்கு உதவி வேணுமா?'' என்று தயக்கத்துடன் வினவினாள் மயூரி.

மூத்தவள் பதில் எதுவும் பேசவில்லை. மௌனமாக அறைக்குச் சென்று மெத்தை மேல் இருக்கும் தலை யணையை சுவர் ஓரமாக சாயத்து வைத்தார்.

மயூரி அங்கேயே நிற்கவும், ''உறவு முறை கூட சொல்லி அழைக்க வரலை இல்லையாமா? அத்தை அல்லது அம்மான்னு கூப்பிடு. ரொம்ப தயக்கம் வேண்டாம். எனக்கு உதவி இப்போதைக்கு வேண்டாம். ஒரு மணி நேரத்தில் எழுப்பி விடு'' என்று விட்டு ஒய்வாக அமர்ந்தவாறே அங்கிருந்த புத்தகத்தைப் பிரித்தார்.

மயூரிக்கு உண்மையிலேயே அந்தப் பெண்மணி இயல்பாக நடந்து கொள்வதைப் பற்றியும், எந்த மறுப்பு பேச்சுக்கும் இடமில்லாமல் பேசுவது பற்றியும் ஆச் சரியம் தான்.

தன்னுடைய அறைக்குச் சென்றவளுக்கு யோசனை எதுவும் செய்ய முடியாமல் மனம் வெறுமையாக

இருந்தது. இரண்டு நிமிடங்கள் அப்படியே தலையைப் பிடித்து கவிழ்ந்தபடி அமர்ந்திருந்தவளுக்கு விஷ்ணுவிற்கு போன் செய்து தற்போதைய நிலவரத்தைக் கூறலாம் என்று தோன்றியது.

'இந்த மாதிரி வேலை நேரத்தில் போன் செய்தால் எடுப்பானா?' என்று தயக்கத்துடன் தொலைபேசியில் எண்களை அழுத்தினாள்.

மறுமுனையில் கேட்ட அழுத்தமான ஹலோவில் தொண்டை லேசாக அடைப்பது போல் இருந்தது.

''திஸ் இஸ் விஷ்ணு மயூரி ஆர் யூ தேர்? இருக்கியா?'' என்றாள் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில்.

கோவையை நெருங்கிக் கொண்டிருந்தவனுக்கு ஊட்டியில் இருந்து அழைப்பு வரவும் 'என்னவாக இருக்கும்?' என்ற கேள்வி தான் பிறந்தது அந்தக் கலக்கத்தில் தான் ஹலோவைத் தொடர்ந்த கேள்விகள்.

''மயூரி ஹியர். உங்களிடம் கொஞ்சம் பேசணும். ஆர் யூ ஃப்ரீ நவ்?'' விஷ்ணுவின் குரலில் அவளது தயக்கம் காணாமல் போனது.

''ஏதோ அவசியம் என்று தானே பேசற மயூரி? சொல்லு என்ன விஷயம்?'' என்றான் இயல்பான குரலில்.

''இங்கே பி.. பிரசாத் அம்மா வந்திருக்காங்க.''

மறுமுனையில், ''வா..ட்?'' என்ற அதிர்ச்சியைத் தொடர்ந்து 'க்ரீச்' என்ற சத்தம் வந்தது.

மயூரி பதட்டமாக, ''ஜாக்கிரதை விஷ்ணு. நீங்க டிரைவிங்கில் இருக்கீங்களா? நான் அப்பறம் வேணா போன் செய்யவா?'' என்றாள் இரண்டு கையிலும் ரிசீவரைப் பற்றிக் கொண்டு.

'விஷ்ணு' என்ற அழைப்பு பதட்டத்தில் இயல்பாக வந்தது கூடத் தெரியாமல் இருந்தனர் இருவரும்.

நல்லவேளையாக விஷ்ணுவின் நல்ல நேரம் இவனுக்கு முன்னும், பின்னும் தற்காலிகமாக எந்த வாகனமும் இல்லை. மயூரியின் செய்தியில் எழுந்த அதிர்ச்சியில் கால் ப்ரேக்கை அனிச்சையாக அழுத்தியது.

தொடர்ந்து கவனமாகக் காரைச் செலுத்தியவன், ''ஒண்ணும் பிரச்சனையில்லை மயூரி. பிரசாத்துக்கு அம்மாயில்லைன்னு நீ தானே ஏற்கனவே சொன்ன? உன்னையும் என்னையும் தவிர யாருக்கும் நீ ஊட்டியில் இருக்கிறது தெரிய வாய்ப்பேயில்லை. அப்படி இருக்கும்பொழுது இந்த அம்மா எங்கிருந்து வந்தார்கள்?'' தனக்குள் தோன்றிய கேள்விகளை எல்லாம் மயூரியிடம் கேட்டான்.

இப்பொழுது மயூரிக்கு முன்பு இருந்ததை விட கலக்கம் அதிகமானது.

''கடவுளே! நீங்க சொல்லி தான் எனக்கு ஞாபகமே வருது. காலையில் எஸ்டேட்டில் இருந்து வந்ததும் இவங்க பேசிட்டு இருந்ததில் ஒண்ணுமே யோசிக்கவேயில்லை.''

இப்பொழுது விஷ்ணுவிற்கு லேசாக எரிச்சல் எழுந்தது.

''மாமியார் வந்ததும் எல்லாமே மறந்துடுச்சோ?'' என்று விஷ்ணுவிடம் இருந்து வந்த வார்த்தைகளிலும் எரிச்சல் பிரதிபலித்தது.

அவனது வார்த்தைகள் மேலும் காயப்படுத்த கம்மிய குரலில், ''அதெல்லாமில்லை. எல்லாமே தெரிஞ்ச மாதிரி பேசறாங்க. எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை. உங்களுக்கு போன் செய்து யோசனை கேட்கலாமே என்று தான்...'' விளக்கம் கொடுத்தாள் மயூரி.

அவள் வார்த்தைகளைக் கேட்ட பிறகு தான் தன்னுடைய எரிச்சலை வெளிக்காட்டியிருப்பது புரிந்தது விஷ்ணுவிற்கு.

சமாதானமாக, ''சாரி! நானும் அப்படிப் பேசியிருக்கக் கூடாது!'' என்றவன் தொடர்ந்து, ''நீ ஒண்ணும் கவலைப் படாதே. நான் அங்கே வரேன். நேரில் வந்து பேசிக்க லாம். அதுவரைக்கும் எங்கேயும் போகாதே'' என்றவனை இடைமறித்தாள் மயூரி.

''நேரிலா? உங்களுக்கு வீண் தொந்தரவா இருக்குமே?''

''நான் வேலை விஷயமா கோயம்புத்தூரில் தான் இருக்கிறேன். இன்னும் மூணு மணி நேரத்தில் வந்துடு வேன். வந்திருக்கிறவங்களிடம் அநாவசியமான பேச்சு வேண்டாம். சந்தேகப்படற மாதிரியும் நடக்க வேண் டாம். ராணி அங்கே தானே இருக்காங்க?'' என்று நட வடிக்கைகளைப் பற்றி அறிவுறுத்திவிட்டு வினவினான்.

''ராணி எஸ்டேட் வரைக்கும் போயிருக்காங்க. நானும் இப்போ எஸ்டேட் கிளம்பிப் போயிடவா? இப்போ அம்மா தூங்கிட்டு தான் இருக்காங்க'' என்று சின்னப் பிள்ளை போல் உத்தரவுக் கேட்டாள் மயூரி.

''இல்லை வேண்டாம். அப்படியே ரெஸ்ட் எடுப்பது மாதிரி ரூமிலேயே இரு. இன்னும் மூணு மணி நேரத்தில் வந்துடறேன்'' என்று முடித்துவிட்டு காரை ஊட்டி நோக்கி வேகமாக செலுத்தினான் விஷ்ணு.

விஷ்ணுவிடம் பேசி முடித்ததும் உண்மை நிலவரம் புரிய மயூரிக்கு தலை பாரமானது. எங்கே போனாலும் ஏதாவது வகையில் பிரச்சனை வருதே? ஓடுபவனைக் கண்டால் தான் துரத்துபவனுக்கு உற்சாகம் என்பது போல் இப்படி பிரச்சனையைக் கண்டு ஓடுவதால் தான் நம்மையே அது துரத்திட்டு வருது போல?

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அந்த அம்மாவை எழுப்பி விட்டவள், தலைவலி என்பதால் ஓய்வு எடுப்ப தாகச் சொல்லிவிட்டு வந்து படுத்துக் கொண்டாள்.

மயூரியின் முகத்தில் தெரிந்த சோர்வைப் பார்த்து விட்டு தலைவலிக்கு யூகலிப்டஸ் தைலம் எடுத்துக் கொடுத்தபடியே, ''இதை தடவிட்டு ரெஸ்ட் எடுத்துக்கோ மயூரி'' என்று அனுப்பி வைத்தார்.

இரண்டரை மணி நேரமாக தைலத்தை தடவிக் கொண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தவள் வாசலில் கார் சத்தம் கேட்கவும் எழுந்து வந்தாள்.

ஹாலில் அமர்ந்திருந்த பெண்மணி மயூரியை கேள்வி யாக நோக்கிவிட்டு அவளுடன் வாசலுக்குச் சென்றார்.

குழப்பமான முகத்துடன் காரில் இருந்து இறங்கியவன் மயூரியையும், உடன் இருந்தவரையும் பார்த்துக் கண் களை விரித்தான்.

ஆம்! விஷ்ணு அந்த நபரை சத்தியமாக அங்கே எதிர்பார்த்திருக்கவில்லை!

ஆச்சரியத்துடன், ''அ...ம்...மா!'' என்று அழைத்தபடி அவர்களை நெருங்கினான் விஷ்ணு என்கிற விஷ்ணு பி...ர...சா...த்!!!

4

விஷ்ணுவின் அழைப்பில் எப்பொழுதும் அகமும், முகமும் மகிழும் தாயார் இன்று மகனிடத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அருகில் பார்வையாளராய் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த மயூரிக்கு உலகமே தலைகீழாய் சுற்றுவது போல் இருந்தது.

பிரசாத் அம்மா என்று சொல்லி வந்தவரை விஷ்ணு 'அம்மா' என்று சொல்கிறானே? என்னால் புதுக் குழப்பம் கிளம்பியிருக்கிறதா? அதுவும் அந்த அன்னை முகத்தைத் திருப்பிக் கொள்வதைக் கண்டால்... கடவுளே! இல்லை... இல்லை அப்படி இருக்காது.

அம்மாவின் கோபத்தை உடனடியாக உணர்ந்த விஷ்ணுவிற்கு அதற்கான காரணம் புரியாமல் கேள்வியோடு மயூரியின் முகத்தை நோக்க, மயூரியோ தர்ம சங்கடத்துடன் மற்ற இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஷ்ணுவின் தாயார் விசாலாட்சி பிள்ளைகளிடத்தில் கனிவுடன் கூடிய கண்டிப்பு கொண்டவர். கணவனின் மறைவிற்குப் பிறகு தன் பிள்ளைகள் தொழிலில் தலை தூக்க, பிள்ளைகளே உலகமென்று வாழ்ந்து கொண்டிருப்பவர். பெரும்பான்மையான தருணங்களில் பிள்ளைகளும் அம்மாவிடம் சொல்லாமல் எந்தக் காரியத்திலும் ஈடுபடுவதில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

சிறியவர்களின் மௌனத்தையும், அவஸ்தையையும் உணர்ந்து, ''ஏன் விஷ்ணு இப்படி? என்னிடம் சொல்றதுக்கு உனக்கு என்ன பயம்? இப்படி, இங்கே தனியா ஒரு பெண்ணை தங்க வச்சிருக்க. அதுவும் அவளிருக்க நிலையில்? பிள்ளைத்தாய்ச்சி பெண்ணை இப்படியா தனியா விடறது?'' என்று சிறிது கண்டிப்புடன் வினவினார் விசாலாட்சி.

''வேறெதுவும் வழியில்லாமல் தான்மா இங்கே நம்ம பங்களாவில் தங்க வைச்சேன். உங்ககிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை அம்மா'' என்று தலையைக் கோதிக் கொண்டான்.

மகனே முழு விளக்கமும் சொல்லட்டும் என்று மௌனமாக இருந்தார் விசாலாட்சி.

யாரோ ஒரு கர்ப்பிணிப் பெண்ணை சரியான துணையில்லாமல் தங்க வைத்தது பற்றி சொல்லவில்லை என்பதால் தான் அம்மாவிற்கு கோபம் என நினைத்துக் கொண்டிருந்தான் விஷ்ணு. ஆனால் விசாலாட்சி அம்மாவோ தன் மருமகளை அழைத்து வந்து தனியாக வைத்திருக்கிறான் என்று நினைத்தார்.

மயூரியின் நிலையைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

''அம்மா! அது இல்லைமா... வந்து...'' என்று திணறலுடன் தொடர்ந்தான் விஷ்ணு.

விஷ்ணு முதலில் சொன்னதின் தொடர்ச்சியாக, ''அதெப்படிடா வேற வழில்லாமல் போகும்? முதல்ல அதுவரைக்கும் எதுக்குப் போகணும்? அதான் ரெண்டு நாள் கூட சென்னையில இருக்க முடியாம ஊட்டிக்கு வந்துட்டியே? அப்புறம் என்ன?'' என்றார் விசாலாட்சி.

தன் கேள்வியில் அதிர்ந்து நோக்குபவனை, ''என்னடா திருதிருன்னு முழிக்கற? நீயா சொல்லலைன்னா எனக்கு விஷயம் தெரியாதாக்கும்? 'இவளை கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன்' அப்படின்னு சொல்லியிருந்தா நான் என்ன வேண்டாம்னு சொல்லுவேன் என்று பயந்துட்டு நீயாவே கல்யாணம் செய்துக்கிட்டியா? பொண்ணு ரதி மாதிரி இருக்கா. கல்யாணம் முடிஞ்ச பிறகு கூட... இவளைக் கல்யாணம் செய்துக்கிட்டேன்னு சொல்ல உனக்கு இத்தனை நாளா வாயும் தைரியமும் வரலை இல்லை?'' என்று கடுமையாகக் கேட்டார்.

விஷ்ணு மற்றும் மயூரிக்கு ஓரளவு விஷயம் புரிபட திக்கல் பேச்சுக்கூட சரளமாக வரவில்லை. 'கல்யாணமா...?'

அதிர்ச்சியில் இருவரும் வாயடைத்துப் போய் இருந்தனர்.

விஷ்ணு தன்னிலை விளக்கம் தர எத்தனிக்கையில், ''எதுக்கு விஷ்ணு? எனக்கு இன்னொரு ஹார்ட் அட்டாக் வந்துடுமோன்னு பயந்துட்டு அம்மாக்கிட்ட சொல்லாமல் இருந்தியா? இது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா? இதை அம்மாக்கிட்ட இருந்து மறைக்க முடியும்னு நினைச்சியாடா?'' என்று கண்ணோடு கண் நோக்கி வினவினார்.

விசாலாட்சி ஹார்ட் அட்டாக் பற்றி குறிப்பிட்டுப் பேசியதும் 'அம்மாவிடம் பொறுமையாக விஷயத்தைச் சொல்ல வேண்டும்' என்று துரிதமாக விஷ்ணுவிற்கு எண்ணமும் பிறந்தது.

'இந்த அம்மா மகனையும் பேசவே விடமாட்டார் போலிருக்கே?' என்ற எண்ணம் ஓட அப்படியே நின்றிருந்தாள் மயூரி. மேலன்னமும் கீழன்னமும் ஒட்டிக் கொண்டு பிரியவே மாட்டோம் என்று அவளுக்கு சத்யாகிரகம் நடத்திக் கொண்டிருந்தது.

விஷ்ணு மயூரியிடம் 'ஏதாவது சொன்னியா?' என்று வினவியபடி கண் ஜாடை காட்டி நிற்கவும் ஒன்றும் புரியாமல் உதவிக்கு அருகில் இருந்த சுவற்றைப் பற்றிக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தாள் மயூரி.

''என்னடா மயூரிகிட்ட கண்ணாலேயே ஜாடை காண்பிக்கிற? அவ ஒண்ணும் என்கிட்டே சொல்லலை. தேவையில்லாமல் அவ மேல் எரிச்சலைக் காண்பிக்காதே'' என்று சொல்லிவிட்டு முன்னால் செல்ல, இருவரும் அமைதியாக விசாலாட்சியைத் தொடர்ந்தனர்.

விஷ்ணுவிற்கு அம்மா எப்படி இங்கே வந்தார்கள் என்று குழப்பம் என்றால்... மயூரிக்கு ஒன்றும் புரியாமல் குழப்பம்.

விஷ்ணுவிற்கும், மயூரிக்கும் ராணி தேநீர் கொண்டு வந்து கொடுக்க, ''எனக்கு வேண்டாம் ராணி...'' என்று மறுத்தாள் மயூரி.

ராணி நகர்ந்து சென்றதும், ''அம்மா! நீங்க நினைக்கிற மாதிரி இல்லைம்மா. மயூரியைப் பத்தி உங்களிடம் சொல்லலாம்னு நினைச்சால் நீங்க கோவில் விசேஷத்துக்கு வந்திருந்தீங்க'' என்று விளக்கத்தைத் தொடங்கினான் விஷ்ணு.

''என்னது நான் நினைக்கிற மாதிரியில்லை?'' கோபமாக ஆரம்பித்தவர், ''நாம அப்படியே தகவல் தொடர்பு இல்லாத கற்காலத்தில் வாழறோம் பாரு... கோவில் விசேஷத்துக்கு கிளம்பியிருந்தீங்கன்னு காரணம் சொல்றதுக்கு? உனக்கு என் செல்போன் நம்பர் தெரியாது? ரெண்டு நாளா பேசாமலா இருந்தோம்? அப்படியே இருந்தாலும் இதென்ன நேத்து கல்யாணம் முடிஞ்சு இன்னைக்கு பிள்ளைத்தாச்சியா ஆகிட்டாளா உன் பெண்டாட்டி?'' அசராமல் பதிலடி தந்தார் விசாலாட்சி.

மற்ற இருவரும் திரு திருவென்று விழிப்பதைப் பார்த்து, ''எனக்கு ராணி தான் போன் செய்து சொன்னாள். நம்ப முடியாமல் மேனேஜர் கிட்ட கூட போனில் விவரம் கேட்டேன். கேட்டதும் எப்படி படபடன்னு வந்துச்சு தெரியுமா? நீயே சொல்லியிருந்தால் கூட...'' இப்பொழுதும் விசாலாட்சி அம்மாவிற்கு படபடவென்று தான் இருந்தது.

''அம்மா! எதுவாக இருந்தாலும் நிதானமா பேசலாம். டென்ஷன் ஆகாதீங்க'' என்று சமாதானம் செய்தான் விஷ்ணு. குழப்பத்தை தீர்ப்பதை விட அம்மாவின் உடல் நலம் தானே இப்பொழுது முக்கியம்?

மயூரியும் தன் பங்கிற்கு சமாதானம் செய்ய, ''சரி! நான் டென்ஷன் ஆகலை மயூரி. இப்போவே மணி ஏழு ஆகப் போகுது. நீ விஷ்ணு கூட டாக்டரிடம் போயிட்டு வா'' என்றார் அக்கறை மிகுந்த குரலில்.

அவரது அக்கறையில் நெஞ்சம் கனக்க, ''அம்மா! நீங்க...'' என்று மயூரி தொடங்க இடைப்புகுந்த விஷ்ணு, ''நீங்களும் டாக்டரைப் பார்க்க எங்களுடன் வாங்கம்மா'' என்றான்.

''இல்லைடா. ஒண்ணும் பிரச்சனையில்லை. நாளைக்கு நாம சென்னை கிளம்பணும். பயணம் எல்லாம் செய்ய முடியுமான்னு டாக்டர்கிட்ட விசாரிச்சுட்டு வா'' என்று முடிவுடன் சொல்லி இருவரையும் அனுப்பி வைத்தார்.

போகிற வழியில் விஷ்ணுவிடம், ''பிரசாத் உடைய அம்மா என்று தான் சொ...ன்னா...ங்க?'' என இழுத்தாள் மயூரி.

''என் முழு பெயர் விஷ்ணு பிரசாத். என் அண்ணனின் பெயர் வைபவ் பிரசாத். நாங்க ரெண்டு பேரும் ட்வின்ஸ். சின்ன வயசில் இருந்து யாரிடமாவது பொதுவாகச் சொல்லணும் என்றால் பிரசாத் உடைய அம்மா என்று தான் சொல்லுவாங்க'' என வாய் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தாலும் மனதில் வேறு விதமான சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

''ச்ச! இந்த பெயர் குழப்பம் பெரிய பிரச்சனையில் நம்மை கொண்டு போய் விட்டுடும் போல இருக்கே?'' என்று சோர்வுடன் வினவினாள் மயூரி.

''ஆமாம் மயூரி. அம்மா நம்ம ரெண்டு பேரையும்... காத... கணவன் மனைவின்னு நினைச்சுட்டு இருக்காங்க. அம்மாக்கு நிறைய வருத்தம்..'' என ஆழமான குரலில் சொல்லவும் கலங்கினாள் மயூரி.

மயூரி, ''அதெப்படி சொல்றீங்க? அவங்க வேற மாதிரியும் நினைக்க வாய்ப்பிருக்கே? எப்படி கணவன் மனைவி என்று நினைச்சுட்டாங்க?'' என்றாள் சந்தேகமாக.

''அம்மாவே சொன்னாங்களே. இப்போதைக்கு நீ யாரோ என்ற எண்ணமே இல்லை அம்மாவிற்கு. அப்படி இல்லாததால் ரெண்டு மாதிரி தான் நினைக்க முடியும். 'வேற மாதிரி...' என்றால் அது ஒரு பெண்ணை ரொம்ப தப்பா நினைக்கிறதா ஆகும். அதனால அப்படி கண்டிப்பா நினைக்க மாட்டாங்க. என்னை அப்படி நினைச்சாலும் நினைப்பாங்க. ஆனா உன்னை... நோ வே. அவங்க கோபம், வருத்தமெல்லாம் என் மேல தான்'' என்றான் உறுதியாக.

''ராணியும், மேனேஜரும் என்ன சொன்னாங்களோ?''

''முதலாளியின் நடத்தைப் பத்தி கட்டாயம் அம்மாக்கிட்டே தப்பா சொல்ல முடியாது. இதுவரைக்கும் இல்லாமல்... முதலாளி ஒரு பெண்ணுடன் வந்ததும் ஒரு வேளை அவங்களே கல்யாணம் செய்து கூப்பிட்டு வந்த பொண்ணு அப்படின்னே நினைச்சிருக்கலாம். நினைச்சதை அம்மாக்கிட்ட கூட சொல்லியிருக்கலாம். யாருக்குத் தெரியும்?'' என்று விளக்கம் சொன்னான் விஷ்ணு.

''சாரி விஷ்ணு என்னால்... உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வேண்டாம். இப்படியே ஏதாவது பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுங்க. நான் கிளம்பிடறேன்'' என்று சோர்வான குரலில் முடித்தாள்.

மயூரி சொல்வதைக் கேட்டு உடனடியாக கோபம் தான் எழுந்தது விஷ்ணுவிற்கு. கோபமாக அவள் புறம் முகத்தைத் திருப்பியவன் மயூரியின் கலவரமான முகத்தைப் பார்த்துவிட்டு சாந்தமானான்.

''இப்போ பிரச்சனை என்னையும், உன்னையும் மட்டும் சம்பந்தப்படுத்தி இல்லை மயூரி!''

அவன் சொல்வது உண்மை தான். ஆனால்.. அவளுக்கே ஆயிரத்தெட்டு பிரச்சனை இருக்கும் போது அவன் தாயைப் பற்றி அவளுக்கென்ன?

''எனக்கு உதவி செய்யப்போய் உங்களையும் இழுத்து விட முடியாது. இந்தப் பிரச்சனை வளர்றதுக்கு முன்னாடியே உண்மையைச் சொல்றது தான் நல்லது.''

''நல்லதுன்னு நாம நினைக்கிறது அம்மாவுடைய உடம்புக்கு அவ்வளவு நல்லதில்லை மயூரி.''

''ஏன்?'' காரணம் புரியாமல் வினவினாள் மயூரி.

''அப்பா இறந்து நாலு வருஷம் ஆச்சு. அம்மாக்கு அப்போ ஒரு ஹார்ட் அட்டாக் வந்தது. அதுக்கு அப்பா இறந்த அதிர்ச்சி ஒரு பக்கம் காரணமா இருந்தாலும்... அம்மாக்கு ஏற்கனவே ஹார்ட்டில் இருந்த வால்வ் பிரச்சனை தான் முக்கிய காரணம். அந்த அட்டாக்கில் இன்னும் இருதயம் பலவீனமா ஆகி இருக்கு. ஆபரேஷன் தாங்கக் கூட வலு இல்லை. நாலு வருஷமா அம்மா மெடிக்கேஷனில் தான் இருக்காங்க. ரொம்ப ஸ்ட்ரெஸ் என்றால் மயங்கிடுவாங்க'' உணர்ச்சியற்ற குரலில் விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்க மயூரிக்கு விசாலாட்சி மேல் பரிதாபம் எழுந்தது.

மயூரியால், ''ஐ அம் சாரி'' என்று ஆறுதல் மட்டுமே அந்தக் கணத்தில் சொல்ல முடிந்தது.

சற்று நேரம் இருவர் மத்தியிலும் கனத்த மௌனம் நிலவ, வண்டி மருத்துவமனையை வந்தடைந்தது.

பரிசோதனைக்காக மயூரியை அனுப்பிவிட்டு வெளியிலேயே காத்திருந்தான் விஷ்ணு. மனதில் பிரச்சனையைப்

பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க, அன்னையின் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் தந்து எடுக்கும் முடிவு மயூரியை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்று உறுதி மட்டும் தான் பிறந்தது.

பரிசோதனைகளின் முடிவைப் பார்த்த மருத்துவர், ''கொஞ்சம் அனீமிக்கா இருக்காங்க. ஆனால் இந்த நேரத்தில் அனீமிக்கா இருக்கிறது சகஜம் தான். ஃபோலிக் ஆசிட் மாத்திரையும், கொஞ்சம் வைட்டமின் மாத்திரையும் சேர்த்திருக்கேன்'' என்று மேலும் பல அறிவுரைகளுடன் அனுப்பி வைத்தார்.

திரும்பும் வழியில், ''ஏதாவது முடிவு செய்தியா மயூரி?'' என்று வினவினான் விஷ்ணு.

''அம்மாவுடைய நலன் எவ்வளவு முக்கியமோ அதே மாதிரி நீங்க பிரச்சனையில்லாமல் இருக்கணும். அது மட்டும் தான் இப்போதைக்கு எனக்கு தோணுது. சட்டிக்கு பயந்து அடுப்புல குதிக்க முடியாது விஷ்ணு.''

ஒருவர் மற்றவரின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட ஒரே மாதிரி தான் சிந்தனை செய்திருக்கின்றனர்.

பிரச்சனைக்குத் தீர்வு காணவில்லை என்றாலும் மயூரியின் எண்ணம் விஷ்ணுவிற்கு ஆறுதலைத் தந்தது.

வண்டியை ஓரமாக நிறுத்தியவனை யோசனையோடு மயூரி பார்க்க, விஷ்ணுவிடம் இருந்து நிதானமாக வார்த்தைகள் பிறந்தன.

''நான் சொல்றது உன்னால் ஏத்துக்க முடியுமான்னு தெரியலை. எந்த அளவு சாத்தியம்னு கூட எனக்குத் தெரியலை...'' என்று பீடிகையுடன் தொடங்கவும் கவனத்துடன் கேட்டாள் மயூரி.

மிகுந்த தயக்கத்துடன், ''அம்மா நினைக்கிற மாதிரி நம்ம கணவன் மனைவியாகவே...'' என்று ஆரம்பிக்கவும் சட்டென்று, ''முடியாது...'' என இடைப்புகுந்தாள் மயூரி.

''சொல்றதை முழுசா கேட்டுட்டுப் பேசு மயூரி.''

அவளது மௌனத்தை தொடர்ந்து, ''அம்மாவிடம் போய் இப்போ உண்மையைச் சொன்னாலும் பிரச்சனை தான். அது மட்டுமில்லை... உனக்கும் பாதுகாப்பான இடம் முக்கியம். நான் அங்கே இருந்துட்டு உனக்கு அவசரம்னா உடனே வரவும் முடியாமல்... இன்னைக்கு நான் கோவையில் இருந்ததால் சரியாப் போச்சு'' என்ற தும் சொல்வதறியாது வாயடைத்து நின்றாள் மயூரி.

''யாரையும் நம்பியும் இங்கே யாருமில்லை விஷ்ணு. நீங்க ஊட்டியில் இருப்பீங்க என்று எதிர்பார்த்தா நான் இங்கே வந்தேன்?''

''.....''

''பாதுகாப்பான இடம், உங்க அம்மா ஹெல்த் எல்லாம் முக்கியம் தான். ஆனால் இதில் நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையும் சம்பந்தப்பட்டு இருக்கு. கணவன் - மனைவியா நடிக்கிறது சாதாரணம்னு நினைக்கிறீங்களா? அதுவும் உங்க அம்மா நாம என்ன நினைக்கிறோம்னு கரெக்டா தெரிஞ்சு பேசறாங்க. அவங்க முன்னாடி எப்படி நடிக்க முடியும்?'' என்று கூறியவள் 'ஆனா சரியா தப்பா புரிஞ்சுக்கிட்டு இருக்காங்க' என்று நினைத்துக் கொண்டாள்.

''அப்போ இதைவிட நல்ல ஐடியா இருந்தால் நீயே சொல்லு'' என்று பந்தை அவளிடம் தள்ளினான் விஷ்ணு.

அவளிடம் தீர்வு இருந்தால் தான் சொல்ல மாட்டாளா என்ன? ஆனால் ஒரு விஷயத்தில் உறுதியாய் இருந் தாள். அதாவது பிரச்சனை எனும் புதைக்குழியில் இருந்து காப்பாற்ற உதவிக்கரம் நீட்டும் விஷ்ணுவையும் சேர்த்து அதனுள் இழுக்கக் கூடாது என்பதில்.

ஒருவித தவிப்புடன், ''நீங்க சொல்ற மாதிரி நடிச்சுட்டு எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? இதெல்லாம் நிரந்தரத் தீர்வு ஆகாது. வேற ஏதாவது சொல்லுங்களேன்'' என்றாள் மயூரி.

''நீ சொல்றதெல்லாம் சரிதான் மயூரி'' என்று ஒப்புக் கொண்டவன் மீண்டும் தயக்கமாக, ''நீ மறுபடியும் உங்க வீட்டுக்கே போகலாமே? இந்தக் குழந்தையை... வேண் டாமே மயூரி?'' என்றான் விஷ்ணு.

''இந்தக் குழந்தை இல்லாமல் போனால் மட்டும் என் மனசாட்சியிடம் இருந்து தப்பிக்க முடியுமா விஷ்ணு? இப்போவே யாரையும் ஏறெடுத்துப் பார்க்க முடியாமல் உடம்பெல்லாம் கூசுது. பல்லைக் கடிச்சுட்டு நரக வேதனை அனுபவிக்கிறேன். முகத்தைக் கூட கண்ணாடியில் பார்க்க முடியலை என்னால்...'' வேதனை மண்டிய குரலில் கூறினாள் மயூரி.

''நீ ரொம்ப நல்லவளா இருக்கிறது தான் பிரச்சனையே!'' என்று சொல்லிவிட்டு மௌனமானான் விஷ்ணு.

'இத்தனையும் மறைச்சுட்டு தான் நடமாடறாளா இவள்?' என்ற அவனது யோசனை மயூரியின் பேச்சில் தடைபட்டது.

''நான் கொலைகாரியாகவும் பழியை ஏத்துக்க முடி யாது. பொய், பித்தலாட்டம் செய்து என்னால் நடிக்கவும் முடியாது. என்னை தயவு செஞ்சு வற்புறுத்தாதீங்க...'' என்று கலங்கிய குரலில் கோரிக்கை விடுத்தாள் மயூரி.

விஷ்ணு பிரச்சனையை அறிந்தவன் என்றாலும் தன் உணர்வுகளை அவனிடத்தில் முதன் முறையாகப் பகிர்ந்தாள். மயூரியின் உணர்வுகள் புரிந்த விஷ்ணுவிற்கு மனம் வெகுவாக பாரமாகியது.

''அப்போ... குழந்தை? நாளைக்கு அந்தக் குழந்தை வளர்ந்து பெரிதானால்... இப்போவே உன் வீட்டில் சொல்ல முடியாமல் தலை மறைவா இருக்கிற மாதிரி இருக்கே. அப்புறம் என்ன செய்யப் போற மயூரி? எல்லாம் யோசிச்சுப் பார்த்தியா?''

எதைப் பற்றியும் யோசிக்க முடியாமல், ''தெரியலை விஷ்ணு. எதுவுமே தெரியலை. ஆனால் உங்க அம்மா உங்களை தப்பா நினைக்கிறாங்க. நான் படற கஷ்டத்துக்கு நீங்க பழியை ஏத்துக்க வேண்டாம். என்னை இப்படியே விட்டுடுங்க. நான் போயிடறேன். ப்ளீஸ்'' என்று தான் அதன் பிறகு விஷ்ணுவின் எல்லா கேள்விகளுக்கும் இதே பதிலை வெவ்வேறு விதமாக சொல்லிக் கொண்டிருந்தாள் மயூரி.

வெகு நேரமாகவும் முடிவாக, ''நானே உங்க அம்மாக்கிட்ட பக்குவமா விஷயத்தை எடுத்துச் சொல்றேன் வாங்க'' என்றாள்.

அவளை சமாதானப்படுத்தும் வகை தெரியாமல் நின்றவனுக்கு வைபவிடம் இருந்து அழைப்பு வந்தது. சகோதரனுக்கு விஷயம் தெரிந்து விட்டது போல என்று நினைத்தபடியே எடுத்தவன், ''சொல்லு வைபவ்!'' என்றான் இறுகிய குரலில்.

''என்னடா விஷ்ணு? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அம்மா உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சுன்னு சொல்றாங்க. அம்மா ஊட்டிக்கு வந்திருக்காங்களாம். நேத்து கூட அதனால் தான் ஆளு டல்லா இருந்தியாடா?''

விஷ்ணுவிற்கு விளக்கத்தை எங்கிருந்து தொடங்குவது என்றே தெரியவில்லை.

வைபவ் தொடர்ந்து, ''நீயே போன் செய்து விஷயத்தைச் சொல்லுவேன்னு நினைச்சேன். பரவாயில்லை

விஷ்ணு. இப்போ நம்ம டிரைவர் செந்தில் போன் பண்ணி அம்மாக்கு பிரஷர் லோ ஆகிடுச்சு. டாக்டர் வந்து செக் பண்ணிட்டு இருக்காங்கன்னு சொல்றார். போய் என்னன்னு பாரு. அப்புறம் இன்னொரு விஷயம். நீங்க எல்லாரும் சென்னைக்கு வர வரைக்கும் நான் இங்க வேலையைப் பார்த்துக்கிறேன். பை'' என்று விட்டு வைத்தான்.

போகும் வழியில் மயூரியிடம் விஷயத்தைச் சொல்லி வீட்டை வந்தடைந்தனர். இருவரும் விசாலாட்சியை சென்று பார்த்தபொழுது, அவர் மருந்துகளின் உதவியோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். மயூரிக்கு அவள் தான் இதற்கெல்லாம் காரணகர்த்தா என்று நினைத்து குற்ற உணர்ச்சி அதிகமாகியது.

நடுநிசிக்குப் பிறகு தான் விசாலாட்சிக்கு மேலாக விழிப்புத் தட்டியது.

மெல்லிய முனகலாக, ''வி..ஷ்..ணு'' என்று குரல் கொடுக்க அவர் அருகில் படுத்திருந்த மயூரி எழுந்து, ''உங்களுக்கு ஏதாவது தேவையா? அவரை வரச் சொல்லவாம்மா?'' என்று கனிவுடன் வினவினாள்.

மயூரியின் பார்வையில் இருந்த பயத்தை உணர்ந்தவர், ''எனக்கு ஏதாவது ஆகிடும்னு பயமா இருக்கா மயூரி?'' என்று வினவினார் விசாலாட்சி.

''இல்லைம்மா! உங்களுக்கு ஒண்ணும் ஆகாது'' என்று தெம்பு தந்துவிட்டு, ''ஏதாவது சாப்பிடறீங்களா?'' என்றுவிட்டு சூடாக பால் எடுத்து வந்தாள்.

மருமகளின் (ஆமாம் விசாலாட்சி அப்படி தானே நினைத்துக் கொண்டிருக்கிறார்) அக்கறையில் மனம் குளிர்ந்த விசாலாட்சி, ''என் பசங்க ரெண்டு பேருக்கும்

ரொம்ப செல்லம் கொடுத்திருந்தேன்மா. அவர் இறந்த பிறகு தான் பிள்ளைகளின் போக்கில் மாறுதல் இருந்ததால் ஓரளவு கண்டிப்பு தான் கொடுக்கிறது. அப்படி இருந்தும் அரசல், புரசலாக காதில் விழுந்துட்டுத் தான் இருக்கு. விஷ்ணு தேவலாம்னு நினைச்சேன். எல்லாத்தையும் என்கிட்டே சொல்லிட்டு இருக்க மாட்டான் தான். ஆனால் அவன்... என்கிட்டே சொல்லாமலேயே இவ்வளவு பெரிய விஷயத்தைச் செய்திருக்கான்னு நம்பவே முடியலை. அதுவும் இத்தனை நாளா... சரி விடு காதல் வந்தா எல்லாம் மறந்து போகும் போல?'' பதிலை எதிர்பார்க்காமல் விரக்தியுடன் பேசினார்.

''அம்மா! உங்க பையன் மேல் எந்தத் தப்புமில்லை... நீங்க...''

''தப்பில்லை?! ம்ஹும்... பெத்தவளுக்கு தானே அந்த வேதனை தெரியும்? அவங்க அப்பாக்கு பணம், காசு வந்த பிறகு இல்லாத கெட்டப் பழக்கம் இல்லை. பிள்ளைகளும் அவரைப் பார்த்து கெட்டுப் போயிடக் கூடாதுன்னு பிரசாத் அப்பாகிட்ட கூட நிறைய தடவை சண்டை போட்டிருக்கேன். இந்த நெஞ்சுவலி என்னை முதலில் கூட்டிட்டுப் போயிடும்னு பார்த்தேன். ஆனால்... சரி... பழைய கதையெல்லாம் இப்போ பேசி என்ன ஆகப் போகுது?''

மயூரி விசாலாட்சியின் பேச்சில் ஆயாசமாய் நின்றிருந்தாள்.

''மயூரி! நீயும் பழசெல்லாம் நினைச்சு குழம்பிட்டு இருக்காதே! நீ நம்ம வீட்டுக்கு வந்தால் எல்லாம் சரியாகிடும். இந்த உயிரை பிடிச்சுட்டு இருக்கிறதே என் பிள்ளைகளுக்கு நல்லபடியா வாழ்க்கை அமையறதைப் பார்க்கத்தான்.''

விசாலாட்சியின் கண்ணில் இருந்து கண்ணீர் வரவில்லை. ஆனால் அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் உண்மையான வேதனையை உணர முடிந்தது.

மௌனம் மறுப்பாய் மயூரியின் இடத்தில் இருக்க... விசாலாட்சிக்கு அதே மௌனம் சம்மதமாய் இருந்தது.

தொடர்ந்து, ''நீ பேரக் குழந்தையை பெத்து கையில் கொடுத்தால் எனக்கு உடம்பில் கூட எந்தப் பிரச்சனையும் வராது'' என்று விசாலாட்சி சொல்லும் பொழுது விஷ்ணு அறைக்குள் வந்தான்.

தாயும், மகனும் பேசட்டும் என்று மயூரி வெளியே செல்ல எத்தனிக்க, ''நீயும் இரும்மா'' என பணித்தார் மூத்தவர்.

அழுந்திய தொண்டையை சரி செய்த விஷ்ணு, ''அம்மா! மயூரி இங்கே ஊட்டியிலேயே இருக்கட்டும். அவளுக்கும் அதான் விருப்பம்'' என்று பொறுமையாக எடுத்துரைக்க மகனிடம் துச்சமாகப் பார்வை செலுத்தினார் விசாலாட்சி.

'கண்டேன் சீதையை' என்று பேச்சைத் தொடங்கினால் பிரச்சனை இருக்காது. ஆனால் இருக்கும் குழப்பத்தில் சரளமாகப் பேச்சு வருவதே சிரமமாகத் தான் இருக்கிறது. இதில் விசாலாட்சியின் உடல் நிலை, மயூரியின் மனநிலை என்று எல்லா நிலைகளையும் யோசித்து மொத்தத்தில் சகஜ நிலையில் விஷ்ணுவிற்கு பேச்சு வரவில்லை.

தாயாரின் முறைப்பில் பேச்சை நிறுத்தியவன் மயூரியை ஏறிட அவள், ''நானும்... அதையே...'' என்று தொடங்கினாள்.

''நல்லா தான் இருக்கு நீங்க ரெண்டு பேரும் பேசறது. இங்கேயே இருப்பாளாம். அதுக்கு இவரும் துணை. நான் என் முடிவைச் சொல்லிட்டேன். இதற்கு மேல் உங்கள்

இஷ்டம். நாளைக்கு உங்கள் முடிவைச் சொல்லுங்கள். இப்போ நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கறேன்'' என்று பேச்சைக் கத்தரித்து அனுப்பினார் விசாலாட்சி.

விஷ்ணு வெளியில் வந்து தலையை உலுக்கிக் கொண்டு மயூரியை கேள்வியுடன் நோக்க, அவளும் இவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இப்போ என்ன பண்றது?'' அதிர்ச்சியில் இருந்து மீளாமல் வினவினாள்.

''முடிவு உன் கையில்!'' என்று சுருக்கமாகச் சொல்லி விட்டுச் சென்றான் விஷ்ணு.

விஷ்ணு சொல்லிவிட்டுச் சென்றதும் சுறுசுறுவென்று அவன் மீது கோபம் எழுந்தது.

நான் என்னுடைய உணர்வுகளை இவனிடத்தில் தானே சொன்னேன்? இப்பொழுது என்னவென்றால் எனக்கென்ன என்பது மாதிரி பேசிவிட்டுச் செல்கிறானே? நான் என்ன களிமண்ணால் செய்த பொம்மையா? எனக்கிருக்கும் உணர்வுகளை மதிக்காமல்...

சற்று நேரத்தில் அவளுக்கு மனம் நிதானம் அடைந்தது. விஷ்ணுவிற்கும் இக்கட்டான சூழ்நிலை தான். என்னுடைய நலனையும் கருதி தானே என்னிடம் முடிவைக் கொடுத்துவிட்டுச் செல்கிறான்?

கொஞ்ச நேரம் இருதலைக் கொல்லி எறும்பாய் தவித்துக் கொண்டிருந்த மயூரி 'நான் இருக்கும் சூழ்நிலையில் யாருக்கும் பாவமோ, பரிதாபமோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அநாவசியமாக என்னால யாருக்கும்... விஷ்ணுவிற்கும் எந்தத் தொந்தரவும் வேண்டாம்' என்று தனக்குள் ஒரு முறைக்கு இருமுறை சொல்லிக் கொண்டு அம்மாவிடம் உண்மையைச் சொல்லி, ஊட்டியிலேயே

தங்குவது தான் தன் இறுதி முடிவென்று விஷ்ணுவிடம் சென்று அறிவித்தாள்.

அதற்கு சம்மதிக்காத பட்சத்தில் இங்கிருந்து வெளியே செல்வது என்றும் உறுதி செய்திருந்தாள்.

அவளது முடிவைக் கேட்டு சற்று யோசனையுடன், ''ஊட்டியில தங்கறதுக்கு நீ சென்னையிலேயே வந்து தங்கிக்கோ மயூரி'' என்றான் விஷ்ணு.

''அங்கே வந்து தங்கி மட்டும் என்ன ஆகப் போகுது? நடைமுறைக்கு ஒத்தும் வராது.''

''நீ குழந்தைப் பிறக்கிற வரைக்கும் எங்க வீட்டிலேயே இருக்கலாம். அம்மாக்கிட்ட இப்பவே சொல்லாமல் பொறுமையா விஷயத்தைச் சொல்லியிருக்கலாம்'' என்று அடுத்த யோசனையை சொன்னான் விஷ்ணு.

''போகாத ஊருக்கு வழி தேடணுமா? சின்ன பிரச்சனையை தேவையில்லாமல் பெருசாக்கிக்கப் போறோம். இப்போ மட்டும் சொல்ல முடியாமல் அப்புறம் எப்படிச் சொல்ல முடியும்? ஒரு வேளை சொல்ல முடியாமலே போனால்...'' என்று அவன் அடுக்கிய காரணத்தில் உள்ள ஓட்டைகளைச் சுட்டிக் காட்டினாள்.

பின்னர் மயூரியே, ''அப்புறம் நடக்காத கல்யாணத்திற்கு விவாகரத்து. குழந்தை பிறந்தால் தேவையில்லாத கேள்விகள்... வேண்டாம் விஷ்ணு. ஒத்து வராது'' என்று முடித்தாள் உறுதியான குரலில்.

''ஓ.கே. மயூரி. என்னைவிட நீ நிறைய விஷயத்தை யோசிச்சுப் பார்க்கிற. சொல்லப் போனால் இங்கே தங்க வைக்கிறதுக்கு முன்னாடி இந்த மாதிரி பல யோசிச்சிருந்தால் உன்னையும் ஒரு தர்ம சங்கடமான நிலைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டாம்.''

"சரி. நாளைக்குக் காலையில் அம்மாக்கிட்ட பேசறேன். இப்போ அம்மா ரெஸ்ட் எடுக்கட்டும். நீங்க எனக்கு செய் திருக்கிறது. சாதாரண உதவியில்லை விஷ்ணு. ரொம்ப தேங்க்ஸ். உங்க உதவியை நான் என்னைக்கும் மறக்க மாட்டேன். குட் நைட்" என்று விட்டுச் சென்றாள் மயூரி.

மறுநாள் காலையில் விசாலாட்சி ராணியின் உதவி யுடன் சென்னைக்குச் செல்ல ஏற்பாடு செய்து கொண் டிருந்தார்.

மயூரியின் முகத்தைக் கண்டதும், "மயூரி! காலையில் சாப்பிட்டதும் கிளம்பலாமா? உடம்புக்கு ஒண்ணும் பிரச் சனை இல்லையே?" என்று அக்கறையுடன் வினவினார் விசாலாட்சி.

அந்த வேளையில் மயூரி மனதிற்குள் சொல்ல வேண் டியவற்றை ஒத்திகைப் பார்த்துவிட்டு அவரிடம் பேச ஆரம்பித்தாள்.

"அம்மா! நான் கொஞ்சம் உங்கக்கிட்ட பேசணும். பொறுமையா கேளுங்க! நான் சென்னைக்கு வரலைம்மா. வர வேண்டிய அவசியமும் நிச்சயமா இல்லை" என்று தொடங்கினாள்.

விசாலாட்சி ஒரு நிமிடம் யோசனையுடன் மயூரியை நோக்கினார்.

பின்னர் அவரை அருகில் நிறுத்தி, "என்னடா உனக்குப் பிரச்சனை?" என்று தாடையை நிமிர்த்திக் கேட்டார்.

அவரது குரலில் இருந்த கனிவும், தொடுகையில் இருந்த அன்பும் மயூரியின் மனதை வருட.. அவளது உறுதி தளர்ந்து கண்ணீர் பெருகியது.

மயூரியின் கண்ணீரைத் துடைத்தபடியே, "உனக்கு ஒரு அம்மாவா என்னை நினைச்சுக்கோ. நான் சொல்

றதைக் கேட்டு என் கூட வாம்மா. பெத்த மகளா உன்னை கவனிச்சுக்கிறேன். அழக்கூடாது" என்று அணைத்து ஆறுதல் சொன்னார்.

தன் அன்னையின் பாசத்தை அந்த கணத்தில் உணர்ந்த மயூரிக்கு விசாலாட்சியிடம் மறுப்பு சொல்ல நா எழ வில்லை.

இயந்திர மயமாய் விசாலாட்சியின் குரலுக்குக் கட்டுப் பட்டு, 'நதி எங்கே அடித்துச் சென்றாலும் அதன் போக் கில் போக வேண்டியது தான். கரை சேர்ந்தால் புண் ணியம் இல்லையென்றால்...' என்ற மனநிலையில் சென்னைக்குப் புறப்பட ஆயத்தமானாள் மயூரி.

செல்லும் வழியில் விசாலாட்சி மாறி மாறி தன் பிள்ளை களின் புராணத்தைப் பேசிக் கொண்டு வர விஷ்ணுவும், மயூரியும் மௌனமாய் பயணம் செய்தனர்.

ஏனோ மயூரியின் மனம் விசாலாட்சியின் கனிவில் அமைதியாய் இருந்தது.

ஆனால் சற்று நேரத்தில் வீசப் போகும் புயலுக்கு முன் ஏற்படும் அமைதி அது என்று பாவம் அவளுக்குத் தெரியவில்லை.

5

விஷ்ணு, மயூரி மற்றும் விசாலாட்சி மூவரும் சென் னையை அடையும் பொழுது விசாலாட்சி, "அம்மா மயூரி! பெசன்ட் நகரிலிருக்கும் அந்தப் பெரிய வீட்டில் நானும் விஷ்ணுவும் மட்டும் தான். எப்பவாவது வைபவ மும் பெங்களூரிலிருந்து வேலை இருந்தால் வருவான்.

வந்தால் சனி ஞாயிறு வீட்டில் தங்கறதே பெரிய விஷயம். எப்பவும் அவனுக்கு வேலை, வேலையை விட்டால் ப்ரெண்ட்ஸ் தான். ஆனால் விஷ்ணு என்றால் தனி ப்ரியம் தான். யாருக்காகவும் எதுவும் செய்ய மாட்டான். விஷ்ணு மட்டும் இதுக்கு விதி விலக்கு. எனக்குக் கூட சில சமயம் ஏதாவது காரியம் ஆகணும்னா விஷ்ணு மூலமா தான் சொல்றது. இப்ப நீயும் அங்கே நம்ம வீட்டுல இருப்ப. நீ தான் இனி எல்லாத்தையும் பார்த்துக்கணும்'' என்று தன் வீட்டைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டு வந்தார். எல்லாவற்றையும் ஒரு செவியில் கேட்டுக் கொண்டே வந்தாலும், வீட்டை நெருங்க நெருங்க நெஞ்சின் துடிப்பு மயூரிக்கு அதிகரித்தது என்னவோ நிஜம். விஷ்ணுவிடம் சொன்னது போல் எதற்கோ பயந்து எங்கேயோ போய் மாட்டிக் கொள்ளப் போகிறோம் என்ற எண்ணத்தை ஏனோ ஒதுக்க முடியவில்லை.

பயணத்தின் தொடக்கத்திலிருந்த அமைதி, ஒரே வீட்டில் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒன்றாக கணவன் மனைவியாக, அதுவும் இந்த அன்பான தாயின் முன் நடிக்க வேண்டும் என்ற நிஜமே மயூரியை அச்சுறுத்தியது.

முன் இருக்கையில் டிரைவருடன் உட்கார்ந்திருந்த விஷ்ணுவிடம் அவளையும் மீறி பார்வையை மயூரி செலுத்த, விஷ்ணுவும் அதே சமயம் இவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். மயூரி முகத்தில் தெரிந்த குழப்பத்தையும் பயத்தையும் பார்த்தவனுக்கு எப்படி தாயின் முன் சமாதானம் செய்வதென்று புரியவில்லை.

விஷ்ணுவிற்குமே மயூரியை தன் அம்மாவை சாக்காக சொல்லி இதில் இழுத்து விட்டது குற்ற உணர்வைத் தூண்டியது. ஆனால் அதையும் மீறி ஒரு ஆறுதலையும் அமைதியையும் உணர்ந்தான்.

தனக்குள்ளேயே மயூரியைப் பற்றி... எங்கே இருப்பாளோ? என்ன செய்து கொண்டிருக்கிறாளோ என்ற கவலைப்படாமல் இருக்க முடியும் என்பதால் தான் அந்த அமைதியும் ஆறுதலும் என நினைத்து, தன்னையே சமாதானமும் செய்து கொண்டான்.

தன்னால் முடிந்தளவிற்கு எல்லோரும் இருக்கும் போது எவ்வளவு பார்வையால் தைரியம் அளிக்க முடியுமோ, அதை தன் பார்வையின் மூலம் மயூரிக்கு தெரியப் படுத்தினான் விஷ்ணு.

அவனின் கண் ஜாடையை உணர்ந்தவளுக்கு மனம் லேசாக அமைதிப்பட்டது. கூடவே, எதுவும் கை மீறிப் போவது போலிருந்தால் நடையைக் கட்டிவிட வேண்டியது தான் என்றும் நினைத்துக் கொண்டாள். ஆனால் அதற்கு அத்தனை சீக்கிரம் அவசியம் ஏற்படுமென்று தான் அவள் நினைத்தும் பார்க்கவில்லை.

''அப்புறம் மயூரி... நேத்தே சொல்லணும்னு இருந்தேன். மறந்துட்டேன். சென்னை போன பிறகு உங்க அம்மா, அப்பா கூட பேசணும். நீங்க தான் சின்ன பசங்க. ஏதோ தப்பை செய்துட்டீங்க. நானும் அப்படியே இருக்க முடியாதில்ல? பெரியவங்க திட்டினால் வாங்கிக்கோங்க. வேற என்ன செய்யறது? அவங்க மனசும் மாறும். ஒரு நாள் பேசிட்டு, நேரில் போயிட்டு வரலாம்'' என்று ஒரு புது வெடிகுண்டை எடுத்துப் போட்டார் விசாலாட்சி.

ஏற்கனவே இருந்த பயத்துடன் விசாலாட்சியின் பேச்சில் எழுந்த அதிர்ச்சியில் முகம் வெளிறியது மயூரிக்கு.

''ஏன்மா இவ்வளவு பயத்தோட இருக்க? நாங்க என்ன சிங்கமா, புலியா? உன்னை என்ன கடிச்சா திங்கப்

போறோம்? நியாயப்படி பார்த்தால் நீ இந்நேரத்துக்கு சந்தோஷத்துல துள்ளி இல்ல குதிச்சி இருக்கணும்?'' என்று மயூரியின் கரத்தைப் பற்றி ஆறுதல் அளித்தார்.

சில நிமிடங்களில், ''இதோ! நம்ம வீடே வந்துடுச்சு. கொஞ்சம் நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருங்கடா! நான் நம்ம வேலம்மாவிடம் ஆரத்தி கரைக்கச் சொல்றேன்'' என்று கூறியபடி, அவர்களை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு உள்ளே சென்றார் விசாலாட்சி.

''உனக்குப் பிடிக்காதது எதுவுமே இங்கே நடக்காது மயூரி. ஐ ப்ராமிஸ். நீ என்கிட்டே எதுனாலும் பேசலாம்; கேட்கலாம். தைரியமா இரு. நாம இங்கே தனியா இருக்கப் போறதில்லை. எப்பவும் அம்மா கூட இருப்பாங்க. சோ சியர் அப்!'' என்று விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே உள்ளேயிருந்து, ''விஷ்ணு!'' என்ற சந்தோஷ அழைப்பு கேட்டது.

இந்த குரல்...? கடவுளே தான் என்ன பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறோமா என்ற பயத்தைக் கிளப்பியது மயூரியினிடத்தில்.

வெளியே வந்த உருவத்தைப் பார்த்த மயூரியின் உணர்வுகளை வெளிப்படுத்துவது மிகவுமே கடினம்தான்.

மிதமிஞ்சிய அதிர்ச்சியால் தாக்குண்டவள் அருகிலிருந்த விஷ்ணுவின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

விஷ்ணுவும் அவளை ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தவன், ஆரத்தித் தட்டைக் கண்டு தான் மயூரிக்கு குற்ற குறுகுறுப்பென்று நினைத்து அவனும் ஆறுதலாக அவள் கரத்தை அழுத்தினான்.

இவன் எங்கே இங்கே? சிறிது கூட எதிர்பார்க்கவில்லையே? கஷ்டத்திலும் ஒதுங்க ஒரு நிழல் கிடைத்தது

என்று நினைத்து ஆறுதல் அடையும் முன் இதென்ன கொடுமை? கடவுளே... மயூரிக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

ஒருவேளை இதை எதிர்பார்த்திருக்க வேண்டுமோ? விஷ்ணுவைப் பார்த்ததும் சிறிது பரிச்சயமான முகம், அந்தத் தலை சாய்ப்பு, தலையை கோதுதல் என்று பழக்கப்பட்ட நடவடிக்கைகள் என்று தோன்றியதே? அதிலும் அவன் தாய் பிரசாத்தின் அம்மா என்று வந்ததும் கண்டிப்பாகச் சந்தேகப்பட்டிருக்க வேண்டுமோ?

உள்ளே இருந்து வந்தவனுக்கும் போதிர்ச்சி தான். இவள் எங்கே இங்கே...? இவளை கடைசியாகப் பார்த்த தினத்தை ஒரு மாதத்திற்கு மேலானாலும் மறக்கவில்லை. ஒருவேளை தன்னைக் கண்டுபிடித்து நியாயம் கேட்கத் தான் வந்திருக்கிறாளோ? எப்படித் தெரிந்தது? எத்தனை தகிடு தத்தம் செய்து... ச்ச! எல்லோருக்கும் உண்மை இப்போதே தெரிந்துவிடுமா?

இல்லை விஷ்ணுவின் மனைவி என்றது இவளைத் தானா? இது எப்படி சாத்தியம்? கண்களை சுருக்கி யோசித்தான் வந்தவன். அவர்களின் இணைந்திருந்த கரங்களைப் பார்த்ததும் புருவத்தின் நெரிச்சல் இன்னமும் அதிகமானது. அதை அடுத்தவன் பார்க்கும் முன் மாற்றிக் கொள்ளும் குள்ள நரித்தனமும் தெரிந்து தான் இருந்தது அந்த புதியவனுக்கு.

''மயூரி! இதான் என்னுடைய ட்வின். பேரு வைபவ் பிரசாத். வைபவ்! திஸ் இஸ் மயூரி!'' என்று இருவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான் விஷ்ணு.

''தெரியுமே?'' என்று வைபவ் கூற, விஷ்ணு அவனை 'எப்படி?' என்பது போல் பார்த்தான்.

''இவங்களுக்காகத்தானே.. இதோ வேலம்மா ஆலம் கரைச்சுக்கிட்டு வர்றாங்க. அப்போ இதான் மயூரியாய் இருக்கணும். என்ன விஷ்ணு? நான் சொல்றது சரிதானே?''

வேலம்மா ஆலம் சுற்றி விட்டுப் போக விசாலாட்சி, ''உள்ளே வாம்மா. வலது காலை எடுத்து வைச்சு வாங் கடா'' என்று உள்ளே அழைத்தார்.

எந்த நேரத்தில் இந்த வீட்டில் சிங்கமும் புலியுமா இருக்கு என்றாரோ... புலி குகைக்குள் நுழைவது போலவே பயந்தாள் மயூரி. கால்கள் நகர மறுக்க, நின்ற இடத்தி லேயே மரம் மாதிரி நின்றாள்.

விஷ்ணு அவளைத் திரும்பிப் பார்த்து மெல்லிய குரலில், ''உள்ளே வா மயூரி. இவ்வளவு தூரம் வந்துட்டு இப்போ இப்படிச் செய்தால் என்ன செய்றது? ப்ளீஸ் உள்ளே வா. நான் இருக்கேன்'' என்று தைரியம் அளித்து கையைப் பிடித்து இழுக்காத குறையாக அழைத்துச் சென்றான்.

ஊசி போடும் டாக்டருக்கு பயப்படும் குழந்தையின் மனநிலையில் தானிருந்தாள் அவள். இல்லை நான் வர மாட்டேன் என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்ய வேண் டும் போலிருந்தது மயூரிக்கு.

இங்கே என்ன பூகம்பம் காத்திருக்கிறதோ? ஒரு வேளை எல்லோரும் சேர்ந்து சதி செய்து தான் தன்னை இங்கே அழைத்து வந்து விட்டார்களோ என மனம் என் னென்னவோ யோசித்தது. மாட்டேன்... என்ன ஆனாலும் இதை மட்டும் சகிக்கவே மாட்டேன் என உறுதி பூண் டாள். ஆனால் 'இதை' என்பது தான் என்ன என்று அவ ளுக்கே விளங்கவில்லை.

அவநம்பிக்கையோடு வைபவ் இவளையே பார்த்துக் கொண்டிருக்க, மெல்ல மெல்ல அவளுக்கு கோபம் ஏறியது

தப்பு செய்தவன்... பெண்ணை ஏமாற்றி சுழுத்து அறுத்த வனெல்லாம் பயமில்லாமல் தைரியமாக உலகில் வலம் வரும் போது... அதுவும் இவள் முன்னேயே வலம் வரும் போது... எந்தத் தவறும் செய்யாத நான் எதற்கு இப்படி பயந்து நடுங்க வேண்டும்?

இவன் முகத்திரையைக் கிழித்துவிட்டு இவனுக்கும், இவனைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு பெரிய கும்பிடாகப் போட்டு விட்டுக் கிளம்ப வேண்டியதுதான் என நினைத் துக் கொண்டாள். ஆனால் நாம் நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதா என்ன?

செய்யறதைச் செய்துட்டு எப்படிக் கொஞ்சம் கூட குற்ற உணர்ச்சி இல்லாமல், ஒண்ணுமே தெரியாத மாதிரி இருக்க முடிகிறதோ? இவனை எல்லாம் முச்சந்தியில் நிற்க வைத்து கல்லாலேயே அடித்துக் கொன்றால் என்ன?

இவன் இருந்து இன்னும் எத்தனை எத்தனை பேரின் வாழ்வை நாசம் செய்யப் போகிறானோ? இவன் இருக் கும் இடத்தில் நின்றாலே பாவம்.

அந்த பொல்லாத சம்பவத்திற்குப் பிறகு இன்று தான் பிரசாத்தை நேருக்கு நேர் சந்திக்கிறாள். எவனைத் தேடி அலையோ அலை என்று அலைந்தாளோ இன்று அவன் அவள் கண்ணெதிரிலேயே. ஆனால் தேடிப் பிடித்து அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றி கேட்க வேண்டு மென்று நினைத்ததெல்லாம் இப்போது தொண்டைக் குழியை விட்டு வர மறுத்தது.

ஒருவேளை உண்மை தெரிந்தால் இந்த அயோக்கிய னுக்கே தன்னை திருமணம் செய்து வைத்து விடுவார் களா? கூடாது... அது மட்டும் கூடாது. கடவுளே! இதி லிருந்து எப்படியாவது காப்பாற்றி விடு என கடவுளிடம் இறைஞ்சினாள்.

"வாம்மா! என்னம்மா அப்படி பார்க்கிற? இது உன் வீடு. இதோ... இதான் என் மூத்த பையன் வைபவ். என்னடா? நீயும் இப்படி யோசனையோடவே இருக்க?" இருவர் மனதிலும் எழுந்த எண்ணங்களைப் பற்றி அறியாத விசாலாட்சி வினவினார்.

"இல்லைம்மா! ஆச்சரியமா பார்க்கிறேன். நான் சத்தியமா மயூரியை இங்கே எதிர்பார்க்கலை. ஆங்! என்ன சொல்ல வரேன்னா... விஷ்ணுவிற்கு கல்யாணம் நடந்து. அதுவும் நம்ம யாருக்கும் சொல்லாமல் கல்யாணம் செய்துகிட்டு வருவான் என்று நிஜமாகவே நம்பவே முடியலை. அதை தான் அப்படி சொன்னேன். நான் உங்களை மயூரின்னு கூப்பிடலாமில்லையா?" ரொம்ப நல்லவன் மாதிரி அவளிடமே வைபவ் கேட்க, பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் மயூரி.

ஆனால் விசாலாட்சி, "அதெப்படிடா வைபவ் அப்படி கூப்பிடுவ? தம்பியா இருந்தாலும் உங்க ரெண்டு பேருக்கும் வயசு வித்தியாசமே இல்லையே? தம்பி மனைவியா இருந்தாலும் அண்ணி அப்படின்னே கூப்பிடு. பேர் சொல்லியெல்லாம் கூப்பிடக்கூடாது. என்னம்மா மயூரி?" என்று அவளிடமே வினவினார்.

வேறு யாராக இருந்தாலும் ஒன்றும் சொல்லியிருக்க மாட்டாள் மயூரி. ஆனால் வைபவ் வாயிலிருந்து தன் பெயர் ஒலிப்பதையே வெறுத்தவள் விசாலாட்சியிடம் மறுப்பாக ஒன்றும் கூறாமல் புன்னகை மட்டும் சிந்தினாள்.

இந்த வைபவைப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறதே? இவனிருக்கும் வீட்டில் இருக்க முடியுமா? அதுவும் குறைந்தது ஒரு வருஷம்? அவனிடம் பார்வையைச் செலுத்தாமல் இருந்தாலும் அவனின் பார்வையை உணர்

முடிந்தது மயூரிக்கு. அவன் பார்வை பட்ட உடலெங்கும் அருவெறுப்பில் கூசியது.

நல்லவேளையாக விசாலாட்சி, "உன்னைப் பார்த்தாலே ரொம்ப அயர்ச்சியா இருக்கு. போம்மா விஷ்ணு! இவளை உங்க ரூமுக்குக் கூட்டிகிட்டுப் போ. போய் ரெஸ்ட் எடுத்துக்கோ மயூரி. எனக்கும் ரெண்டு நாள் தொடர்ந்து பயணம் செய்தது அலுப்பா இருக்கு. நானும் ரெஸ்ட் எடுக்கறேன்" என்று சொல்லி கிளம்பினார்.

தனி அறையை எண்ணி வரும் வழியெல்லாம் பயத்துடன் இருந்த மயூரி, இப்போது விட்டால் போதுமென விஷ்ணுவின் பின்னே சென்றாள்.

மயூரியை அறையில் விட்டுவிட்டு, அவளுக்கு எதெது எந்தெந்த இடத்தில் இருக்கிறதென்று காண்பித்த விஷ்ணு, "நீ ரெஸ்ட் எடு மயூரி. ரொம்ப தேங்க்ஸ்! என்னையும், அம்மாவையும் நம்பி வந்ததுக்கு. உன் நம்பிக்கைக்கு பங்கம் வர மாதிரி எதுவும் நடக்காமல் நான் பார்த்துக்கிறேன். நான் கீழே இருக்கேன். ஏதாவது வேண்டுமென்றால் இதோ இன்டர்காம் இருக்கு. கூப்பிடு. நான் போய் வேலம்மாகிட்ட உனக்கு ஜூஸ் கொண்டு வரச் சொல்றேன். மறக்காமல் குடிச்சுட்டு படுத்துக்கோ. சரியா?" என்று கூறிவிட்டுக் கீழே சென்றான்.

சிறிது நேரத்தில் வேலம்மாள் பழச்சாறை கொண்டு வந்து கொடுத்துவிட்டு, "தம்பி உங்களை குடிக்கச் சொன்னாங்கம்மா" என்றார்.

வேண்டாமென மறுக்கவும் முடியாமல் தொண்டை வறண்டு போயிருக்க ஜூஸை வாங்கி வைத்த மயூரிக்கு உடல் அசதியிலும், மன அழுத்தத்திலும் தலைப் பாரமாக இருந்தது. மெல்ல ஓரிடத்தில் அமர்ந்தவளுக்கு

அவள் அப்போது என்ன செய்ய வேண்டுமென்பது புரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியே சொல்லாமல் கொள்ளாமல் நழுவி விட லாமா? இல்லை காரணத்தைச் சொல்லிவிட்டுக் கிளம்ப லாமா? ஒன்றும் புரியவில்லை. ஆனால் இனியும் இங்கே இருக்க முடியாதென்று மட்டும் நன்றாகப் புரிந்தது. மேலும், அது ஆபத்தை இரு கரம் கொண்டு வரவேற்பது போலத்தான் இனியும் இங்கே தாமதிப்பது. ஆனால் வெளியே போனால் இன்னும் ஆபத்தாக முடியுமோ?

யாரைப் பார்த்தாலும், எதைப் பார்த்தாலும் அவளுக்கு சந்தேகமாகவே இருந்தது. இதோ இப்போது கூட ஜூஸை குடிக்க விடாமல் தடுத்தது அந்த சந்தேகம் தான். அண்ணன் ஒரு கோக் கொடுத்து வாழ்வை நாசம் செய்து விட்டான்... இப்போது தம்பி ஜூஸா என்ற எண்ணம் தான். இருப்பினும் தாகம் எல்லாவற்றையும் வென்றது.

யார் யாருடன் கூட்டு என்று தெரியாமல் யாரிடம் அவள் சென்று என்னவென்று சொல்வது? ஆனால் விசாலாட்சி அம்மா கூடவா வைபவுடன் சேர்ந்து நாடகமாடுவார்? விஷ்ணு கூடவா? என்ற எண்ணம் மிகுந்த வருத்தத்தை மயூரிக்கு விளைவித்தது. ஒரு நல்ல ஆண் கூடவா இந்த உலகத்தில் இருக்க மாட்டான்? யோக்கிய மானவன் என்று இங்கே யாருமே இல்லையா?

எப்பொழுதோ படித்த ஆப்ரகாம் லிங்கனின் வார்த்தைகள் தாம் இப்போது சிந்தையில் ஓடியது.

''எல்லோரையும் நம்புவது ஆபத்தானது. ஆனால் ஒருவரையும் நம்பாதது அதைவிட ஆபத்தானது.''

இந்த வார்த்தைகள் தனக்குத் தான் பொருத்தமோ? தலையை கைகளில் பிடித்துக் கொண்டு அப்படியே மடங்கி உட்கார்ந்தாள் மயூரி.

கடவுளே! நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? உனக்குக் கொஞ்சம் கூட கருணையே இல்லையா? ஏன் என்னை இப்படி துரத்தி துரத்தி விரட்டுகிறாய்? என்று அவள் மனது மௌனமாக ஓலமிட்டது.

இவளின் குரல் அந்த ஆண்டவன் வரை எட்டியது போல் அறையிலிருந்த போன் அலறியது. கீழே யாராவது எடுப்பார்கள் என்ற எண்ணத்தில் அப்படியே மயூரி அமர்ந்திருக்க, அது தன் அலறலைத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

சிறு எரிச்சலுடன், ''ஹலோ!'' என்றாள் மயூரி.

மறுமுனையில் வைபவ் சில நொடிகள் மௌனம் காத்தான். விஷ்ணுவிடம் பேசலாம் என்று தான் முதலில் விஷ்ணுவின் செல்போனிற்கும், பிறகு வீட்டிற்கும் அழைப்பு விடுத்தான் வைபவ். இரண்டு அழைப்பும் தோல்வி அடைய விஷ்ணுவின் அறையில் இருக்கும் தனி எண்ணிற்கு அழைத்தான்.

விஷ்ணுவிற்கு எந்த அளவிற்கு உண்மை தெரியும்? தன்னைப் பற்றியோ இல்லை மயூரியைப் பற்றியோ ஏதாவது விஷயம் தெரியுமா என்று நோட்டம் விடவே வைபவ் போன் செய்தது. விஷ்ணுவிற்கும், மயூரிக்கும் திருமணம் ஆகி இருக்கும் என்றே வைபவால் சிறிது கூட நம்ப முடியவில்லை.

ஆனால் திருமணம் நடந்திருக்க வாய்ப்பே இல்லை என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில் மயூரியின் கொள்ளை அழகு கட்டாயம் மீண்டும் மீண்டும் சுண்டி இழுக்கும் வகையை சார்ந்தது. அந்த அழகு தந்த போதை தானே வைபவை மயங்க வைத்தது. அதே போதை தான் விஷ்ணுவிற்கும் இருக்குமோ?

மயூரியின் கோயம்புத்தூர் கடைக்கு அருகில் அவர்களுக்கு வாடிக்கையாளர்கள் இருந்தார்கள். அப்படித் தானே வைபவ் அவளைச் சந்திக்க நேர்ந்தது. முதல் பார்வையில் மயக்கிய மோகினி என்று தான் வளைய வந்தான். ஆனால் அவளைக் கவனித்த பொழுது தான் புரிந்தது. அவள் மயக்கும் மோகினியோ, மகிழ்விக்கும் மேனகையோ இல்லை என்பது. அதை அறிந்த பிறகு தானே ஆதாயத்தை எதிர்பார்த்து காய்களை நகர்த்த ஆரம்பித்தான்.

வைபவிற்கோ காதல்... திருமணம் என்ற பந்தத்தில் சிக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமெல்லாம் துளிகூட இல்லை. அழகு... அழகை அனுபவிக்க வேண்டும்.

விஷ்ணுவும் மயூரியை அங்கே தான் சந்தித்து இருப்பானோ? ஆனால் யாருக்கும் சொல்லாமல் இத்தனை அவசரமாக விஷ்ணு திருமணம் செய்து இருப்பான் என்பதைத் தான் வைபவால் நம்ப முடியவில்லை. விஷ்ணு எப்பொழுதும், எதிலும் நிதானம் தான். அவன் எப்படி?

இந்த யோசனை எல்லாம் அவனின் இல்லாத மூளைக்குள் ஓட, அதற்குள் பொறுமை இழந்த மயூரி, ''ஹலோ! ஹலோ!'' என்று பலமுறை கத்திவிட்டாள்.

''மயூரி!'' என்ற கட்டை குரலில் ஒரு நிமிடம் மனதை மீண்டும் பயம் கவ்வ, அடுத்த நொடியே நிமிர்ந்தாள்.

'என்ன தைரியம் இவனுக்கு என்னுடன் பேச?' என்று சீற்றமுற்றவள், ''என்ன கொழுந்தனாரே?'' என்று அலட்சியமாகத் தொடங்கி, ''அத்தை... அதான் உங்க அம்மா என்னை 'அண்ணி' அப்படின்னு கூப்பிடச் சொல்லலை?

ஓ! உனக்கு புத்தியோட சேர்ந்து காதும் மழுங்கிடுச்சா?'' என்றாள் நக்கலாக.

சத்தியமாக இப்படி ஒரு அலட்சியத்தை வைபவ் எதிர்பார்க்கவில்லை. மயூரி வைபவின் குரலைக் கேட்டு பயப்படுவாள் அல்லது கோபத்துடன் பேசுவாள் என்று தான் கணக்கிட்டிருந்தான். உண்மையில் இப்படி ஒரு அலட்சியம் வைபவைத் தான் அச்சுறுத்தியது. அந்த அச்சம் கோபத்தையும் வரவழைத்தது.

''ஏய்! என்ன திமிரா? விஷ்ணுவிற்கும் உனக்கும் கல்யாணம் நடந்ததையே நான் நம்பலை'' என்று கோபமாக ஆரம்பித்தான்.

மீண்டும் அலட்சியமாக, ''நீ நம்பினால் என்ன? நம்பாமல் இருந்தால் எனக்கென்ன?'' என்று கேட்டது மயூரியே தான்.

''உனக்கு என்ன இவ்வளவு திமிரா...''

''உனக்கே ஏழு ஊர் திமிர் இருக்கும்போது எனக்கு இருக்கக் கூடாதா மச்சினரே?'' என்றாள் இவளும் விடாமல்.

''விஷ்ணுவிற்கு உண்மை தெரிஞ்சால் பிறகு நீ ரோட்டில் தானே நிற்கணும்? அப்புறம் வைச்சுக்கிறேன்டி'' என்று கறுவினான் வைபவ்.

அவன் 'விஷ்ணுவிற்கு தெரிந்தால் என்று சொன்னதில் மனதிற்குள் நிம்மதி பரவுவதை உணர்ந்தவள் மௌனமாக பெருமூச்சை வெளியேற்றினாள்.

மயூரி சில நொடிகள் தாமதித்ததை வைபவ் தனக்குக் கிடைத்த வெற்றியாய் நினைத்து, ''என்ன? விஷ்ணுவிற்கு தெரிஞ்சால் என்ன ஆகறதுன்னு பயப்பட ஆரம்பிச்சுட்டியா?'' என்று எக்களித்தான் மறுமுனையில்.

''இல்லை. நானே விஷ்ணுகிட்ட... அதாவது என் புருஷன்கிட்ட உண்மையைச் சொன்னால் நீ நடு ரோட்டிற்கு போவியா அல்லது பரலோகத்துக்கு போவி யான்னு யோசிச்சுகிட்டு இருக்கேன்'' என்று வைபவை துச்சமென மதித்துப் பேசினாள்.

விஷ்ணுவிற்குத் தெரிந்தால்... நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை வைபவால்.

''என்னனு சொல்லுவே? நீ சொல்றதுக்கு என்ன ஆதாரம் இருக்கு?'' என்று பயத்தை மறைத்து மயூரியை மடக்கியவன், ''குட். பயம் இருக்குல்ல? நான் ஒண்ணும் அவன்கிட்ட சொல்லலை. நீயே ஓடிப் போயிடு. அதான் உனக்கு நல்லது'' என்று வழிகாட்டினான் வைபவ்.

''இதோ பாருடா... எனக்காக கவலைப்பட ஒரு ஜீவன். ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுததாம். போடா! உன் னால் முடிஞ்சதை நீ பார்த்துக்கோ. ஆதாரமா கேட்கிற... ஆதாரம்? நீயே உன் வண்டவாளத்தை சொல்ற நேரம் வரும். உன்னை நல்லவனா நினைச்சுட்டு இருக்கிறவங்க காரி துப்பப் போறாங்க.'' இத்தனை நேரமிருந்த பயம், குழப்பமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போனது மயூரிக்கு.

''நீ ரொம்ப ஓவரா பேசற. நீ இப்படிச் சொன்னால் கேட்க மாட்ட. உன்னை எங்கே... எப்படி சொல்லி வீட்டை விட்டுத் துரத்தறேன்னு பாரு'' என்று சிறிதும் அவன் செய்ததை எண்ணி வெட்கப்படாமல் சவால் விடுத்தான்.

''நீ என்னைத் துரத்தறியா? இல்லை நான் உன்னைத் துரத்தறேனான்னு பாருடா. வைடா போனை'' என்று பட்டென்று போனை வைத்தாள் மயூரி.

வைபவால் மயூரியை 'திருமதி விஷ்ணு' என்ற ஸ்தா னத்தில் வைத்துப் பார்க்க முடியவில்லை. அதற்கான தகுதி மயூரிக்கு இல்லை என்பது அவன் எண்ணம்! தகுதியைப் பற்றி யார் நினைப்பது?

மீண்டும் அதே எண்ணிற்கு அழைத்து மயூரி எடுக்க வும், ''பேசிட்டு இருக்கும் போதே போனை வைக்கிறியே மிஸ். மயூரி? உன்னை மிஸ் என்று சொல்லணுமா? மிசஸ் என்று சொல்லணுமா?'' என நா கூசாமல் வினவினான் வைபவ்.

இத்தனை நேரம் துணை நின்ற சக்தி, கோபம், தைரி யம் எல்லாம் இப்பொழுது வடிந்துவிட அதைக் காட்டிக் கொள்ளாமல், ரிசீவரை பட்டென்று வைத்துவிட்டு அப்படியே போன் அருகில் கீழேயே அமர்ந்தாள் மயூரி.

அவன் முகத்திரையை கிழித்தெறிய இங்கே இருப்பது அவசியம் தான். ஏனெனில் இப்பொழுது வெளியில் சென்றாலும் அதே நிலை தான். ஏன் முன்பிருந்ததை விட மோசமானாலும் ஆச்சரியப்படவோ, அதிர்ச்சி யடைவோ ஒன்றுமில்லை.

வட்டமிடும் கழுகு போல வைபவ் காத்திருக்கும் போது இதைவிட பாதுகாப்பான இடம் தனக்கு இல்லை என் றுணர்ந்தாள் மயூரி.

வைபவால் தன்னிடம் எப்படி அப்படி கேட்க முடிந் தது? எனக்குக் கல்யாணம் ஆகி இருக்காது என்று எவ் வளவு உறுதியுடன் சொல்கிறான்?

பொங்கிய ஆத்திரத்தில் மீண்டும் போன் அழைக்க வும் எடுத்த எடுப்பிலேயே வைபவ் என்று நினைத்துக் கொண்டு, ''மிசஸ். விஷ்ணு ஹியர்'' என்றாள் மயூரி.

6

மறுமுனையில் கொஞ்சம் தயக்கமாய், ''ஹாய்!... நான் ராம் பேசறேன். விஷ்ணு இருக்கானா?'' என்ற கேள்வியும் பிறக்கவும் தான் கொஞ்சம் சுய நினைவை எட்டினாள் மயூரி.

அப்பொழுது விஷ்ணு வரும் ஓசையும் கேட்க, ''ஒரு நிமிஷம்!'' என்று தயக்கமாகவே சொல்லிவிட்டு போனை அவனிடம் நீட்டினாள்.

'மிசஸ். விஷ்ணு' என்று சொன்னதில் கொஞ்சம் குற்ற உணர்ச்சியும் மயூரிக்கு எழுந்தது.

விஷ்ணு மயூரியின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிக் கலவையை உள் வாங்கிக் கொண்டு, ''ஹலோ! விஷ்ணு திஸ் சைட்'' என்று சொன்னான்.

''டேய்! என்னடா விஷ்ணு? யார் போன் எடுத்தது? உன் வைஃப் அப்படின்னு சொல்றாங்க.'' என்றான் ராம் மறுமுனையில்.

இப்பொழுது விஷ்ணுவிற்கும் ராம் சொன்னதில் ஆச்சரியமாகத் தான் இருந்தது. ஆமோதிக்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் மௌனத்தின் உதவியை நாடினான் விஷ்ணு.

மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு, ''டேய்! சரி. உன்னை நேரில் பார்க்க தீபாவும், நானும் நாளைக்குக் காலையில் வர்றோம். மீதி நேரில் பேசிக்கலாம்'' என்று அழைப்பைத் துண்டித்தான் ராம்.

விஷ்ணு போனில் பேசிக் கொண்டிருக்கும்போது மயூரி கீழே இறங்கிச் செல்ல, விசாலாட்சி அவளைத் தன் அறைக்கு வரச் சொன்னார்.

''மயூரி! இங்கே வாம்மா! நீ மாசமா இருக்கிறதை இப்போதைக்கு யாரிடமும் சொல்ல வேண்டாம். நாலு பேருக்கு தெரிஞ்சால் கண்ணு, காது, மூக்கு வைச்சுப் பேசுவாங்க. ஏற்கனவே எங்களைக் கல்யாணத்துக்கு கூப்பிடலைன்னு எல்லாரும் திட்டுவாங்க. இப்போ இதுவும் தெரிஞ்சால்... நீ ஒண்ணும் தப்பா எடுத்துக் காதேம்மா. உனக்கும் ஒண்ணும் மசக்கை அது இதுன்னு ஒண்ணுமில்லாமல் நார்மலா தானே இருக்க? விஷ்ணு கிட்டேயும் சொன்னேன். அவன் என்னை முறைச்சட்டுப் போறான். ஒரு மாசம் போகட்டும். அப்புறம் சொல்லிக் கலாம். இப்போதைக்கு எனக்கு, உனக்கு, விஷ்ணுக்கு மட்டும் தெரிஞ்சால் போதும். சரியா?'' தயக்கத்துடன் இழுத்த விசாலாட்சியிடம் சரியென்று தலையாட்டி விட்டுச் சென்றாள் மயூரி.

விஷ்ணு, ராம் வந்து இன்னும் என்னென்ன கேள்விகள் எல்லாம் கேட்கப் போகிறானோ என்ற யோசனையுடன் போனை வைத்துவிட்டு தன்னுடைய லேப்டாப்பில் சிறிது நேரம் அமர்ந்திருக்க, கதவை லேசாகத் தட்டி ஓசை எழுப்பிவிட்டு வந்தாள் மயூரி.

''நான்... உங்கள்... போனில்... மிசஸ். விஷ்ணு என்று சொல்லிவிட்டேன். வெரி சாரி...'' என்று மனமார மன்னிப்புக் கேட்டாள்.

அவளுடைய முகத்தை ஏறிட்ட விஷ்ணு, ''ம்... பரவாயில்லை'' என்றுவிட்டு மீண்டும் கணினியின் திரைப் பக்கம் கண்களைத் திருப்பினான்.

இப்படி ஒரு பதிலுடன் பார்வையைத் திருப்பிக் கொண்டால் என்னவென்று அர்த்தம் என்பது புரியாமல் அங்கேயே அமைதியாக நின்றாள் மயூரி.

''உங்களுக்குக் கோபமா?''

''கோபம் எதற்கு?'' புரியாமல் வினவினான் விஷ்ணு.

''அப்போ வருத்தமா?'' என்று மயூரி கேட்டதற்கும்,

''எதற்கு?'' என்ற கேள்வி தான் அவனிடத்தில் பிறந்தது.

''நான் அந்த மாதிரி சொன்னதற்கு'' பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு சொன்னாள்.

அவளுக்கு வைபவிடம் பேசிய ஆத்திரம் ஒருபுறம், விஷ்ணுவின் மனைவி என்று பொய் சொன்னதில் எழுந்த குற்ற உணர்ச்சி மறுபுறம் என்று விஷ்ணுவிடம் மன்னிப்பு வேண்டி வந்தால் அவன் அலட்சியமான பதிலுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டதில் எரிச்சல் மேலும் அதிகமாகியது.

விஷ்ணுவிற்கோ மயூரியிடம் பிடி கொடுத்துப் பேசினால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறின கதையாக மாறிவிடுவாள் என்ற எண்ணம்.

ஆனால் அவள் தான் விதவிதமாகக் கேள்விகளால் துளைத்துக் கொண்டிருக்கிறாளே?

''கோபமும் இல்லை, வருத்தமும் இல்லை. விரும்பியோ, விரும்பாமலோ நாம் இருவரும் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறோம் மயூரி. இதில் நீ என் மனைவி, நான் உன் கணவன் என்று சொல்ற மாதிரி பல தருணங்கள் வரும். ஒவ்வொரு தடவையும் சாரி சொல்றதுக்கோ, வருத்தப்படறதுக்கோ அவசியமில்லை'' என்று விளக்கினான்.

அவள் எதுவும் சொல்லாமல் நின்றிருக்க, ''நாளைக்குக் காலையில் நம்மைப் பார்க்கிறதுக்கு என் பிரண்ட் ராமும், அவன் மனைவி தீபாவும் வர்றாங்க. ரெடியா இரு...'' என்று விட்டு வேலையில் மூழ்குவது போல பாவனை செய்தான்.

வேலை பார்த்துக் கொண்டிருப்பவனை இதற்கு மேல் தொந்தரவு செய்ய மனம் வராமல் நகர்ந்தாள் மயூரி.

மறுநாள் காலையில் ராமும், தீபாவும் வந்து சேர, தொடக்கத்தில் செயற்கை புன்னகையை இதழில் பொருத்தி வளைய வந்த மயூரிக்கு சற்று நேரத்திலேயே தீபா - விஷ்ணு இருவரின் பேச்சிலும் புன்னகை இயல்பாய் மாறியது.

''வா ராம்! வாம்மா பா... தீ... பா... தீ... பா... தீ'' என்று வரவேற்றான் விஷ்ணு.

''உங்ககிட்ட எத்தனை தடவை சொல்றது? என் பெயரை ஒழுங்கா கூப்பிடுங்க. கே..வி... கே...வி.. அண்ணா!'' என்று பதில் தந்தாள் தீபா.

தீபா பார்ப்பதற்கு கல்லூரி முதலாமாண்டு படிக்கும் மாணவி போல இளமையாக, பேச்சிலும் தோற்றத்திலும் குழந்தைத் தனம் மாறாத பருவ மங்கையாய் தோற்றம் தந்தாள்.

மயூரிக்கு இருவரும் பேசுவதைக் கேட்டு, தன் வீட்டு நினைவுகள் சுற்றினாலும் புன்னகை மலர்ந்தது.

மயூரியிடம், ''என்னோட க்ளோஸ் பிரண்ட் ராம். ராமின் மனைவி தீபா'' என்று அறிமுகப்படுத்தி வைத்தான் விஷ்ணு.

''அண்ணி! உங்ககிட்ட அண்ணனைப் பத்தி நிறைய கம்ப்ளைன்ட் சொல்லணும்'' என்று மயூரியின் கைகளைப் பற்றிக் கொண்டு உற்சாகமானாள் தீபா.

அவளது பேச்சில் கண்களை மலர்த்தினாள் மயூரி.

''நீங்க ரொம்ப அமைதியா? அப்படியிருந்தால் விஷ்ணு அண்ணன் பேச்சை சமாளிக்கிறது ரொம்பக் கஷ்டம் அண்ணி.''

''பா.. தீ! இப்படி ஏதாவது கிளப்பிவிட்டு என் நல்ல இமேஜை டேமேஜ் செய்யாதேம்மா!'' என்று விளையாட்டாகச் சொன்னான் விஷ்ணு.

''அவங்க இப்படி முழிக்கறதைப் பார்த்தால் ஏற்கனவே உன் நல்ல இமேஜ்... பயங்கரமா டேமேஜ் ஆகித் தான் இருக்குது போல?'' என்று தன் பங்கிற்கு காலை வாரினான் ராம்.

எல்லாவற்றையும் மௌனமாகவே கேட்டுக் கொண்டிருந்த மயூரிக்கு ராமின் கேலியான குற்றச்சாட்டைக் கேட்டதும் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

''அப்படியெல்லாம் இல்லை. உங்க பிரண்டுக்கு நல்ல இமேஜ் தான்'' என்று மறுப்பாகச் சொன்னாள் மயூரி.

மயூரி சொல்வதைக் கேட்டு விஷ்ணுவிற்கு வியப்பாக புருவம் மேலேறியது. நான்கு நாட்களுக்கு முன் தனியே காரில் வர சம்மதிக்காதவள்... இன்று தனக்காகப் பரிந்து பேசுகிறாளே என்பதில் எழுந்த வியப்பு. முதல் நாள் மனைவி என்று சொன்னதற்காக வருந்தியவள்... தன்னை நண்பனிடத்தில் தாங்கிப் பேசியதில் எழுந்த வியப்பு.

வியப்புடன் விஷ்ணு பார்த்துக் கொண்டிருக்க ராமும், தீபாவும் நல்லதொரு வாய்ப்பு கிடைத்த மகிழ்ச்சியில், ''தீபா! நம்ம மாயாஜால், சத்யம் எல்லாம் படம் பார்க்க இனிமேல் போக வேண்டாம்'' என்று கேலியாகச் சொன்னான் ராம்.

''ஆமாம் ராம்! இந்த ஊமை படம் கூட நல்லா தான் இருக்கு'' என்று கணவனுக்கு ஒத்துப் பேசினாள் தீபா.

''இப்படியே கிண்டல் செய்தால் இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆக்ஷன் படம் தான் ஓட்ட வேண்டியிருக்கும்.

என்னடா சாப்பிடறே?'' என்று விஷ்ணு வினவியபொழுது விசாலாட்சி அம்மா, பணியாள் பானங்களைக் கொண்டு வர அங்கே வந்தார்.

''வாம்மா! தீபா! வாடா ராம்! நானே உன்னைக் கூப்பிட்டு ரெண்டு சத்தம் போடணும் என்று இருந்தேன். நண்பனோட சேர்ந்து நீயும் கூட்டு தான் இல்ல?''

''அம்மா! இதெல்லாம் ரொம்ப அநியாயம்! நானும் அவனை விதவிதமா கேட்டுப் பார்த்தேன். வாயைத் திறந்தால் தானே? சரியான கல்லுளிமங்கி. உங்களுக்கு வேலை வைக்காமல் ஒரு அழகான மருமகளைக் கொண்டு வந்துட்டான்னு நினைச்சுக்கோங்கம்மா'' என்றான் ராம்.

''சரி விடு. பிள்ளைங்க சந்தோஷமா, நல்லா இருந்தால் சரி தான். அப்பா, அம்மா எல்லாம் எப்படி இருக்காங்க?'' என்று நலன் விசாரித்தபடி சற்று நேரம் அமர்ந்து பேசிவிட்டுச் சென்றார்.

பின்னர் ராமும், விஷ்ணுவும் தனியாகப் பேச ஆரம்பிக்க தீபாவும், மயூரியும் மீன் தொட்டியில் இருந்த நீரை மாற்றியபடியே பேசிக் கொண்டிருந்தனர்.

இதுவரையில் விஷ்ணுவுடன் பேசியதை வைத்து அவன் ரொம்ப சீரியசான, அழுத்தமான குணம் என்று தான் நினைத்திருந்தாள் மயூரி. ஆனால் அவள் நினைப்பிற்கும், சற்று முன் சிரித்துக் கொண்டே செய்த கேலிக்கும் சம்பந்தம் இல்லாததைக் கண்டு தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

''என்ன அண்ணி? மீனை எல்லாம் பார்த்துச் சிரிக்கறீங்க?'' என்று வினவினாள் தீபா.

''மீனைப் பார்த்தெல்லாம் இல்லை தீபா. உங்க அண்ணன் உன் பெயரை திருப்பிச் சொல்றதை நினைச்சு

சிரிக்கிறேன்'' என்று மயூரி சொன்னதில் முழு உண்மை
யில்லை என்றாலும் முழு பொய்யும் இல்லையே?

''நீங்க என் பெயரை திருப்பிச் சொல்றதா நினை
சுட்டு இருக்கீங்களா? எங்க அப்பா பேரு பார்த்திப
எங்க கல்யாணப் பத்திரிகையில் பா.தீபா என்று இரு
கவும் அண்ணன் அதைப் பார்த்துட்டு கேலி செய்துட்
இருப்பாங்க. நானும் இருக்கிறது பாதி ஆள் தான
அதனால் தீபா என்ற பேரை விட பாதீ என்ற பேர் தா
ரொம்பப் பொருத்தமா வருதாம்'' தீபா சொன்னதி
இருந்த பெயர் காரணத்தை விட அவள் சொன்ன வி
மயூரிக்கு புன்னகையை வரவைத்தது.

'ஓ! அதனால் தான் இந்தப் பெண் தீபாவும் விஷ்
வும் கே.வி. என்று கூப்பிடறாளா?' விசாலாட்சி
அறையில் கேசவ் பிரசாத் என்று பெயர் பொருத்
இருந்த படம் நினைவில் வந்தது மயூரிக்கு.

''நீங்களே சொல்லுங்க. நெட்டைக் கொக்கு மா
அவங்க வளர்ந்துட்டு நம்ம உயரத்தைப் பார்த்து ப
ஆள் தான்னு சொன்னால் எப்படி ஏத்துக்க முடியு
ம்ஹ்ம்...'' என்று போலியாக அலுத்தாள் தீபா.

என்னவோ தெரியவில்லை. தீபாவின் வெளிப்ப
யான வெகுளிப் பேச்சு மயூரியை மிகவும் கவர்ந்
அவளுடைய பேச்சும் தங்கை மஞ்சரியை நினை
படுத்தியது.

''தீபா! என்னை அண்ணின்னு எல்லாம் சொ
வேண்டாமே? என்னைப் மயூக்கான்னு கூப்பிடறியா

''ஓ! தாராளமா மயூக்கா. உங்களை விஷ்ணு அண்ண
எப்படிக் கூப்பிடுவாங்க?'' என்று ஆர்வமாக வினவி
தீபா.

அப்பொழுது அங்கே வந்த விஷ்ணு, ''ஓய்! என்ன இன்டர்வியூ நடத்திட்டு இருக்கியா தீபா?'' என வினவினான்.

''உங்களைத் தான் கேலி செய்ய சான்ஸ் தேடிட்டு இருக்கேன். எங்கே அண்ணா உங்க 'பிரண்ட்? க்ளைண்ட் போன் காலா?''

'''நாட்டி'யைப் பத்தி 'ஹாட்டி'க்குத் தெரியாமல் இருந்தால் தானே ஆச்சரியம்? க்ளைண்ட் போன் கால் தான்'' என்று ஆமோதித்துவிட்டு, ''அப்படின்னு தான் சொன்னான்!'' என்று சேர்த்துக் கொண்டு சிரித்தான்.

''நாட்டியும் இல்லை. ஹாட்டியும் இல்லை.'' என்று முகம் சிவக்க மறுத்துவிட்டு, ''மயூக்காக்கிட்ட தானே கேட்டுட்டு இருந்தேன்?'' என்று மீண்டும் தன் கேள்வியை வலியுறுத்தினாள் தீபா.

மயூரி பதில் தருவதற்கு முன் விஷ்ணுவே, ''நான் மயூரியை மயிலுன்னு கூப்பிடுவேன் போதுமா?'' என்றான் ஒரு சின்ன வசீகரச் சிரிப்புடன்.

கேலியாகவே, ''அப்போ நீங்க மயூக்காக்கு சப்பாணியா?'' என்றாள் தீபா.

ஏனோ மயூரிக்கு இந்த பேச்சு சங்கோஜமாகத் தான் இருந்தது. திரைப்படத்தில் வரும் மயிலு என்ற கதாபாத்திரத்திற்கும், இவளுக்கும் இருக்கும் ஒற்றுமையினாலா? விடை தெரியாமல் மனம் கனத்தது.

''யாராவது என்னை அப்படி சொன்னால் சப்புன்னு...'' என்று விஷ்ணு சொல்லவும் தீபா, ''ஐயோ!'' என்று தன் கன்னத்தை இரு கைகளாலும் மறைத்துக் கொண்டாள்.

விஷ்ணுவின் கேலியும், தீபாவின் செய்கையும் சிரிப்பை வரவழைக்க மயூரிக்கு கவலையை தற்காலிகமாக ஒதுக்க உதவியது.

''மயூக்கா! நீங்க அமைதியா இருக்கறதுக்கும் சேர்த்து அண்ணனே பேசிடறாங்க. கல்யாணம் ஆன புதுசில் ஹாட்டி, நாட்டின்னு நாங்க பேசறதை எங்க அண்ணன் பையன் ஒரு நாள் எல்லாரும் இருக்கும்போது சொல்லிட்டான். அதில் இருந்து ஏதாவது சாக்கு கிடைக்கும் போதெல்லாம் அண்ணா கேலி செய்துட்டே இருப்பாங்க மயூக்கா'' என்று தீபா விளக்கம் கொடுத்தாள்.

''மயூக்காவா?'' என்று விஷ்ணு மீண்டும் உறுதிப் படுத்திக் கொள்ள கேட்க, ''ஆமாம்! அப்படித்தான் கூப் பிடச் சொன்னாங்க'' என்று தீபா பதில் தந்தாள்.

விஷ்ணுவின் முகம் அந்த பதிலைக் கேட்டதும் இருண்டு சுருங்க, மயூரியிடம் உணர்ச்சியற்றப் பார்வையை செலுத்திவிட்டு, ''ஓகே! நானும், ராமும் மதியம் வர்றோம். அதுவரைக்கும் நீ உன் மயூக்காவிடம் இருக்கிறியா?'' என்று மயூக்காவிற்கு ஒரு அழுத்தம் கொடுத்து வினவி னான்.

அண்ணி என்றது மயூக்காவாக பரிமாற்றம் அடைந்தது ஏனோ விஷ்ணுவிற்கு வருத்தமாக இருந்தது. மயூரியின் விருப்பமின்மையைப் பற்றி நன்றாகவே தெரியும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் அதை கோடிட்டுக் காட்டும் பொழுது அவனுக்கு மிகவும் கஷ்டமாகத் தான் இருந்தது.

விஷ்ணுவின் முக மாற்றமும், அவன் பொதுவாக இப்படி முகத்தை ஏறெடுத்தும் பார்க்காமல் சொல்லிக் கொண்டு செல்வதில் மயூரிக்கும் வருத்தமாகத் தான் இருந்தது. ஆனால் அந்த வருத்தம் சற்று நேரத்திலேயே தீபாவின் பேச்சில் சரியாகியது.

மதியத்திற்குள் இரண்டு முறை தீபா ராமிற்கு போன் செய்து பேசும் பொழுது ஒரு முறை மட்டும் விஷ்ணு

விற்கு போன் செய்து அவன் முக வாட்டத்தைப் பற்றி விசாரிக்கலாமா என்று மயூரிக்குத் தோன்றியது. ஆனால் அந்த எண்ணம் வெல்வதற்கு அவளிடம் இருந்த தடையும், உரிமையின்மையும் இடம் கொடுக்கவில்லை.

மயூரி ஏதோ யோசனையாக இருப்பதைப் பார்த்ததும் தீபா, ''என்ன மயூக்கா ரொம்ப யோசனையா இருக்கீங்க?'' என்றாள்.

சட்டென்று மனதில் உள்ளதை உறைக்கத் தெரியா மல்... மறைக்க முடியாமல், ''இல்லை உங்க அண்ணன்...'' என்று தொடங்கியவள் தயக்கமாக, ''எப்போ வருவாங் கன்னு தான்... யோசிக்கிறேன்'' என முடித்தாள் மயூரி.

''போன் செய்து கேட்க வேண்டியது தானே? டெக்னா லஜி வளர்ந்துருக்கிறதே நம்மளை மாதிரி ஆளுங்க ரொம்ப தவிக்கக் கூடாதுன்னு தானே?'' என்று கண் சிமிட்டி செல்போனை எடுத்தாள் தீபா.

தீபாவிடம் இருந்து அவசரமாக போனை வாங்கிய மயூரி, ''இல்லை தீபா. வேலை நேரத்தில்... வேண்டாம்..'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''ஓகே! நான் எதுவும் செய்யலை மயூக்கா. விஷ்ணு அண்ணனும் நீங்களும் முதன் முதலில் எங்கே பார்த் தீங்க? யார் முதலில் ப்ரொபோஸ் செய்தது? உங்க கதையைக் கொஞ்சம் சொல்லுங்க கேட்கலாம்'' என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தாள்.

இதுவரைக்கும் பள்ளி, கல்லூரி, வேலை என்று அரட்டை அடித்ததில் ஓரளவாவது பேசியவள் தீபாவின் இப்போதைய கேள்வியில் புன்னகை மட்டும் சிந்தினாள்.

மயூரியின் அவஸ்தைப் புன்னகை தீபாவிற்கு நாணப் புன்னகையாய் தெரிந்தது போலும்.

''அக்கா! சிரிச்சு மழுப்பாதீங்க! கதையைச் சொல்லுங்க'' என்று ஊக்கவும், ''மயூரிம்மா!'' என்று விசாலாட்சி தன் னறையில் இருந்து அழைக்கவும் சரியாக இருந்தது.

சற்று நேரம் தீபாவை டி.வி. பார்க்கச் சொல்லிவிட்டு ''தப்பித்தோம்! பிழைத்தோம்!'' என்ற நினைப்பில் உள்ளே சென்றாள்.

அதன் பிறகு மதிய உணவிற்குத் தேவையானதை தீபாவும், மயூரியும் பணியாளர்களுடன் இணைந்தே செய்ய, தனிப்பட்ட பேச்சு வார்த்தைக்கு இடமின்றி பொதுவான பேச்சு நடந்தது.

விஷ்ணுவின் தலையைக் கண்டதும் முதல் காரிய மாக, ''ஹப்பா! மயூக்காவோட கண் கொஞ்ச நேரத்தில் உங்களைப் பார்க்காமல் பூத்து போயிருக்கும்'' என்று அறிவிப்பு கொடுத்ததில் முரசு ஒன்று தான் பாக்கி.

'மயூக்கா' என்ற அழைப்பில் விஷ்ணுவிற்கு முன் இருந்ததை விட நெருடல் இல்லையென்றாலும் சகஜ மாகவும் ஆக முடியாமல் இருக்க, தீபாவின் அறிவிப்பைக் கேட்டதும் நம்ப முடியாத மாதிரி பாவனை செய்தான்.

மயூரியின் யோசனையையும்... அதற்கான காரணத் தையும் விளக்கியதும் அறிவிப்பின் காரணமும் புரிய விஷ்ணுவால் புன்னகையுடன், ''ஏன்? போன் செய்து பார்க்க வேண்டியது தானே?'' என்று கேட்கவும் முடிந்தது.

''நானும் அதே தான் உங்க மயிலிடம் கேட்டேன். வேலை நேரத்தில் போன் செய்ய வேண்டாம்னு சொல்லிட் டாங்க'' என்று தீபா தன் வேலையை எந்தக் குறையும் இல்லாமல் செய்தாள்.

நடந்து கொண்டிருந்ததை காதில் வாங்கிய விசாலாட் சியும் தன் பங்கிற்கு, ''வேலை நேரத்தில் தேவையில்

லாமல் போன் செய்தால் விஷ்ணுவிற்கு கோபம் வரும் தீபா. நீயே சாம்பிளுக்கு வேணும்னா ஒரு தடவை விஷ்ணுக்கு வேலை நேரத்தில் போன் செய்து பாரேன்!'' என சொன்னார்.

மயூரியைப் பொறுத்த வரைக்கும் எப்படியோ அவள் சொன்ன சமாளிப்பிற்கு காரணம் கிடைத்தது என்ற திருப்தி.

விஷ்ணுவிற்கும் ஏனோ மனம் திருப்தி அடைய, 'ஒரு சான்ஸ் கிடைச்சால் விட மாட்டீங்களேம்மா? ஏதாவது முக்கியமான மீட்டிங் நேரத்தில் போன் வந்தால் மட்டும் தான் அந்த மாதிரி ஏதாவது நடந்திருக்கும்'' என்று விளக்கம் கொடுத்தான்.

''ஆமாம்! ஆமாம்! உனக்கு எப்போ மீட்டிங்... எப்போ மீட்டிங் இல்லைன்னு எங்களுக்குத் தெரியும் பாரு'' என்று விசாலாட்சி சொல்லவும், ராம் போன் அழைப்பை முடித்து விட்டு வரவும் சரியாய் இருந்தது.

அனைவரும் பேசிச் சிரித்தபடியே அமர்ந்து உண வருந்திய பிறகு இளவட்டங்கள் ப்ரூட் சாலட் சாப்பிட்ட படியே விருந்தினர் அறையில் வந்து அமர்ந்தனர்.

தீபாவிற்கு சற்று முன் கேட்ட கேள்வி நினைவுக்கு வர, ''மயூக்கா நீங்க வெட்கப்பட்டு சிரிச்சே சமாளிக்கறீங் களே தவிர உங்க காதல் கதையை இன்னும் சொல்லவே யில்லையே'' என்று வினவினாள்.

'அடடா! இந்த பொண்ணு விட மாட்டாள் போல இருக்கே?' என்று மீண்டும் புன்னகை மட்டும் உதிர்த் தாள் மயூரி.

விஷ்ணு தான் நிலைமையைப் புரிந்து கொண்டு, ''என் னிடம் கேட்கலாமே பா.தீ? நான் சொல்றேன். நானும்,

மயிலும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தது ஆர்.எஸ்.புரம் சென்ட்ரல் லைப்ரரி இருக்கு தெரியுமா.. அங்கே தான்'' என்று ஆரம்பிக்கவும் கண்களை விரித்துக் கேட்டாள் மயூரி. ஏனெனில் அவளும் இப்பொழுது தானே இதை கேள்விப்படுகிறாள்...?

''நான் மயிலைப் பார்க்க, மயில் என்னைப் பார்க்க ரெண்டு பேருக்கும் நடுவில் புத்தக அலமாரி.''

''அப்புறம் அப்படியே பார்த்துட்டு ரெண்டு பேரும் ஒரே புக்கை எடுத்து இருப்பீங்களே?'' என்றான் ராம்.

''அதே தான் ராம். சரியா சொல்ற!'' என்று பாராட்டும் விதமாக விஷ்ணு நண்பனின் முதுகில் இரண்டடி வைக்கவும் முதுகைத் தடவியபடியே, ''உன்கூட இத்தனை நாள் பிரண்டா இருக்கேன். இது கூடத் தெரியாதா?'' என்று கேலி பேசினான் ராம்.

''அவர் இருக்கிறார். நீங்க சொல்லுங்கண்ணா. என்ன புக் எடுத்தீங்க?'' என்றாள் தீபா ஆர்வமாக.

மயூரிக்கு விஷ்ணு சொன்ன கதை பொய்யாகவே இருந்தாலும் தீபாவின் பாவனையில் புன்னகை மலர்ந்தது.

''காதல்... காதல் மட்டும் தான். அப்படின்னு ஒரு புக். ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்தோம்.''

''ஹையோ! சூப்பர்! அந்த புக் யார் எழுதினது?'' என்று வெகுளியாய் வியந்தாள் தீபா.

''யாருக்குத் தெரியும்? டைரக்டர் ஃபாசிலைத் தான் கேட்கணும்'' என்று ராம் கமெண்ட் சொல்லவும், ''டைரக்டர் ஃபாசிலா?'' என்று புரியாமல் வினவினாள் தீபா.

''ஆமாம்! அவர் தானே காதலுக்கு மரியாதை படம் எடுத்தாரு. அதான் ராம் அப்படிச் சொல்றான்'' என்று விஷ்ணு சிரிக்காமல் சொல்ல, ''ச்ச! போங்கண்ணா!

உங்களைப் பத்தித் தெரிஞ்சும் நான் கேட்டேன் பாருங்க... என்னை சொல்லணும்'' என்று அருகில் இருந்த குஷனை எடுத்து ஓங்கி விட்டு வைத்து விட்டாள் தீபா.

''விளையாட்டுக்குத்தானே சிஸ்டர்? இதுக்குப் போய் இவ்வளவு கோபப்படறீங்க? அப்படியே கொஞ்சம் சிரிங்க... சிரிங்க... இன்னும்...'' என்று சமாதானம் செய்தான் விஷ்ணு.

இப்படியாக சிரிப்பும், கூத்துமாக நான்கு மணி வரை செல்ல ராமும், தீபாவும் விடைபெறும் முன்பு இரண்டு மோதிரத்தை எடுத்து வந்து பரிசளித்தனர்.

''சாரிடா ராம். சொல்ல முடியாமல்...'' என்று விஷ்ணு இழுக்க, ''இட்ஸ் ஓகே விஷ்ணு அதைப் பத்தி பேச வேண்டாம். சிஸ்டர் கையில் போட்டு விடு விஷ்ணு. சிஸ்டர் நீங்களும் விஷ்ணுக்கு போட்டு விடுங்க'' என்று சகஜமாக்கும் பொருட்டு இருவரிடமும் மோதிரத்தை நீட்டினான்.

விஷ்ணுவும், மயூரியும் தயக்கத்துடன் ஒருவரை ஒருவர் ஏறிட ராம் கேலியாகவே, ''என்னடா ஊமை படம் தினசரி நான்கு காட்சிகளா ஓட்றீங்க? சீக்கிரம்...'' என்று ஊக்கினான்.

''எங்களை ரொம்ப கேலி பண்றடா. ஹே! பா.தீ. நீ உன் மயூக்காவுக்கு போட்டுவிடு'' என்று தீபாவிடம் பொறுப்பை ஒப்படைக்க எண்ணினான்.

ஆனால் அவன் சமாளிப்பையெல்லாம் தோல்வியைத் தழுவ, நண்பனின் கோரிக்கையை ஏற்று மோதிரத்தை மயூரியிடம் கொண்டு செல்ல அவளும் உணர்ச்சியற்ற முகத்துடன் கரத்தை நீட்டினாள்.

அவளது முகம் தப்புக்கு மேல் தப்பு செய்யும் உணர்வில் திவர்த்திருந்தது.

7

அன்றிரவு விஷ்ணு அறையில் தொலைக்காட்சிப் பெட்டியில் ஏதோ விளையாட்டை மும்முரமாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

விஷ்ணுவின் விசாலமான அறையில் ஒரு பாதியை மின் சாதனங்கள் ஆக்ரமித்துக் கொள்ள, மறுபாதி படுக்கைக்காக என்று ஒதுக்கப்பட்டு இருந்தது. இரண்டு பாதியையும் மெல்லிய திரைச்சீலை பிரித்தது.

மயூரியின் வரவிற்குப் பிறகு மின் சாதனங்கள் பகுதியிலேயே தான் இருக்கலாம் என முடிவு செய்து, மறு பாதியை மயூரியின் உபயோகத்திற்கு என சிறு மாறுதல்கள் செய்து வைத்தான் விஷ்ணு.

கதவு தட்டும் ஓசைக் கேட்டதும் திரும்பியவன், ''வா மயூரி!'' என்று சொல்லி ரிமோட் உதவியுடன் தொலைக்காட்சியை நிறுத்தினான்.

அவன் மயூரியின் வரவை எதிர்பார்த்து தான் இருந்தான். அதுவும் ராம் மற்றும் தீபா சென்றதுமே மயூரி தன்னிடம் பேசுவதற்காக வருவாள் என்று எதிர்பார்த்தான். ஒரு இரண்டு மணி நேரம் சென்று மயூரி வந்திருக்கிறாள் என்றாலும் அவன் யூகம் செய்த விஷயத்தை பேசுவதில் தாமதம் செய்யவில்லை.

''மோதிரம்...'' என்று ஒரு சின்னப் பெட்டியை நீட்டியவளிடம், ''உன்னை சரியா தான் புரிஞ்சு வைச்சிருக்கேன் மயூரி. நீ என் கிட்டே கொண்டு வந்து கொடுப்பேன்னு எதிர்பார்த்தேன்'' என்று மனதில் இருப்பதை சொன்னான் விஷ்ணு.

அவன் மோதிரத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளாமல் பேசிக் கொண்டிருக்கவும், அங்கிருந்த மேஜையின் மேல் வைத்தவள், ''எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது. எத்தனை நாளைக்கு பொய் சொல்லி நடிக்க முடியும்?'' என்று மனதில் இருந்த குற்ற உணர்ச்சியில் வினவினாள்.

அவளுடைய குற்ற உணர்ச்சியை விஷ்ணுவால் தெளிவாக உணர முடிந்தாலும் சரியான பதில் தான் அவனிடத்தில் இல்லை. எப்படி சமாதானம் சொல்வது என்று தெரியவில்லை. அப்படியே சமாதானம் என்று தொடங்கினால் நியாயப்படி வேறு ஏற்பாட்டில் மயூரிக்கு தேவையான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டி வரும். அதனாலேயே விஷ்ணு பேச்சைத் தவிர்க்க எண்ணினானோ?

''இன்னைக்கு வந்த ராம் என்னுடைய க்ளோஸ் ப்ரண்ட் அவன் மனைவி தீபா என்னுடைய தங்கை மாதிரி மயூரி'' என்று பேச்சை திசை திருப்பினான்.

''ராம் - தீபா ரெண்டு பேரும் ரொம்ப நல்லா பேசறாங்க. எனக்கு தீபாவோட பேச்சு ரொம்பப் பிடிச்சு இருந்தது. என்னோட தங்கையை ஞாபகப்படுத்துச்சு. அதனால் தான் மயூக்கான்னு அவளை கூப்பிடச் சொன்னேன்'' என்று கண்கள் பளபளக்கச் சொன்னாள் மயூரி.

''ஓ! அப்படியா?'' என்று வினவிய விஷ்ணுவிற்கு 'மயூக்காவிற்காக' எழுந்த காரணமற்ற கோபத்தை எண்ணி தன் மீதே வருத்தம் இப்பொழுது எழுந்தது. ஆனால் காலம் கடந்து வருத்தப்படுவதால் என்ன பயன்?

மயூரிக்கு விஷ்ணு காலையில் மட்டும் சிரித்துச் சிரித்து பேசியதை எண்ணி மிகுந்த வியப்பு.

''காலையில் நீங்க தீபா கூட கேலியா பேசினது ரொம்ப ஆச்சரியமா இருந்தது. நீங்க ரொம்ப சீரியஸ்

டைப் அப்படின்னு நினைச்சு இருந்தேன்'' விகல்பம் இல்லாமல் மனதில் பட்டதை தெரிவித்தாள் மயூரி.

தன்னுடைய பெயரைக் கூடச் சொல்லி அழைப்பதில் தயக்கமிருந்தாலும் மயூரி கொஞ்சமே கொஞ்சம் சகஜமாகப் பேசுவதைப் போல உணர்ந்தான் விஷ்ணு. ஆனால் மயூரியோ வைபவ் தான் பிரசாத் என்று சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தாள்.

அவளது மனநிலை அறியாமலேயே, ''ராமுக்கு ஒரு தங்கை இருந்தாள் மயூரி...'' என்று விஷ்ணு தொடங்கவும், ''இருந்தாள்... என்றால்?'' என அதிர்ச்சியாக வினவினாள்.

''இருந்தாள்... இப்பொழுது உயிரோடு இல்லை. சூசைட்'' என்று சொன்னபொழுது அவனது கண்களில் தெரிந்த வேதனையை மயூரியால் உணர முடிந்தது.

'அந்தப் பெண்ணிற்கு என்ன கஷ்டமோ?' என்ற எண்ணம் மயூரிக்கு எழுந்தாலும் இப்பொழுது அந்தப் பெண் உயிருடன் இல்லை என்பது மிகுந்த வேதனையை அளித்தது.

''என்ன ஆச்சு?'' வார்த்தைகள் தொண்டைக் குழியில் இருந்து வர மறுத்தன.

''சூசைட் பண்ணிட்டால் ஒரு பிரச்சனையும் முடியாது மயூரி. அதனால் எத்தனை கஷ்டம் தெரியுமா ராம் வீட்டிற்கு? ராமின் தங்கை கோதை ரொம்ப நல்ல பொண்ணு. ஒரு நாள் காரை எடுத்துட்டுப் போன போது ஒரு குட்டி பொண்ணு மேல் மோதிட்டாள். அந்த சின்ன பெண்ணை ரொம்ப சீரியசான கண்டிஷனில் ஆஸ்பத்திரியில் சேர்த்

பொண்ணு இருந்தாள். கொஞ்சம் கொஞ்சமா டாக்டர்ங்க மேல நம்பிக்கையும் குறைய ஆரம்பிச்சது. கோதைக்கு குற்ற உணர்வு ஜாஸ்தியாகி முதல் ரெண்டு தடவை தற்கொலை முயற்சி செய்யும் போது ராம் வீட்டில் காப்பாத்திட்டாங்க. ஆனால் கடைசி தடவை... விஷயம் கை மீறிடுச்சு'' என சொல்லும் பொழுது தொண்டை கரகரத்தது விஷ்ணுவிற்கு.

'ஓ! இதனால் தான் நானும் தற்கொலை முயற்சி போது காப்பாற்றி அழைத்து வந்ததா?' என எண்ணிக் கொண்டு, ''பாவம்! கோதை'' என்றாள் மயூரி.

''கோதையை விட பாவம் அங்கே ராம் வீட்டில் இருக்கிறவங்க தான். எத்தனை பேர் எத்தனை விதமா பேசினாங்க தெரியுமா? கோதைக்குக் கல்யாணம் பேசிட்டு இருந்தாங்க. அவளுக்கு வீட்டில் செய்து வைக்கிற கல்யாணம் பிடிக்கலை. காதல், போதை பழக்கத்துக்கு அடிமை.. இன்னும் நிறைய காரணங்களைக் கிளப்பி விட்டாங்க. உயிரோட இருக்கிறவங்களுக்கும் செத்துட லாமான்னு இருந்ததாம்'' என விஷ்ணு சிறிதும் கற்பனை இல்லாமல் உள்ளதை உள்ளபடியே உரைத்தான்.

மயூரிக்கு, அவள் தற்கொலையை நாடிய பொழுது வெற்றியடைந்திருந்தால் தன் வீட்டில் இருப்பவர்களுக்கும் இன்று இதே கதி ஏற்பட்டிருக்குமோ? நான் ஒருத்தி செய்ய இருந்த முட்டாள்தனத்திற்கு... ச்ச! என்று மனதில் சிந்தனை எழ கண்களில் இருந்து அவளையறியாமலேயே கண்ணீர் சுரந்தது.

''அழாதே மயூரி!'' என்று விஷ்ணு ஆறுதல் சொன்னது மேலும் மயூரிக்கு கண்ணீரை வரவழைக்க மௌனமாகவே அமர்ந்திருந்தான்.

சுயநினைவு கூட இல்லாமல் எந்த அவமானத்தை
தேடித் தரக்கூடாது என்று உயிரை விட முனைந்தாளோ
அதைவிட பெரிய அவமானத்தை உயிரை நீத்தும் தேடி
கொடுத்திருப்பாள்! உயிரை விடுவதால் மட்டும் எந்தத்
தீர்வும் கிடைக்கப் போவதில்லை.

சில நிமிடங்களில் மீண்டவள், ''தேங்க்ஸ்!'' என்று
நன்றி தெரிவித்தாள்.

''இதை நான் எதுக்குச் சொல்றேன்னா... எனக்கு சத்
தியம் செய்து கொடு மயூரி. இனிமேல் எந்த நிலை
யிலும் தற்கொலைக்கு முயற்சி செய்ய மாட்டேன்னு
ப்ராமிஸ் பண்ணி கொடு'' என்றான் விஷ்ணு.

மயூரியினிடத்தில், ''என் மேல்... நான் சொன்னதில்
உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?'' என பாவமாக
வந்தது கேள்வி.

விஷ்ணு, ''கோதையின் முடிவிற்குப் பிறகு டாக்டர்
எங்களிடம் கேட்டது ஏன் இப்படி தனியா விட்
என்று தான். உன் மேல் முழுமையளவு நம்பிக்கை இருக்கு
ஆனாலும்... எனக்கு ப்ராமிஸ் செய்து கொடுப்
பதில் எதுவும் பிரச்சனையில்லையே?'' என்று விளக்கம்
சொல்லி கை நீட்டியவனிடம் மறுப்பு எதுவும் இன்றி,
கையில் அடிக்காமல் வாய் வார்த்தையால் சத்தியம்
செய்து கொடுத்தாள் மயூரி.

''இப்போ ராம் வீட்டில் எப்படி இருக்காங்க?'' என்று
கலங்கிய குரலில் வினவினாள்.

''ராம் அம்மாக்கு கோதை இறந்ததில் இருந்து டிப்ர
ஷன் தீபா வந்ததுக்கு அப்புறம் தான் கொஞ்சம் கொஞ்
சம் பரவாயில்லை. ராம் தான் ரொம்பக் கஷ்டப்பட்டான்''
என்று சொல்லிவிட்டு அவளிடம் குளிர்ந்த நீரை நீட்டி
னான்.

தண்ணீரைப் பருகியவளுக்கு வைபவ் பற்றி விஷ்ணு
விடம் சொல்வதற்கான தருணம் இதுவல்ல என்பதும்
விளங்கியது.

ஆனால் 'சொல்லிடு மயூரி!' என்ற உந்துதல் மனதில்
பிறக்க, ''உங்களிடம்...'' என்று அனைத்து தைரியத்தையும்
திரட்டிப் பேச ஆரம்பிக்கும் பொழுது விஷ்ணுவிற்கு
ஏதோ அழைப்பு வந்தது.

தன்னுடைய செல்போனைப் பார்த்தவன் மயூரியிடம்,
''ஒரு நிமிடம்!'' என்று சொல்லிவிட்டு, ''ம் சொல்லுங்க
ஆறுமுகம் சார்! காலையிலேயே போன் செய்திருந்தீங்க
போல?'' என்று செல்போனில் பேசினான்.

மறுமுனையில் ஊட்டி மேனேஜர் என்ன பேசினாரோ
அது மயூரிக்குத் தெரியாது.

''அந்த கம்ப்ளைன்ட் கொடுக்கிறவங்க ஏதாவது
எவிடன்ஸ் ட்ரொட்யூஸ் செய்து இருக்காங்களா?''

''இல்லையா? அவங்க சாதாரணமான கம்ப்ளைன்ட்
கொடுக்கலை சார். நமக்கு நாளைக்கு எந்த ஆதாரம்
வைச்சு நடவடிக்கை எடுப்பீங்கன்னு கேள்வி வரும்
தானே?'' என்று பேசிக் கொண்டிருந்தான் விஷ்ணு.

மயூரிக்கு சரேலென வைபவுடன் பேசிய 'ஆதாரம்'
பற்றிய வாதம் நினைவிற்கு வந்தது. ஏதோ ஒரு ஊழியர்
மேல் நடவடிக்கை எடுப்பதற்கே ஆதாரம் என்று கேள்வி
கேட்பவன் அவன் உடன் பிறந்த பிறப்பு மீது குற்றம்
சாட்டும்போது மட்டும் எப்படி எடுத்துக் கொள்வான்?

ஆதாரம் என்று கேட்டால்... குழந்தை, டி.என்.ஏ.
என்று சொல்லலாம் தான். ஆனால் இந்த பரிசோதனை
களை எல்லாம் செய்து நிரூபிக்கும் நிலையில் இருப்பது
மயூரிக்கு கேவலமாக இருந்தது. அதுவும் வைபவின்

முகத்திரையைக் கிழிப்பது என்ற விஷயம் இருந்தாலும்
அதன் பிறகு மயூரி மற்றும் வயிற்றில் வளரும் ஜீவனின்
நிலை?

இத்தனை காரணங்களையும் மனதில் நிறுத்தி
வைபவ் பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்லாமல்
அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் மயூரி.

அவள் நகரவும், ''ஏதோ சொல்ல வந்தியே மயூரி?''
என்று வினவினான் விஷ்ணு.

''ம். ஒண்ணுமில்லை... ஏதோ சொல்ல வந்தேன்
மறந்துட்டேன்'' என்று சமாளித்துவிட்டுச் சென்றாள்.

அன்று உறங்க முயன்றவளுக்கு தேவையற்ற
எண்ணங்கள் அலை பாய்ந்தன. நடத்திக் கொண்டிருக்
கும் நாடகம் பிடிக்காமல் விஷ்ணுவிடமாவது உண்
மையைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் தான்
சென்றாள். ஆனால் கோதையைப் பற்றி பேசி... தன்
னுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஆதாரம் பற்றி நினைத்து
சொல்ல வந்ததைச் சொல்லாமலேயே திரும்பினாள்.

அடுத்த நாள் காலையில் வைபவ் முகத்தைப் பார்க்க
நேரிடுமே என்ற எரிச்சலில் அறையிலேயே முடங்கி
கிடந்தாள் மயூரி. ராம் தீபா வருகையினால் விஷ்ணுவும்
முதல் நாள் வீட்டிலேயே இருந்து விட, வைபவும் ஏதோ
வேலை விஷயமாக வெளியில் சென்றுவிட எப்படியோ
அவன் முகத்தில் விழிக்காமல் தப்பித்தாயிற்று. இன்று
எப்படியோ?

ஆனால் அறையில் இருப்பதற்கு சோதனையாக
விசாலாட்சியின் சொல்லுக்கு இணங்கி பணியாள்கள்
மயூரியிடம் வந்து 'இன்னைக்கு யாராவது விருந்தினர்கள்
வருகிறார்களா? என்ன மெனு? மறுநாள் லீவு வேணு

டும்' என ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு
வந்து நின்றார்கள்.

''அதெல்லாம் அம்மாவிடம் கேட்டுக் கொள்ளுங்
களேன்'' என்று ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல்
மயூரி சொன்ன பிறகு தான், ''பெரியம்மா இனிமேல்
இதையெல்லாம் உங்களை கேட்டுக்கச் சொன்னாங்க''
என்ற பதில் வந்தது.

வைபவ் இன்று பெங்களூர் சென்று விடுவான்
என்பது மயூரிக்குத் தெரியும். அதனால் இந்தக் காலை
வேளையை மட்டும் கஷ்டப்பட்டுக் கடத்த முடிவு செய்
தது முடியாமல் போனதில் சற்று நிதானம் குறைந்தது.

''நாளையில் இருந்து நான் சொல்கிறேன் காமாட்
சிம்மா. எனக்கும் புது இடம் என்பதால் எந்த விவரமும் தெரி
யாது. இன்னைக்கு எனக்குக் கொஞ்சம் தலைவலியா
இருக்கு. ஒருநாள் அம்மாவிடமே கேட்டுக்கோங்க'' என்று
முடிந்தவரை அனுசரணையாக சொல்லி அறைக்குள்
இருந்தாள்.

காலையில் விஷ்ணு வேலைக்குக் கிளம்பிச் சென்று
விட வீட்டிற்கு சிறிது நேரம் போன் செய்து நலம்
விசாரித்தாள். முதல் நாள் இருந்த கவலையில் வீட்டு
நினைவு அதிகமானது.

ரிசீவரை வைக்கும் பொழுது மீண்டும் காமாட்சிம்மா
கதவைத் தட்டிப் பதட்டமாக, ''மயூரிம்மா! ரொம்ப
நேரமா அம்மாகிட்ட இருந்து சத்தமே காணோம். பாத்
ரூம் கதவு மூடி இருக்கு. கொஞ்சம் வந்து பார்க்கறீங்
களா?'' என்று சொல்லவும் மயூரிக்கும் பதட்டம் தொற்
றிக் கொண்டது.

உடனே தோட்டத்தில் வேலை செய்பவரைக் கதவை
உடைக்கச் சொல்லிவிட்டு விஷ்ணுவிற்கு போன் செய்

தாள். விஷ்ணு போனை எடுக்காமல் இருக்கவும் ட்ரைவரை அழைத்து விசாலாட்சியை மருத்துவரிடம் அழைத்துச் செல்ல காரை தயார் செய்யுமாறு பணித்தாள்.

கதவை கடப்பாரைக் கொண்டு நெம்பவும், காமாட்சி யம்மா மற்றும் வேலம்மாள் உதவி கொண்டு உள்ளே மயங்கிக் கிடந்த விசாலாட்சியைத் தூக்கி வந்து, தண்ணீர் தெளித்து எழுப்பியதற்கு எந்தப் பலனும் இல்லாமல் போகவே துரிதமாகச் செயல்பட்டு காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள்.

அதன் பிறகு விஷ்ணுவிற்கு தகவல் சொல்லியனுப் பியது, மருத்துவரிடம் பரிசோதனைப் பற்றி பேசியது, கையிலிருந்த பணத்தைக் கொண்டு முன் பணம் கட்டியது. மருந்துகளை வாங்கி வரச் சொன்னது என்று கண நேரமும் ஓய்வில்லாமல் இருந்தாள் மயூரி. ஓய்வு இல்லாமல் இருந்ததும் மயூரியை தேவையில்லாத எண்ணங்களில் இருந்து தப்பிக்க உதவிக்கரம் நீட்டியது.

மயூரிக்கு விசாலாட்சியின் இன்றைய நிலைக்கு தானும் ஒரு காரணி என்று உறுத்திக் கொண்டே இருந்தது. முதலில் மகன் மீது எழுந்த அவநம்பிக்கை, இரண்டு நாட்கள் ஓய்வில்லாத அலைச்சல், அவசியமில்லாத மனக்கவலை என்று ஏற்கனவே ஆரோக்கியம் குறைவாக இருந்த விசாலாட்சியை இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளின.

விஷ்ணு வந்ததும் மயூரியிடம் விசாரித்துவிட்டு மருத் துவரைச் சென்றுப் பார்க்க, விசாலாட்சிக்கு நினைவு திரும்பி அவரிடம் சென்றாள் மயூரி.

ஏனோ வாடி, துவண்டிருந்த விசாலாட்சியைப் பார்த்த தும் மயூரிக்கு ஊட்டியில் பேசிய வார்த்தைகள் ஒலித்தன.

''உனக்கு ஒரு அம்மாவா என்னை நினைச்சுக்கோ... பெத்த மகளா உன்னை கவனிச்சுக்கிறேன். அழக் கூடாது...'' அந்த கனிவான வரிகள் காதில் எதிரொலிக்க கண்கள் வேதனையை பிரதிபலித்தது.

மயூரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த விசாலாட்சியின் கரத்தைப் பற்றி, ''என்னம்மா? பய முறுத்திட்டீங்களே? ரெண்டு நாளா நீங்க மருந்து, மாத்திரை எல்லாம் ஒழுங்கா எடுத்துக்கறது இல்லையா? நானும் கவனக் குறைவா இருந்துட்டேன்'' ஆறுதலாக வும், பாசத்துடனும் சொன்னாள்.

''இல்லைம்மா. ஏதோ திடீர்னு கண்ணை இருட்டிட்டு வந்துடுச்சு. இனிமேல் என் கடமையைப் பார்த்துக்க நீ வந்துட்டியே மயூரிம்மா? ஒண்ணும் பிரச்சனையில்லை'' என்று கண்கள் பளபளக்கச் சொன்னார்.

''மகள் மாதிரி பார்த்துக்கிறேன்னு சொல்லிட்டு... இப்போ இப்படிப் பேசி கஷ்டப்படுத்தறீங்களேம்மா? உங்களுக்கு ஒரு குறையும் வராது. டாக்டர்கிட்ட பேசி னேன். அவர் சொல்ற மாதிரி கேட்டு நடந்தால் ஆபரேஷ னுக்கு ரெடி ஆகலாம்னு சொல்லி இருக்கார்'' என்று சின்னக் குழந்தைக்கு எடுத்துரைப்பது போல் சொன் னதை விஷ்ணு தள்ளி நின்று கேட்டுக் கொண்டிருந் தான்.

மயூரி சொல்வதைக் கேட்டு லேசாகப் புன்னகைத்தார் விசாலாட்சி.

''எந்த சமாளிப்பும் வேண்டாம். நான் உங்களை கவ னிச்சுக்கிறேன்மா. நீங்க உடம்பை தேத்திட்டு ஆபரேஷன் முடிஞ்சு நல்லபடியா குணம் ஆகிடுவீங்க'' என்று விசா லாட்சியின் புன்னகையைப் பொருட்படுத்தாமல் சொன் னாள் மயூரி.

விசாலாட்சி, ''ஆபரேஷன்? வெற்றியும்...'' என்று தொடங்க வாயை கைகளால் மூடி, ''நீங்க இந்த நேரத்தில் இருந்து மனசளவில் தைரியமா இருக்கணும்மா. அப்போ தான் சீக்கிரம் குணமாகலாம். எனக்காக. இல்லை வயிற்றில் இருக்கிற உங்க பேரப் பிள்ளைக்காக...'' என்று முதல் முறையாக விசாலாட்சிக்கே பேச வாய்ப்புக் கொடுக்காமல் முடித்தாள் மயூரி.

மயூரியைப் பொறுத்தவரையில் இதைச் சொல்லலாமா... வேண்டாமா என்று யோசித்து வார்த்தைகள் வரவில்லை. விசாலாட்சியின் மீது கொண்ட அன்பில் மனதில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகள்! அன்பில் வெளிப்பட்ட வார்த்தைகள் என்றாலும் மெய்யான வார்த்தைகள் தானே? வார்த்தை மெய்யாய் இருப்பினும் அதனால் எழுந்த வலி என்னவோ மனதை அறுத்தது.

இதைப் பார்வையாளராய் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணுவிற்கு, மயூரி தன் அன்னைக்கு ஆறுதல் சொன்னது பிடித்திருந்தது என்றால் வயிற்றில் வளரும் குழந்தையைக் காரணம் காட்டி பேச்சை முடித்தது மிகவும் பிடித்திருந்தது. மயூரியிடம் இருந்து வெளிப்பட்ட உண்மையான அன்பை உணர முடிந்தது. தன் கவலைகளைப் பொருட்படுத்தாமல் விசாலாட்சிக்கு இந்த நேரத்தில் தேறுதல் சொல்லி விஷ்ணுவின் மனதில் நல்ல மதிப்பைப் பெற்றாள் மயூரி.

அப்பொழுது தான் மகனைப் பார்த்த விசாலாட்சி, ''விஷ்ணு... எப்போடா வந்த? வைபவ் எங்கே?'' என்று வினவினார்.

''அவன் இன்னைக்கு பெங்களூர் கிளம்பறான்னு சொன்னானே மறந்துட்டீங்களா? இப்போ எப்படிம்மா இருக்கீங்க?'' என்று தாயின் அருகில் அமர்ந்து வினவினான்.

அதன் பிறகு விசாலாட்சியும் மனதில் திடத்துடன் பேச, மறுநாளில் இருந்து பொறுப்பை மயூரியை எடுத்துக் கொள்ளச் சொல்லி சில முக்கிய விஷயங்களை மட்டும் கற்றுக் கொடுத்தார்.

சற்று நேரத்தில் விசாலாட்சி ஓய்வெடுக்க, வெளியில் வந்த விஷ்ணு மயூரிக்கு மனமார நன்றி தெரிவித்தான்.

''ரொம்ப தேங்க்ஸ் மயூரி. இன்னைக்கு நீ மட்டும் இல்லைனா விஷயம் ரொம்ப சீரியஸா ஆகியிருக்கும்னு டாக்டர் சொன்னார்.''

''தேங்க்ஸ் இருக்கட்டும். இது எனக்கு அடைக்கலம் கொடுத்த அம்மாக்கு நான் செய்யற கடமை. முதல் தடவை ஹார்ட் அட்டாக் வந்தபோதே ஆபரேஷன் செய்து இருக்கலாம் இல்லையா?'' அக்கறையுடன் கேட்டாள் மயூரி.

''அம்மாக்கு அதுக்கான தெம்பு இல்லை. எங்க மேலேயும் தப்பிருக்கு. வாரத்துக்கு ஒரு தடவை தான் அம்மா மாத்திரை சாப்பிடறீங்களான்னே கேட்கிறது. மனதளவிலும் அம்மா ஆபரேஷனுக்குத் தயாராகலை மயூரி. இன்னைக்கு நீ அம்மாகிட்ட ஆறுதலா பேசி தைரியம் சொன்னபோது எனக்குக் கூட கொஞ்சம் கில்டியா ஆகிடுச்சு.''

அவனது குற்ற உணர்ச்சியைப் போக்கும் பொருட்டு பேச்சை மாற்றினாள் மயூரி.

''எனக்கு எமர்ஜன்சி நம்பர் எல்லாமே எதுவுமே தெரியாது. இன்னைக்கு கூட உங்க செல் நம்பருக்குத் தான் ட்ரை செய்தேன். மீட்டிங்கில் இருந்தீங்க போல? எடுக்கலை. கொஞ்சம் சொல்றீங்களா? போன் பக்கத்தில் நோட் பேடில் கூட எழுதி வைக்கணும்.''

மயூரியின் பொறுப்பு உணர்ச்சியையும், பாசத்தையும் விஷ்ணுவிற்கு தெளிவாக உணர முடிந்தது.

வரிசையாக முக்கியமான எண்களைக் கொடுத்தவன், வைபவ் உடைய தொடர்பு எண்ணையும் கொடுக்க மயூரிக்கு எரிச்சல் வந்தது.

எரிச்சலை மறைக்கத் தோன்றாமல், ''எமர்ஜன்சி நம்பர்ஸ் மட்டும் கொடுங்கள். எப்படியும் பெங்களூரில் இருந்துட்டு அவசரத்துக்கு உதவ முடியாதே?'' என்று காரணத்துடன் சொன்னாள்.

மயூரி சொன்ன விஷயம் உண்மைதான். வெளியூரில் இருந்துகொண்டு அவசரத்திற்கு வர முடியாதுதான். ஆனால் அவள் கறாராகச் சொன்ன விதம்?

இதுவரை மயூரியின் வார்த்தைகளில் இல்லாத எரிச்சலை... ஒதுக்கத்தை இப்பொழுது உணர்ந்து புருவம் உயர்த்தினான் விஷ்ணு.

8

மருத்துவமனையில் இருந்து விசாலாட்சி ஒரு வாரம் ஓடிவிட்டது. கீழே விழுந்ததால் இடுப்பு பிடிப்பு மட்டும் இன்னும் முழுவதுமாக சரியாகவில்லை. இந்த ஒரு வாரமும் மயூரி சமையல், விசாலாட்சியை கவனித்துக் கொள்வது, இதர பொறுப்புகள் என்று எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

வேலை செய்தே பழக்கப்பட்ட உடம்பு என்பதாலும், உதவிக்கு நிறைய ஆட்கள் இருந்ததாலும் எதுவும் கஷ்டமாகத் தெரியவில்லை மயூரிக்கு. எதுவானாலும்

மயூரியைக் கலந்து செய்வது தான் எப்போதும் பழக்கம் போல் எல்லோரும் அவளிடம் 'இது எப்படிம்மா?' 'இதை செய்யவா?' 'தோட்டத்தில் இது காய்ச்சு இருக்கு' என்று முக்கியமான விஷயமாகட்டும், உப்பு பெறாத விஷயமாகட்டும் அவளிடம் கேட்டும் சொல்லியும் செய்தனர்.

தன் வீட்டுப் பொறுப்பைச் சுமந்தவளுக்கு இது ஒன்றும் பிரமாதமாக இல்லை. எல்லாவற்றையும் விட முக்கியமான பொறுப்பாக விசாலாட்சியை கவனிக்கும் பொறுப்பை முன் வந்து ஏற்றுக் கொண்டாள் மயூரி. டாக்டர் சில நாட்களுக்காவது ஒரு நர்ஸ் வைத்துக் கவனித்துக் கொள்ளலாம் என்ற போது, அதை மறுத்து தானே செய்வதாகக் கூறி அதை சிரத்தையோடும் செய்தாள்.

மயூரியைப் பொறுத்தவரை தனக்கு இருக்க இடம் கொடுத்து, உண்ண உணவு கொடுத்து, அதற்கும் மேல் தன் மீது பாசமாக இருக்கும் ஒரு தாய்க்கு செய்யும் கடமையாக எண்ணித்தான் முதலில் செய்ய ஆரம்பித்தாள். ஆனால் நாளடைவில் அதிலே தன் மனமும் அமைதி பெறுவதையும், நிம்மதி அடைவதையும் உணர்ந்து எல்லாவற்றையும் முகம் சுழிக்காமல் மன மகிழ்ச்சியுடன் செய்தாள். சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக்களம் அல்லவா?

பிரசாத் என்ற ஒருவன் தன் வாழ்வில் வந்ததையே மறந்திருப்பாள்... விசாலாட்சி மட்டும் அவ்வப்பொழுது மயூரியின் உடல் நிலையைப் பற்றி விசாரிக்காமல் இருந்திருந்தால். கருவில் வளரும் குழந்தையை அழிக்க மனம் வராவிடினும், அது தன் குழந்தை என்றும் அவளுக்கு தோன்றவில்லை. அதைப் பற்றிய எண்ணம்

வரும் பொழுதெல்லாம் [illegible], வெறுப்
பும் வரவும் முடிந்த வரை அதைப் பற்றி எண்ணமிடு
வதை தவிர்த்தாள். வைபவ் பிரசாத் இங்கே இல்லாததும்,
அவன் பேச்சும் பெயரும் அடிக்கடி அடிபடாததும்
அதற்கு உதவியது என்றே சொல்லலாம்.

வீட்டில் மற்றவர்களுக்கு எத்தனை இன்றியமையாத
வளாகிப் போனாளோ அதில் பாதி அளவிற்காவது
விஷ்ணுவிற்கும் தேவைப்பட்டாள் மயூரி. வீட்டு வேலை,
அவன் தாயைக் கவனிக்கும் வேலை என்று நாட்கள்
செல்ல, 'இன்னமும் வேலையிருந்தால் தேவலை' என்று
விஷ்ணுவிடம் பல முறை சொன்ன பிறகு விஷ்ணுவும்
தன் அலுவலக வேலை சிலவற்றை வீட்டிற்கு எடுத்து
வரத் துவங்கினான்.

விஷ்ணுவிற்கும் ஹைதராபாத்தில் ஒரு ஹோட்ட
லுடன் புது ஒப்பந்தம் போடவிருப்பதால் கூடுதல்
வேலை இருந்தது. அதனுடைய பண விவரம், டென்டர்
என்று அனைத்துமே ரகசியமானவையாக இருப்பதால்
அவனே அந்த வேலையையும் சேர்த்து செய்து வந்தான்.
எப்போதும் செய்யும் கூடுதல் வேலை தான். ஆனால்
இப்பொழுது அதை வீட்டிற்கு எடுத்து வந்து மயூரியுடன்
பேசிக் கொண்டே செய்யும் போது, அதிலுள்ள கஷ்டம்
தெரியவில்லை.

அன்றைக்கு வீட்டில் நடந்ததை மயூரியும், அலுவல
கத்தில் நடந்தவற்றை விஷ்ணுவும் மற்றவரிடம் கூறிக்
கொண்டே செய்த பொழுது இருவருக்குமே அது உற்
சாகமாக இருந்தது.

''அம்மா இன்னைக்கு திரும்ப எங்க வீட்டுக்கு பேச
ணும், போகணும் அப்படின்னு சொன்னாங்க. நான் என்ன
சொல்றதுன்னு [illegible] இருந்தப்போ
காமாட்சிம்மா வந்து காப்பாத்திட்டாங்க'' என்று கூறி
னாள் மயூரி.

விஷ்ணுவும், ''ம்ம்... இன்னும் எத்தனை நாளைக்கு
தள்ளிப் போட முடியும்னு தெரியலை. அவங்களுக்கு
உடம்பு சரியில்லை அப்படின்னு நாளைக் கடத்தியாச்சு.
இனி வேற ஏதாவது தான் யோசிக்கணும்'' என்றான்.

''அம்மா இன்னைக்கு மதியம் நல்லா தூங்கினாங்க.
அப்புறம் செக்கப்புக்கும் போயிட்டு வந்தோம். டாக்டர்
நல்ல முன்னேற்றம் அப்படின்னு சொன்னார். இதே
மாதிரி தொடர்ந்தால் சீக்கிரமே ஆபரேஷன் வைச்சுக்
கலாம் அப்படின்னும் சொன்னார்'' என்று அன்றைய
தகவலை சுருக்கமாகப் பகிர்ந்தாள்.

செக்கப் என்றதும் நினைவு வர, ''மயூரி! நீ இங்கே
வந்ததில் இருந்து டாக்டரிடம் செக்கப்புக்கே போகலை.
ஊட்டியில் பார்த்ததோடு சரி. நாளைக்கு நான் ஈவ்னிங்
அப்பாயின்மென்ட் வாங்கறேன். நான் ஆபீஸில் இருந்து
வந்ததும் ரெடியா இரு. போயிட்டு வரலாம். இல்லை நீ
அம்மாவைக் கூப்பிட்டு போயிட்டு வா'' என்றான்.

கண்டிப்பாக போக வேண்டுமா என்பது போல் பார்த்
தவள், அவனின் பார்வையில் அமைதியாக, ''இல்லை!
அம்மாவை தொந்தரவு செய்ய வேண்டாம். நீங்க வந்த
பிறகே போகலாம்'' என்று மீதி வேலையில் கவனம்
செலுத்திக் கொண்டே கூறினாள் மயூரி.

''உங்க வீட்டுக்குப் பேசினியா? நம்ம வீட்டு நம்பர்
கொடுத்து இருக்கியா?'' என்று கேட்டான் விஷ்ணு.

''இல்லை. கொடுக்கலை. என்னோட செல் நம்பர்
மட்டும் தான் இருக்கு. இங்கே கால் செய்து, வேற

யாராவது எடுத்துட்டா வம்பா போயிடும். அதான் கொடுக்
கலை. நான் தான் ரெண்டு நாளைக்கு ஒரு தடவை
பேசறேனே?''

''எதுக்கும் என்னோட செல், இல்லை அட்லீஸ்ட்
நம்ம... இந்த ரூம் போன் நம்பரையாவது ஹாஸ்டல்
நம்பர் என்று கொடுத்துடு மயூரி'' என்றான்.

அவள் தலையாட்டவும் விஷ்ணு, ''அப்புறம்
இன்னொரு விஷயம். தப்பா எடுத்துக்காதே! நீ ஊட்டி
யில் இருந்து எஸ்டேட் கணக்கைப் பார்த்தால் என்ன
சம்பளம் கொடுக்கிறதா சொன்னேனோ... அதை நீ
கண்டிப்பா இப்போ வாங்கிக்கணும். உனக்கு உன்
வீட்டுக்கு அனுப்ப உதவியா இருக்கும். தம்பி, தங்கை
ரெண்டு பேரும் படிச்சுகிட்டு இருக்காங்க இல்ல?
ஃபேஷன் டிசைனிங் கோர்ஸில் தான் ஸ்பெஷல் ப்ரா
ஜெக்ட் செய்தால் தனியா சேலரி கொடுப்பாங்க இல்
லையா?'' என்று காரண காரியத்தோடு விளக்கினான்.

''வேண்டாம் விஷ்ணு. அது வேலை. இங்கே தான்
நான் வேலை செய்யலையே? வீட்டில் செய்றதுக்கெல்
லாம் யாராவது சம்பளம் கொடுப்பாங்களா? இல்லை
அதை வாங்கத் தான் செய்வாங்களா?''

''ஒண்ணு சம்பளமா வாங்கிக்கோ, இல்லை அலவன்ஸ்
என்று நினைச்சு வாங்கினாலும் சரி. உன் இஷ்டம்.
ஆனால் வாங்கிக்கணும். உன் பேரில் ஒரு அக்கவுண்ட்
ஆரம்பிச்சு அதில் போட்டுடறேன். நாளைக்கு பாஸ்புக்
வந்துடும்'' என்றான் அழுத்தமான குரலில் இத்துடன்
இந்த பேச்சு முடிந்தது என்பது போல்.

மயூரிக்குமே வீட்டிற்கு எப்படி பணம் அனுப்புவது
என்ற கவலை இருந்ததால் இப்போது விஷ்ணு கூறி

யதும் தயங்கினாலும் வேறு வழி இல்லையென்று
ஒப்புக் கொண்டாள். இந்த கடனை விசாலாட்சியை
மேலும் நன்றாகக் கவனித்துக் கொள்வதின் மூலம் தீர்க்க
வேண்டியதுதான் என்றும் உறுதி செய்து கொண்டாள்.

மயூரி ஒரு புன்னகையுடன் சம்மதம் தெரிவிக்கவும்
அவளை நம்ப முடியாமல் பார்த்தான் விஷ்ணு.

'என்ன?' என்பது போல் பார்த்த மயூரியிடம், ''நீ இவ்
வளவு சீக்கிரம் ஒத்துக்குவேன்னு நான் எதிர்பார்க்கலை.
பெரிய சண்டையை எதிர்பார்த்து ஒரு பெரிய பிரசங்
கமே செய்யணுமேன்னு பயந்துட்டு இருந்தேன்'' என்று
சிரித்தான் விஷ்ணு.

''நான் ஏன் வீணா சண்டை போடப் போறேன்? நீங்க
அதுக்கு வேற ஆளைத்தான் பார்க்கணும்.''

''நீ தான் இருக்கியே? நான் ஏன் வேற ஆளைப்
பார்க்கப் போறேன்? எனக்கு நீ போதாதா?'' வார்த்தைக்கு
வார்த்தை பேசிவிடும் குஷியில் விஷ்ணு பேச,
மயூரியின் புன்னகை துணி கொண்டு துடைத்தது போல்
மறைந்தது.

மானசீகமாக தன் தலையில் குட்டிக் கொண்டவன்
பேச்சை மாற்றும் விதமாக, ''தீபா இன்னைக்கு எனக்கு
போன் செய்திருந்தாள். உன் செல்லுக்கு தான் கால் செய்
தாளாம். நீ எடுக்கலைன்னதும் என்னிடம் பேசினாள். நமக்கு
முடிஞ்ச போது அவங்க வீட்டுக்கு வரச் சொன்னாள்.
ராமும் பேசினான்'' என்றான்.

இரவு வேலை முடியும் வரை வேறு எந்த தேவை
யற்ற பேச்சும் பேசாமல் இறுக்கத்துடன் இருந்த மயூரியைப்
பார்த்த விஷ்ணுவிற்கு ஆயாசமாக இருந்தது. ஜாண்
ஏறினால் முழம் சறுக்குகின்றதே? என்னதான் செய்

வது? விளையாட்டை விளையாட்டாகக் கூட எடுக்க முடியாமல்...

அந்த கிராதகன் மட்டும் இப்போது அவன் கையில் கிடைத்தால், அவனுக்கிருந்த கண் மண் தெரியாத கோபத்தில் வெறும் கரத்தாலேயே கொன்று போட்டிருப்பான்.

விசாலாட்சிக்கு அடிபட்டதில் இருந்து இரவு அவருடன் தங்குவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்த மயூரி படுக்கச் செல்லும் போது விஷ்ணு, ''மயூரி! அம்மாவை ரொம்பவுமே நல்லா பார்த்துக்கிற. அதுக்கு நன்றி சொன்னாலும் பத்தாது தான். இருந்தாலும் என் மனமார்ந்த நன்றிகள்'' எனவும், ''அவங்க எனக்கும் அம்மா மாதிரி தான். குட் நைட்'' என்றுவிட்டு கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

அடுத்த நாள் மாலை விஷ்ணு அலுவலகத்திலிருந்து வந்ததும் இருவரும் மகப்பேறு மருத்துவரிடம் சென்றார்கள். அவர்களின் முறை வந்ததும் உள்ளே சென்ற மயூரியைப் பரிசோதித்த டாக்டர் மங்கை, ''எல்லாம் நார்மலா தான் இருக்கு. ப்ளட் டெஸ்ட்டுக்கு எழுதித் தரேன். இங்கேயே லேப் இருக்கு. இப்பவே செய்துடுங்க. ஆனா கொஞ்சம் வீக்கா இருக்க மாதிரி இருக்கு. உடம்பை நல்லாப் பார்த்துக்கோங்க. ஒரு மாசம் கழிச்சு வாணும்'' என்று விடை கொடுத்தார்.

அவளுடைய கணவன் என்ற முறையில் விஷ்ணுவிற்கும் அறிவுரை, ஆலோசனைகள் வேறு. அவளை இப்படி பார்த்துக் கொள்ள வேண்டும், அப்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று. உட்கார முடியாமல் மயூரி தவிக்க, விஷ்ணு அதை எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான்.

இரத்தப் பரிசோதனை செய்துவிட்டு வீட்டிற்கு வரும் வழியில் மாத்திரை மருந்துகளையும் வாங்கிக் கொண்டு நேரே வீடு வந்து சேர்ந்தார்கள்.

விசாலாட்சி பரிசோதனையைப் பற்றி விசாரித்து விட்டு, ''என்னம்மா அதுக்குள்ள வந்துட்டீங்க? நான் படிச்சு படிச்சுச் சொன்னேனே? அப்படியே வெளியே போயிட்டு சாப்பிட்டு வாங்கன்னு. போனதும் தெரியலை. வந்ததும் தெரியலை. என்ன பொண்ணும்மா நீ?'' என்று அலுத்துக் கொண்டார்.

அதைக் கேட்டபடியே உள்ளே நுழைந்த விஷ்ணுவிடம், ''எப்படித்தான் நீங்க ரெண்டு பேரும் காதலிச்சு கல்யாணம் செய்துக்கிட்டீங்களோ? எனக்கு சந்தேகமாகவே இருக்கு. இந்தப் பொண்ணு தான் எப்பவும் வீடே கதின்னு இருக்கா. நீயாவது அவளை எங்கேயாவது வெளியே கூப்பிட்டு போய் வரலாமில்ல விஷ்ணு? எல்லாத்தையும் நான் சொல்லணும் உனக்கு. நாளைக்கு ரெண்டு பேரும் வெளியே போறீங்க. ஏதோ ஒரு நல்ல படம் வந்திருக்குன்னு சொன்னா வேலம்மா. மயூரியை அந்தப் படத்துக்குக் கூப்பிட்டுப் போ விஷ்ணு'' என்று பரிந்துரை செய்தார் விசாலாட்சி.

''இல்லைம்மா. எனக்கு படம் எல்லாம் பிடிக்காது'' என்று உடனடியாக மறுத்தாள் மயூரி.

''பிடிக்கலைன்னா பரவாயில்லை. சும்மா போய் உட்கார்ந்துட்டு வாங்க. நாளைக்கு வந்து எனக்கு அந்தக் கதையைச் சொல்லணும். தெரிஞ்சுக்கோ'' போலியாக எச்சரிக்கை விடுத்தார் விசாலாட்சி.

எப்படியாவது அதை தடுக்கும் முயற்சியில் மயூரி, ''நீங்க...'' என்று தொடங்க, ''நான் ஒண்ணும் நோயாளி

இல்லை. ஒரு நாளில் ஒண்ணும் ஆகாது. இந்த மார்பின் தரை. பாத்ரூம் டைல்ஸ் என்று எங்கேயும் வழுக்கி விழா மல் பத்திரமா இருக்கேன். சரியா?'' என்று அத்துடன் பேச்சை முடித்தார்.

மயூரி நேற்று இரவு பேசியதை நினைத்து, இன்றும் லேசாக தனக்குள்ளேயே நத்தை போல் சுருங்கியிருக்க, விஷ்ணு இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும் என்று இருந்து விட்டான். விஷ்ணுவின் 'எனக்கு ஒன்றுமே தெரியாது' என்ற பாவனையில் மயூரியும் என்ன செய்வது என்று தெரியாமல் அமைதி காத்தாள்.

அடுத்த நாள் போகாவிட்டால் விசாலாட்சி விடமாட் டார் என்றுணர்ந்த விஷ்ணு மயூரியை அழைத்துக் கொண்டு படத்துக்குச் சென்றான்.

உள்ளே நுழைந்த பிறகு தான் இருவருக்குமே போயும் போயும் ஏன்டா இதற்கு வந்தோமென்று ஆகிவிட்டது. படம் ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களில் தன் தவறை உணர்ந்த விஷ்ணு, அருகில் கல்லென இறுகிப் போய் அமர்ந்திருந்த மயூரியை நினைத்துப் பெரிதும் வேதனைப் பட்டான்.

'போகலாம்' என சொல்ல வாயெடுத்தவனை முந்திக் கொண்டு விடுவிடுவென வெளியே சென்ற மயூரியைத் தொடர்ந்து சென்றான் விஷ்ணு.

மௌனமாக காரில் ஏறியவளைப் பார்த்தவனுக்கு தன் கையாலாகாத்தனத்தை நினைத்து தன் மீதே சின மேறியது. ஸ்டியரிங் வீலை தன் பலங்கொண்ட மட்டும் குத்தியவன் அடக்கிய கோபத்தோடு, ''இப்போவே வீட் டுக்கு போனால் அம்மா என்னன்னு கேட்பாங்க. பீச்சில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருந்துட்டுப் போகலாம்'' என்றான்.

ஒன்றும் கூறாமல் வெட்டவெளியை வெறித்தவளின் மௌனத்தையே சம்மதமாக எடுத்து வண்டியை பெசன்ட் நகர் கடற்கரையை நோக்கிச் செலுத்தினான்.

மாலை நேரமாதலால் குழந்தைகள் நீரில் விளையாடு வதை ஓரமாக உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர் களில் முதலில் மௌனத்தை உடைத்த விஷ்ணு மென்மையாக, ''மயூரி! இன்னும் எத்தனை நேரத்துக்கு இப்படி இருக்கப் போற? ப்ளீஸ்! அதை மறந்துடு'' என் றான்.

கண்களை நீர் படலம் மறைக்க, ''அதெப்படி விஷ்ணு மறக்கிறது? மறக்கணும்னு நினைச்சா கூட விடாம துரத்திகிட்டே வருதே!? என்ன செய்வேன்? நேத்து ஹாஸ்பிடல்... இதோ இன்னைக்கு இந்த பாழாய்ப் போன படம்'' என்றாள் குரல் நடுங்க.

சில நொடி அமைதிக்குப் பின், ''ஏன் விஷ்ணு இப்படிச் செய்யறாங்க? ஒரு தப்பும் செய்யாத அந்த பொண்ணு என்ன பாவம் செய்தாள்? அவளுக்கு ஏன் இந்த நிலைமை? பொண்ணா பிறந்தாலே இதுக்கெல்லாம் பயந்து தான் இருக்கணுமா?'' பேச ஆரம்பித்ததும் மனதில் இருப்பதைக் கொட்டினாள் மயூரி.

மயூரியின் இந்தக் குமுறலுக்குப் பின்னே இன்று பார்த்த படம். அதில் வரும் ஒரு பெண்ணை ஒருவன் நாசம் செய்ய, அந்த நாசக்காரனுக்கே மணம் முடித்தும் வைக்கிறார்கள் அந்த ஊர் நாட்டாமைகள்.

''எத்தனை தைரியம் இருந்தால் அவன் செய்யறதை யெல்லாம் செய்துட்டு... அதுக்கு பரிசா இந்தா வைச் சுக்கோ என்ற மாதிரி அந்தப் பொண்ணையும் அவனுக்கே கல்யாணம் செய்துக் கொடுப்பாங்க. இவங்களையெல்

லாம் என்ன செய்தால் தகும்? ஒரு வீட்டில் திருடன் அத்துமீறி நுழைஞ்சு கொள்ளை அடிக்கிறான். திருட னுக்கு தண்டனை கொடுப்பாங்களா? அந்த வீட்டுக்கு உரிமையைக் கொடுப்பாங்களா?'' உதடு துடிக்கக் கேட்ப வளுக்கு எப்படி ஆறுதல் சொல்ல என்று தெரியாமல் தவித்தான் விஷ்ணு.

ஆறுதல் அளித்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அவளிருந்தால் அல்லவா? ஆனால் இப்போது ஆறுதலை விடவும் தைரியமும், நாளையைப் பற்றிய நம்பிக்கையும் தான் மிக முக்கியம் அதையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

''அதை வெறும் படம்னே எடுத்துக்கோயேன் மயூரி. எதுக்கு உன்னை பாதிக்கிற அளவுக்கு அதுக்கு வெயிட் டேஜ் கொடுக்கிற? அதை மறந்துடு. ப்ளீஸ்'' என்றான் அவள் கைகளை அழுத்தி.

அவளிருந்த மனநிலையில் அதைக்கூட உணராமல், ''உங்களால் பதில் சொல்ல முடியலை இல்ல?'' என்று பெருமூச்செறிந்தாள்.

''இந்தக் காலத்தில் பார்க்கப்போனா பஞ்சாயத்து, நாட்டாமைன்னு எல்லாம் எதுவுமில்லை மயூரி. ஏதோ கற்பனையில் படம் எடுக்கிறாங்க. அந்த விஷயத்தை எல்லாம் அப்படியே எடுத்துக்காதே.''

''கற்பனையா இருந்தாலும்... கொஞ்சமாவது ஏத்துக்கிற மாதிரி இருக்கணும் இல்லையா? சினிமான்னு இல்லை... எந்த ஒரு மீடியாவும் பயங்கர பவர்ஃபுல் விஷ்ணு. லேட்டஸ்ட் ஃபேஷன் முதற்கொண்டு சினி மாவைப் பார்த்து கத்துக்கிற கூட்டம் தான் இங்கே ஜாஸ்தி. ஒரு ஹீரோ ஹீரோயினை அடிக்கிற

தான் இன்னைக்கு வரைக்கும் வருது. ஏன்? கற்பனையிசி மாத்தி எடுக்கச் சொல்லுங்க பார்ப்போம்? ஒட்டு மொத்த ஆண் சமூகமே எதிர்ப்பு தெரிவிக்கும்'' என்று வெளியே கொட்டித் தீர்த்தும் மனதில் இருந்த குமுறல் குறையவே இல்லை மயூரிக்கு.

அவள் மனதில் இருக்கும் குமுறல்கள் வெளியே வரட்டும் என்று மௌனமாக இருந்தான் விஷ்ணு.

''எது கற்பனை விஷ்ணு? நடக்காதவையா பேசறேன்? ஒரு பேப்பரை எடுத்தால் கூட 'கற்பழிப்பு' என்ற செய்தி கண்ணில் படத்தான் செய்யுது. நமக்கு நடக்காத வரைக் கும் அந்த விஷயத்துடைய வீரியம் பற்றி உணருவதே கிடையாது. பத்தோட பதினொன்று என்று பேப்பரை புரட்டிட்டு 'ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுழையுமா?' அப்படின்னு வ்யாக்யானம் பேசிட்டு இருக்கிறது தான் நடக்குது. ஆனால்...'' என்று சொன்னவளை இடைப் புகுந்தான் விஷ்ணு.

''மயூரி! நம்ம சமுதாயத்தில் இந்த விஷயத்தைப் பத்தின அவேர்னெஸ் குறைவு தான் என்று ஒத்துக் கிறேன். நிறைய விஷயங்கள் மாறிட்டு வருது. நாட் டாமை என்றெல்லாம் வழக்கில் இல்லவே இல்லை. சும்மா கமர்ஷியல் ஹிட்டுக்காக படம் எடுக்கிறான்.''

''அந்தப் படத்தில் நாட்டாமை என்கிறது கற்பனையா இருக்கலாம். ஆனால் அதுல அவங்க சொல்லி இருக் கிறதை தான் எல்லாரும் எதிர்பார்க்கிறாங்க. எத்தனையோ மாற்றங்கள் வந்துடுச்சு. ஆனால் இது மட்டும் மாறவே மாறாது'' என்றாள் வெறுப்பாக.

''அந்தப் பொண்ணுக்கும் அது தான் விருப்பமா இருந் [illegible] என்ன செய்ய முடியும் மயூரி?''

''அப்படி அந்தப் பொண்ணை நினைக்க வைக்குது இந்த சமூகம். அவளுக்கு அதை விட பெட்டர் சாய்ஸ் இருந்தால் அதை ஏன் ஒத்துக்கப் போறா பாவம்? அப்படியே ஒரு வாழ்க்கை அமைந்தாலும் குத்திக் குத்தியே கிழிச்சுருவாங்க. அதுக்கு இது தேவலாம் அப்படின்னு நினைச்சு இருப்பா பாவம்'' என்று வாதிட்டவள், ''இவ்வளவு சொல்றீங்களே... உங்களோட தனிப்பட்ட கருத்து என்ன?'' என்று அவனிடமே வினவினாள்.

அவள் கண்களை நேராகப் பார்த்து, ''நான்... என்னைப் பொறுத்தவரைக்கும் அவள்... அந்த பெண் இதுக்கு எந்த விதத்திலேயும் பொறுப்பாக முடியாது. சேத்துல நாம தவறி விழுந்துட்டோம்னா... அதான் ஒரு தடவை விழுந்தாச்சே அப்படின்னு திரும்ப யாரும் அதில் போய் விழறதில்லை. அதே மாதிரி தான் இதுவும். அதை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துடணும். அந்தப் பொண்ணு ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடிக்கிட்டு நிம்மதியா சந்தோஷமா இருக்கணும். செய்வாளா அந்த பொண்ணு?'' என்று நேரிடையாக அவளிடம் கேட்டான் விஷ்ணு.

கண்கள் கலங்க அவனைப் பார்த்தவள் பதில் ஒன்றும் சொல்லாமல் கடலை வெறித்தாள்.

விஷ்ணுவால் யாரோ ஒருவன் என்று நினைக்கும் பொழுது திடமாகப் பேச முடியும். தன் அண்ணனும் அந்த மாதிரி நாசக்காரர்களின் பட்டியலில் தான் இடம் பிடிக்கிறான் எனும் போது? தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற எண்ணம் தான் அந்த கணத்தில் பிறந்தது மயூரிக்கு.

மெல்ல மெல்ல தான் சொல்லி கரைக்க வேண்டுமென்று நினைத்தவன், ''கிளம்பலாமா மயூரி? இருட்டுச்சு'' என்று அவளுக்கு எழ கைக்கொடுக்க, மயூரி அதைக் கவனிக்காதவள் போல் தானாகவே எழுந்தாள்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்தவன், வண்டியை நோக்கி அவளுடன் நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுது கடற்கரையில் பூ விற்கும் பெண்மணி இருவரிடமும் வந்து, ''சார்! கடைசி போனி சார். மேடம்க்கு பூ வாங்கிக் கொடுங்க சார்'' என்று கெஞ்சுதலாக விற்பனை செய்வதற்காகப் பேசினார்.

விஷ்ணு 'அங்கே கொடுத்துடுங்க' என்று ஜாடைக் காட்டிவிட்டு பர்ஸில் இருந்த ரூபாய் நோட்டை பூ விற்கும் பெண்மணியிடம் கொடுத்தான்.

மயூரி தயக்கத்துடன் ஏறிடவும், ''ஃபார் ஹெர் ஸேக்'' என்று அவளுக்கு மட்டும் புரியும் விதத்தில் விளக்கினான்.

மறுப்பின்றி பூவை வாங்கிய மயூரி காருக்குள் வந்ததும் அதிலிருந்த விநாயகர் மூர்த்திக்கு சரத்தை மாலையாக அணிவித்தாள்.

9

விஷ்ணுவின் வீட்டுத் தோட்டம் வர்ண விளக்குகளாலும், தோரணங்களாலும், அழகு மலர்களாலும் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருக்க, மக்கள் ஆங்காங்கே குழுக்களாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். கையில் குளிர்பானங்களை வைத்துக் கொண்டு ஒரு சிலர் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தனர்.

இத்தனைக் கொண்டாட்டமும் விஷ்ணு - மயூரியின் நடந்தே இருக்காத திருமணத்திற்கான வரவேற்பை

முன்னிட்டு தான். அறிந்தவர் தெரிந்தவருக்குத் தன் மருமகளை அறிமுகப்படுத்தும் விதமாக மயூரி எத்தனை தடுத்தும் கேளாமல் இதற்கு ஏற்பாடு செய்தார் விசாலாட்சி.

''ஒண்ணும் பேசாதே மயூரி. வர வார இறுதியில் வைச்சுக்கலாம் என்று நானே ஏற்கனவே முடிவு செய்துட்டேன்.''

''இன்னும் நாலு நாள் தான்மா இருக்கு. எப்படி அதுக்குள்...?''

அதற்கும் விசாலாட்சி, ''எல்லாத்துக்கும் தான் காண்ட்ராக்டர் இருக்காங்க. நீ உன் சேலை, அவன் டிரஸ் அதை மட்டும் பாரு. உனக்கு வேண்டியவங்க யாராவது இருந்தால் கூப்பிடு. ம்ஹூம்... அப்புறம் கண்டிப்பா உங்க அம்மா, அப்பா எல்லோரையும் கூப்பிடு மயூரி. அவங்களுக்கும் என்னை மாதிரி தன் பிள்ளைங்க கல்யாணத்தைக் கண் குளிர பார்க்கணும்னு ஆசை இருக்காதா? இவன் தான் அது ஒண்ணுத்துக்கும் வழியில்லாமல் செய்துட்டான்'' என்று விஷ்ணுவைத் திரும்பி முறைத்தார்.

மகன் தன்னை பாவமாக ஏறிடவும், ''இப்போ.. ரிசப்ஷன் கூட வைக்கக் கூடாதுன்னு சொல்லுவியா மயூரி?'' என்று பாவம் போல் கேட்க மயூரியால் மட்டுமல்ல... விஷ்ணுவாலும் அதன் பிறகு ஒன்றும் கூற இயலாமல் போய் விட்டது.

''விஷ்ணு! போன் போட்டுக் கொடு. நான் பேசறேன். ஏதோ ஒரு காரணம் வைச்சு பேசறது தள்ளிப் போய் கிட்டே இருக்கு. என்ன ரெண்டு பேரும் பார்த்துக்கறீங்க? போன் போட்டுக் கொடுப்பா'' என்று வற்புறுத்தினார்.

''ஏதாவது [illegible]
விஷ்ணு, ''இல்லம்மா! ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் அவங்க கூட பேசினேன். ரொம்பக் கோபமா பேசி வைச்சுட்டாங்க. இனிமேல் இங்கே கூப்பிடவே செய்யாதன்னு திட்டிட்டாங்கம்மா. அதான் நீங்க பேசினாலும் திட்டுவாங்க. அதனால் இப்போ பேச வேண்டாம்னு பார்த்துகிட்டு இருக்கோம்'' என்று பூசி மெழுகினான்.

''அவங்க திட்டினாலும் என் பையன் செய்த தப்புக்கு நான் வாங்கிக் கட்டிக்கிட்டு தான் ஆகணும். என்ன செய்ய? அதுக்காக மேலும் மேலும் தப்பு செய்ய முடியுமா? அவங்க வீட்டு பெண்ணை நம்ம வீட்டுல வைச்சுக்கிட்டு... போன் போடறா முதலில்'' என்று அவர் பிடியிலேயே நின்றார் விசாலாட்சி.

அவர் கூறியதில் தான் எத்தனை உண்மை? அவர் மகன் செய்த குற்றம் தான். ஆனால் குற்றம் செய்தவன் ஒரு புறம், அந்த குற்றத்திற்கான பலன்களை அனுபவிப்பவன் இன்னொரு புறம்.

இருப்பினும் இப்போது தன் வீட்டினரைக் காக்கும் முயற்சியில், ''இல்லை வேண்டாம்மா! நானே சொல்றேன் எப்போ ஆவங்க கூட பேசலாம்னு'' என்று அழுத்தமாக முடித்தாள் மயூரி.

இப்பொழுது அதை நினைத்தபடி, ''ம்ஹ்ம்... சம்பந்திகளும் இருந்திருந்தால் இன்னும் நல்லா இருந்திருக்கும்' என்று எண்ணிக் கொண்டு வெண்பட்டு சேலை சரசரக்க விசாலாட்சி வருபவர்களைப் பெருமிதமாக வரவேற்றுக் கொண்டிருந்தார்.

''என்ன அண்ணி? கல்யாணம் ஆனதை சொல்லவேயில்லை? வெறும் வரவேற்பு மட்டும் வைக்கறீங்க?

செலவு செய்ய பயந்துட்டீங்களா?'' என்றார் புதிதாக வந்தவர்.

''வா புஷ்பா! வாங்க அண்ணா! என்ன புஷ்பா! அப்படிச் சொல்லிட்ட? என் பையனுக்கு செய்ய செலவு பார்ப்பேனா? கல்யாணத்துக்கு யாரையும் கூப்பிட முடியலை புஷ்பா. நம்ம பிள்ளைங்களோட நியாயமான ஆசைகளை நிறைவேத்தி வைக்கணும். நமக்கும் அவங்க சந்தோஷம் தானே முக்கியம் அண்ணா'' என்று கூறியவர் அவர்களை மயூரியிடமும், விஷ்ணுவிடமும் அழைத்துச் சென்றார்.

''மயூரி! இவங்க புஷ்பா. இவர் கந்தவேலு. விஷ்ணுவோட அப்பாக்கு ஒன்று விட்ட தம்பி முறை. இவ தான் என் மருமகள் மயூரி'' என்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

மணமக்களுக்கு வாழ்த்துச் சொல்வதை விட முக்கியகாரியமாக மயூரியின் கழுத்திலிருந்த 'ஆன்டிக்' ஃபினிஷில் இருந்த நெக்லஸைப் பார்த்து, ''இது உங்க ருபி நெக்லஸ் தானே அண்ணி? மருமகள் வந்தவுடனே அவகிட்ட கொடுத்துட்டீங்களா? கொடுத்து வைச்சவ தான்'' என்றார்.

சந்தோஷமாக சொல்கிறாரா இல்லையா என்று அவருக்கே வெளிச்சம்.

''ஆமாம் புஷ்பா. ஆகி வந்த நகை. நாலைஞ்சு தலை முறையா அப்படியே வர மருமகளுக்குன்னு கொடுத்துட்டு வர்றோம். இதை அவகிட்ட கொடுத்துட்டு, ரிசப்ஷனுக்காக வேற ஏதாவது வாங்கிக்கோமான்னா 'வேண்டாம்' அப்படின்னு சொல்லிட்டா. இப்போ தான் பழைய ஃபேஷன் திரும்ப வருதேன்னு சொல்லிட்டா. நான் கூட ரொம்பப் பெருசா பெரிய பெரிய கல்ல

கழுத்தை ஒட்டிகிட்டு இருக்கே... இவ வேற இப்படி சொல்லிட்டாளேன்னு பார்த்தேன். ஆனா நல்லா தான் இருக்கு இல்ல?'' பெருமை தாங்க முடியவில்லை விசாலாட்சிக்கு.

அவர் அந்த பழைய மாடல் நகையை வேண்டுமென்றால் உருக்கி வேறு மாதிரி செய்யச் சொன்னதும் பதறி, எங்கே இவரிடம் விட்டால் மாற்றி விடுவாரோ என்று வாங்கிக் கொண்டாள் மயூரி. ஆனால் அதுவே இப்பொழுது அவள் சங்குக் கழுத்தை ஒட்டி, அவள் அணிந்திருந்த பட்டுச் சேலைக்குப் பொருத்தமாக இருந்தது.

ஒரு ஏக்கப் பெருமூச்சு வெளியேற்றிய புஷ்பாவை முறையாக வரவேற்ற விஷ்ணுவிடம், ''நாங்க நல்லா இருக்கோம் விஷ்ணு. நீ தான் எங்களைக் கல்யாணத்துக்கே கூப்பிடலை. அதுக்காக நாங்க உங்க கூட கோவிச்சுக்கிட்டு இருக்க முடியுமா?'' என்று மீண்டும் தன் பல்லவியைத் தொடங்கினார்.

நடக்காத திருமணத்திற்கு எத்தனை முறை தான் எத்தனை பேரிடம் தான் விஷ்ணுவும் சமாதானம் கூறுவான். பாவம். ஒவ்வொருவரிடமும் அவர்களுக்கு ஏற்ற விதமாக பேசி அனுப்பி வைத்தவனைப் பாவமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் மயூரி.

அவளின் பார்வையை உணர்ந்தவன், ''ஷ்! மயூரி! முகத்தை நல்லா சிரிச்ச மாதிரி வைச்சுக்கோ. இன்னும் கொஞ்ச நேரம் தான்'' என்று அவளுக்கு ஆறுதல் அளித்தவன், அக்கறையாக, ''கால் வலிக்குதா? உட்கார்ந்துக்கறியா? குடிக்க ஏதாவது கொண்டு வர சொல்லவா?'' என்று கேட்டு சிறிது தூரத்திலிருந்த தீபாவை அழைத்தான்.

''தீபா! உங்க மயூக்காவுக்கு குடிக்க ஏதாவது கொண்டு வந்து கொடேன் ப்ளீஸ்.''

''இதோ பாருடா! உங்களுக்கு வேண்டாமா? ஓ! ஓகே ஓகே அக்காவோடதில் கொஞ்சம் உங்களுக்கு? நெல்லுக்கு புசிந்த நீர் ஆங்கே புல்லுக்கும் புசிந்ததாம்? ம்ம்... நடக்கட்டும், நடக்கட்டும்'' சிரித்தாலும் தீபா இருவருக்கும் பழச்சாற்றைக் கொண்டு வர தவறவில்லை.

''அண்ணா! என்னை மன்னிச்சுக்கோங்க. ரெண்டே கொண்டு வந்துட்டேன். அதுக்காக நீங்க தனி தனியா குடிக்கணும்ன்னு இல்லை. ஒண்ணை குடிச்சு முடிச்சுட்டே அடுத்ததை ஆரம்பிக்கலாம். சரியா?'' என்று கண் சிமிட்டினாள்.

'கடவுளே! இன்னும் எத்தனை நேரம் இந்த அவஸ்தை?' வெட்கம் என்ற போர்வையில் மயூரி கீழே குனிய அதற்கும் தீபா, ''அக்காவுக்கு வெட்கத்தைப் பாருங்க அண்ணா. ரொம்ப அழகா இருக்காங்க இல்ல?'' என்றாள்.

விஷ்ணு தான் வினோதமான மனநிலையில் இருந்தான். 'கொஞ்சம் சிரிச்சா தான் என்னவாம்? அதென்ன எப்ப பாரு தலையை தலையை குனிஞ்சுக்கிறது?' என்று எண்ணமிட்டவன், இனி நிறைய நேரம் அவள் தாங்க மாட்டாள் என்றுணர்ந்து தீபாவிடம், ''பின்னே எல்லோரும் உன்னை மாதிரியே வெட்கப்படத் தெரியாமல் இருப்பாங்களா பா.தீ? உன்னோட பாதி வெட்கத்தையும் சேர்த்து என் பிரண்ட் தான் முழுசா பட்டான் பாவம். அப்புறம் அதுக்காக வேற ரொம்ப வெட்கப்பட்டான். தெரியுமா மயூரி?'' என்று சிரிப்புடன் மயூரியையும் துணைக்கு அழைத்துக் கொண்டான்.

விஷ்ணு, ''அப்புறம் இன்னொன்று தெரியுமா மயூரி? ஐயர் நல்லா நெய்யை ஊத்தி ஹோமம் வளர்க்க, ராம்

கண்ணில் எரிச்சல் தாங்க முடியாமல் ஒரே தண்ணி. கண்ணைத் திறக்கவே முடியலை. தாலி கட்டுற நேரத்தில் அய்யா குத்து மதிப்பா தீபா தலையை குனிஞ்சுக்கிட்டு தான் இருப்பான்னு... குனிஞ்சுட்டு இருந்த ஐயர் கழுத்தில் தாலியைக் கட்டப் போக... பின்னாடி நாத்தனார் முடிச்சு போட நின்னுகிட்டு இருந்தவங்க தான் அப்புறம் சரியான கழுத்துல, சரியான நேரத்துக்கு தாலி கட்ட வைச்சாங்க. மேடம் பாரதி கண்ட புதுமைப் பெண் மாதிரி நிமிர்ந்து உட்கார்ந்து, நேர்க்கொண்ட பார்வையா இவனைப் பார்த்துட்டு இருக்காங்க'' என்று லேசாக மிகைப்படுத்தி கூற அதைக் கற்பனை செய்து பார்த்த மயூரியின் அதரங்களிலும் இப்பொழுது புன்னகை தவழ்ந்தது.

மயூரியின் சிரிப்பைப் பார்த்ததும் விஷ்ணுவின் முகத்திலும் பெரிதாக ஏதோ சாதித்தது போன்ற நிம்மதியில் பெரிய சிரிப்பு படர்ந்தது.

''போங்க அண்ணா! என்னை ஏதாவது சொல்லாட்டா உங்களுக்கு நைட் தூக்கமே வராதே?'' என்று சிணுங்கினாள் தீபா.

அவர்கள் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டே வந்த ராம் மனைவியின் தோளை அணைத்தவாறு, ''என்னடா? இங்கே என்னை விட்டுட்டு சிரிப்பு? தீபாவை வேற கேலி செய்றீங்க போல? அதுவும் என்னை விட்டுட்டு?'' என கூற தீபா அவன் விலா எலும்பில் லேசாக தன் முழங்கையை வைத்து இடித்தாள்.

''உங்க கல்யாணத்தில் நடந்ததை தான் சொல்லிட்டு இருக்கேன். ஏன்? என் மேல கேஸ் போட போறியாடா?''

''ச்ச... ச்ச! என்ன விஷ்ணு இப்படிச் சொல்லிட்டா? உன் மேலேயா.. நெவர். நானும் இருந்திருந்தால் உனக்கு

ஏதாவது ஜாஸ்தி டிப்ஸ் எடுத்துக் கொடுப்பேன். அதுக்காகத் தான் சொன்னேன்'' எனவும் மேலும் ஒரு குத்து வாங்கிக் கொண்டான்.

இவர்களின் விளையாட்டில் தன் கவலை மறந்து சிரித்தாள் மயூரி.

ராம், ''அப்புறம் சிஸ்டர்... மறக்கறதுக்கு முன்னாடி சொல்லிடறேன். தீபா இன்னைக்கு உங்க கைவண்ணத்தில் அப்படியே தேவதை மாதிரி ஜொலிக்கிறாள். எங்க கல்யாணத்தில் தான் இவளை நான் இத்தனை அழகா பார்த்து இருக்கேன்'' என்று மயூரியை புகழும் சாக்கில் தீபாவிடம் வம்பு வளர்த்தவன், ''தீபா நீங்க ரொம்ப அழகா புடவை டிசைன் பண்றதா சொல்லிச் சொல்லி டயர்ட் ஆகிட்டாள். அதனால் அவளுக்கு பதில் நான் இப்போ சொல்றேன். நீங்க ரொம்ப அழகா புடவை டிசைன் பண்றீங்க'' என்றான்.

''ஆனால் தீபாக்கும், டிரஸ் செலக்ஷனுக்கும் ரொம்ப தூரம். குர்த்தாக்கும், குர்த்திக்கும் வித்தியாசம் தெரியாது இவளுக்கு... அவ எப்படி ஞாபகம் வைச்சுப்பான்னு நீங்களே கேளுங்களேன்!'' என்று மனைவியின் பெருமையை எடுத்துரைத்தான் ராம்.

தீபா அசடு வழிந்தபடியே, ''ரெண்டுத்திலேயும் குர்த்தா தான் கொஞ்சம் பெருசா இருக்கிற வார்த்தை. அதனால் குர்த்தா குர்த்தியை விட நீளமா இருக்கும்'' என்று சின்ன பிள்ளைப் போல விளக்கம் சொன்னாள்.

உடனே விஷ்ணு, ''தீபாக்கு டிரஸ் செலக்ஷன் மட்டும் இல்லை... நம்பர்ஸ், தமிழ் இப்படி எல்லாத்துக்குமே ரொம்ப தூரம் தான் போல?'' என்று காலை வாரினான்.

''உன் தங்கச்சியாச்சே?'' என்றான் ராம்.

தீபா இவர்கள் பேசுவது புரியாமல் விழிக்க மயூரி தான், ''குர்த்தா - குர்த்தி ரெண்டுமே நாலு எழுத்து தான். ஆனால் குர்த்தாவில் முடிகிற வார்த்தை நெடில்... அதான் கொஞ்சம் பெருசா இருக்கு'' என்று நிதானமாக விளக்கினாள்.

தீபா, ''மயூக்கா ரொம்ப தேங்க்ஸ். ரெண்டு கூட்டாளியும் விளக்கம் சொல்லச் சொன்னால் கோனார் நோட்ஸ் இங்கே விற்பனைக்கு இல்லைன்னு சொல்லி கேலி செய்வாங்க'' எனவும், அவளின் தோளில் கைப்போட்டிருந்த ராம் புன்னகைத்தான்.

தீபாவே தொடர்ந்து, ''திரும்ப நான் ஒரு தடவை சொல்லிடறேன் அக்கா. என்னோட டிரஸ் ரொம்ப ரொம்ப நல்லா இருக்கு. இன்னும் சொல்லப் போனால்.. உங்க புடவையை விட என்னோட ட்ரஸ் தான் எடுப்பா இருக்கு. வள்ளியோடது கூட ரொம்ப நல்லாயிருக்கு. அந்த யோகக்கும், பிளவரும் நல்லா வந்து இருக்குக்கா. ராம்! வள்ளியோட சுடிதார் கூட அக்கா தான் டிசைன் செய்தாங்க'' என்றாள் தீபா.

விருந்தினர்கள் வந்த வண்ணமிருக்க ராம், தீபா வீட்டினராக அவர்களை கவனிக்கச் சென்றார்கள்.

ஆச்சரியமாக விஷ்ணு மயூரியையும், விருந்தாளிகளை உபசரிக்கும் தீபாவையும் பார்த்தான். தீபாவின் அரக்கு நிற காக்ரா உடை மேலோட்டமாகப் பார்த்தாலே மிகவும் நன்றாக இருந்தது. மயூரியின் ஆகாய வர்ண பட்டு புடவையிலோ காண்பவர் கண்ணை கவராத வகையில் வேலைப்பாடுகள் அமைந்திருந்தது.

வேண்டுமென்றே தன் அழகை வெளிக்காட்டாத வண்ணம் மயூரி செய்திருந்த எளிமையான அலங்

காரமே விஷ்ணுவிற்கு பிடித்திருந்தது. அதுவும் அவனை உடைக்கும். அவள் போட்டிருந்த ரூபியும், முத்தும் பதக்கத்தின் நடுவில் ஒரு வைரமும் பதித்திருந்த சிறிது பெரிய அளவு நகைக்கும் பொருந்தாமல் இருந்திருக்க வேண்டும். எப்படி அதுவும் அழகாக நீல வண்ணத்துக்கும், சிகப்பு வண்ணத்துக்கும் பொருந்தி இருக்கிறது? அழகு என்பது பார்ப்பவரின் கண்களையும், மனதையும் பொறுத்தது அல்லவா?

விஷ்ணு யோசனையாக பார்த்ததும் மயூரி குற்றம் செய்தவள் போல், ''இல்ல... அம்மா தான் நாலு நான் தான் இருக்கு என்று சொல்லிட்டாங்க. ரொம்ப செலவு செய்து டிரஸ் எடுக்க வேண்டாம் என்று நான் தான் தீபா, வேலம்மா பொண்ணு வள்ளியை துணைக்கு வைச்சுகிட்டு எம்ப்ராய்டரி, சமிக்கி வேலை எல்லாம் செய்தேன்,'' என்றாள் தயக்கமாக.

''ஓ! அதான் நாலு நாளா ஆபீஸ் வேலை செய்ய மாடி பக்கமே வரலையா? நாம் கூட ரிசப்ஷன் வைக்கிறதுனால வருத்தம் என்று நினைத்தோமே?'' என எண்ணிக் கொண்டான் விஷ்ணு.

''நான் ஆச்சரியமா தான் பார்த்தேன் மயூரி. எனக்கு இப்போ கொஞ்சம் கில்டியா இருக்கு. இங்கே வந்து இத்தனை நாள் ஆச்சு. உனக்கு இதுல தான் இன்ட்ரஸ்ட் என்று தெரியும். பச்ச்! ஒரு பொட்டிக் ஷாப் வைக்கலாம் என்று ஐடியா எனக்கு இது வரைக்கும் வரலை பாரு. தட்ஸ் ஓகே. நான் அதுக்கு வேண்டியதை உடனே செய்யறேன்,'' என்று உறுதிக் கொடுத்தான் விஷ்ணு.

''இருக்கப் போற கொஞ்ச மாசத்துக்கு ஏன் தேவையில்லாமல்?'' என்று மயூரி வினவியதை வலது காதில்

வாங்கி இடது காது வழியாக வெளியேற்றிவிட்டு காதில் விழாத பாவனையில் பேச்சையும் கவனமாக மாற்றினான்.

ராம் தீபாவுடன் சேர்ந்து சிரித்ததையும், மயூரியும் விஷ்ணுவும் பேசிக் கொள்வதையும் ஒரு ஜோடி கண்கள் வன்மத்துடனும், உஷ்ணத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தன.

மனிதனாகப் பிறந்தவன் தவறு செய்வது இயல்பு தான். அந்த தவற்றை உணர்ந்து திருத்திக் கொள்வதும், திருந்துவதும் மனித இயல்பே. ஆனால் மனசாட்சி என்று ஒன்றிருந்தால் இவன் செய்தது தவறில்லை, மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் என்று புரியும். புரிந்துக் கொண்டு அதற்கு தகுந்தாற் போல் பிராயச்சித்தம் செய்ய முனைந்திருக்கலாம். ஆனால் மேலும் மேலும் பாவ சுமையைத் தூக்க ஆசைப்பட்டால் யார் தான் என்ன செய்ய முடியும்?

அவன் காதுபடவே, 'விஷ்ணுவும், அவன் மனைவியும் நல்ல ஜோடிப் பொருத்தம்' என்று சொன்னதைக் கேட்ட போதெல்லாம் வைபவிற்கு உடலுடன் சேர்ந்து மனமும் எரிந்தது. இதுநாள் வரை தம்பி என்றால் பாசமாக இருந்தவன் தான். இப்பொழுதும் பாசம் இருக்கிறது. ஆனால் மயூரி விஷயத்தில் மட்டும் உறுத்தல் தான் அதிகமாக இருக்கிறது. அந்த உறுத்தலுக்குக் காரணம் பொறாமையா.. இல்லை தம்பிக்கு பொருத்தமாக மயூரியை நினைத்துப் பார்க்க முடியாத உணர்வா?

பெங்களூரிலிருந்தாலும் வைபவின் நினைவு எப்பொழுதோ இங்கே சென்னையில் தான் சுற்றிக் கொண்டிருந்தது. வேலை இல்லாமல் அடிக்கடி வீட்டிற்கு வந்து

தென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த போது தான் வரவேற்பு வைத்திருப்பதாகவும், வரச்சொல்லியும் விசாலாட்சி போன் செய்தார்.

இந்த முறை எப்படியும் மயூரியை வெளியே துரத்திவிட்டு விட்டுத் தான் மறுவேலை செய்ய வேண்டும். என்ன பேச்சு பேசுகிறாள்? என்று கருவிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தவனிடம் விசாலாட்சி வந்து, ''வைபவ்! வள்ளியை வீட்டில் கொண்டு போய் விட்டுட்டு வாப்பா. வேலம்மா வரலை. ராமும் அவங்க அம்மா தனியா இருக்காங்கன்னு சீக்கிரம் கிளம்பிட்டான். விட்டுட்டு வந்துடு'' எனவும் சரியென்று கூறிவிட்டு சாவியை எடுத்துக் கொண்டுவரச் சென்றான்.

வள்ளி மயூரியிடமும் விஷ்ணுவிடமும் விடை பெற்றுக் கொள்ள செல்ல மயூரி, ''தனியா போயிடுவியா வள்ளி? கொஞ்சம் இரு. எல்லோரும் கிளம்பிட்டாங்க. அண்ணனைக் கொண்டு வந்துவிட சொல்றேன்'' என்றாள்.

''வைபவ் அண்ணா தான் என்னை காரில் கொண்டு வந்து விடறாங்க அக்கா'' என்று வள்ளி சொன்னதும் மயூரிக்கு உடனே வள்ளியை அழைத்துக் கொண்டு எங்கேயாவது ஓடிவிட வேண்டும் போலிருந்தது.

அருகிலிருந்த விஷ்ணுவின் கரத்தை அழுத்திப் பிடித்தாள் மயூரி.

விஷ்ணு, ''ஸ்ஸ்.. ஆ.. மயூரி! என்னம்மா ஆச்சு?'' மயூரியின் முகத்தைப் பார்த்து கனிவாக வினவியவனிடம், ''அது வந்து.. அது வந்து.. வள்ளி.. கா... காரில்.. நைட் தனியா.. வை..'' என்று திக்கித் திணறினாள்.

மயூரி என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிந்தும் புரியாமலிருக்க வள்ளியைப் பார்த்தான் விஷ்ணு.

வள்ளி ஒ... வைபவ் அண்ணாவோட காரில் வீட்டுக்கு போறேனனு சொன்னேன். வேற ஒண்ணுமில்லை'' என்றாள் பயந்த வாறு.

''சரி நீ போய் அம்மாகிட்ட இரு. நான் வர வரைக்கும் எங்கேயும் போக கூடாது'' என்றான் அழுத்தமாக.

வள்ளி சென்றதும் மயூரியிடம், ''என்ன மயூரி? வைபவ் கூட தானே அவ போக போறா? அதுக்கு எதுக்கு உன் கையெல்லாம் இப்படி நடுங்கணும். பாரு எப்படி சில்லுனு இருக்குன்னு.'' என்று கூறியவன் அவள் உள்ளங்கையை நன்றாக தேய்த்துவிட்டான்.

முரட்டுத்தனமாக தலையை ஆட்டியவள், ''ஐயோ! கடவுளே!!! உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. வள்ளி தனியா போகக் கூடாது. நானே கொண்டு போய் விட்டுட்டு வரேன். விடுங்க என்னை'' என்று தன் கரத்தை அவனிடமிருந்து விடுவிக்க முயன்றாள்.

ஒரு நொடி அமைதியாக இருந்தவன், குரலைத் தணித்து, ''மயூரி! ஒரு தடவை நடக்கக் கூடாதது நடந்ததனால் திரும்ப அதுவே நடக்கும்னு எதுக்கு நினைக்கணும்? அதுவும் இப்போ யாரோ தெரியாதவங்க போகலை. நம்ம வைபவ் தான் துணைக்கு போறான். ஒரு தடவை போகும்போது பஸ்சில் விபத்து நடந்தால் திரும்ப பஸ்சில் யாரும் போறதே இல்லையா? ஏன் வீணா மனசைப் போட்டு குழப்பிக்கிற மயூரி?'' என்று கூறினான் விஷ்ணு.

இவனிடம் என்ன சொல்லி எப்படி புரிய வைப்பது? கடவுளே...!!! ஒவ்வொரு நேரத்திற்கு விஷ்ணுவிடம் எல்லாவற்றையும் கூறிவிடுவோமா என்ற எண்ணத்தை

விஷ்ணுவையும், அவன் தாயையும் முன்னிட்டே மிகவும் சிரமப்பட்டு அடக்கினாள். ஆனால் ஒன்றும் சொல்லாமல் இருப்பதும் மனதை உறுத்தியது. தான் ஏதோ பெரிய குற்றம் செய்வது போல் பதறிய மனதை அடக்க சில நேரங்களில் பெரிதும் கஷ்டப்பட்டாள் மயூரி.

ஆனால் இப்போது வள்ளியை வைபவ் கொண்டு போய் விடுவதாக இருந்ததும், எங்கே தன்னை மீறி சொல்லி விடுவோமோ என்றும் பயந்தாள்.

''தேவையில்லாத பயமோ தேவையிருக்கிற பயமோ.. அது அனுபவிச்சவங்களுக்கு தான் தெரியும். எப்படி யிருந்தாலும் அவளைத் தனியே விட முடியாது அது வும்.. சரி வெட்டிப் பேச்சு எதுக்கு? நீங்க கூட வர்றதாய் இருந்தால் வாங்க. இல்லையென்றாலும் நான் மட்டு மாவது போகத்தான் போறேன்'' மயூரியின் குரல் தணிந்து இருந்தாலும், அதில் அவசரமும் ஆவேசமும் நிறையவே இருந்தது.

தடுமாறி விழப் போனவளை தாங்கிப் பிடித்தவாறே, ''ஷூ.. மயூரி! பதட்டப்படாதே. நாம ரெண்டு பேருமே அவளைக் கொண்டு போய் விட்டுட்டு வரலாம். சரியா? நீ அப்செட்டாகாதே'' என்றான் மென்மையாக.

கார் சாவியுடன் வந்த வைபவ், தன்னை வெறுப்பை உமிழ்ந்து பார்த்த மயூரியை சட்டை செய்யாமல் வந்தாள்.

''வைபவ்! வள்ளியை நானே வீட்டில் போய் விடணு மாம். மயூரியோட ஆர்டர். சாவியைக் கொடு. எல்லோரும் கிளம்பினதும் நாங்களே விட்டுடறோம். இன்னும் சிலர் தானே இருக்காங்க?'' என்று சாவியை வாங்கிக் கொண்டு வள்ளியை அழைத்து வர நகர்ந்தான் விஷ்ணு.

சாவியை கொடுத்துவிட்டு மயூரியையே உறுத்து விழித்தான் வைபவ். அவள் மனதில் ஓடும் எண்ண ஓட்டங்களை யூகித்தவனுக்கு சினம் தலைக்கேறியது.

வழக்கம் போல் துச்சமாக வைபவைப் பார்த்துவிட்டு விஷ்ணுவுடன் சென்றாள் மயூரி.

வள்ளியை பத்திரமாக வீட்டில் சேர்த்துவிட்டு திரும்பும் வழியில் ஓரமாக காரை நிறுத்திய விஷ்ணு, ''உன்னிடம் பேச வேண்டும் மயூரி!'' என்று அழுத்தமான குரலில் சொன்னான்.

''வீட்டுக்குப் போய் பேசலாமே?'' என்று புருவம் சுருக்கினாள்.

''இல்லை முக்கியமான விஷயம். அதுவும் உன்னிடம் தனியா பேசணும்'' என்று கார் கதவை திறந்து வெளி யில் சென்றான் விஷ்ணு.

'என்னவாக இருக்கும்?' என்ற யோசனையோடு காரில் இருந்து இறங்கினாள் மயூரி.

10

'எப்படி ஆரம்பிப்பது?' என்று தெரியாமல் விஷ்ணு மௌனமாக இருந்த ஒவ்வொரு நிமிடமும் மயூரியின் இதயம் தன் துடிப்பை அதிகப்படுத்தியது.

விஷ்ணுவைப் பொறுத்தவரைக்கும் நல்ல குணம் தான். ஆனால் வைபவ் பற்றி காரணம் இல்லாமல் சந்தேகப்படுவதாகக் கோபப்படப் போகிறானோ என்று தன் கற்பனைக் களத்தில் உழன்றாள் மயூரி.

எங்கிருந்து தொடங்குவது என்று தெரியாமல் மொட்டையாக, ''இதுக்கு என்ன தான் முடிவு மயூரி?'' என்று பேச்சைத் தொடங்கினான் விஷ்ணு.

ஒன்றும் புரியாமல், ''எதுக்கு முடிவு? நம்ம நடத்தற நாடகத்துக்கா?'' என்று சரியாக தப்பாகப் புரிந்துக் கொண்டு வினவினாள் மயூரி.

''அதைப் பத்தி சொல்லலை. நீ கொஞ்சம் கொஞ்சமா இருக்கிற நிலைமையை ஏத்துக்க முயற்சி செய். இன்னைக்கு வள்ளியையும் சேர்த்து பயப்பட வைச்சுட்ட?'' என்று அக்கறையுடன் சொன்னான் விஷ்ணு.

''எதை ஏத்துக்க முயற்சி செய்யச் சொல்றீங்க? நான்தான் சொல்லிட்டேனே? அனுபவிச்சவங்களுக்குத் தான் வலியும், வேதனையும் தெரியும்'' என்றாள் குரலில் எதையும் வெளிக்காட்டாமல்.

''உன்னோட வலியும் வேதனையும் புரியுது. ஆனால் அதை மறக்க முயற்சி செய்யாமல் இப்படி எல்லா விஷயத்தையும் லிங்க் பண்ணி பார்க்கிறது உனக்கும் கஷ்டமா தானே இருக்கும்? சினிமாவில் அந்த மாதிரி காட்சி வந்தால் கஷ்டப்படறே? யாராவது தனியா காரில் போனால்.. அதுவும் என் அண்ணன் கூட போனால் கூட பயப்படறே?'' என்று எந்த விவரமும் தெரியாமல் விஷ்ணு மயூரியிடம் வினவினான்.

''ஏன்? உங்க அண்ணன் ரொம்ப உத்தமன்னு நினைச்சுட்டு இருக்கீங்களா?'' என்றாள் மயூரி கோபத்தில் சிவந்த கண்களுடன்.

விஷ்ணு, ''நம்ம பேசிட்டு இருக்கிறது உன் விஷயத்தைப் பத்தி மயூரி. வைபவ் உத்தமனா... இல்லையான்னு பேச வரலை'' என்றான் பொறுமையாக.

வெறுப்புடன் ஒரு 'ம்ஹ்ம்ம்..' மட்டும் உதிர்த்தாள் மயூரி.

''இல்லைம்மா நான் சொல்லிடறேன். நீ கொஞ்சம் கொஞ்சமா விபத்தில் இருந்த குணமாகி வரணும். அதுக்கு நாலு பேர் கூட பழகு. வெளியாட்களைப் பார்த்தாலே ரொம்ப சங்கடமா ஃபீல் பண்ற. அதெல்லாம் மாத்திக்கோ. நடந்ததில் உன் தப்பு எதுவும் இல்லை. அப்புறம் எதுக்கு உனக்கு கூசணும்? தைரியத்தை வளர்த்துக்கோ!''

''மேடை வாதம்னு பார்த்தால் நீங்க சொல்றது சரியா இருக்கும் விஷ்ணு. எனக்கு தைரியம் இல்லைன்னு நினைக்கறீங்களா? முதலில் தைரியம்னு நீங்க எதை நினைக்கறீங்க? தைரியம் உடல் சம்பந்தப்பட்டது இல்லை. அது மனம் சம்பந்தப்பட்டது.''

''ஐ அக்ரி'' என்று விஷ்ணு இடையிட்ட பொழுது, ''நான் இன்னும் முடிக்கலை'' என்று முகம் நோக்கினாள் மயூரி.

விஷ்ணு அமைதி காக்கவும் தொடர்ந்து, ''நீங்க சொன்ன மாதிரியே எடுத்துக்கோங்க. பஸ்சில் விபத்து நடந்தால் யாருமே அதில் போறதில்லையான்னு கேட்டீங்களே? எல்லாருமே போகலாம். ஆனால் அந்த விபத்து நடந்த பொழுது பஸ்ஸை ஓட்டினாரே டிரைவர்.. அவரால் கொஞ்ச நாளைக்கு தைரியமா பஸ் ஓட்ட முடியாது. அவருக்கு ஓட்டத் தெரியாதுன்னு இல்லை. ஆனால் மனதளவில் அவருக்கு பாதிப்பு இருந்திருக்கும். அந்த பாதிப்பை சரியாக்க சில பேருக்கு கவுன்சலிங் கூட கொடுப்பாங்க. ஒரு கசப்பான அனுபவம் கிடைச்ச எந்த ஒரு ஆளுக்குமே இது பொருந்தும்'' என்று உணர்ச்சியற்ற குரலில் சொன்னாள் மயூரி.

விஷ்ணு அறிவுறுத்தும் விதமாக, ''நல்ல அனுபவம் உற்சாகம் கிடைக்க வழி செய்யும். ஆனால் கசப்பான அனுபவம்?அதை மறக்கிறதுக்கு... இங்கே பொதுவா நான் பேசலை... உன்னைப் பத்தி தான் பேசறேன். என்ன பண்ணலாம்னு இருக்க? காலையில் ஒரு நிமிஷம் கூட சும்மா இருக்க முடியாமல் வீட்டில் ஏதாவது வேலை இழுத்துப் போட்டு செய்யற... நைட் கூட ரொம்ப நேரம் முழிச்சிருக்கிறதா அம்மா சொல்றாங்க. அப்பவும் தூங்க முடியாமல் அவஸ்தை.. இதெல்லாம் இன்னும் குறை யவே இல்லை. நீ வீட்டுக்குள்ளேயே இருக்கிறதால்தான் இந்த மாதிரின்னு நினைக்கறேன்'' என்று தொடர்ந்து பேசினான்.

மயூரி ரோஷமாக, ''நான் ஒண்ணும் வேணும்னு வீட்டுக்குள்ளேயே ஒளிஞ்சுக்கிட்டு இல்லை'' என்றவள் மனதிற்குள் 'அதுவும் வீட்டுக்குள்ளேயே ஆபத்தை வச்சுக்கிட்டு' என்றும் நினைத்துக் கொண்டாள்.

தொடர்ந்து, ''நான் இந்த மாதிரி இருக்கிறது வீட்டில் இருக்கிறதால் இல்லை. அது உங்களுக்கே தெரியும். நீங்க மாத்தி சொல்றீங்க. எந்த ஒரு பெண்ணுக்குமே.. இங்கே நான் என்னைப் பத்தி மட்டும் பேசலை.. பொதுவா சொல்றேன்... இந்த விஷயத்தில் இருந்து வெளியே வர கால அவகாசம் தேவைப்படும்''என்று கம்மிய குரலில் சொன்னாள்.

''எல்லாம் சரியா தான் பேசறே. ஆனால் இந்த விஷ யத்தில் இருந்து வெளியே வரணும் என்று நினைச்சுட்டு கருவை சுமக்கிறியே மயூரி? எப்பவுமே உனக்கு அது ஞாபகப்படுத்திக்கிட்டே இருக்காதா?'' என்று மீண்டும் பழைய பல்லவி... ...னான் விஷ்ணு.

விஷ்ணுவிற்கே மயூரியின் பிரச்சனைகளை கிளறுவது போலத்தான் இருந்தது. ஆனால் அவளது மன இறுக் கத்திற்கு வடிகால் அமைக்கத் தான் பேச்சு வார்த்தையில் இறங்கினான். அது மயூரியின் மனதில் இருக்கும் சில கருத்துகளை வெளியே கொண்டு வரவும் செய்தது.

''இதுவும் ஓரளவு சுய நலமான முடிவு தான். எனக் குன்னு ஒரு துணை தேவைன்னு நினைச்சு தான்...''

''உன்னால் அந்த ஜீவனைப் பற்றி நினைக்கவே முடியலை. அப்படியிருக்கும் போது தேவையான்னு யோசிச்சியா? உன்னுடைய சிந்தனையும் நல்லவிதமா இருக்கணும். இல்லாட்டி நீ ஒரு விதத்தில தப்பு தான் செய்யற மயூரி.''

முகத்தில் வேதனை படர, ''நான் தான் சொல்லிட் டேனே? எனக்கு துணை தேவை... இனிமேல் என்னால் எந்த ஆண் மகனையும் நம்ப முடியாது இல்லையா?'' என்று வினவினாள் மயூரி.

விஷ்ணுவின் புருவம் உயரவும், ''உங்களை மாதி ரியே எல்லாரும் இருக்க மாட்டாங்க'' என்று சொல்லி விட்டு 'நான் உன்னை குறை கூறவில்லை' என்பது மாதிரி மெலிதாக புன்னகைத்தாள்.

''அப்போ என்னை...'' என்று தொடங்கியவனை புருவம் சுருக்கி மயூரி பார்க்க அவசரமாக, ''மாதிரி இருக்கிறவங்களை துணையா தேடிக்கலாம் இல்லையா?'' என்று கூறினான் விஷ்ணு.

விஷ்ணு தான் பேசியதைப் பற்றி கொஞ்சம் சிந்தனை செய்திருந்தால், மனதில் இருக்கும் விருப்பம் புரிந்திருக் கும். அப்படி விருப்பத்தைப் புரிந்து கொண்டிருந்தால், பேச்சு வேறு திசையில் மாறியிருக்கலாமோ?

விஷ்ணு அறிவுறுத்தும் விதமாக, ''நல்ல அனுபவம் உற்சாகம் கிடைக்க வழி செய்யும். ஆனால் கசப்பான அனுபவம்?அதை மறக்கிறதுக்கு... இங்கே பொதுவா நான் பேசலை... உன்னைப் பத்தி தான் பேசறேன். என்ன பண்ணலாம்னு இருக்க? காலையில் ஒரு நிமிஷம் கூட சும்மா இருக்க முடியாமல் வீட்டில் ஏதாவது வேலை இழுத்துப் போட்டு செய்யற... நைட் கூட ரொம்ப நேரம் முழிச்சிருக்கிறதா அம்மா சொல்றாங்க. அப்பவும் தூங்க முடியாமல் அவஸ்தை.. இதெல்லாம் இன்னும் குறை யவே இல்லை. நீ வீட்டுக்குள்ளேயே இருக்கிறதால்தான் இந்த மாதிரின்னு நினைக்கறேன்'' என்று தொடர்ந்து பேசினான்.

மயூரி ரோஷமாக, ''நான் ஒண்ணும் வேணும்னு வீட்டுக்குள்ளேயே ஒளிஞ்சுக்கிட்டு இல்லை'' என்றவள் மனதிற்குள் 'அதுவும் வீட்டுக்குள்ளேயே ஆபத்தை வச்சுக்கிட்டு' என்றும் நினைத்துக் கொண்டாள்.

தொடர்ந்து, ''நான் இந்த மாதிரி இருக்கிறது வீட்டில் இருக்கிறதால் இல்லை. அது உங்களுக்கே தெரியும். நீங்க மாத்தி சொல்றீங்க. எந்த ஒரு பெண்ணுக்குமே.. இங்கே நான் என்னைப் பத்தி மட்டும் பேசலை.. பொதுவா சொல்றேன்... இந்த விஷயத்தில் இருந்து வெளியே வர கால அவகாசம் தேவைப்படும்''என்று கம்மிய குரலில் சொன்னாள்.

''எல்லாம் சரியா தான் பேசறே. ஆனால் இந்த விஷ யத்தில் இருந்து வெளியே வரணும் என்று நினைச்சுட்டு கருவை சுமக்கிறியே மயூரி? எப்பவுமே உனக்கு அது ஞாபகப்படுத்திக்கிட்டே இருக்காதா?'' என்று மீண்டும் பழைய பல்லவியை பாடினான் விஷ்ணு.

விஷ்ணுவிற்கே மயூரியின் பிரச்சனைகளை கிளறுவது போலத்தான் இருந்தது. ஆனால் அவளது மன இறுக் கத்திற்கு வடிகால் அமைக்கத் தான் பேச்சு வார்த்தையில் இறங்கினான். அது மயூரியின் மனதில் இருக்கும் சில கருத்துகளை வெளியே கொண்டு வரவும் செய்தது.

''இதுவும் ஓரளவு சுய நலமான முடிவு தான். எனக் குன்னு ஒரு துணை தேவைன்னு நினைச்சு தான்...''

''உன்னால் அந்த ஜீவனைப் பற்றி நினைக்கவே முடியலை. அப்படியிருக்கும் போது தேவையான்னு யோசிச்சியா? உன்னுடைய சிந்தனையும் நல்லவிதமா இருக்கணும். இல்லாட்டி நீ ஒரு விதத்தில தப்பு தான் செய்யற மயூரி.''

முகத்தில் வேதனை படர, ''நான் தான் சொல்லிட் டேனே? எனக்கு துணை தேவை... இனிமேல் என்னால் எந்த ஆண் மகனையும் நம்ப முடியாது இல்லையா?'' என்று வினவினாள் மயூரி.

விஷ்ணுவின் புருவம் உயரவும், ''உங்களை மாதி ரியே எல்லாரும் இருக்க மாட்டாங்க'' என்று சொல்லி விட்டு 'நான் உன்னை குறை கூறவில்லை' என்பது மாதிரி மெலிதாக புன்னகைத்தாள்.

''அப்போ என்னை...'' என்று தொடங்கியவனை புருவம் சுருக்கி மயூரி பார்க்க அவசரமாக, ''மாதிரி இருக்கிறவங்களை துணையா தேடிக்கலாம இல்லையா?'' என்று கூறினான் விஷ்ணு.

விஷ்ணு தான் பேசியதைப் பற்றி கொஞ்சம் சிந்தனை செய்திருந்தால், மனதில் இருக்கும் விருப்பம் புரிந்திருக் கும். அப்படி விருப்பத்தைப் புரிந்து கொண்டிருந்தால், பேச்சு வேறு திசையில் மாறியிருக்கலாமோ?

மயூரி சுவாரஸ்யமாக கை நகங்களைப் பார்வையிட வும், ''தைரியம் மட்டும் மனம் சம்பந்தப்பட்டது இல்லை மயூரி. கற்பு கூட மனம் சம்பந்தப்பட்டது தான். கற்பு பொதுவானதுன்னு சொல்றவங்க எத்தனை பேரு இருக்காங்க? எல்லா டெம்பனிஷனும் நம்ம வசதிக்காக மாத்திக்கிறது தான். உடன்கட்டை ஏறின காலத்தி லிருந்து பரிணாமம் அடைஞ்சு விதவை மறுமணத்தை ஏத்துக்கணும்னு நினைக்கிற காலக்கட்டத்தில் இருக் கிறோம். ஆனால் இன்னமும் சில விஷயங்கள் முரணா இருந்தாலும் நம்ம மனசை மாத்தறதுக்கு கஷ்டப்பட றோம் இல்லையா?'' என்று வினவினான் விஷ்ணு.

மயூரி கண்கள் பளபளக்க ஏறிட, ''நீ சொன்ன மாதிரியே எடுத்துக்கோ. ஒரு கொள்ளைக்காரன் வந்து நம்ம வீட்டில் இருக்கிற விலை மதிக்க முடியாத பொரு ளைத் திருடிட்டான் என்பதற்காக வாழ்க்கையையே சூன்யமாக்கிக்கக் கூடாது இல்லையா?'' என்று புரிய வைக்கும் விதத்தில் பேசினான்.

இதற்கு மேலும் அதே பேச்சை தொடராமல், ''நீ ஏன் மேலே படிக்கக் கூடாது மயூரி? அப்படி தானே வீட்டில் சொல்லியிருக்கே?'' என்று அடுத்த கேள்விக்கணையை விடுத்தான்.

''நானும் ஒரு வருஷ டிப்ளமோ கோர்ஸ் படிக்கணும். இந்த ஃபீல்டில் படிக்கிறது முக்கியம் தான். ஆனால் படிக்கிறதை விட அனுபவம் ரொம்ப முக்கியம்'' என்று பதில் தந்தாள் மயூரி.

தன் மனதில் விஷ்ணு பேசியதை அசைப்போட்ட படியே பயணம் செய்ததால் மீதி நேரம் மௌனமாகவே கழிந்தது.

அன்றிரவு அசதியாக இருந்ததாலோ, அல்லது விஷ்ணு பேசியதில் இருந்த நியாயம் புரிந்ததாலோ, தனக்குமே தான் இப்படி தன் இயல்பு மாறி இருப்பது பிடிக்காததாலேயோ தேவையற்ற சஞ்சலங்களில் சஞ் சரிக்காமல் நன்றாக உறங்கினாள்.

மறுநாள் காலையில் விஷ்ணுவிடம், ''தேங்க்ஸ். யோசிக்கறேன் விஷ்ணு. சீக்கிரமே சரியாகிடுவேன்னு நம்பிக்கையா இருக்கேன்'' என்று புன்னகையுடன் தெரிவித்தாள் மயூரி.

அவளது நேர்மறை பதிலைக் கேட்டு மகிழ்ந்த விஷ்ணு மலர்ந்த கண்களுடன், ''தட்ஸ் எ பாஸிடிவ் ஸைன். நீ இந்த விஷயத்தில் இருந்து மீண்டு சந் தோஷமா இருந்தால் சந்தோஷப்படற முதல் ஆள் நானா தான் இருப்பேன்'' என்று வாழ்த்தினான்.

அவன் வாழ்த்தில் மகிழ்ந்த மயூரி, ''இன்னைக்கு கொஞ் சம் வெளியில் போக வேண்டியது இருக்கு. உங்களால் வர முடியுமா?'' என்று தொடர்ந்து வினவவும் செய்தாள்.

''இன்னைக்கு இடியுடன் கூடிய மழைன்னு தான் வானிலை அறிக்கையில் சொல்லப் போறாங்க'' என்று விஷ்ணு கமென்ட் சொல்லவும், 'அப்படி எதுவும் தெரிய லையே?' என்பது போன்ற பாவனையில் அவனை ஏறிட்டாள் மயூரி.

விஷ்ணு, ''இல்லை... மேடம் நீங்களா முன் வந்து வெளியில் போகலாமான்னு கேட்கறீங்களே அதனால் தான். எங்கே போகலாம் மயூரி?'' என்று சிரிப்புடன் கேட்டான்.

அவன் விளக்கம் கொடுக்கவும் புன்னகைத்தவள், ''வெளி[illegible]கணும்னு கேட்டால் என்னையே கேலி

மயூரி சுவாரஸ்யமாக கை நகங்களைப் பார்வையிட வும், ''தைரியம் மட்டும் மனம் சம்பந்தப்பட்டது இல்லை மயூரி. கற்பு கூட மனம் சம்பந்தப்பட்டது தான். கற்பு பொதுவானதுன்னு சொல்றவங்க எத்தனை பேரு இருக்காங்க? எல்லா டெம்பனிஷனும் நம்ம வசதிக்காக மாத்திக்கிறது தான். உடன்கட்டை ஏறின காலத்தி லிருந்து பரிணாமம் அடைஞ்சு விதவை மறுமணத்தை ஏத்துக்கணும்னு நினைக்கிற காலக்கட்டத்தில் இருக் கிறோம். ஆனால் இன்னமும் சில விஷயங்கள் முரணா இருந்தாலும் நம்ம மனசை மாத்தறதுக்கு கஷ்டப்பட றோம் இல்லையா?'' என்று வினவினான் விஷ்ணு.

மயூரி கண்கள் பளபளக்க ஏறிட, ''நீ சொன்ன மாதிரியே எடுத்துக்கோ. ஒரு கொள்ளைக்காரன் வந்து நம்ம வீட்டில் இருக்கிற விலை மதிக்க முடியாத பொரு ளைத் திருடிட்டான் என்பதற்காக வாழ்க்கையையே சூன்யமாக்கிக்கக் கூடாது இல்லையா?'' என்று புரிய வைக்கும் விதத்தில் பேசினான்.

இதற்கு மேலும் அதே பேச்சை தொடராமல், ''நீ ஏன் மேலே படிக்கக் கூடாது மயூரி? அப்படி தானே வீட்டில் சொல்லியிருக்கே?'' என்று அடுத்த கேள்விக்கணையை விடுத்தான்.

''நானும் ஒரு வருஷ டிப்ளமோ கோர்ஸ் படிக்கணும். இந்த ஃபீல்டில் படிக்கிறது முக்கியம் தான். ஆனால் படிக்கிறதை விட அனுபவம் ரொம்ப முக்கியம்'' என்று பதில் தந்தாள் மயூரி.

தன் மனதில் விஷ்ணு பேசியதை அசைப்போட்ட படியே பயணம் செய்ததால் மீதி நேரம் மௌனமாகவே கழிந்தது.

அன்றிரவு அசதியாக இருந்ததாலோ, அல்லது விஷ்ணு பேசியதில் இருந்த நியாயம் புரிந்ததாலோ, தனக்குமே தான் இப்படி தன் இயல்பு மாறி இருப்பது பிடிக்காததாலேயோ தேவையற்ற சஞ்சலங்களில் சஞ் சரிக்காமல் நன்றாக உறங்கினாள்.

மறுநாள் காலையில் விஷ்ணுவிடம், ''தேங்க்ஸ். யோசிக்கறேன் விஷ்ணு. சீக்கிரமே சரியாகிடுவேன்னு நம்பிக்கையா இருக்கேன்'' என்று புன்னகையுடன் தெரிவித்தாள் மயூரி.

அவளது நேர்மறை பதிலைக் கேட்டு மகிழ்ந்த விஷ்ணு மலர்ந்த கண்களுடன், ''தட்ஸ் எ பாஸிடிவ் ஸைன். நீ இந்த விஷயத்தில் இருந்து மீண்டு சந் தோஷமா இருந்தால் சந்தோஷப்படற முதல் ஆள் நானா தான் இருப்பேன்'' என்று வாழ்த்தினான்.

அவன் வாழ்த்தில் மகிழ்ந்த மயூரி, ''இன்னைக்கு கொஞ் சம் வெளியில் போக வேண்டியது இருக்கு. உங்களால் வர முடியுமா?'' என்று தொடர்ந்து வினவவும் செய்தாள்.

''இன்னைக்கு இடியுடன் கூடிய மழைன்னு தான் வானிலை அறிக்கையில் சொல்லப் போறாங்க'' என்று விஷ்ணு கமென்ட் சொல்லவும், 'அப்படி எதுவும் தெரிய லையே?' என்பது போன்ற பாவனையில் அவனை ஏறிட்டாள் மயூரி.

விஷ்ணு, ''இல்லை... மேடம் நீங்களா முன் வந்து வெளியில் போகலாமான்னு கேட்கறீங்களே அதனால் தான். எங்கே போகலாம் மயூரி?'' என்று சிரிப்புடன் கேட்டான்.

அவன் விளக்கம் கொடுக்கவும் புன்னகைத்தவள், ''வெளியே போகணும்னு கேட்டால் என்னையே கேலி

செய்றீங்களே?'' என்று சிறு கேலியுடன் கூறினாள் மயூரி.

இந்த அளவிற்கு கேலி செய்தாலே முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு நகர்பவள் இன்று புன்னகைத்தபடி எதிர்கேள்வி கேட்கிறாள். மாற்றத்தின் முதல் அறிகுறி என்பதை உணர்ந்து அவளின் முக பாவனையையும் கேலியையும் ரசித்துப் பார்த்தான்.

தன் வட்டத்திற்குள் இருந்து வெளியே வராத மயூரி மாற முயற்சி செய்கிறேன் என்று வாய் வார்த்தையில் சொல்லாமல் நடைமுறையிலும் செயல்படுத்துவதை காண்பவனுக்கு மிகுந்த சந்தோஷமே விளைந்தது. ஆனால் அந்த சந்தோஷத்திற்கு அன்றே 'வேட்டு' இருக்கிறது என்று அப்பொழுது அவன் அறிந்திருக்க வில்லை.

மயூரியும், விஷ்ணுவும் வெளியே சென்றிருக்க வைபவ் விசாலாட்சியுடன் அவரது அறையில் கார சாரமாக வாதிட்டுக் கொண்டிருந்தான்.

விசாலாட்சி, ''சும்மா இருடா. நீ வேற!'' சாய்வு நாற் காலியில் அமர்ந்தபடி ஒரு புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டு கூறினார்.

அறையை குறுக்கும் நெடுக்குமாக அளந்தவாறு, ''என்னத்த சும்மா இருக்கிறது? பாருங்க நீங்க உங்க 'மருமகளுக்கு' கொடுத்த குடும்ப நெக்லசை காணோம். நகை செட்டில் வளையலையும், காது கம்மலையும் மட்டும் கொடுக்கிற மாதிரி கொடுத்துட்டு... அப்படியே அந்த வைரம் பதிச்சு இருக்கற நெக்லசை மட்டும் கொடுக் காம விட்டுட்டாங்க அந்த மேடம். இருந்தாலும் இவ் வளவு சாமர்த்தியம் ஆகாதும்மா உங்க புது மருமகளுக்கு?'' என்று பொருமினான் வைபவ்.

''இதுல நீங்க தான் மெச்சிக்கணும் வர்றவங்க போற வங்ககிட்ட எல்லாம். என் மருமகளுக்கு இதை கொடுத் தேன், அதை கொடுத்தேன் ஆனால் வேண்டாம் என்று சொல்லிட்டாள்ன்னு. எல்லாம் வேஷம்மா. அப்படியே பாருங்க ஒருநாள் மொத்தமா சுருட்டிகிட்டு போகப் போறா. இதுக்குத் தான் குலம், கோத்திரம் தெரியாதவங் களை வீட்டில் சேர்க்கக் கூடாதுங்கிறது.'' பெரிய நியாய வாதி போல் அவன் அம்மாவிற்கே போதனை செய்துக் கொண்டிருந்தான் வைபவ்.

''டேய்! சும்மா இருக்க மாட்டியா வைபவ் நீ? அது தான் அவளுக்காகவே கொடுத்த நகை தான். அவகிட்ட கொடுத்ததுக்குப் பிறகு அவள் எதுக்கு திரும்ப என் கிட்டே கொண்டு வந்து கொடுத்தாள்னே தெரியலை. நீயே வைச்சுக்கோன்னு சொன்னாலும் கேட்கலை. கொடுக்கணும்ன்னு நினைச்சவ அதை மட்டும் வைச்சுக் கிட்டு என்ன செய்யப் போறா? அப்படியே வைச்சுகிட் டாலும் அது இனி அவள் பொறுப்பு'' என்றார் விசா லாட்சி.

''அதே தான்மா நானும் சொல்றேன். கொடுக்கணும்னு நினைக்கறவ எதுக்கு ஒண்ணை மட்டும் வைச்சுக்கணும்? ஏதோ பெருசா சுருட்டறதுக்கு தான்மா கொடுக்கிற மாதிரி சிலதை மட்டும் கொடுத்து, விலை நிறைய இருக்கிறதை மட்டும் வைச்சிருக்கிறாள்.''

எப்படியாவது அவள் மேலிருக்கும் நல்ல அபிப் ராயத்தை கெடுத்துவிட்டால் பிறகு அவளை வீட்டை விட்டு துரத்துவது எளிது என்று பகல் கனவு கண்டுக் கொண்டிருந்தான் வைபவ்.

விசாலாட்சி, ''வைபவ்! இந்த பேச்சை இதோட விடு! விஷ்ணுவும், மயூரியும் கேட்டால் அசிங்கமா ஆகிடும்.

நல்லவேளை அவங்க வீட்டிலில்லை. அப்புறம் நான் அன்னைக்கே சொன்னேன் அண்ணி என்று மயூரியை கூப்பிடுன்னு. மரியாதை இல்லாமல் 'அவ, இவ'ன்னு வேற பேசறியே? உறவு முறைக்கு கட்டாயம் மரியாதை கொடுக்கணும்பா'' என்று கூறினார்.

''ஆமாம்! மரியாதை கொடுத்துட்டாலும்..'' இன்னும் என்ன சொல்லியிருப்பானோ அந்த தரம் கெட்ட வாயால்??

ஆனால் சொல்லிக் கொண்டே நிமிர்ந்தவனின் பார்வையில் அறையின் வாயிற்புறத்தில் இறுகிப்போன முகத்தோடு நின்ற விஷ்ணுவும், முகத்தில் அலட்சிய பார்வையுடன் எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்றுக் கொண்டிருந்த மயூரியும் தென்பட்டார்கள்.

எத்தனை நேரம் நின்றிருந்தார்களோ, என்னவெல்லாம் கேட்டார்களோ.. என்று பதறினார் விசாலாட்சி. ஆனால் பேசியவனோ எந்தவித முக மாறுதலுமின்றி நின்று கொண்டிருந்தான்.

வாக்குவாதம் சூடு பிடித்த நிலையில் வைபவின் குரல் ஓங்கி ஒலிக்க, வைபவ் பேசியது முக்கால்வாசி வெளியே சென்றுவிட்டு வந்த அவர்கள் இருவர் காதிலும் விழுந்திருந்தது. அவர்கள் இருவரின் முகத்திலும் கோபமும், வெறுப்பும் அலை மோதியது.

''அம்மா! வைபவ் எங்கே தனக்கு வரப்போற மனைவிக்கு நகை இல்லாமல் போயிடுமோ என்று பயப்படறான் போலிருக்கு?'' அடக்கிய கோபத்தோடு சொன்னவன் மயூரியிடம், ''மயூரி! அந்த நகை எல்லோர் கண்ணிலும் படுகிற மாதிரி டேபிளில் வை'' என்றான்.

மயூரி கையிலிருந்த கவரிலிருந்து நகைப் பெட்டியை எடுத்து, அதன் உள்ளே இருப்பதை தெரியும் மாதிரி டேபிளில் வைத்தாள்.

''உங்க 'மருமகள்' அதில் சில கல்லு கிரிப் சரியா இல்லைன்னு ஜுவெல்லர்ஸ் கிட்ட போய் சரி செய்துட்டு வரணும் அப்படின்னு சொன்னா. அங்கே போய் சரி செய்துட்டு வரத்தான் போயிருந்தோம். அப்படியே சுருட்டிக்கிட்டு போக இல்லை. என் மனைவிக்கு என்ன வேணுமோ அதை வாங்கி கொடுக்க என்னால் முடியும். இன்னொருத்தங்க சேர்த்து வைச்ச சொத்தை நம்பி இங்கே யாருமில்லை'' என்றான் சூடாக.

விஷ்ணுவிற்கு வைபவ் மயூரியை அப்படி சொன்னதைக் கேட்டு பெருஞ்சினம் உண்டாகியது. வார்த்தைகளை விட்டால் திரும்ப அள்ள முடியாது என்ற காரணத்துக்காகவும், தன் தாயின் முகத்திலிருந்த பரிதவிப்புமே அவன் நாவை கட்டிப் போட்டது.

என்றுமே குரல் உயர்த்தியோ, கடுமையாகவோ பேசாத விஷ்ணு இன்று வைபவிடம் கோபமாகப் பேசியதைக் கேட்ட விசாலாட்சிக்கு வருத்தமாக இருந்தது. அந்த மாதிரி சூழ்நிலை இதுவரை இருந்ததில்லைதான். ஆனால் இப்போது.. தப்பு என்னவோ வைபவ் பெயரில் தான்.

'இவனும் வாயை வைச்சுகிட்டு சும்மா இருக்க மாட்டான்' என்று நினைத்தவள், ''விஷ்ணு! ஏதோ பேசிட்டான்பா. விட்டுடு'' என்றவர் வைபவிடம், ''வைபவ்! தப்பு செய்ற வைபவ். முதலில் அவங்க ரெண்டு பேர் கிட்டேயும் மன்னிப்பு கேளு'' என்றார் உறுதியாக.

ஒரு கணம் தாயை முறைத்தவன் விஷ்ணுவிடமும், மயூரியிடமும் பொதுவாக, ''சாரி'' என்றான்.

நாவில் துடித்த வார்த்தைகளை தாயின் கண்களில் தெரிந்த மன்றாடலுக்காக அணைப்போட்ட விஷ்ணு ஒன்றும் கூறாமல் திரும்பி சென்றுவிட்டான்.

விஷ்ணு கண்களில் இருந்து மறையும் வரை பார்த்திருந்த மயூரி அலட்சிமாகத் திரும்பி, ''இந்த நகை.. இது கேவலம் விலை கொடுத்து வாங்க முடியாத பொருள். ம்ஹ்ம்ம் ஆஃப்டர் ஆல் மணி.. ஒவ்வொருத்தர் விலை மதிப்பே இல்லாததெல்லாம் எப்படி எப்படியோ திருடுறாங்களாமே? அப்படியா?'' என்றாள் நக்கலாக.

வைபவ் ஒன்றும் கூறாமல் இருக்க விசாலாட்சி, ''மயூரி! ப்ளீஸ்ம்மா. எனக்காக இதை இதோட விட்டுடு. இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக்கிறேன்'' என்று இறைஞ்சினார்.

'ச்சீ! போடா உன்னால் முடிஞ்சதை நீ பார்த்துக்கோ' என்பது போல் மயூரியும், 'உன்னை கவனிச்சுக்கிறேன்' என்பது போல் வைபவும் சண்டை கோழி மாதிரி விறைப்பாக நின்றிருந்தார்கள்.

''வைபவ்! நீ இங்கேயிருந்து போ முதலில்!'' பெரிய வாக்கு வாதம் வராமல் தடுக்கும் பொருட்டு வைபவை வெளியேற்ற விசாலாட்சி கூற, தாயையும் முறைத்து விட்டு வெளியில் சென்றான் வைபவ்.

மன்னிப்பு கோரும் விதமாக விசாலாட்சி பார்க்க, அவரிடம் ஒரு புன்னகையை உதிர்த்த மயூரி, ''இதை எடுத்து உள்ளே வைச்சுக்கோங்கம்மா. இல்லாட்டி... தேவை இல்லாமல் இல்லாதவங்க மேல பழியும், பாவமும் வந்து சேரும்'' என்றாள்.

''எனக்காக இதை இதோட விட்டுடும்மா மயூரி. அவனுக்கு உன்னைப் பற்றி முழுசா தெரியலைம்மா. இங்கே ரெண்டு, மூணு நாள் தானே தங்கறான்?''என்று அவளிடம் சமாதானமாக பேசியவரைப் பார்த்து வேதனை புன்முறுவலை சிந்தினாள் மயூரி.

வைபவுக்கு மட்டுமா தெரியவில்லை? இங்கே விஷ்ணு உள்பட, யாருக்குமே தான் தன்னைப் பற்றி முழுவதும் தெரியவில்லை. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விஷயம்... மறைப்பதற்கும், மறைக்கப்படுவதற்கும். அவ்வளவு ஏன்? இதோ இவரே கூட தன் குடும்ப கௌரவத்துக்காகவும், என் நலனுக்காகவும் (?) குழந்தையைப் பற்றி சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லையா?

ஒரு பெருமூச்சை வெளியேற்றிய மயூரி விசாலாட்சியின் கையை அழுத்திவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

மதியத்துக்கு மேல் வைபவ் கிளம்பி விட கீழே இறங்கி வந்த விஷ்ணுவின் கண்களில் விசாலாட்சி, வேலையாட்களின் உதவியுடன் ஹாலில் மாட்டிக் கொண்டிருந்த புகைப்படம் தென்பட்டது. ரிசப்ஷன் பொழுது விஷ்ணுவும், மயூரியும் சிரித்துக் கொண்டிருப்பது மாதிரி பெரிய அளவில் மாட்டியிருந்த புகைப்படத்தைப் பார்த்தவனுக்கு அத்தனை நேரமிருந்த இறுக்கம் தளர்ந்தது. உதட்டில் புன்முறுவல் கூட மலர உல்லாச நடையுடன் ஹோட்டலுக்குச் சென்றான்.

அன்றிரவு அலுவுலக வேலைப் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணு மயூரியிடம், ''பொட்டிக் ஆரம்பிக்கிறதுக்கு இடம் பார்க்கணும் மயூரி. நல்ல ஏரியாவில் கிடைச்சா சொல்ல சொல்லி ப்ரோக்கர்கிட்ட சொல்லியிருக்கேன். ஸ்டார்ட்டிங் கேபிட்டல் நான் போடறேன்'' என்றவன், அவள் பார்வையில், ''வெறும் கடனா தான் மேடம். திருப்பி கொடுத்துடணும். கடன் அன்பை முறிக்கும். கேள்விப்பட்டு இருக்கீங்களா?'' என்றான் சிரிப்புடன்.

அவளின் கேலி புரிந்தாலும், ''பாங்கில் லோனே போட்டுக்கலாமே விஷ்ணு? நீங்க இது வரைக்குமே எத்தனையோ செய்துட்டீங்க. மேலும் மேலும் நான் வாங்கிக்கிட்டு இருக்க மாதிரியே இருக்கு. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க'' என்றாள்.

அவளின் முகத்தை ஆராய்ந்தவன், ''சரி. நீ சொல்ற மாதிரியே ஆனாலும் லோனுக்கு உத்தரவாதம் கேட்பாங்களே? அதுக்காவது நான் கையெழுத்து போடலாமா? கூடாதா? பேங்க்காரனுக்கு வட்டியாவது கட்டுவே. ஆனா என்கிட்டே பணம் கடனா கூட வாங்க மாட்ட இல்ல?'' என்று உள்ளடக்கிய கோபத்தோடு கேட்டான் விஷ்ணு.

தர்ம சங்கடத்துடன், ''அப்படி இல்லை. வெளியே பாங்கில் பணம் வாங்கினால் சீக்கிரம் அடைக்கணு மேன்னு தீவிரமா வேலை செய்வேன். உங்ககிட்ட வாங்கினால்... அது முடியாமல் போகலாம்'' என்றாள்.

''ஏன்? என்கிட்டே வாங்கறதுக்கும் வெளியே கடன் வாங்கறதுக்கும் என்ன வித்தியாசம்?'' சின்ன குறுகுறுப்போடு கேட்டான் விஷ்ணு.

பதில் ஒன்றும் கூறாமல் கையிலிருந்த வேலையில் மும்முரமாயிருந்தவளைச் சிரிப்போடு பார்த்து, ''ஷூரிட்டி போடறேன். அது சரி... ஓகே. ஆனா உன்னால் கட்ட முடியாவிட்டால் நான் தான் கட்டணும். எப்படி கடனை அடைச்சிடுவியா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் சரியா மாசா மாசம் கட்டிடுவேனாக்கும் நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்'' என்றாள் ரோஷமாக.

அவள் தன்னம்பிக்கையும் சுயகௌரவத்தையும் பார்த்த வனுக்கு ஏன் என்று புரியாமல் பெருமையாக இருந்தது

யோசிப்பது போல் பாவனை செய்த விஷ்ணு, ''இன்னொன்று யோசிச்சியா மயூரி? நெருங்கிய உறவினர்கள் லோனுக்கு கையெழுத்து போடறதை பேங்க் விரும்பறதில்லை. நான் உன் கணவன் என்று இப்போ எல்லோருக்கும் தெரியும்... ஐ மீன்.. அப்படி நினைச்சுக்கிட்டு இருக்காங்க இல்ல?'' என்றான்.

''பேங்கில்... அவங்களுக்கு எப்படி அது தெரியும்?''

''ரிசப்ஷனுக்கு பேங்க் மேனேஜர் நல்லசிவம் வந்திருந்தாரே? நீ பார்க்கலையா?'' என்றான்.

இந்த பேங்கை விட்டால் வேறு பேங்கே இல்லையா என்ற கேள்வியை மயூரி கேட்கவேயில்லை.

ஆனால் இந்த அவசியமான, அதி முக்கியமான கேள்வியை கேட்காமல், ''ஓ! நான் வேணா போய் நமக்கு கல்யாணமாகலை. சும்மா நடிச்சிக்கிட்டுதான் இருக்கோம்னு சொல்லிடவா?'' என்று அப்பாவியாக பேசிக் கொண்டிருந்தாள் மயூரி.

வாய்விட்டு சிரித்தவன், ''நீ ரொம்ப குழம்பி போயிருக்கேன்னு நினைக்கிறேன். அதுக்கு தான் தங்கச்சி தீபா கூட ரொம்ப சேராதேன்னு சொல்றது. உடனே நான் எங்கே அந்த அர்த்தத்தில் சொன்னேன் அப்படின்னு அடுத்த கேள்வியைக் கேட்காதேம்மா'' என்று கேலி செய்தான் விஷ்ணு.

மயூரிக்கு வாய்ப்பு கொடுக்காமல் தொடர்ந்து, ''அதனால நான் என்ன சொல்றேனா.. முதலில் சொன்ன மாதிரி நானே ஸ்டார்ட்டிங் கேபிட்டல் போடறேன். நாம போய் எல்லோர்கிட்டேயும் சொல்லிக்கிட்டு இருக்க முடியாதில்லையா? என்ன சரியா?''என்று கேட்டான்.

சிறிது யோசித்தவள்?!.... எங்கே யோசிப்பது? அதுதான் விஷ்ணு ஏதேதோ சொல்லி அவளை மூளை சலவை செய்திருக்கிறானே!

"சரி. ஆனால் பேங்க் என்ன வட்டி வாங்குமோ அதே மாதிரி வாங்கிக்கணும். இல்லைனா இந்த ப்ளானை இங்கேயே டிராப் செய்துடலாம்" என்றாள் கறாராக.

"ஹப்பா... உங்க அப்பா டீச்சர் என்று சொன்னதை இன்னைக்கு நம்பறேன். இருந்தாலும் நீங்க ரொம்ப ஸ்ட்ரிக்ட் டீச்சர்" என்றான் பயந்தவன் போல்.

"ஆமாம்! அவர் ரிடையர் ஆனதும் அவர் பொறுப்பை நான் எடுத்துக்கிட்டேன்" என்று சொல்லிவிட்டு மயூரி சின்ன குழந்தைப் போல் அழகு காட்டவும் ஏனோ விஷ்ணுவிற்கு வானில் சிறகடித்து பறக்கும் உணர்வு வந்தது.

11

இரண்டு நாட்களுக்கு முன்பு தான் மயூரிக்கு விஷ்ணுவின் பொழுது போக்கு பற்றி தெரிய வந்தது. அதுவும் கணினியில் இருந்த ஸ்க்ரீன் சேவர் புகைப்படங்களைப் பார்த்துவிட்டு மிகவும் உற்சாகமாக அதைப் பற்றி விசாரித்த பொழுது தான்.

எத்தனை யதார்த்தமான புகைப்படங்கள்... யதார்த்தம் புகைப்படங்களுக்குத் தான் எத்தனை அழகு சேர்த்தன? சாதாரணமாகவே 'போஸ்' கொடுத்து எடுக்கும் புகைப்படங்களே செயற்கைத் தனம் மிகுந்து இருக்கும் என்பது மயூரியின் தனிப்பட்ட அபிப்பிராயம். அதனாலேயே விஷ்ணு எடுத்திருந்த புகைப்படங்களைப் பார்த்ததும் உடனே பிடித்து விட்டது.

விஷ்ணுவின் வீட்டிற்கும், ராம் வீட்டிற்கும் சில புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து லேமினேட் செய்ய கொடுத்திருந்தாள் மயூரி.

லேமினேட்டிங் கடையில் தனக்கு பிடித்த மாதிரி படங்களை ப்ரேம் செய்து வாங்கிய மயூரி, ஏதோ ஒன்றிரண்டு புகைப்படத்தில் மட்டும் மாற்றம் செய்து தரச் சொல்லி பத்து நிமிடங்கள் கடையிலேயே காத்திருந்தாள்.

கையில் இருந்த புகைப்படங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த மயூரியை கடை ஆள் அழைத்து, "மேடம்! உங்க ஆர்டர் ரெடி ஆகிடுச்சு. நீங்க சொன்ன மாதிரி ஆல்ட்ரேஷன் செய்தது சரியா இருக்கான்னு செக் பண்ணிக்கோங்க" என்று பெரிய கவரை நீட்டினார்.

அவள் சரிபார்த்துக் கொண்டிருக்கும் போது அருகில் இருந்த இன்னொரு பணியாளிடம், "அந்த ஆர்ட் ஷோக்கு தயார் பண்ண வேண்டிய பீஸ் எல்லாம் ரெடி ஆகிடுச்சா? இன்னைக்கு சாயந்திரம் டெலிவரி கொடுக்கணும்" என்று விரட்டிக் கொண்டிருந்தார்.

பணத்தைக் கட்டி வெளியே வந்தவளுக்கு மிகுந்த யோசனை. ஆர்ட் ஷோ என்று கடையில் இருப்பவர் சொன்னது போல பலவற்றை இவளும் பார்த்திருக்கிறாள். அந்த மாதிரி புகைப்பட கண்காட்சி ஒன்றை விஷ்ணுவிற்கு ஏற்பாடு செய்தால் என்ன? நமக்காக இத்தனை யோசித்து எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறான்... கல்லூரிக்கு விண்ணப்பம் வாங்கி வந்தது உட்பட. அவனுக்காக, அவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் புகைப்பட கண்காட்சி அமைத்தால் என்ன என்ற யோசனையோடு வீட்டை வந்தடைந்தாள் மயூரி.

வந்ததும், வராததுமாக வீட்டு வாசலிலேயே வைபவைப் பார்த்தது எரிச்சலாய் இருந்தது. 'இந்த அயோக்கியன் பெங்களூரில் இருந்து வந்தாச்சா? இப்பொழுதெல்லாம் ...கிறான் போல?' என்று குமைந்தாள்.

தனியாகச் சென்றால் கட்டாயம் ஏதாவது வம்பு வளரும் என்ற யோசனையில் வாங்கி வந்த பொருட்களைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவரிடம் கொடுத்துவிட்டு அவர் பின்னே சற்று இடைவெளிவிட்டு நடந்தாள் மயூரி.

துஷ்டனைக் கண்டால் தூர ஒரு அடி விலகலாம். ஆனால் துஷ்டனின் குணம் விலகுபவனைக் கண்டால் மட்டும் மாறி விடுமா என்ன?

மெல்லிய குரலில் வைபவ், ''மகாராணி வாழ்க்கை தான்!'' என்று சொல்லி பெருமூச்சு வெளியேற்றிவிட்டு காரை திறந்தான்.

''கொக தொல்லை தாங்க முடியலை தனபால். இன்னைக்கு மருந்து அடிச்சுடறீங்களா?'' என்று முன் சென்று கொண்டிருந்த தோட்டக்காரரிடம் சொல்லியபடியே சென்றாள் மயூரி.

அவள் நீளமான கூந்தலையும், கம்பீரமான நடையையும் பின் புறத்திலிருந்து சில நொடிகள் பார்வையிட்ட வைபவ் தலையை உலுக்கிக் கொண்டுச் சென்றான்.

வீட்டில் நுழைந்த மயூரிக்கு அவன் பார்வை தன்னை பின் புறம் துளைப்பதை உணர முடிய, அவள் உடலெங்கும் எரிந்தது. ஆனால் அவளால் எதுவும் செய்ய தான் முடியவில்லை.

சற்று நேரம் அமர்ந்தால் தேவலாம் என்பது போலத் தான் அவளுக்கு இருந்தது. ஆனால் இருக்கும் மன நிலையில் ஓய்வு தேவையில்லை என்று முடிவு செய்து, வாங்கி வந்த புகைப்படங்களை பொருத்தமான இடம் பார்த்து மாட்டி வைத்தாள்.

அவள் வேலைக்கு நடுவில் வந்த விசாலாட்சி, ''காலையில் கடைக்கு போயிட்டு வந்து கொஞ்சம் ரெஸ்ட்

எடுத்துக்கலாமே மயூரிம்மா?'' என்று அக்கறையுடன் சொன்னார்.

''ரெஸ்ட் எடுத்து ரெஸ்ட் எடுத்து எனக்கு ரெஸ்ட் லெஸ்ஸா இருக்கும்மா'' என்று புன்னகையுடன் பதில் தந்தாள். உண்மையான காரணமும் ஓரளவு அந்த பதிலில் பொருந்தி வந்தது.

''உங்கிட்ட பேசி ஜெயிக்க முடியுமா? இன்னும் ரெண்டு வாரத்தில் பிறந்த நாள் வருது அதுக்குத்தான் வருவேன்னு போனான். ஆனால் இன்னைக்கு திடீர்னு ஏதோ வேலைன்னு மூத்தவன் வந்திருக்கான்'' என்று தகவல் தந்தார்.

ஆமோதிப்பாக தலையை மட்டும் அசைத்துவிட்டு, ''அம்மா! இந்த படம் எப்படி இருக்கு இங்கே? சூப்பரா இருக்குல்ல?'' என்று அவரது கருத்தை மிக முக்கியமாக வினவிக் கொண்டிருந்தாள் மயூரி.

சிறிது நேரம் சென்று விசாலாட்சி யாரோ விருந்தாளிகள் வந்திருக்கவும் சென்றுவிட்டார். அந்த வீட்டிற்கு யாராவது ஒருவர் மாறி ஒருவர் நண்பர், உறவினர் என்று தேடி வருவது வழக்கம் தான். உறவு மட்டுமல்ல... பொதுச்சேவை நிறுவனத்தில் இருந்து நன்கொடை, தெரிந்தவர்களுக்கு ஏதாவது வகையில் சிபாரிசு, சில சமயங்களில் குடும்ப பிரச்சனைக்கு தீர்வை தேடிக் கூட வருவது உண்டு. பணம் இருந்தால் உலகமே உறவு தான் போல?

எதையோ நினைத்தபடியே இருந்தவளுக்கு விஷ்ணு, புகைப்பட கண்காட்சி என்ற சிந்தனை மீண்டும் வந்தது. இன்னமும் இரண்டு வாரத்தில் பிறந்த நாள் என்றார்களே விசாலாட்சிம்மா? அன்றைக்கே முடிவு செய்துக்கலாம்.

அப்புறம் கண்காட்சிக்குத் தேவையான இடத்தை ஏதாவது ஹோட்டலில் பதிவு செய்ய வேண்டும்.

விஷ்ணுவின் ஹோட்டலில் பதிவு செய்யலாம் என்றால் அவனுக்கும் தெரிந்துவிடும். சர்ப்ரைஸ் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்திருக்கையில் விஷ்ணுவிற்கு தெரியப்படுத்துவது சரியாகாது. ஒரு இரண்டு நாட்களுக்கு முன் ஏற்பாடு எல்லாம் செய்து முடித்துவிட்டு சொல்லலாம்.

சில மணித்துளிகள் இணைய தளத்தில் அமர்ந்த பொழுது நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு ஆடிட்டோரியமும், மேலும் சில ஹோட்டல் சார்ந்த இடங்களும் புகைப்பட கண்காட்சிக்கு ஏற்றது என்று தெரிந்தது. நேரில் பார்த்துவிட்டு முடிவு செய்யலாம் என தொடர்பு எண்ணிற்கு போன் செய்து மேலும் விவரங்கள் பெற்றுக் கொண்டாள்.

விசாலாட்சி அம்மாவிடம் மீண்டும் ஒருமுறை பிறந்தநாள் தேதியை உறுதி செய்துவிட்டு வெளியே கிளம்பினாள் மயூரி.

ஆடிட்டோரியம் பார்த்து அட்வான்ஸ் கொடுத்து விட்டுத் திரும்பிய பொழுது எதிரே இருந்த ஒரு காபி ஷாப்பில் வைபவ் ஒரு பெண்ணுடன் நுழைவது தெரிந்தது.

வைபவை அந்த இடத்தில் கண்டவளுக்கு மட்டும் சுட்டெரிக்கும் ஆற்றல் இருந்தால்... சரி ஆக வேண்டியதைப் பார்ப்போம். இப்பொழுது முக்கியமானது வைபவுடன் இருந்த அப்பாவிப் பெண் தான்! அவசரமாக அந்த கடைக்குச் சென்று தயக்கமின்றி ஒரு புன்னகையோடு வைபவும், அந்த பெண்ணும் இருந்த மேஜையில் அமர்ந்தாள்.

தன் ஒருத்தியின் வாழ்வு கேள்விக்குறியானது போதாதா? இவன் இன்னமும் எத்தனை பெண்களின் வாழ்வை குறி வைக்கிறானோ? ஏமாந்தவர்கள் ஒதுங்கிப் போகிறார்கள். புதியவர்கள் ஏமாளிப் பட்டியலில் சேர்கிறார்கள். யார் அவனுக்குப் பாடம் புகட்டுவது? அதிர்ச்சிக்குப் பழக்கப் பட்டதாலோ என்னவோ அவள் மனம் இப்பொழுது உடனே மீண்டது.

''என்ன வைபவ்? எங்கே இந்தப் பக்கம்? புது பட்சியா?'' என்று அமைதியாக வினவினாள் மயூரி.

மயூரியை அந்நேரத்தில், அந்த இடத்தில் எதிர்பாராத வைபவிற்கு ஆத்திரத்தில் முகம் சிவந்தது.

அவனுடன் இருந்த பெண் கேள்வியாக மயூரியை ஏறிட, ''என்னங்க புதுசா இருக்கேனேன்னு பார்க்கறீங்களா? நான் இவருடைய சகோதரனின் மனைவி. நானே என் கொழுந்தனாரைப் பற்றி பெருமையா சொல்லிக்கக் கூடாது'' என்று வைபவிடம் பார்வை செலுத்திவிட்டு பேசிக் கொண்டிருந்தாள் மயூரி.

''ஏய்! வீணா என் விவகாரத்தில் தலையிடாதே. உனக்கு நல்லதில்லை'' என்று பற்களைக் கடித்தான் வைபவ்.

''எது உன் விவகாரம்? இப்படி தினம் ஒரு பொண்ணோட சுத்தி குடும்பத்தோட மானத்தை வாங்கறது தான் உன் விவகாரமா?'' குரலை உயர்த்தாவிடினும், அவர்களுடைய உடல் மொழியிலிருந்த பேதத்தை உணர்ந்து, சுற்றி இருந்தவர்களில் இரண்டு ஜோடிகள் திரும்பிப் பார்த்தனர்.

வைபவ் மீண்டும் சுதாரித்து பேசுவதற்குள், ''இதோ பாரும்மா! இவன் பெண்கள் விஷயத்தில் சரி கிடையாது. சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். அப்புறம் உங்கள் இஷ்டம்'' என்றதும் அந்த பெண் அதிர்ச்சியில் உடனே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

மயூரி அவன் மீது அக்னிப் பார்வையைச் செலுத்தி விட்டு நகர்ந்தாள்.

மயூரி செல்லும் வழியில் குறுக்கே நின்று வழியை மறித்தவன், ''ஏய்! இங்கே பார் சும்மா குடும்ப மானம், மரியாதைப் பத்தி கதை பேசாதே. உன் லட்சணம் பத்தி எனக்கு தெரியாதா?'' என்று கோபமாக வினவினான்.

''வழியை விடு. ரெண்டு பேரோட லட்சணத்தைப் பத்தியும் அம்மா, தம்பிகிட்ட சொல்லி நியாயம் கேட் போமா?'' வைபவைச் சுற்றிக் கொண்டு நகர முற்பட் டாள் மயூரி.

''உன் மகாராணி வாழ்க்கைக்கு போட்டி வந்துடும்ன்னு தானே அந்த பொண்ணுகிட்ட இப்படி நடந்துகிட்ட?'' என்று தன் கையை குறுக்கே நீட்டி கேட்டான் வைபவ்.

''மகாராணி பதவிக்கா அந்த பொண்ணுக்கு நீ வழி பண்ற? அந்தப்புரத்து அழகியா ஆகறதுக்குத் தான் இந்த திருட்டுத்தனம் எல்லாம்.''

''மகாராணியோ.. அழகியோ.. என் விஷயத்தில் நீ தலையிடாதே!''

அவனது வார்த்தைகள் நெருஞ்சி முள்ளாய் மயூ ரியைத் தைத்தன. ஆனால் அதை வெளிக்காட்டாமல் பேசினாள் மயூரி.

''இதோ பாருடா! நீ செய்யறதையெல்லாம் செய்வ, அதை நாங்க கண்டுக்காமல் விட்டுடணுமா? உப்பு தின்னவன் தண்ணியைக் குடிச்சு தான் ஆகணும்னு கேள்விப்பட்டதில்லையா?''

மயூரியின் கேள்விகளுக்கு வைபவ் எப்படி பதில் சொல்ல முடியும்? பதில் சொல்ல முடியாமல் கேள்வி கேட்பதையே நிறுத்தும் படி செய்ய

எண்ணத்தில் தன் கூர் நாக்கால் வாதத்தைத் தொடர்ந் தான்.

''இவ்வளவு பேசறியே? அண்ணன், தம்பி ரெண்டு பேரையும் அனுசரிச்சு போறதுக்கு என்ன பேர் மயூரி?'' என்று உச்சி முதல் பாதம் வரை பார்த்தான் வைபவ்.

வைபவ் கேள்வியை நிறுத்துவதற்கு முன், ''ச்சீ தூ!'' என்று உமிழ்ந்து அந்த இடத்தை விட்டுச் சென்றாள்.

எவ்வளவு அசிங்கமான பேச்சு? சாக்கடையில் கல் எறிவது போலத் தான் வைபவ் விஷயத்தில் தலையிடு வது. ஆனால் அதற்காக இவள் எதிரிலேயே ஒரு பெண் ணின் வாழ்வு நாசம் ஆவதை இவளால் சகிக்க முடியுமா? சகிக்க முடியாமல் தான் இத்தனை பேச்சையும் கேட்டு கொதித்துக் கொண்டு இருக்கிறாள்.

அம்மா ஏதோ வேலைன்னு திடீர்னு வந்திருக்கான்னு சொல்லும்போதே யோசிச்சுருக்கணும். ஒரு பொண்ணு பின்னாடி சுத்தி வலை விரிப்பதைத் தவிர இவனுக் கென்ன பெரிய முக்கியமான வேலை வந்துடப்போகுது? வைபவ் பற்றி கட்டாயம் உண்மையைச் சொல்லி பாடம் புகட்ட வேண்டும் என்று உறுதி பிறந்த பொழுது வீட்டை அடைந்திருந்தாள்.

கோபத்தில், ''இன்னைக்கே உன்னைப் பத்தி வீட்டில் சொல்லி கொடுக்கிறேனா இல்லையா பார்'' என்று முனகியபடியே நுழைந்தவள் எதிரே நின்ற விசாலாட் சியைப் பார்த்து அதிர்ந்தாள்.

அவளது கண்களை நோக்கியபடியே விசாலாட்சி, ''யார் மயூரிம்மா? என்ன விஷயம்?'' என்று விசாரித்தார்.

அந்த கண்களை சந்திக்க முடியாமல், ''ஒ... ஒண்ணு மில்லைம்மா!'' என்று தலையை தாழ்த்திக் கொண்டாள் மயூரி.

விசாலாட்சி மயூரியை எந்த விசாரணையும் செய்ய வில்லை.

''சரிம்மா'' என்று விட்டு தன்னறைக்குச் சென்றுவிட் டார் விசாலாட்சி.

விசாலாட்சி எந்த கேள்வியும் கேட்காமல் சென்றது மயூரியை மிகவும் கஷ்டப்படுத்தியது.

விசாலாட்சியின் அறைக்குச் சென்றவள், ''அம்மா! என்ன எதுவும் கேட்காமல் நீங்க சரிம்மான்னு சொல் லிட்டு வந்துட்டீங்க?''என்று சண்டையிடுவது போல் வினவினாள் மயூரி.

பார்வையில் கூர்மையுடன், ''வேறென்ன மயூரிம்மா சொல்ல சொல்ற? நீயே சொல்ல பிடிக்காமல் திக்கி, திக்கி தலையை குனிஞ்சுட்டு சொல்லும் போது நான் குறுக்கு கேள்வி கேட்டு இன்னும் கஷ்டப்படுத்தணுமா? தெரியக்கூடாத விஷயம் என்றால் தெரியாமல் இருக்கிறது தான் நல்லது. தெரியற விஷயம் என்றால் அது கண் டிப்பா நமக்கு தெரிஞ்சே ஆகும். சரிதானே மயூரிம்மா?'' என்று யதார்த்தமாக வினவினார்.

விசாலாட்சிக்கு அனுபவத்தில் தெரியாததா? எந்த விஷயத்தில் பேச்சு எடுபடும். எந்த விஷயத்தில் மௌனம் காரியம் சாதிக்கும் என்று?

மூத்தவரின் பேச்சிலும், பார்வையிலும் ஏதோ வித்தி யாசம் இருப்பதை உணர முடிந்தது மயூரியால். லேசாக வெளிறிப் போய் தெரிகிறாரோ? ஆனால் அப்பொழுது அதைப் பற்றி பெரிதாக எதுவும் யோசிக்கவில்லை.

மயூரியால் மறைக்க முடியாமல், ''வை..ப..வ் பிரசாத் பத்தி தான் திட்டிட்டு வந்தேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

அவளது கைகளைப் பற்றிய விசாலாட்சி, ''என்னம்மா ஆச்சு? உன்னை வைபவ் ஏதாவது சொன்னானா? அவனை எந்த விஷயத்திலாவது கண்டிக்கணுமா?'' என்று கனிவாகவும், பதட்டமாகவும் வினவினார்.

மயூரிக்கு ஒரு நொடி அனைத்தையும் கொட்டி தீர்த்து விடலாமா என்று இருந்தது. ஆனால் முழு உண் மையையும் சொல்லாமல் காபி ஷாப்பில் நடந்ததை மட்டும் சொன்னாள்.

மயூரியின் கலக்க உணர்வை குறித்துக் கொண்டு, ''ம்ஹ்ம். இதுக்குத் தான் முக்கியமான வேலைன்னு பெங்களூரில் இருந்து கிளம்பி வந்தானா? அவங்க அப்பா மாதிரியே வந்துடுவானோன்னு பயம்மா இருக்கு. இந்த ரெண்டு பிள்ளைங்களுக்காக சகிச்சுட்டு இருந்தது தப்பா போச்சு. என்ன சொல்லி வளர்த்து என்ன?'' என்று புலம்பலாகச் சொன்னார் விசாலாட்சி.

''அம்மா! நீங்க எதுக்கு பழைய கதையெல்லாம் பேசிட்டு? எல்லாம் சரியாகிடும்மா. கவலைப்படாதீங்க'' என்று ஆறுதல் தந்தாள் மயூரி.

''இந்த காலத்தில் ஆணும் பெண்ணும் பேசறது ஒன்றும் தப்பில்லை. ஏதாவது கேட்டால் அப்படி சொல்றான். நம்மளும் தோளுக்கு மேல் வளர்ந்த பையனை துருவி துருவி விசாரிக்க வேண்டாம்னு தான் ஒரு சில விஷயங்களை கண்டும், காணாமல் இருக்கிறது. அவங்க அப்பா அளவுக்கு போகாமல் இருந்தால் பரவாயில்லை. இதுக்கு மேலேயும் விடறது சரி கிடையாது. சரி அவன் வரட்டும்... நான் பேசறேன்'' என்று முடிவாகச் சொன்னார்.

அதே உறுதியோடு மகனிடமும் கண்டிப்போடு கூடிய அறிவுரை சொன்னார்.

வைபவ் தன் தாயிடம் எதுவும் எதிர்த்துப் பேசாமல் அமைதியாகவே இருந்தான். ஆனால் அவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும், கோபம் அத்தனையும் மயூரி மேல் பன்மடங்காகத் திரும்பியது.

''ஏய்! என் விஷயத்தில் தலையிடாதேன்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே சொன்னேன்? என்னைப் பத்தி தெரிஞ்சும் என்கிட்டே வம்பு வளர்க்கிற? இது சரியில்லை.. அப்புறம் அதுக்காக வருத்தப்பட வேண்டியிருக்கும்'' என்று மிரட்டும் தொனியில் சொன்னான் வைபவ்.

''என்ன செய்வ? மிஞ்சி மிஞ்சி போனால் என் உயிரை எடுப்பியா? என் உயிர் போனாலும் நான் வருத்தப்பட மாட்டேன். ஆனால் இன்னொரு பொண்ணுக்கு வலை விரிக்கிறதைப் பார்த்துட்டு சும்மா இருப்பேன்னு மட்டும் நினைக்காதே!'' என்று இவளும் பதிலடி தந்தாள்.

ஏற்கனவே ஒரு முறை தான் மரணத்தின் விளிம்பை தொட்டுவிட்டு வந்துவிட்டாளே? இருவரும் சண்டை சுவாரஸ்யத்தில் வாசலில் கேட்ட கார் சத்தத்தையோ, அதைத் தொடர்ந்த ஷூ சத்தத்தையோ காதில் வாங்கவேயில்லை.

''அதையும் தான் பார்க்கத் தானே போறேன்?'' என்று குரலை உயர்த்திச் சொன்னான் வைபவ்.

வைபவ் யாரிடம் இவ்வளவு ஆவேசமாக சண்டை போடுகிறான் என்ற யோசனையில் கால்கள் தயக்கத்துடனே விஷ்ணுவிற்கு முன்னேறின.

''பார்க்கலாம். பார்க்கலாம். குரைக்கிற ஜென்மம் கடிக்காது!''

''ஏய்! பார்க்கத் தானே போற? நான் குரைக்கிற ஜென்மமா? கடிக்கிற ஜென்மமான்னு!'' என்று வைபவ்

சொல்லும் பொழுது விஷ்ணு இருவரையும் சற்று தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கைகளைக் கட்டி நின்ற விஷ்ணுவைப் பார்த்துவிட்டு மயூரி மௌனமாகச் சென்றுவிட, வைபவ் குழப்பமான முக பாவனையுடன் விஷ்ணுவை ஏறிட்டான்.

''என்ன வைபவ்? என்ன பிரச்சனை? என்ன பிரச்சனையா இருந்தாலும் சாதாரணமா சொல்ல வேண்டியது தானே? எதுக்கு இப்படி மிரட்டணும்?'' பேச்சில் சகோதரன் மீது அதிருப்தி வெளிப்பட்டது.

''அவளுக்கு...'' என்று மயூரியைக் குறிப்பிட்டுத் தொடங்கவும் விஷ்ணுவிற்கு முகம் இறுகியது.

''என் முன்னாடி அவ, இவன்னு பேசாதே வைபவ்'' என்று கத்தரிப்பது போல் சொன்னான் விஷ்ணு.

''சரி பேசலை. ஆனால் மயூரியை என் விவகாரத்தில் தலையிடாமல் இருக்கச் சொல்லு விஷ்ணு. அம்மாக்கிட்ட வந்து தேவையில்லாமல் நான் அந்த பொண்ணு கூட சுத்தறேன்... இந்த பொண்ணு கூட சுத்தறேன்னு சொல்லி, அம்மா இப்போ கூப்பிட்டு ஒரே திட்டு'' என்று பொரிந்தான்.

சகோதரனை கூர்மையாகப் பார்த்துவிட்டு, ''நான் எத்தனை முறை சொல்லியிருப்பேன்? எதுவும் என் காதுபட விழறதில்லைன்னு திருந்திட்டதா நினைச்சிட்டேன் போல? ஆனால் எப்படி வைபவ்? இந்த வீட்டுக்கு வந்த மயூரியும் கண்டும், காணாமல் இருக்கணும்னு எதிர்பார்க்கிற?'' என்று நிதானமாக வினவினான்.

விஷ்ணு சாதாரணமான நேரத்தில் பேசியிருந்தால் எப்படி எடுத்திருப்பானோ? ஆனால் இன்று மயூரி தலையீட்டை வைபவால் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"என்னை சந்தேகப்படறியா? வேண்டாம் விஷ்ணு" என்றான் வைபவ் தன் பொறுமையை இழுத்துப் பிடித்தபடி.

"என்ன நடந்தது? என்ன பிரச்சனை?" என்று ஒன்றும் புரியாமல் வினவினான் தம்பி.

"என் விஷயத்தில் மயூரிக்கு தலையிட உரிமையில்லைன்னு தான் சொல்றேன்" தன் கருத்தை வலியுறுத்தி சொன்னாலும் விஷ்ணு முன் குரல் ஓங்கவில்லை.

"உரிமையில்லையா?"

"ஆமாம். மயூரிக்கு எந்த உரிமையுமில்லை" என்று குரல் முன்னை விட சிறிது உயர்ந்தது.

"உரிமையில்லையா? என் மனைவிங்கற ஸ்தானம் தான் மயூரிக்கு அந்த உரிமையை கொடுத்திருக்கு. ஷி இஸ் மை வைஃப் - மயூரி விஷ்ணு பிரசாத்." என்று அழுத்தம் திருத்தமாக மொழியவும், அவனை உறுத்து விழித்துவிட்டு பதில் பேசாமல் சென்றான் வைபவ்.

மயூரி விஷ்ணு பிரசாத் என்று இருப்பது தானே வைபவின் பிரச்சனையே? மீண்டும் மீண்டும் அதை கேட்கப் பிடிக்கவில்லை. இருவரையும் ஜோடியாகப் பார்க்க பிடிக்கவில்லை. அவ்வளவு ஏன்? தம்பி மனைவி என்று ஒப்புக்கு கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'மயூரி விஷ்ணு பிரசாத்' மீண்டும் மீண்டும் இந்த வார்த்தையே எதிரொலித்தது விஷ்ணுவின் காதுகளில். சில நொடிகள் சென்று தான், தன் ஆழ்மனதில் பதிந்திருந்த எண்ணத்தையே அவனால் உணர முடிய, அவன் அதரங்களில் மகிழ்ச்சி புன்னகைப் பூத்தது.

'ஷி இஸ் மை வைஃப்' என்று வைபவிடத்தில் சொன்னது வாய் வார்த்தைக்காக சொன்னதில்லை. அவ

னையே அவனுக்கு உணர்த்திய வார்த்தைகள். மனதில் உள்ள விருப்பத்தை அடிக் கோடிட்டு காட்டிய வார்த்தைகள். தன் மனதின் விருப்பத்தை உணர்ந்த விஷ்ணு அங்கே சோபாவிலேயே அமர்ந்தான்.

இது உண்மையிலேயே மனதில் உள்ள விருப்பமா அல்லது கணவன்-மனைவி என்ற நாடகத்தில் ஒன்றி நடிப்பதன் விளைவா? மனதின் விருப்பம் இல்லாமல் இந்த நாடகத்திற்கு எப்படி ஒப்புக் கொண்டிருப்பேன்? அம்மாவைக் காரணம் காட்டி நடத்தப்படும் நாடகம் கலைந்து விடுமோ என்று எத்தனை முறை பேச்சு வார்த்தையைத் தவிர்த்திருப்பேன்?

மயூரி தன் ஓட்டுக்குள் சுருங்கும் போதெல்லாம் அவளை இந்த நிலைக்கு ஆளாக்கியவன் மீது கோபப் படாமல் இருக்க முடியவில்லை. அவன் மட்டும் கையில் கிடைத்தால்.. வேண்டாம் வேண்டாம்.. யாரென்று தெரிந்தால் கூட அவன் உயிருடன் சமாதி தான்.

எதற்காக? வேண்டாம் கண் காணாமல் போனவன் போனவனாகவே இருக்கட்டும். அவனைப் பற்றி தெரிந்து ஒன்றும் ஆகப் போவதில்லை.

அவளுடன் எல்லாவற்றையும் சேர்த்து தனதாக்கி கொள்ள அவன் சித்தமாகவும் விருப்பமாகவும் இருக்கிறான். ஆனால் மயூரி இதற்கு ஒப்புவாளா? மயூரியிடம் இப்பொழுதே விருப்பத்தைச் சொல்லலாமா? சொன்னால் நிறைவேறுமா?

12

கனவில் நடந்து செல்பவன் போன்று நடையில் ஒரு துள்ளலுடன் படிகளை இரண்டிரண்டாக தாண்டினான்

விஷ்ணு. எப்போது இந்த எண்ணம் தன்னுள் வேர் விட்டது என்று தெரியவில்லை. ஆனால் அது இப்போது கிளை விட்டு, மொட்டு விட்டு, மலர்ந்து மணம் பரப்புவது மட்டும் புரிந்தது.

''மயூரி!'' என்று மெதுவாக சொல்லிப் பார்த்துக் கொள்ள, உதட்டிலிருந்த முறுவல் மேலும் விரிந்தது.

மயூரியின் மனதில் தனக்கு சிறிதாவது இடமிருக்கிறதா என்று தெரியவில்லை. அவளிடம் நல்ல சந்தர்ப்பம் பார்த்து தான் சொல்ல வேண்டும். சந்தர்ப்பத்தை நாம் தான் உருவாக்கி கொள்ள வேண்டும் என்பதை ஏனோ அந்த நிமிடத்தில் மறந்துப் போனான் விஷ்ணு.

மயூரியிடம் என்ன சொல்வது? எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையோடு சென்றவனுக்கு, அவளிருக்கும் மனநிலையில் இப்போதே சொல்லலாமா... இல்லை... இன்னும் சிறிது காலம் காத்திருக்கலாமா என்று ஒன்றும் புரியவில்லை. இப்போது கூறினால் சட்டென்று மூட்டை முடிச்சுடன் கிளம்பிவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் எழ, தாடையைத் தடவிக் கொண்டான் விஷ்ணு.

ஆனால், என்ன ஆனாலும் சரி தான்.. அவள் என்ன மறுப்பு கூறினாலும் அவள் தான் தன் வாழ்க்கைத் துணை. அவள் மட்டுமல்ல, குழந்தையும் தன்னுடையது தான் என்று தெளிவாக இருந்தான். நல்ல வேளையாக மயூரியைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கு இன்னமும் குறைந்தது ஏழெட்டு மாதங்களாவது இருக்கிறது என்று நிம்மதி பெருமூச்சு விட்டான். ஆனால் நேரமும் காலமும் யாருக்காகவும் நிற்பதில்லையே?

மேலே தன்னுடைய அறைக்கு வந்தவனது பார்வை ஏற்கனவே அங்கு ஜன்னலோரத்தில் நின்று கொண்டு,

வெளியே வெறித்துக் கொண்டிருந்த மயூரியின் பக்க வாட்டுத் தோற்றத்தில் படர்ந்தது.

இன்றைக்கு அவளிடம் தனியாக ஒரு அழகு தெரிகிறதோ? இல்லை... அது தன் பார்வையில் தானா? தலையைக் கோதிக் கொண்டு சத்தம் வராமல் சிரித்துக் கொண்டான்.

சத்தம் போடாமல் உள்ளே சென்றாலும், அவனின் அரவம் கேட்டு திரும்பியவளுக்கு அவன் முகத்திலிருந்த பாவம் குழப்பத்தைத் தந்தது. சினத்தோடு வருவான், இல்லை குறைந்தபட்சம் குழப்பமாவது இருக்கும் என்று மயூரி நினைத்ததற்கு மாறாக அவன் சிரிப்போடு இருக்கவும் மயூரிக்கு எரிச்சல் மூண்டது.

'என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது?' என்று எரிச்சலுற்றவள் விஷ்ணுவிடம், ''உங்ககிட்ட நான் ஒண்ணு சொல்லணும்'' என்றாள்.

''நானும் தான் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும். பட்.. லேடிஸ் ஃபர்ஸ்ட். நீ முதலில் சொல்லி முடி. அப்புறம் நான் சொல்றேன்'' என்றான் மிகுந்த ஆவலாக.

அவன் சிரிப்பைக் கண்டதும், எரிச்சலோடு அவன் சகோதரனைப் பற்றி சொல்ல வேண்டும் என்று நினைத்தவளுக்கு அதை எப்படி செயல்படுத்துவது என்று தெரியவில்லை.

''ஏதோ சொல்லணும் என்று சொல்லிட்டு நீ பாட்டுக்கு அமைதியா இருந்தா என்ன செய்யறது மயூரி?'' என்று கேட்டான் விஷ்ணு.

அவனுக்கு எப்படியாவது ஒரு முன்னோட்டமாவது பார்க்கலாம் என்ற எண்ணம். லேசாக அவள் மனதைப் பற்றி அறிந்துக்கொண்டால் அதற்கு ஏதுவாக நடந்துக் கொள்ளலாமே என்று நினைத்தான்.

கைகளைப் பிசைந்தவாறு தடுமாறியவளைப் பார்த்தால் அவனுக்கு சிரிப்புத்தான் வந்தது. அப்படி என்ன தான் சொல்லப் போகிறாள்? ஒருவேளை தன்னை போல்... அவளுக்கும்?? பந்தயக் குதிரை போல நெஞ்சம் தடதடப்பது விஷ்ணுவிற்கு அவன் காதுகளிலேயே கேட்டது. காதல் மனது எல்லாவற்றையும் தனக்கு சாதகமாகவே எண்ணிப் பார்த்தது.

கட்டுப்பாடின்றி பாயும் மனதை அடக்கியபடி, ''மயூரி!'' என்று அழுத்தமாக விளித்தான்.

சிரிப்புடன் ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கியவனைப் பார்க்கையில் இன்னமும் கோபம் வந்தது மயூரிக்கு.

'வைபவ் சொன்னதைக் கேட்டு அவனுக்கு கோபம் வரவில்லையா? எப்படி இவனால் சிரிக்க முடிகிறது? என்ன மனிதன் இவன்?' என்று அவனை மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தவள் பட்டென்று, ''உங்க அண்ணனைப் பற்றி தான் சொல்லணும்'' என்றாள்.

சில நொடிகள் விஷ்ணுவிற்கு ஒன்றும் புரியவில்லை. வைபவைப் பற்றிய எண்ணமே இந்த கணத்தில் சுத்தமாக அவனுக்கில்லை.

எப்போது தன் மனம் புரிந்ததோ, அப்போதிலிருந்து மயூரி மட்டுமே அங்கு முழுவதுமாக வியாபித்திருந்தாள்.

''என்ன... அண்ணனா? அவனுக்கென்ன?'' என்று புரியாமல் கேட்டான் விஷ்ணு.

''ஆமாம்.. அவ... அண்ணனே தான்'' என்றவள், விஷ்ணு பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கவும், ''வைபவ் சரியில்லை'' என்றாள் மொட்டையாக.

இதுவரை இருந்த துணிவு, சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் மயூரிக்கு இல்லாமல் போய்விட்டது.

'சரியில்லைன்னா?' என்பது போல் விஷ்ணு பார்க்க மயூரியோ, 'சரியான அழுத்தக்காரன்' என்று நினைத்துக் கொண்டு, ''சரியில்லைன்னா.. ம்ம்ம்.. சரியில்லை தான். பொண்ணுங்க கூட நடந்துக்கிறது சரியில்லை. பார்வை சரியில்லை. இன்னைக்கு ஒரு பொண்ணு கூட காபி ஷாப்பில் பார்த்தேன்'' என்று பட்டியலை நீட்டிக் கொண்டு போனாள்.

அவளை இமைக்காமல் பார்த்தவன், ''நடந்துக்கிறது சரியில்லைன்னு எப்படி சொல்ற? ஒரு பொண்ணு கூட பேசிட்டு இருந்தாலே தப்புங்கற காலம் இல்லை இது'' என்றான் அமைதியாக.

மயூரி வாயை இறுக மூடிக் கொண்டிருக்கவும் விஷ்ணுவே தொடர்ந்து, ''சரியில்லைன்னு சொல்றதுக்கு வேற ஏதாவது காரணம் இருக்கா மயூரி?'' என்று நேரடியாக வினவினான்.

அவனுக்கு வைபவிடம் மயூரியையும் விட்டுக் கொடுக்க முடியவில்லை. அதே சமயம் மயூரியிடமும் வைபவை விட்டுக் கொடுக்க முடியவில்லை.

''இன்னைக்கு சாயந்தரம் உங்களுக்குள்ள என்ன பிரச்சனை என்று சரியா தெரியாது. அவன் ஏதாவது தப்பா பேசியிருந்தா அதுக்காக நான் உங்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்'' அதனால் தான் ஒருவேளை மயூரி இப்படி குற்றம் சுமத்துகிறாளோ என்று நினைத்து.

''ப்ச்.. என்னைப் பார்த்தால் உங்களுக்கு சின்ன குழந்தை மாதிரி தெரியுதா?'' என்று கேட்டாள் மயூரி.

இதற்கு என்ன பதில் சொல்வது? இப்பொழுது எதை சொன்னாலும் தப்பாகிவிடும் என்றுணர்ந்து அமைதிக் காத்தான் விஷ்ணு. மயூரி குழந்தைத்தனமாக பதிலுக்குப்

பதிலென்று எதையும் செய்வாள் என்று அவனாலும் தான் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அப்போது இந்த திடீர் குற்றச்சாட்டு ஏன்?

''சாரி! நான் அப்படி நினைச்சு சொல்லலை'' என்றவன் அவள் எதுவும் சொல்வாளோ என்று எதிர்பார்த்து மௌனமாக இருந்தான்.

அவனே தொடர்ந்து, ''என்ன மயூரி? ஏதோ சொல்ல ஆரம்பித்துவிட்டு இப்படி பாதியிலேயே விட்டால் நான் என்னன்னு நினைக்கிறது?'' என்றான்.

ஆனால் அவளோ ஒன்றும் கூறாமலிருக்க விஷ்ணு ஆயாசமாக, ''சரி.. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன். நீ சாப்பிட்டு படுத்துக்கோ'' என்று விட்டு கிளம்பினான்.

மேலே பேச்சு வளர்ப்பது சரியில்லை என்று அவனது மனதில் பட்டது.

அவனுக்கு சற்று நேரத்திற்கு முன்பிருந்த சந்தோஷ மனநிலை முற்றிலும் மாறி இப்போது ஏன் என்றும் புரியாமல் 'டிப் ஆஃப் ஐஸ் பர்க்' என்று சொல்வார்களே அதுபோல் பனிக்கட்டியின் நுனியில் நிற்பது போன்று உணர்ந்தான். என்ன செய்தும் அந்த நினைப்பை மட்டும் உதற முடியவில்லை.

மயூரி ஏன் வைபவைப் பற்றி அப்படி சொல்ல வேண்டும்? இதற்குப் பின்னணியில் வேறு ஏதும் இருக்குமா? இல்லை அவன் மேல் உள்ள கோபத்தில் அப்படி சொன்னாளா? சிலருக்கு சிலரைப் பார்த்தாலே, பார்த்த முதல் பார்வையிலேயே பிடிக்காமல் போய்விடும். அது மாதிரியா?

இப்பொழுது யோசித்துப் பார்த்தால் முதல்நாள் இங்கே வந்த அன்றிலிருந்தே மயூரியும் வைபவும் சரியாக முகம் கொடுத்துப் பேசிக் கொள்ளவில்லை. மயூரிக்கு மற்றவரைக் கண்டு வரும் ஒதுக்கமென்று எடுத்துக் கொண்டாலும்.. வைபவ்..? அப்படியே இருவரும் பேசினாலும் மனவருத்தம் தான்.

ரிசப்ஷன் போது வள்ளியைக் கொண்டு விடுவதற்கு வைபவ் செல்வதை குறை கூறியது, வைபவ் அடுத்த நாள் நகையைப் பற்றி தன் தாயிடம் குற்றம் சுமத்தியது, இதோ... இன்று இருவரும் தன் காதுப்படவே இரைந்துப் பேசியது.. இதெல்லாம் வெறும் ஒதுக்கத்தாலும், தம்பியின் புது மனைவி என்று வந்தவளை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதனால் மட்டுமா?

யோசிக்க யோசிக்க காலுக்கடியில் பனிக்கட்டி மிக விரைவாக உருகுவது போலவே உணர்ந்தான் விஷ்ணு. அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை. யோசித்து யோசித்து தலை பாரமானது தான் மிச்சம்.

விஷ்ணு அலுவலக வேலை முடிந்து வீட்டிற்கு வர இரவு நேரமாகி விட, வீட்டிற்கு வந்தவன் ஹால் சோபாவில் தலையைப் பின்னுக்கு சாய்த்தபடி அமர்ந்தான்.

உள்ளே மெல்லிய சத்தத்தில் தொலைக்காட்சியை ஓடவிட்டபடி, வாசலில் ஒரு செவியைக் கொடுத்தவாறு பார்த்துக் கொண்டிருந்த மயூரி, விஷ்ணு வந்ததை உணர்ந்து வெளியே வந்தாள்.

விஷ்ணு அயர்ச்சியுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. தன்னால் தானே அவன் இத்தனை நேரம் கழித்து வீட்டிற்கு வருவது. தன்னால் அவனுக்கு எத்தனை தேவையில்லாத கஷ்டம்? அவனிடம் சென்று இதமாக நாலு வார்த்தை பேச வேண்டும் போலிருந்தது. சோர்ந்த குழந்தையின் தலையை அதன் தாய் கோதிக் கொடுப்பது போல் அவன்

தலையைக் கோதி விட வேண்டும் போன்று அவள் மனதில் அடக்க முடியாமல் ஆவல் பிறந்தது.

தன் எண்ணம் போகும் போக்கைக் கண்டு அவளுக்கே பயம் வர, தலையை நன்றாக உலுக்கிக் கொண்டு 'உனக்கு அது மட்டும் தான் பாக்கி' என்று தன்னையே கடிந்துவிட்டு சற்று நேரம் அவனையே வேதனையுடன் பார்த்திருந்தாள் மயூரி.

அவனே அலுத்துக் களைத்து வீடு வந்து சேர்கிறான். அவனை நிம்மதியாக இருக்க விடாமல், இது சரியில்லை... அது சரியில்லை என்றால் அவனும் தான் என்ன செய்வான் பாவம். அதுவும் உடன் பிறந்த சகோதரனையே குற்றம் கூறினால் விஷ்ணுவிற்கு கோபம் வராதா என்ன? அது தான் இல்லாத வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு, கோபமாக சென்று விட்டான் என்று தானாகவே அவன் வெளியே சென்றதற்கு காரணத்தையும் கற்பித்துக் கொண்டாள் மயூரி.

மெல்ல அவன் முன்பு சென்று மயூரி தொண்டையைக் கனைக்க, அந்த சத்தத்தில் விழித் திறந்தவன் அவளைப் பார்த்து ஆச்சரியமானான்.

''என்ன மயூரி? மணி என்ன?'' மணியைப் பார்த்தவன், ''நீ இன்னும் தூங்காமல் என்ன செய்யற? நான் தான் எனக்கு வேலையிருக்கு. நீ படுத்துக்கோ என்று சொல்லிட்டு போனேனே? இன்னும் என்ன செய்யற?'' என்று கேட்டான்.

அவனுக்கு பதில் சொல்லாமல், ''நீங்க சாப்பிட்டீங்களா? வாங்க சாப்பிடலாம்'' என்றாள்.

'சாப்பிடலாமாவா?' கோபம் சுறுசுறுவென ஏற, ''நீ சாப்பிட்டியா?'' என வினவ, அவளின் மறுப்பான தலை

யசைப்பைப் பார்த்து, மேலும் கோபம் தங்கம் விலைப் போல் ஏறியது.

''உனக்கு கொஞ்சமாவது அக்கறை இருக்கா? இப்படியா இத்தனை நேரம் சாப்பிடாமல் இருப்பது? நேரத்திற்கு சாப்பிட வேண்டாமா? உடம்பு என்னத்துக்கு ஆகும்?'' சத்தம் அதிகம் வெளியே வராவிடினும் அவனுடைய கோபம் நன்கு வெளிப்பட்டது.

அதைக் கண்டவளுக்கு, ஏற்கனவே பசியிலும் உடல் அசதியிலும் வாடியிருந்த முகம் மேலும் வாட்டமுற கண்கள் லேசாக கலங்கியது. அதை அவன் காணா வண்ணம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஆனால் விஷ்ணு அதை கவனித்து விட, அவனுக்கும் ஒரு மாதிரி போய்விட்டது.

கோபம் இருந்த இடம் தெரியாமல் போக, குரலைத் தணித்து, ''சரி! வா! சாப்பிடலாம்'' என்று அழைத்தான்.

'எனக்கு ஒண்ணும் வேண்டாம். நீங்க போய் சாப்பிடுங்க' என்று சொல்வது போல் மயூரி நின்றுக்கொள்ள, அதைப் பார்த்த விஷ்ணுவிற்கு சிரிப்பு வந்தது.

அதை மறைத்துக் கொண்டு, ''ஹ்ம்ம்... வயிற்றில் எலி வாலிபால் விளையாடுது. என்ன செய்ய? ஓ.கே. குட் நைட் மயூரி...'' என்று கிளம்புவது போல் பாசாங்கு செய்தான்.

''ப்ச்... சாப்பிட வாங்க'' என்றுவிட்டு உணவு பரிமாறச் சென்றாள்.

''நீயும் உட்கார் மயூரி. ஒரே வேலையாப் போகட்டும். இப்போவே மணி ஆச்சு பாரு'' என்று அவளுக்கும் ஒரு தட்டை எடுத்து வைத்தான்.

உட்கார்ந்து கொண்டே, ''அதை கொஞ்சம் கோபம் இல்லாமல் தான் சொன்னால் என்னவாம்? அப்பா... என்ன கோபம் வருது?'' என்று கேட்டாள் மயூரி.

''கோபத்துக்கு வகை எல்லாம் இருக்கா என்ன? எனக்குத் தெரியாதே?''

மயூரி, ''ம்ம்.. இருக்கே. இப்போ வந்த கோபம் ஒரு வகை. சாயங்காலம் வந்த கோபம் வேற வகை கோபம்'' எனவும், ''இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று கண்டுபிடிச்சியா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் தட்டில் இன்னும் சிறிது காயை எடுத்து வைத்தான் விஷ்ணு.

''ப்ச்... எனக்கு என்ன தெரியும்?''

சில நொடிகள் மௌனமாக உணவுண்டவள் மெதுவாக, ''சாயங்காலம்... என் மேல உங்களுக்கு ரொம்பக் கோபமா?'' என்று மொட்டையாகக் கேட்டாள்.

அதற்கு மேல் இப்போது அதை விவரித்துக் கூற மயூரிக்கும் விருப்பமில்லை. ஏன்? என்று கேட்க விஷ்ணுவிற்கும் தோன்றவில்லை. இப்போதிருக்கும் நல்ல சூழலைக் கெடுத்துக் கொள்ள இருவருக்குமே துணிவில்லை என்பது தான் உண்மை.

ஒரு வாய் நீரைப் பருகியவன் இவளிடம் என்ன சொல்வது என்பது போலப் பார்த்தான். மயூரியின் மீது அப்போது அவனுக்குக் கோபமே வரவில்லையே. ஏன் அப்படிச் சொல்கிறாள் என்று எண்ணத் தானே தோன்றியது. இப்போது தான்... அதுவும் அவள் இன்னமும் உணவு உட்கொள்ளவில்லை என்றுணர்ந்த பின்பு தான் கோபம் வந்ததே.

அதை அப்படியே கூறாமல், ''இல்லை மயூரி. எனக்கு ஒரு கோபமுமில்லை. இப்போ தான் நீ சாப்பிடாமல் காத்திருக்கிறதைப் பார்த்து தான் கோபம்'' என்று புன்னகைத்தான்.

''கோபமில்லாமல் தான் நான் ரெண்டு தடவை போன் செய்த பிறகு கூட நீங்க போன் எடுக்கவே இல்லையோ? வித்தியாசமாகத்தான் உங்க கோபத்தைக் காட்டறீங்க?'' என்றாள்.

மயூரி தன்னை அழைத்தாள் என்பதிலேயே மகிழ்ந்தவன், விரிந்த சிரிப்போடு, ''என் செல் என்னிடமில்லை மயூரி, வீட்டிலேயே வச்சுட்டுப் போயிட்டேன் போல. சைலண்ட் மோடில் இருந்தது. அதனால் உனக்கும் கேட்டிருக்காது. செல் எடுக்கலை என்றால் என்ன? ஆபீசுக்கு கூப்பிட்டிருக்க வேண்டியதுதானே?'' என்றான்.

''உங்களுக்குத் தான் ஆபீசுக்குக் கூப்பிட்டால் பிடிக்காது என்று உங்க அம்மா சொன்னாங்களே? கோபம் வந்துட்டா... இப்ப தான் ஒரு சாம்பிள் பார்த்தேனே?''

''என்னால் உன்னிடம் கோபப்பட முடியுமா மயூரி?'' என்று மென்மையாகக் கூறியவன், அவளின் முக மாறுதலினால் பேச்சை மாற்றும் விதமாக, ''சாப்பாடு உள்ளே போனதும் பேச்செல்லாம் நல்லா பலமா வருது போல உங்களுக்கு?'' என்று கிண்டலடித்தான் விஷ்ணு.

''உங்களுக்குக் கூட எலி வாலிபால் ஆட்டத்தை நிறுத்தியதும் கோபம் எல்லாம் பறந்துடுச்சு போல?'' என்று மயூரி பதிலுக்கு வினவவும் மீண்டும் இருவரும் சிரித்தனர்.

சாப்பிட்டு முடிந்து மேஜையை இருவருமாகச் சுத்தம் செய்து, உள்ளே எடுத்து வைப்பதில் மயூரிக்கு உதவியவன், இரவு நெடு நேரமாகி விட்டது என்பதையும் மறந்து அவளுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருந்தான்.

அவனின் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியை அவனும், அவளின் கோயம்பத்தூர் கடையில் நடந்தவைகளை அவளும் சுவைப்பட கூறினார்கள்.

மயூரி கொட்டாவி மேல் கொட்டாவி விடுவதைப் பார்த்தவனுக்கு அப்போது தான் என்ன நேரமென்று நினைவு வந்தது.

''அச்சோ... சாரி மயூரி! உன்னைத் தூங்கச் சொன்ன நானே இப்போ உன்னை இத்தனை நேரம் தூங்க விடாமல் செய்துட்டேன் போ! போய் படு. சாரி'' என்று திரும்பவும் மன்னிப்பு கேட்டான்.

''என்னை நீங்க என்ன வேண்டா வெறுப்பாகவா உட்கார்த்தி வச்சிருந்தீங்க?'' என்று போகிறப் போக்கில் சொல்லிவிட்டு மயூரி சென்றுவிட, அதை எப்படி எடுத்துக் கொள்வதென்று தெரியாமல் திண்டாடியது விஷ்ணுதான்.

புன்னகையுடன் விஷ்ணு உறங்கிவிட காலையில் தொலைபேசி அழைத்த ஒலியில் தான் அவன் விழித் தெழுந்ததே.

தூக்கக் கலக்கத்தோடு விஷ்ணு, ''ஹலோ'' என்பதற்கு பதிலாக, வைபவ், ''ஹலோ விஷ்ணு! என்ன இன்னும் தூக்கக் கலக்கம் போகலையா? இன்னைக்கு ஹைதராபாத் பார்ட்டி கூட புது காண்ட்ராக்ட் சைன் செய்யணும். மறந்துடுச்சா?'' என்று வினவினான்.

அரக்கப் பரக்க எழுந்த விஷ்ணு, ''ஒஹ்... ஷூட்! நைட் ரொம்ப நேரம் மயூரிக்கூட பேசிக்கிட்டு இருந்ததில் படுக்க ரொம்ப லேட்டா ஆயிடுச்சு வைபவ். நல்லவேளை நீயாவது இப்போ போன் பண்ணின. இதோ... ஜஸ்ட் அரை மணி நேரத்தில் நான் அங்கே இருப்பேன்'' என்று உரையை முடித்தான்.

அந்தப் பக்கத்திலிருந்த வைபவிற்கு, முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு போனையே வெகு நேரமாக வெறித்தவன், ''ரொம்ப

நேரம் பேசியிருப்பாங்க... பேசியிருப்பாங்க...'' என்று முணுமுணுத்தான்.

ஒரு வேளை மயூரி ஏதாவது போட்டுக் கொடுத்திருப் பாளோ? ஆனால் அவள் ஏதும் கூறியிருந்தால் விஷ்ணு இப்படியா சாதாரணமாகப் பேசுவான்?

மண்டைக் குடைய விஷ்ணுவிற்கு மீண்டும் போன் செய்ய, அங்கே வீட்டில் விஷ்ணுவை மயூரி கிண்டல் செய்து கொண்டிருந்தாள்.

''விஷ்ணு! நீங்க இப்படியே காண்ட்ராக்ட் சைன் செய்ய போங்க... அவங்க எல்லாம் அப்படியே ஓடப் போறாங்க'' என்றாள்.

''ஏன்?'' புரியாமல் விஷ்ணு கேட்க, ''இப்படி சட்டை பட்டனை மாத்தி மாத்தி போட்டால்? இது கூட சரியா செய்யத் தெரியாதவங்ககிட்டேயா ப்ராஜெக்டைக் கொடுப்பாங்க?'' என்று கேலி செய்தாள்.

''உனக்கு ரொம்ப வாய் ஆயிடுச்சு. இப்பத்தான் கொஞ் சம் கொஞ்சமா வால் வெளியே தெரிய ஆரம்பிச்சிருக்கு போல?'' என்று சிரித்துக் கொண்டே போனை எடுத் தான் விஷ்ணு.

விஷ்ணு போன் ரிசீவரை எடுத்ததை உணராமல், ''பட்டனை ஒழுங்கா போடச் சொன்னால் வாய், வால் என்று பேசிக்கிட்டு?'' என சொல்லி மயூரி வெள்ளிச் சலங்கையாய் சிரித்தாள்.

மயூரி சிரிக்கும் சத்தம் வைபவின் செவியிலும் விழ, அவன் சீக்கிரமே ஒரு புதிய பல் செட்டிற்கு ஆர்டர் கொடுக் கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

''என்னடா? இன்னும் பேச்சும் சிரிப்பும்? எல்லோரும் இங்கே உனக்காகக் காத்திருக்காங்க'' பட்டென்று சொல்லி போனை வைத்தான் வைபவ்.

விஷ்ணு போனை சில நொடிகள் விசித்திரமாகப் பார்த்தவன், மயூரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

ஒப்பந்தம் கையெழுத்தாகி முடித்ததும் வைபவ் வீட்டிற்கு வந்தான்.

விஷ்ணுவுடன் தனியாக பேச சந்தர்ப்பம் கிடைத்தால் உண்மையை உளறிக் கொட்டவும் வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் முக்கியமான காரணம். முதல் நாள் மயூரியும், விஷ்ணுவும் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால்... பொறுக்கவே முடியவில்லை.

வைபவ் படிகளில் ஏறும் பொழுது மயூரி அவளது அறையில் இருந்து வெளியே வருவதைப் பார்த்ததும் அவனின் கால்கள் அவளை நோக்கி முன்னேறின.

சுற்றிலும் யாரும் இல்லாமல் இருக்கவும் உள்ளேயிருக்கும் சாத்தான் விழித்துக் கொள்ள, ''என்னம்மா மயூரி! சொன்னால் கேட்க மாட்டியா நீ? பேசாமல் வீட்டை விட்டு ஓடிப் போயிடு என்று சொன்னாலும் கேட்காமல்... அவனை வேலைக்குக் கூட வர விடாமல்... அப்படி என்னதான் பேசினீங்க ரெண்டு பேரும்?'' என்று அறிவு கெட்டத்தனமாகக் கேட்டான் வைபவ்.

அவனை இளக்காரமாகப் பார்த்தவள், ''கணவன் மனைவி பேசறதெல்லாம் உன்கிட்ட சொல்ல முடியுமா வைபவ்? உனக்கு கொஞ்சமாவது அறிவு வேலை செய்யுமென்று நினைச்சேன். ப்ச்... பட்... அந்தோ பரிதாபம்! உனக்கு அது இருந்தால்தானே வேலை செய்யும் என்கிறாயா? அதுவும் சரிதான்'' என்று அவனைத் தாண்டிச் செல்ல முயன்றாள் மயூரி.

''ஹே! என்ன திமிரா?'' என்று தன்னைத் தாண்டிச் செல்பவளின் கைகளைப் பற்றினான் வைபவ்.

மயூரியின் கண்கள் அக்னிப் பார்வையை வீச, ''கையை எடு! எடுடா!'' என்று அடிக்குரலில் கத்தினாள்.

அவளது பார்வையிலும், மிரட்டலிலும் அனிச்சையாய் கைகள் விலகினாலும் கண்களை உறுத்து விழித்தான் வைபவ்.

பயத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ''பெரிய உத்தமின்னு நினைப்பாடி உனக்கு?'' எனவும் கோபத்தின் எல்லைக்கே சென்றாள் மயூரி.

''அடி, கிடி'ன்னு சொன்னால் எல்லா பல்லையும் பேத்துடுவேன் ராஸ்கல். என்ன... கேட்க யாருமில்லைன்னு நினைச்சுக்கிட்டு இருக்கியா? செய்தது தான் செய்தே. இனியாவது என் கண்ணுல படாமல் எங்கேயாவது போய் ஒழி. தேவையில்லாமல் என் வழியில் குறுக்கிட்டால்... அப்புறம் நடக்கிறதுக்கு நான் பொறுப்பில்லை. விஷ்ணுவோட அண்ணன் என்பதற்காக மட்டும் தான் பார்க்கிறேன். இல்லைன்னா... ச்சீ... போயிடு'' பற்களுக்கிடையே வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள் மயூரி.

தூரத்திலிருந்து யாராவது பார்த்தாலுமே அவள் முகத்திலிருந்து எதையுமே கண்டு பிடிக்க இயலாது.

''கேட்க எத்தனைப் பேர் வர்றாங்கன்னு பார்த்துடலாமா ம-யூ-ரி?'' என்று வைபவ் மயூரியை நெருங்கவும், சினமேறிய கண்களுடன் நான்கடி பின்னே அறைக்குள் சென்றாள்.

''வைக்கிறேன்டி உனக்கு ஆப்பு. எங்கே அடிச்சா எங்கே வலிக்கும்னு எனக்கும் கொஞ்சம் தெரியும்'' என்று வீர வசனம் பேசியபடியே மயூரியை நெருங்க அருகில் இருந்த ஸ்டேண்டைப் பற்றிக் கொண்டு நின்றாள்.

அவள் முகம் ஆக்ரோஷத்தில் இருந்தது கூட வைபவைப் பின்னடையச் செய்யவில்லை. வைபவின் நோக்கம்

மயூரியை மீண்டும் வலையில் வீழ்த்துவது இல்லை. ஆனால் அவளை வீட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும். இதுவரை எதுவும் வேலைக்கு ஆகவில்லை. இனியும் விட்டு வைத்தால் நிம்மதி நிலைக்காது.

வைபவ் பக்கத்தில் நெருங்கவும் கண் இமைக்கும் நேரத்தில் ஸ்டேண்டில் இருந்த தந்தத்தினால் ஆன மீரா சிலையை எடுத்து அவன் தலையில் பலங்கொண்ட மட்டும் அடித்துவிட்டு, ''நீ ஆப்பாது வை. இல்லை ஆப்பமாவது வை. ஐ டோன்ட் கேர் எனி மோர். கோடு ஹெல்'' என்று குரலை உயர்த்தி கத்திவிட்டு ஸ்டேண்டை அப்படியே அவன் மீது சரித்தாள்.

ஆனால் அவள் குரலைத் தாண்டி, ''அம்மா!'' என்ற வைபவின் அலறலும் அதைத் தொடர்ந்து 'நங்' என்று மார்பிள் தரையில் சிலை உடைந்த சத்தம் மற்றும் ஸ்டேண்ட் சரிந்த சத்தமும் வீடெங்கும் ஒலித்தது.

13

மயூரிக்கு முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட கால்கள் வேரோடி நின்றிருந்தாள்.

அலறல் சத்தம் கேட்டு விசாலாட்சி அம்மா, ''என்ன ஆச்சு?'' என்று உரக்கக் கேட்டபடி வரவும் தான் சுய நினைவை எட்டினாள்.

படிகளில் ஏறி வரும்பொழுதே சத்தமாக, ''வேலம்மா! இங்கே இந்த பூந்தொட்டியில் இருந்து தண்ணீர் வடிஞ் சுட்டே இருக்கு பாருங்க. அதைத் துடைக்க ஏற்பாடு செய்யுங்க. வழுக்குது'' என்று சொல்லியபடியே வந்தார்.

வைபவ் அடிபட்டு கிடப்பதைப் பார்த்ததும் தான் மயூரி அதிர்ச்சி அடைந்திருக்கிறாள் என்ற மனப்பான்மையில் துரிதமாக அடுத்தக்கட்ட வேலைகளில் இறங்கினார் விசாலாட்சி.

அன்று தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற மயூரி இன்று கட்டுப்பாடின்றி கொலை முயற்சியில் இறங்கியிருக்கிறாள். தற்காப்பிற்காக என்றாலும் ஓர் உயிர் எனும் போது குற்ற உணர்ச்சி எழ, அந்தக் குற்ற உணர்ச்சிக்குப் பிராயச்சித்தமாக விசாலாட்சியுடன் செயல்பட்டாள் மயூரி.

மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் விஷ்ணுவிற்கு தகவல் சொன்ன மயூரிக்கு விஷ்ணுவின் முகத்தைக் கண்ட பிறகு தான் உலையாய் இருந்த மனம் சிறிதாவது ஆறுதல் அடைந்தது.

''விஷ்ணு! எனக்கு ரொம்ப பயமா இருக்கு'' என்று கண்கள் பனிக்கச் சொன்ன மயூரியின் தலையை ஆறுதலாக தடவினான்.

அவனது தொடுகை மிகுந்த ஆறுதலைத் தர அவனது இடக்கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள் மயூரி.

சில்லிட்ட கரங்களை உணர்ந்து விஷ்ணு அழுத்தவும், அங்கே வந்த விசாலாட்சி, ''விஷ்ணு! வந்துட்டியா? வைபவ்க்கு டாக்டர்ஸ் தையல் போட்டுட்டு இருக்காங்கப்பா. கொஞ்சம் ரத்த சேதம் நிறைய தான் ஆகியிருக்கு. உன் ரூமில் ஏதோ எடுக்கப் போயிருந்தானாம். கண்ணை முன்னாடி வச்சு நடந்தால் தானே? எங்கேயோ பார்த்துக் கிட்டு நடந்தால்... இப்படிதான். ஆனா எப்படி தான் ஸ்டேண்டில் போய் முட்டிக்கிட்டானோ தெரியலை? அவனுக்கு அடிபட்டதைப் பார்த்து நம்ம மயூம்மா தான் பேயறைஞ்ச மாதிரி ஆகிட்டாள். நல்லவேளை நீ

வந்த...'' என்றபடி அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்
தார்.

''மயூரி! ரத்தத்தைப் பார்த்து பயந்துட்டியா?'' என்று
மெல்லிய குரலில் விஷ்ணு கேட்கவும் இடமும் வலமு
மாக தலையசைத்தாள் மயூரி.

'எப்படிச் சொல்ல முடியும்? நான் தான் வைபவைத்
தாக்கினேன் என்று...' எண்ணம் ஓட மௌனமாக இருந்
தாள். கண்களில் கலக்கம் அதிகமாக, கண்ணீர் சுரந்தது.

''விஷ்ணு! அதை ஞாபகப்படுத்துற மாதிரி எதுவும்
பேச வேண்டாம். அவ ரொம்ப அரண்டு இருக்கா.
வீட்டுக்குக் கூட்டிட்டுப் போ!'' என்றார் விசாலாட்சி
மயூரியின் மீது எழுந்த அக்கறையின் விளைவாக.

விஷ்ணு, ''அம்மா! நீங்க எப்படி தனியா சமாளிப்
பீங்க? வேண்டாம்மா. நீங்க டென்ஷனாக வேண்டாம்.
நான் இருக்கேன். நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க. நான்
இருந்து வைபவைக் கூப்பிட்டு வரேன்'' என்று சொல்
லவும் மயூரிக்கு மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது.

நம்மால் எத்தனை தொந்தரவு? விசாலாட்சி அம்மாவின்
உடல்நிலை கொஞ்சம் தேறி வரும் பொழுது இப்படிக்
கட்டுப்பாடு இல்லாமல்... ச்ச! தேவை தானா? விசா
லாட்சி அம்மா அப்பாவியாக வைபவ் அடிபட்டதுக்கு
தன்னை தொடர்பு படுத்திப் பார்க்கவில்லை. ஒருவேளை
சந்தேகம் எழுந்திருந்தால்...?

தலையை உலுக்கிக் கொண்டாள் மயூரி.

''என்ன மயூரி?'' என்று விஷ்ணு விசாரிக்கவும்,
''இல்லை... நீங்க... உங்க... தனியா...'' என்று திக்கினாள்.

விசாலாட்சி அம்மா, ''விஷ்ணு! இப்போதைக்கு
வைபவை விட மயூரிக்கு ஆறுதல் சொல்றது தான்

முக்கியம். நீ வந்த பிறகு தான் மயூம்மா கொஞ்சமாவது
நார்மலா இருக்கா. நானும், காமாட்சியம்மாவும் இங்கே
இருக்கோம். இன்னும் ஒரு மணி நேரத்தில் கொஞ்சம்
டெஸ்ட் எல்லாம் எடுத்துட்டு நம்ம டிரைவர் செந்தில்
கூட வீட்டுக்கு வந்துடறோம்'' என்று எடுத்துச் சொல்லி
மற்ற இருவரையும் வீட்டிற்கு செல்லப் பணித்தார்.

இருவரும் இறங்கி வந்த பொழுது வங்கி மேலாளர்
நல்லசிவம் அவரது நண்பருடன் எதிர்சாரியில் வர, மயூரி
விஷ்ணுவின் கரங்களைப் பற்றிக் கொண்டு அதிர்ந்த
முக பாவனையுடன் நின்றாள்.

ஒன்றும் புரியாமல், ''என்னாச்சு மயூரி?'' என்று
வினவியவன் மயூரியின் கண்கள் நிலைத்த இடத்தில்
பார்வையைச் செலுத்தினான்.

நல்லசிவத்தைப் பார்த்து தான் அதிர்ச்சி போல என்று
நினைத்தவன், இவர்களை நோக்கி வந்தவர்களைப்
பார்த்து பரிச்சயமான புன்னகை உதிர்த்தான்.

நல்லசிவம் உடன் வந்தவர் மயூரியை உற்று நோக்
கியபடியே, ''என்னம்மா நீ நம்ம ரமணி... இல்லை... சுப்ர
மணியம் பொண்ணு மரிக்கொழுந்து தானே?'' என்று
நெற்றியை தேய்த்தபடி வினவினார்.

கடவுளே! இவர் மறதி என் பெயரளவில் தானா
இருக்க வேண்டும்? என்னையே மறந்திருக்கக் கூடாதா?
புது பிரச்சனை கிளம்புகிறதே?

''ஹி ஹி. நல்லாயிருக்கீங்களா மாணிக்கம் மாமா. நான்
மயூரி. என் பெயரை மறந்துட்டீங்களா?'' என்று அதிர்ச்
சியை மறைத்து வினவினாள்.

''எங்கேம்மா? இந்த மறதி மட்டும் என் கூடப் பிறந்த
பிறப்பாயிடுச்சு. நல்லாயிருக்கியா? நீ எங்கே சென்னைப்

பக்கம்? கோயம்புத்தூரில் இருந்து ஏதாவது வேலை விஷயமா?'' என்றார் மாணிக்கம் சிறிது குழப்பத்துடன்.

''உன் மறதிக்கு ஒரு அளவே இல்லாமல் போயிட்டு இருக்கு மாணிக்கம். அந்த பெண்ணை கல்யாணம் பண்ணி கொடுத்திருக்கிறது சென்னையில் தானே?'' என்று தனக்குத் தெரிந்த விவரத்தைச் சொன்னார் நல்லசிவம்.

மயூரிக்கு அப்படியே மாயமாய் மறைந்துவிட முடியாதா என்றிருந்தது.

''கல்யாணமா?'' என்று மீண்டும் மாணிக்கம் குழப்பத்துடன் வினவ, ''ஆமாம்ப்பா. மயூரியோட கணவன் இதோ இங்கிருக்கிற விஷ்ணு தான். என்னாச்சு விஷ்ணு ஆஸ்பத்திரி வரைக்கும்?'' என்றார் நல்லசிவம்.

வைபவிற்கு அடிபட்ட விவரம் தெரிந்ததும் மாணிக்கமும், நல்லசிவமும் விசாலாட்சியைப் பார்த்து வைபவ் பற்றி விசாரித்துவிட்டுச் செல்வதாக விடைபெற்றனர்.

அவர்கள் சென்று விடவும் மயூரியிடம் மெல்லிய குரலில், ''அவர்... அந்த மாணிக்கம் ரொம்ப நெருங்கின சொந்தமா மயூரி?'' என்று வினவினான்.

மயூரி ஆமோதிப்பாகத் தலையசைத்து, ''பக்கத்து ஊர் கொஞ்சம் நெருங்கின சொந்தம்'' எனவும், ''சரி வா. ஆக வேண்டியது என்ன அப்படின்னு யோசிக்கலாம்'' என விஷ்ணு சிந்தனையுடன் நடந்தான்.

''உங்க வீட்டுக்கு நீயே போன் பண்ணி மாணிக்கம் மாமாவைப் பார்த்தேன்னு சொன்னால்?'' என்று விஷ்ணுவின் முதல் யோசனையைக் கேட்டவளின் முகம் இருண்டது.

''வேற வினையே வேண்டாம். எங்கப்பா குதிருக்குள் இல்லைன்னு சொல்ற மாதிரி தான். இவரை நாங்க 'மறதி'

மாணிக்கம்னு தான் சொல்றது. அவரே வீட்டுக்கு போன் செய்ய மறந்தால் நல்லாயிருக்கும். நானே மாமாவைப் பார்த்தேன் என்றால்... அப்பாவே அவருக்கு போன் செய்து விவரம் கேட்பாங்க'' என்று உடைந்து விடும் குரலில் கூறினாள் மயூரி.

ஆறுதலையும் தாண்டிய பேச்சு மயூரிக்கு இப்பொழுது தேவையாய் இருந்ததை உணர்ந்திருந்தான் விஷ்ணு.

''இப்போ மதில் மேலே இருக்கிற பூனை இந்த பக்கம் குதிக்குமா அந்தப்பக்கம் குதிக்குமா மாதிரி நிலைமை. அதனால் நம்ம பூனை குதிச்சதுக்கு அப்புறம் யோசிக்கலாம். இப்போ யோசிச்சால் தேவையில்லாத மனக்குழப்பம் தான்.'' என்று 'எண்ணத்தை ஒதுக்குவது தான் நல்லது' என்ற அர்த்தத்தில் சொன்னான்.

மயூரியின் கலக்கம் சிறிதும் குறையாமல் இருக்கவும் காரை எடுப்பதற்கு முன், ''மயூரி! ரொம்ப அப்செட்டா இருக்கும் போது யோசிச்சால் எல்லாமே பூதாகரமா இருக்கும். ரிலாக்ஸ்.'' என்று சமாதானமாகச் சொன்னான் விஷ்ணு.

வைபவின் பேச்சை நான் எப்போதும் போல் அசட்டை செய்து நகர்ந்திருக்க வேண்டும். இப்படியா அவன் மண்டையை உடைத்து வன்மம் தீர்ப்பது?

வன்முறையின் துணையை நாட விருப்பமிருந்தால் பார்த்த நொடியிலேயே அந்த வைபவைக் கொன்று போட்டிருக்க வேண்டும். சட்டத்தின் துணையை நாடவும் தெம்பில்லை. ஏன் இப்படி ஏன் முடிவில் தெளிவில்லாமல் தவிக்கிறேன்? இதற்கு ஒரு முடிவே இல்லையா? இன்னும் ஏன் சோதனை?

மயூரியின் மனம் ஊமையாய் அழுதது.

அவளின் மௌனம் விஷ்ணுவைப் பாதிக்க, ''மயூரி! எதுவா இருந்தாலும் வெளியே கொட்டிடு. மனசுக்குள்ளேயே வைச்சு புழுங்கிட்டு இருந்தால் தேவையில்லாத சந்தேகம் தான் எழும்.'' என்று சொல்லிவிட்டு தலையைக் கோதிக் கொண்டான்.

மயூரியிடம் விஷ்ணு சொன்னதுக்கும் எந்த சலனமும் இல்லை. கண்கள் ஒரு இடத்தில் நிலைக்க சொல்வதறியாது இருந்தாள்.

''நம்ம வேணா ராம் வீட்டுக்குப் போகலாமா மயூரி? இடம் மாறுதல் இருந்தால் மனசுக்கும் கொஞ்சம் டைவர்ஷன் கிடைக்கும்'' என்று காரணம் சொல்லி வினவினான்.

அவசரமாக, ''இல்லை விஷ்ணு வேண்டாம்.'' என்று மறுக்கும் பொழுதே மயூரிக்கு செல்போனில் அழைப்பு வந்தது.

தெரியாத எண்ணிலிருந்து அழைப்பு வரவும் அதை விஷ்ணுவிடம் சொல், ''எடுக்காதே! ஒருவேளை மாணிக்கம் மாமா சொல்லி வீட்டில் இருந்து பேசறாங்களா? இன்னொரு முறை போன் செய்தால் எடுத்துப் பேசு.'' என்று சொன்னான்.

''கடவுளே! அவர் மறக்கணும்னு நினைச்சுட்டே இருந்தேன். ஆனால் நேரம் ஆனால் மறந்துடும்னு உடனே போன் செய்து சொல்லிட்டாரோ என்னவோ?'' என்று புலம்பினாள்.

''மயூரி! தேவையில்லாமல் எந்த ஒரு விஷயத்துக்கும் இப்படித்தான் இருக்கும் என்று நீயே கற்பனை செய்துக் காதே. ஒருவேளை வேற யாராவது கூட போன் செய்திருக்கலாம். நான் என்னுடைய யூகத்தை தான் சொன்னேன்.''

கற்பனை செய்துக்காதே! ஓ! இதுவும் சரி தானே. வைபவைப் பற்றி சொன்னால் விஷ்ணு நம்ப மாட்டான்

என்று நான் தானே கற்பனை செய்து மறைக்கிறேன். ஒருவேளை விஷ்ணு நம்பினால்?

மயூரியின் எண்ணாம் இப்பொழுது வேறு திசையில் பாய்ந்தது.

நம்பினால் என்ன நடக்கும்? வைபவுடன் தகராறு நடக்கலாம். அறிவுரை சொல்லலாம். புதிய குழப்பங்கள், தேவையற்ற மன உளைச்சல்...

இதெல்லாம் தேவையா? இன்னும் சில மாதங்களில் இந்த திசைக்கே கும்பிடு போட்டுவிட்டு செல்லப் போகிறேன். தேன்கூட்டில் கல் எடுத்து வீசி கலைப்பது போல உண்மையை சொல்லி இவர்களுக்கிடையே நிலவும் ஒற்றுமையை குலைக்க வேண்டுமா? மகன்களின் ஒற்றுமையை எண்ணி விசாலாட்சி மிகவும் சந்தோஷப் பட்டு கொண்டிருக்கிறார்.

மீண்டும் மயூரியின் செல்போன் அதே எண்ணிலிருந்து அழைப்பு வந்து ஓசை எழுப்பியது.

விஷ்ணு ''எடுத்துப் பேசு!'' என்று சொல்ல மயூரி தயக்கத்துடன், ''ஹ... லோ!'' என்றாள்.

மறுமுனையில், ''மயூரியா? நான் சுமதி பேசறேன் மயூரி,'' என்று கேட்கவும் தான் நிம்மதி பிறந்தது மயூரிக்கு.

''ம். சொல்லு சுமதி எப்படி இருக்கே?'' என்று குரலில் உற்சாகத்தை வரவழைத்து வினவினாள்.

''ட்ராவலில் இருக்கியா மயூ? நான் அப்புறம் பேசவா?'' என்றாள் சுமதி.

''இல்லை சுமதி. சொல்லு என்ன விஷயம்? நான் கூட உனக்கு இரண்டு தடவை போன் செய்தேன். நாட் இன் யூஸ் அப்படின்னு வந்தது. நம்பர் மாத்திட்டியா?''

''ஆமாம் மயூ. அந்த போன் தொலைச்சுட்டேன். நம்பரும் அதோடயே போயிடுச்சு. புது போன் போனஸ்

பெயிட் மாறிட்டேன். மதர் நீ என்னை பார்க்க வந்ததா சொன்னாங்க. உன் நம்பர் கூட மதர் தான் கொடுத்தாங்க. என்ன விஷயம் மயூ?''

இப்பொழுது மீண்டும் தன் வரலாறை சொல்லும் மனநிலையில் இல்லை மயூரி.

''இல்லைடி. ஊட்டிக்கு வந்தேன். அதான் உன்னைப் பார்க்கலாம்னு... சரி என்ன விஷயம்? இன்னும் ஒரு மாசம் இருக்கா ட்ரைனிங்கில்?''

சுமதி மருத்துவமனையில் லேப் டெக்னீஷியனாக பணியாற்றுகிறாள். புதிதாக ஒரு கருவி மருத்துவமனையில் வாங்கவிருப்பதால் ஊட்டியில் இருந்து சென்னைக்கு அது தொடர்பான இரண்டு மாதம் பயிற்சிக்காக, தன் இரண்டு வயது மகன் அபிஷேக்கை ஆஸ்ரமத்திலேயே விட்டுவிட்டு வந்திருந்தாள்.

''ஆமாம் மயூ. ட்ரைனிங் எல்லாம் ஓரளவு முடிஞ்சது. இந்த வாரம் தனி ப்ராக்டிஸ் இருக்கு. அது முடிஞ்சதும் ஊட்டிக்கு கிளம்ப வேண்டியது தான். அபிஷேக்கைப் பார்க்கணும் போல இருக்கு.''

''அங்கே ஆஸ்ரமத்திலேயே தானே சுமதி அபிஷேக் இருக்கிறான்?''

''ஆமாம் மயூ. அவனுக்கு மூணு வயசு ஆனதும் ஆஸ்ரமத்தில் இருந்து வெளியே வர வேண்டியதா இருக்கும். அப்புறம் எப்படி சமாளிக்கப் போறேன்னு தெரியலை.'' என்று குரல் கலங்கியது சுமதிக்கு.

அந்த நேரத்தில் சுமதிக்கு தேவையான தெம்பை மயூரி தான் பேச்சின் மூலம் அளித்தாள்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, ''சரிடி, நான் சொல்ல வந்தது ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி

உன்னுடைய கருத்து வேணும். யார்கிட்டயும் ஷேர் பண்ண முடியலை. அதான்.'' என்று தொடங்கி டிஸ்கஸ் செய்ய முடியலை. அதான்.'' என்று தொடங்கி இடைவெளிவிட்டு, ''இங்கே ஆஸ்பத்திரிக்கு வர ஒருத்தர் என்னை கல்யாணம் செய்துக்க விருப்பப்படறார் மயூ. நான் எவ்வளவோ மறுத்தும்.... பச்! ஒரு மாதிரி குழப்பத்தில் இருக்கேன். அவர் சொல்றதும் ஒரு வகையில் ஏத்துக்கிற மாதிரி இருக்கு. இன்னொரு வகையில் நான் ஏதோ கிருபாகரனுக்கு செய்யற துரோகமா இருக்கு...'' என்று முக்கியமான விஷயத்தைப் பகிர்ந்தாள் சுமதி.

''சுமதி! ஆஸ்பத்திரிக்கு என்றால்?'' என வினவ, ''அவர்... அன்பரசு மெடிக்கல் ரெப் மயூ. அனுதாபம், புரட்சி எல்லாம் இல்லை. ரொம்ப விருப்பம்னு சொல்றார். என்னைப் பத்தி முழுசா தெரிஞ்சும் அதையே தான் சொல்றார். அவங்க அம்மா - அப்பா எல்லாம் வந்து என்னைப் பார்த்து பேசினாங்க மயூ.'' என்று விளக்கம் சொன்னாள் சுமதி.

ஒரு கேள்விக்கு நீண்ட விளக்கம் கொடுக்கும் பொழுதே சுமதியின் மனம் நடுநிலையாய் இருந்து யோசிக்க முடியாமல் இருப்பது புரிந்து மயூவுற்கு.

''உனக்கு என்ன தயக்கம் சுமதி?''

''என்னால் கிருபாகரனை எப்படி மறக்க முடியும் மயூ? அபிஷேக் நிலைமை என்ன?''

''கிருபாகரனை மறக்கணும்னு அன்பரசு சொன்னாரா சுமதி? அப்படியிருக்கும் போது நீயா ஏன் கற்பனை செய்துக்கறே? தேவையில்லாமல் எந்த ஒரு விஷயத்துக்கும் இப்படித்தான் இருக்கும்னு நீயே கற்பனை செய்துக்காதே!'' என்று சொல்லும் பொழுது மயூரியின் பார்வை சுமதி மீண்டது.

'இங்கே பாருடா! நம்ம சொன்னதையே மேடம் திருப்பி க்ளாஸ் எடுக்கிறாங்க.' என்று புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தான் விஷ்ணு.

''உன் மனதில் இருக்கிற நினைவுகள் பசுமையா இருந்தாலும் நிஜம் தான் நாளடைவில் மலர்ந்து மணம் வீசும் சுமதி. உடன்கட்டை ஏறின காலத்திலிருந்து பரி ணாமம் அடைஞ்ச விதவை மறுமணத்தை ஏத்துக் கணும்னு நினைக்கிற காலக்கட்டத்தில் இருக்கிறோம். நீ எடுக்கிற ஒரு முடிவு உனக்கு மட்டும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதா இல்லை. அபிஷேக்குக்கும் சந்தோஷம் கொடுக்கிறதா இருக்கணும்.''

மறுமுனையில் சுமதி பேசுவது எதுவும் விஷ்ணுவிற்கு தெரியவில்லை. ஆனால் மயூரியிடம் தான் பேசிய கருத் துகள் ஆழமாக பதிந்திருக்கின்றது. அதுவே நேர்மறை யான விஷயம் தான். கட்டாயம் மயூரியின் மாற்றம் தன் மனதின் விருப்பத்தை நிறைவேற்றும் என்று வர்ண கன வுகள் கண்டான் விஷ்ணு.

''மதர்கிட்ட அவரையும் அழைச்சுட்டுப் போய் பேச சுமதி. நீ விருப்பப்பட்டால் நானும் வந்து பேசறேன். உனக்கு சப்போர்ட்டுக்கு நாலு பேர் இருக்கிற மாதிரியும் தெரியணும். அவருக்காக மட்டுமில்லை. உனக்குமே அது மனசளவில் தெம்பா இருக்கும். கிருபாகரன் மட்டும் தான் உன்னுடைய தயக்கம் என்றால் யூ அல்ரெடி காட் மை ஆன்சர். அன்பரசு பத்தி தெளிவுப்படுத்திக்க ஏதாவது உதவி தேவைப்பட்டாலும் சொல்லு சுமா.'' என்று மிகத் தெளிவாக எடுத்து சொல்லிவிட்டு போனை வைத்தாள் மயூரி.

விஷ்ணு புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருப் பதைப் பார்த்துவிட்டு மயூரி புருவம்

அடிச்சான் காபின்னு சொல்லுவாங்க தெரியுமா? அதை இன்னைக்குத் தான் தெரிஞ்சுக்கிட்டேன்.'' என்று சொல்லி வாய்விட்டு சிரித்தான்.

மயூரி, ''ஆ விழுந்த காபியோ, விழாத காபியோ நல்லது நடந்தால் சரி தானே சார்?'' என்றதற்கு, ''நல்லது நடந்தால் ரொம்ப சரி மயூரி.'' என்று கண்கள் மின்னச் சொல்ல விசாலாட்சியும், மற்றவர்களும் மருத்துவமனை யில் இருந்து வீட்டை அடைந்திருந்தனர்.

போனில் நடந்த பேச்சு சுவாரஸ்யத்தில் இருவருக் குமே நேரம் போனதே தெரியவில்லை.

''என்னடா வீட்டுக்குள் போகாமல் காரிலேயே உட் கார்ந்த பேசிட்டு இருக்கீங்க?'' என்று விசாலாட்சி வின வியபடியே இறங்க, வைபவ் ஆத்திரத்துடன் காரில் இருந்து இறங்கி வந்தான்.

வைபவை தலையில் கட்டுடன் பார்த்ததும் அதுவரை மலர்ந்திருந்த மயூரியின் முகம் இருண்டது.

அவளது முகபாவனையை உள்வாங்கிய விசாலாட்சி யிடம், ''இல்லைம்மா. பேச்சில் நேரம் போனதே தெரி யலை.'' என்று விஷ்ணு விளக்கம் கொடுக்க, ''எனக்கு தலைவலியா இருக்கும்மா. நான் ரெஸ்ட் எடுக்கிறேன்.'' என்று மயூரி உள்ளே சென்றாள்.

14

வைபவ் அந்த சம்பவத்திற்குப் பிறகு இரண்டு நாட்களில் பெங்களூர் சென்றுவிட எந்தவித புது குழப்ப மும் இல்லாமல் தெளிந்த நீரோடையாய் வாழ்க்கை

இதோ இன்று விஷ்ணுவிற்குப் பிறந்தநாள்.

விஷ்ணுவின் மனம் ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. பிறந்த நாள் அதுவுமாக காலையில் இருந்து அணிவகுத்த நிகழ்வுகள் சந்தோஷமாக அமைந்த பொழுது ஆனந்தத்தில் திளைக்காமல் இருந்தால் தானே ஆச்சரியம்?

காலையில் விழித்த முதல் முகம் மயூரியோடது தான். மலர்ந்த புன்னகையுடன், ''இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் விஷ்ணு. இந்த வருஷம் உங்கள் கனவுகள் அத்தனையும் நினைவாக மனநிறைவோடு வாழ்த்து கிறேன்.'' என்று மயூரி சொன்னது இந்த கணம் வரை யிலும் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது-

வாழ்த்து அட்டையுடன் அவள் தந்த பிறந்தநாள் பரிசும் விஷ்ணுவிற்கு மிகவும் பிடித்தமாக அமைந் திருந்தது.

விஷ்ணுவின் எஸ். எல். ஆர் கேமராவிற்குப் பொருத்த மான ஃபில்டரை பிறந்தநாள் பரிசாகத் தந்தவள், ''உங்க போட்டோஸ் கலெக்ஷனில் சிலதில் கொஞ்சம் க்ளோர் ஜாஸ்தியா இருக்கிற மாதிரி இருந்தது. இந்த ஃபில்டர் யூஸ்ஃபுல்லா இருக்கும்னு நினைக்கிறேன். ஹோப் யூ லைக் இட்.'' என்று அதற்கான விளக்கம் சொன்னாள் மயூரி.

அவளுடைய வாழ்த்தும், பிறந்தநாள் பரிசும் திக்கு முக்காட வைத்தது என்றால், அதன் பிறகு மயூரி சொன்ன விஷயம் மேலும் உற்சாகமூட்டியது.

''இன்னும் ஒரு சர்ப்ரைஸ் உங்களுக்கு இருக்கு.'' என்று பீடிகை போடவும் விஷயத்தை யூகிக்கும் விதமாக, ''அதான் எக்ஸிபிஷன் பத்தி ரெண்டு

முன்னாடி சொன்னீங்களே மேடம்?'' என்று புருவம் உயர்த்தினான்.

''ஆமாம். எக்ஸிபிஷன் சம்பந்தமா தான். அதில் ஒரு குட்டி சர்ப்ரைஸ்.''

''நீயே சொல்லிடும்மா. உன்னுடைய கலையறிவுக்கு முன்னாடி என் கற்பனை எல்லாம் எடுபடாது.'' என்று சரணடைந்தான்.

''இன்னைக்கு நம்ம கண்காட்சிக்கு வர்றவங்க ரொம்ப பிடிச்சு இருக்கிற போட்டோவை டி ஷர்ட்டில் பிரிண்ட் பண்ணிக்கிற மாதிரி ஏற்பாடு செய்திருக்கேன். அவங் களோட போட்டோ வேணும்னு கேட்டால் கூட உங்களை வைச்சே உடனே போட்டோ எடுக்க வைச்சு செய்து கொடுத்துடலாம். டி ஷர்ட் என்று இல்லை. இந்த மாதிரி காபி கப், கீ செயின், தொப்பி, காலண்டர் எதுவா இருந் தாலும் விருப்பப்பட்ட மாதிரி வாங்கிக்கலாம் விஷ்ணு.'' என்று மயூரி சொன்ன பொழுது அவள் கண்களில் மின் னிய ஆர்வத்தை இமைக்காமல் ரசித்தான் விஷ்ணு.

அவனின் பார்வையை விகல்பமாக எடுத்துக் கொள் ளாமல், ''என்ன விஷ்ணு அப்படி பார்க்கறீங்க? இதெல் லாம் வர்றவங்க ரசிப்பாங்களான்னு யோசனையா இருக்கா? இந்த மாதிரி விஷயத்தில் ரொம்ப ஆர்வமா இருக்கிறது குட்டீஸும், காலேஜ் கூட்டமும் தான். ரெண்டு பேரை யும் வர வைக்கிற மாதிரி ஓரளவு ஏற்பாடு செய்தாச்சு. இன்னைக்கு நிறைய வேலை இருக்கலாம்.'' என்று மூச்சு விடாமல் பேசிக்கொண்டே சென்றாள்.

உதட்டில் புன்னகையை பெரிதாக்கிய விஷ்ணு, ''அம்மா உனக்கு பேசறதில் மட்டும் நல்லா ட்ரைனிங் கொடுத்திருக்காங்க போல? எதிர் சைடில் இருக்கிறவங்க பேச முடியாமல் எல்லாத்தையும்...'' என்று கேலியாகச்

சொல்ல வலது ஆள்காட்டி விரலை காட்டி மிரட்டலாக சைகை செய்தாள் மயூரி.

''எதுவும் பேசலைம்மா'' என்று அவளுடைய மிரட்டலில் வாய் மேல் விரல் வைத்து சொல்லவும், வாய் விட்டு சிரித்தாள் மயூரி.

அவள் சிரிப்பதே மிகவும் அபூர்வமானது தான். அதிலும் இன்று மிகவும் மலர்ந்த முகத்துடன் வாய் விட்டு சிரிக்கிறாள்.

எல்லா பரிசுகளையும் விட அவள் அப்பொழுது சிரித்ததை மிகப் பெரிய பரிசாக உணர்ந்தான் விஷ்ணு. அதை உணர்ந்தது மட்டும் இல்லாமல் வார்த்தைகளாலும் சுட்டிக் காட்டினான்.

''இப்போ நீ சிரிச்சது தான் மயூரி இன்னைக்கு எனக்கு கிடைச்சதிலேயே ரொம்ப பிடிச்ச கிஃப்ட். இதே மாதிரி அடிக்கடி இருக்கணும்'' என்று சொல்லும் பொழுதே மயூரியின் பார்வை கூர்மையாகவும் நகர்ந்து விட்டான்.

தொடக்கத்தில் கேலி பேசி சிரித்தால் கூட இரண்டு நாள் முகம் கொடுத்து பேசாதிருந்த மயூரியிடம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதல் இருந்ததை விஷ்ணுவால் உணர முடிந்தது. ஆனால் மாறுதல் இருந்தாலும் கேலி பேச்சில் கூட கற்பனை எல்லைக் கோடு நடுவில் இருக்கத்தான் செய்யும். பேச்சு வார்த்தையில் இரு தரப்பில் யார் மீறினாலும் மயூரி எளிதாக அனுமதிப்பது கிடையாது. இன்னும் மயூரி பார்வை ஆராய்வது போன்ற பாவனையில் இருக்கவும் நகர்ந்து விட்டான் விஷ்ணு.

காலை உணவை அருந்தும் பொழுதே விசாலாட்சியிடம் கண்காட்சியைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்துவிட்டு, ''எனக்கு அங்கே நிறைய வேலை இருக்கு

தும்மா. நான் விஷ்ணு கூடவே சீக்கிரம் கிளம்பிடறேன். நீங்க செந்தில் கூட வந்துடறீங்களா?'' என்று இயல்பாக வினவியதும் விஷ்ணுவிற்கு வியக்கத் தக்க விஷயமாய் அமைந்துவிட்டது.

இப்படி காலையில் இருந்து பலமுறை, ''வாவ்!'' என்று சொன்ன தருணங்களை அசைப் போட்டபடியே கண்காட்சி நடக்கும் இடத்திற்கு மயூரியுடன் பயணம் செய்துக் கொண்டிருக்கிறான் விஷ்ணு.

இருவருக்கும் இடையே சில நிமிடங்கள் நிலவிய அமைதியைக் கலைக்கும் விதமாக, ''என்ன பயங்கர யோசனையா இருக்கிற மாதிரி இருக்கு?'' என்றாள் மயூரி.

''ம் யோசனை தான். யோசனையில் தான் இருக்கேன்னு எப்படி கண்டுபிடிச்சே?''

''கொஞ்ச நேரம் எஃப். எம் ரேடியோ பாடாமல் இருந்தால் கரண்ட் இல்லைன்னு அர்த்தம். இதை கண்டுபிடிக்க தனியா எதுவும் கோர்ஸ் பண்ணனுமா என்ன?'' என்று கேலி செய்தாள் மயூரி.

விஷ்ணுவிடம் கேலி பேசுவதில் தயக்கம் எழுவதில்லை என்றாலும் இப்பொழுதெல்லாம் ஒருவித உற்சாகம் பிறப்பதையும் உணர்ந்தாள் மயூரி. அந்த உற்சாகம் மயூரியின் மன மாற்றத்திற்கு தேவையாகவும் இருந்தது.

மயூரியின் கேலிக்கு பலமாக சிரித்துவிட்டு, ''நைட் உன்னை வைபவ்க்கு விஷ் பண்ண எழுப்பலாம்னு பார்த்தேன்.'' என்று தொடர்பே இல்லாமல் சொன்னான் விஷ்ணு.

ஒருவேளை மனதில் எழுந்த துளி சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக வைபவ் பற்றிய பேச்சை எடுத்

திருந்தால் மயூரியின் பதில் வேறு மாதிரி இருந்திருக்கும். ஆனால் வைபவ் விஷயமாக இன்னும் ஒரு முறை விஷ்ணுவிற்கும், தனக்கும் இடையில் பிரச்சனை வருவதை மயூரி விரும்பவில்லை. வைபவ் அப்படித்தான் சில நேரங்களில் ஒதுக்கினாள்.. பல நேரங்களில் ஒதுக்கினாள்.

இப்பொழுதும் இருபொருள் பட, ''நைட் மட்டும் தான் விஷ் பண்ணனுமா என்ன அந்த.. உங்க அண்ணனுக்கு? நான் தான் பார்க்கும் போதெல்லாம் விஷ் பண்றேனே?'' என்று வாய் வார்த்தையில் சொல்லிவிட்டு, 'சமீபத்தில் கூட கோ டு ஹெல் என்று விஷ் செய்தேன்' என்று தனக்குள் குறித்துக் கொண்டாள் மயூரி.

விஷ்ணு மயூரியை கேள்வியாக நோக்கவும் சந்தேகம் வராத வகையில் திறமையாக மீதி பயணத்தில் பேச்சை மாற்றினாள்.

மயூரிக்கு மட்டும் தான் வைபவின் சுயரூபம் தெரியும். அதுவும் ஒரு வருடத்திற்கு குறைவாகத் தான் விஷ்ணுவுடன் ஒரே வீட்டில் தங்கப் போகிறாள். அப்படியிருக்கையில் எதற்காக சர்ச்சையை உருவாக்க வேண்டும்? எப்படியும் சட்டப்படி அவன் மீது நடவடிக்கை எடுக்கப் போவதில்லை. அந்த வைபவ் பிராயச்சித்தம் என்ற பெயரில் ஏதாவது நாடகம் ஆடினாலும் மயூரியின் மனம் இளகப் போவதில்லை. தனக்கு அடைக்கலம் கொடுத்த குடும்பத்தினரின் மன அமைதியை ஏன் குலைக்க வேண்டும்? அதுவும் விசாலாட்சியிடம் எப்படி சொல்ல முடியும்?

மயூரி வெளியில் கவனமாக வேலைகளைப் பார்த்தாலும் மனதில் சிந்தனையும் ஓடிக்கொண்டு தான் இருந்தது.

கண்காட்சி தொடங்கும் நேரத்தில் விசாலாட்சி தனது மூத்த மகன் வைபவுடன் வருகை தந்தார். விசாலாட்சியை எதிர்பார்த்தவளுக்கு வைபவும் வந்தது எரிச்சலை லேசாக தூண்டியது. ஆனால் அன்னப்பறவை எப்படி பாலையும், நீரையும் பிரித்து எடுக்குமோ... அதே மாதிரி சகோதரனின் கண்காட்சிக்கு வருகை தந்த சகோதரனைப் பற்றி பெரிதாக எந்த லட்சியமும் செய்யவில்லை மயூரி.

எப்பொழுதும் போல் மயூரியின் கோபம் ஏற்படுத்தும் தாக்கத்தை விட அலட்சியம் ஏற்படுத்திய தாக்கம் ஆத்திரத்தை வர வைத்தது வைபவிற்கு. முன் இருந்ததை விட மயூரியின் முகத்தில் பொலிவும், விஷ்ணுவிடம் அவள் காட்டிய நெருக்கமும் ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தன.

விசாலாட்சியிடம் தன் மகன் விஷ்ணுவின் புகைப்படங்கள் மட்டும் இல்லாமல் மயூரியின் ஏற்பாடும் சேர்ந்தே பாராட்டு பெற்றது.

எந்த ஒரு விஷயத்தையும் நேர்த்தியுடன் கூடுதல் கவனம் எடுத்து செய்யும் பொழுது எதிர்பார்த்ததை விட அதிகமாகவே வரவேற்பு இருக்கத்தானே செய்யும்? அதே மாதிரி தான்.... இங்கு விஷ்ணுவின் புகைப்படங்களை மயூரி அடுக்கி வைத்திருந்த விதம் கண்ணை கவரும் வகையில் இருந்தது.

''விஷ்ணு சும்மா ஏதோ விளையாட்டா கேமராவும், கையுமா சுத்திட்டு இருக்கான்னு நினைச்சேன் மயூம்மா. ஆனால் பாரு, நீ தான் அதை புரிஞ்சு அழகா ஏற்பாடு செய்து அவன் திறமையை ஊக்கப்படுத்தற மாதிரி செய்திருக்க. விஷ்ணு! மயூரி கிடைக்க நீ கொடுத்து தான் வைச்சிருக்கணும்'' என்று மனமார பாராட்டவும் வைபவின் மனம் உலைக்களமாய் கொதித்துக் கொண்டிருந்தது.

தாயின் பாராட்டில் உணர்ச்சிவசப்பட்ட விஷ்ணு, ''நீங்க சொல்றது சரிதான்மா. நானும் ஏதோ ஹாபி மாதிரி தான் போட்டோக்ராபியை நினைச்சுட்டு இருந்தேன். ஆனால் மயூரி இதை நெக்ஸ்ட் லெவலுக்கு எடுத்துட் டுப் போய் எனக்கு அங்கீகாரம் கிடைக்கிற மாதிரி செய் துட்டா. மயூரியோட க்ரியேடிவிட்டி எல்லா விஷயத் திலேயும் ஸ்பெஷல் தான்மா'' என்று கண்களில் காதல் மின்ன சொன்னான்.

வைபவ் பொறுக்க முடியாமல், ''ஹப்பா! முடிய லைடா சாமி. இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்க பாராட்டு மழையில் காதில் எனக்கு ரத்தம் வரப்போகுது.'' என்று சிரிப்பே வராமல் 'ஈ' என்று இளித்தபடி கமென்ட் சொன் னான்.

''உனக்கு என்னடா இவ்வளவு எரிச்சல்? நீயும் கல் யாணம் செய்துக்கோ. உன்னையும் பாராட்ட ஆள் கிடைச்ச மாதிரி இருக்கும்.'' என்று யதார்த்தமாக சொன்னார் விசாலாட்சி.

''பாராட்டு கிடைக்கலை என்றாலும் அட்லீஸ்ட் காதில் ரத்தம் வர்றதை துடைக்க காட்டன் சப்ளை செய்யறதுக் காவது உதவியா இருக்கும் வைபவ்.'' என்று விஷ்ணு தன் சகோதரனிடம் சிரித்துக் கொண்டே சொன்னான்.

விஷ்ணுவின் கேலியில் வைபவின் மூக்கு வலிக்கா மல் அறுபடவும் மயூரி நமுட்டுச் சிரிப்புடன் நகர்ந்தாள்.

அவள் சிரிப்பில் எரிச்சல் கொண்ட வைபவ் தனியாக சந்தர்ப்பம் கிடைக்க காத்திருந்தான்.

சற்று நேரத்தில் பார்வையாளர்கள் வர ஆரம்பிக்க, மயூரி விஷ்ணுவிடம் குறிப்பிட்டிருந்தது. போல் வேலைப் பளு அதிகமாக இருந்தது.

விசாலாட்சி கிளம்புவதற்கு முன், ''மயூரி ரொம்ப டயர்ட் ஆகிடப் போறா. நடுவில் ரெஸ்ட் எடுக்க சொல்லி கவ னிச்சுக்கோ. இன்னைக்கு சாயந்திரம் மயூரியை அழைச் சுட்டு பார்த்தசாரதி கோவிலுக்குப் போயிட்டு வா விஷ்ணு.'' என்று அறிவுறுத்திவிட்டுச் சென்றார்.

பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. முக்கியமாக கல்லூரி பருவத்தில் இருக்கும் மக்களிடம். குழுக்களாக வந்து ஒரே மாதிரியான புகைப்படத்துடன் பிரிண்ட் செய்த டி-ஷர்ட், கீ செயின் என்று விருப்ப மானதை வாங்கிக் கொண்டார்கள்.

ஓரளவு கூட்டம் குறைந்த பொழுது விஷ்ணு மயூரி யிடம், ''நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து இன்னைக்கு ஒரு போட்டோ கூட எடுத்துக்கலை மயூரி. இந்த ஸ்பெஷல் டே அன்னைக்கு நமக்கும் ஒரு ஞாபகார்த்தமா இருக் கட்டும்.'' என்று சொல்லி ராமிடம் ஜோடியாக படம் எடுக்கு மாறு கேமராவை நீட்டினான்.

இருவரின் முகமும் மலர்ந்து இருப்பதை கேமராவின் கண்கள் வழியாகப் பார்த்தாலும், ''டேய்! விஷ்ணு! அங்கே நடுவில் இருக்கிற கேப் என்ன குட்டி விஷ்ணுக்கும், குட்டி மயூரிக்குமா? இருந்தாலும் ரொம்ப முன் யோசனை தான்டா. கொஞ்சம் இன்னும் பக்கத்தில் வாங்க.'' என்று படுத்திக் கொண்டிருந்தான்.

கேமரா கையில் வந்தாலே 'இப்படி நில்லுங்க, அப்படி நில்லுங்க' என்று சொல்லும் குணமும் வந்துவிடும் போலும்!

''டேய்! உனக்கு என்ன பெரிய கேமரா மேன்னு நினைப்பா? படுத்தாமல் எடுடா!'' என்று விஷ்ணுவே ஒரு கட்டத்திற்கு மேல் குரலை உயர்த்தி சொல்ல வேண் டியதாயிருந்தது.

விஷ்ணுவிற்கு, எங்கே மயூரி போட்டோவும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்ற தவிப்பு வேறு ஒருபுறம்.

''என்ன சவுண்ட் எல்லாம் பலமா இருக்கு? எங்களை போட்டோ எடுத்தது மறைந்துடுச்சா அண்ணா உங்களுக்கு? கையை தோளில் போட்டு எடுக்கிறதெல்லாம் ஓல்ட் ஸ்டைல். பின்னாடி வழியா கட்டிப் பிடிச்ச மாதிரி நில்லுங்க.'' என்று தீபா தன் பங்கிற்கு யோசனை தந்தாள்.

ஏற்கனவே நிறைய புகைப்படங்கள் எடுத்ததிலும், விஷ்ணுவின் நெருக்கத்திலும் மயூரிக்கு முகமெல்லாம் அந்தி வானமாய் சிவந்திருந்தது. இப்பொழுது கட்டிப் பிடித்த மாதிரி என்றால்... அழுது விடுபவள் போல தன்னை ஒட்டி பின்னால் நின்ற விஷ்ணுவை கழுத்தை வளைத்துப் பார்த்தாள் மயூரி.

விஷ்ணுவிற்கு அந்த கணத்தில் மயூரியை சமாதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தான் மேலோங்கி இருந்தது.

சின்ன குழந்தைக்கு விளையாட்டு காட்டுவது போல் மூக்கில் கட்டை விரலை வைத்து மற்ற விரல்களை அசைத்து அழகு காட்டினான். அதை சற்றும் எதிர்பாராத மயூரி கவலையெல்லாம் ஒதுக்கி கண்களை மலர்த்தியதுடன் இதழிலும் வெண் மொட்டுகளை மலரவிட்டுக் கொண்டு சிரித்தாள்.

இருவருக்குமான அந்த கணம் என்றும் நிலையாய் இருக்கும் வண்ணம் ராம் புகைப்படங்களாய் பதிவு செய்துக் கொண்டிருந்தான்.

அன்று மாலை பார்த்தசாரதி கோவிலில் இருந்து தரிசனம் முடித்துவிட்டுத் திரும்பும் பொழுது மயூரி, ''விஷ்ணு!

அந்த பூக்கடையில் தாழம்பூ இருக்கு. வாங்கிட்டுப் போகலாமா? அம்மா நாளைக்கு பூஜைக்கு கேட்டாங்க.'' என்றாள்.

''நீங்க சொல்லி வாங்காமல் போக முடியுமா? தாழம்பூ மட்டும் போதுமா அல்லது காரில் இருக்கும் விநாயகர் சிலைக்கும் ஏதாவது மாலை வாங்கணுமா?'' என்று பழைய நினைவில் வினவவும் விஷ்ணுவை முறைத்து விட்டு பூக்கடையை நோக்கிச் சென்றாள் மயூரி.

அங்கே பூக்கடை அம்மாவிடம் மயூரி தாழம்பூவுடன் சந்தன முல்லையும், அருகம்புல் மாலையும் வாங்கினாள்.

கேள்வியாக நோக்கிய விஷ்ணுவிடம், ''திஸ் இஸ் நாட் ஃபார் ஹெர் ஸேக்.'' என்று சொல்லும் பொழுது மயூரியின் இதழ் கடையில் மலர்ந்த சிரிப்பு மேலும் அவளுக்கு அழகு ஊட்டியது.

சந்தோஷமாக விஷ்ணு பணத்தை செலுத்த சந்தன முல்லைச் சரத்தை தன் கூந்தலில் தயக்கமின்றி சூடிக் கொண்டாள் மயூரி.

மயூரியின் மனதில் இடம் பிடிக்கலாம் என்ற கனவு கூடிய சீக்கிரமே நினைவு ஆகும் என்ற நம்பிக்கையில் திளைத்தான் விஷ்ணு.

வீட்டிற்குள் நுழையும் பொழுது இருவரும் ஜோடியாக சிரித்தபடியே வருவதைக் கண்ட வைபவின் நிம்மதி இருந்த இடம் காணாமல் போனது.

மயூரி, ''உங்க கூட சிரித்ததில் தாழம்பூவை காரிலேயே மறந்து வைச்சுட்டு வந்தாச்சு.'' என்றது மாடியில் இருந்து இறங்கிய வைபவின் செவிகளிலும் விழுந்தது.

விஷ்ணு, ''இதுவும் மயூரியின் தியரியா? சிரிச்சால் ...ஸ்தியாகும்னு? இன்னும் எத்தனை தியரி

இருக்கோ இந்த டீச்சர் அம்மாக்கிட்ட? இருந்தாலும் இந்த ஸ்டூடண்ட் ரொம்ப பாவம்.'' என்று சின்ன பிள்ளைப் போல் தன்னையே தட்டிக் கொடுத்துக் கொண்டான்.

''சரிங்க பாவப்பட்ட ஸ்டூடண்ட்! கொஞ்சம் கார் சாவியை தரீங்களா? போய் பூவை எடுத்துட்டு வரணும்.''

''நீங்க போக வேண்டாம் டீச்சர். நானே போய் எடுத்து வரேன்.'' என்று சொல்லிவிட்டு செல்லவும் வைபவிற்கு மயூரியிடம் பேச... மிரட்ட சந்தர்ப்பம் வாய்த்தது.

சற்று முன் இருவரது சிரிப்பும், பேச்சும் ஏற்படுத்திய தாக்கத்தில், ''நீ ஒவரா துள்ளிட்டு இருக்கே மயூரி. உன்னை இருந்த இடம் இல்லாமல் செய்துடுவேன் ஜாக்கிரதை.'' என்று அடிக்குரலில் எச்சரித்தான்.

ஆனால் மயூரி, ''அன்னைக்கு லேசா உன் மண்டையை உடைச்சது பத்தாது போல? நல்லா பிளந்து இருக்கணும். ஜஸ்ட் மிஸ். ஒவ்வொரு தடவையும் அப்படியே ஆகும்னு நினைக்காதே.

என்னை விஷ்ணு இருக்கிற வரைக்கும் உன்னால் எது வும் செய்ய முடியாது. அப்படி செய்தால் தான் உன் குள்ள நரி சாயம் வெளுத்துடுமே?'' என்று நேராக சொன்னாள்.

வைபவ் கொஞ்சம் கூட யோசிக்காமல் சொந்த தம்பியைப் பற்றி சொல்கிறோம் என்ற எண்ணம் துளியும் இல்லாமல், ''விஷ்ணு இருக்கிற வரைக்கும் தானே?'' என இருபொருள் பட வாய்க்கு வந்ததைச் சொன்னான்.

வைபவின் குறிக்கோள் மயூரியை மிரட்டுவது. அச்ச மூட்டுவது. அதற்கான துருப்புச் சீட்டை தான் தேடிக் கொண்டிருந்தான். நேரடியாகவே மயூரியை மிரட்டியாகி விட்டது. ஆனால் அவளோ உயிரை துச்சமென மதித்துப் பேசுகிறாள். மயூரியின் உயிருக்கு இணையான பலம் பெற்றது என்ற கோணத்தில் 'விஷ்ணு' என்கிற துருப்புச் சீட்டு தான் வைபவிற்கு கிடைத்தது.

மயூரிக்கு உண்மையிலேயே இந்த முறை கலக்கம் எழுந்தது. தன்னால் விஷ்ணுவிற்கு ஆபத்து என்பதை சுத்தமாக எதிர்பார்க்கவில்லை. தன் உயிரை மதிக்காத வளுக்கு விஷ்ணுவின் நலன் பெரிதாகப்பட்டது. அந்த கணத்தில் வைபவின் மிரட்டலை அலட்சியப்படுத்த முடியவில்லை.

மிரண்டு விழித்தவளைப் பார்த்து குரூரமாக புன் னகைத்தவன், ''விஷ்ணு என்றதும் பயம் வருதுல்ல? ஓடி போய்டு. அதான் உனக்கு இல்லை... அவனுக்கு நல் லது.'' என்று ஈவு இரக்கம் எதுவுமில்லாமல் மொழிந்தாள்.

வைபவ் எப்போதும் போல் நிம்மதியை குலைத்து விட்டு சென்ற பிறகு மயூரி சிறிது மன சஞ்சலத்தோடு அங்கேயே அமர்ந்தாள். வாய்ப்பு கிடைத்த போதே அவனைப் போட்டு தள்ளியிருக்க வேண்டும். இவனுக் காக தேவையில்லாத குற்ற உணர்ச்சி வேறு. ச்சே....

கையில் பூவுடன் வந்த விஷ்ணு அவள் முகத்தில் இருந்த குழப்பமான பாவனையில், ''என்னாச்சு மயூரி?'' என்றான் அக்கறையாக.

''நத்திங் விஷ்ணு. அம்மாக்கிட்ட இந்த பூவை கொடுத்துடுங்க..'' என்று சோபாவில் தலையை சாய்த்து கண்ணை மூடினாள்.

விஷ்ணு நகராமல் அங்கேயே இருப்பதை உணர்ந்து, ''ஐ வான்டட் டு பி அலோன் ஃபார் சம்டைம். ப்ளீஸ்.'' என்றாள் கெஞ்சுதலாக.

அவள் தனிமை வேண்டும் என்று சொன்னாலும் விஷ்ணுவின் மனம் அனிச்சையாய் வாட, விருப்பமின்றி சென்றான்.

விஷ்ணுவின் முகம் வாடியதையோ, கை முஷ்டி இறுகியதையோ அறியாத மயூரியின் நினைவலைகள் மிரட்டலைப் பற்றியே சுற்றி வந்தன.

இந்த முறை சற்றே வித்தியாசமாக இருந்ததோ அவனின் வெற்று வாய் சவடால்? எப்போதும் தன்னை மட்டுமே ஏதும் கூறுபவன், இந்த முறை விஷ்ணுவையும் ஏன் துணைக்கு அழைத்துக் கொள்ளவேண்டும்?

மயூரிக்கு இந்த எண்ணங்கள் மனதில் வலம் வர, இவை யாவற்றையும் பின்னுக்குத் தள்ளும்படி அவள் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது.

அவள் தங்கை மஞ்சரி மிகவும் அழுத்தமாக மயூரியை வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். அதை அழைப்பு என்பதை விட, உத்தரவு என்று தான் சொல்ல வேண்டும்.

மஞ்சரி நலன் எல்லாம் விசாரித்து முடித்துவிட்டு, ''மயூக்கா! இந்த வெள்ளி காலேஜ் லீவ் தானே அக்கா இருக்கும்? கொஞ்சம் வீட்டுக்கு வந்துட்டு போ.'' என்றாள்.

மயூரிக்கும் எல்லோரையும் பார்க்கவேண்டும் போலிருந்தாலும், இவள் போகிற போது ஏதும் ஏடாகூடமாக நடந்துவிட்டால் என்ன செய்வதென்று யோசித்து, ''இல்லை மஞ்சரி. எனக்கு மற்ற வெளி வேலையெல்லாம் இருக்கு. லீவ் நாள்ல தானே அதெல்லாம் பார்க்க முடியும்? நான் சென்னைக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாசம் தானேடா இருக்கும்?'' என்றாள்.

சில நொடி அமைதிக்குப் பின், ''ஒரு மாசம் ஏதோ ஒரு யுகம் மாதிரி இருக்கு. சரி மயூக்கா! உன்னால் வர முடியாட்டி பரவாயில்லை. நான் மோகன் கூட வந்து உன்னை பார்த்துட்டு போறேன். எனக்கு கண்டிப்பா உன்னைப் பார்க்கணும். அட்ரஸை மட்டும் சொல்லு.'' என்று அழுத்தமாகக் கூறினாள்.

மயூரிக்கு மிகுந்த தர்ம சங்கடமாய் போய்விட்டது. இவள் வருவதா? வேறு வினையே வேண்டாம். அதுவும்

தம்பி மோகனுடனா? எப்படி இதிலிருந்து தப்பிப்பது? மஞ்சரி எதற்கும் அத்தனை அடம் செய்ய மாட்டாள். ஆனால் ஒன்றை நினைத்துவிட்டால் அதை எப்படியும் செய்து முடியும் வரை ஓயவும் மாட்டாள்.

''மஞ்சும்மா! நான் இருக்க இடத்தில் எல்லோரும் வரதை அத்தனை விரும்ப மாட்டாங்க. எனக்கு கொஞ்சம் டைம் கொடு. என்னோட ப்ளானை உனக்கு சொல்றேன். எல்லோரையும் கேட்டதா சொல்லு. நான் அப்புறம் போன் செய்றேன்.'' என்று போனை வைத்தாள் மயூரி.

வீட்டிற்கு போவதாய் இருந்தால் விசாலாட்சியிடம் என்னவென்று சொல்லிவிட்டு கிளம்புவது? அவரும் இதுதான் சாக்கென்று உடன் கிளம்பிவிட்டால்... கடவுளே! என்ன காரணம் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே யோசனைக்குரியவரே அங்கே வந்தார்.

15

விசாலாட்சியிடம் என்ன சொல்வது? மஞ்சரியை எப்படி சமாளிப்பது என்ற சிந்தனையுடன் இருந்த மயூரி முன் வந்தவர், ''மயூரி! விஷ்ணுவோட அப்பா வழி சொந்தத்தில் ஒருத்தங்களுக்கு குழந்தை பிறந்திருக்கு. ரிசப்ஷனுக்கு கூட அவங்க வரலை. நாம போய் அவங்களை இந்த வாரம் பார்த்துட்டு வரலாமா? போயிட்டு அப்படியே அங்கே நமக்கு கொஞ்சம் நில புலனிருக்கு. அதையும் பார்த்துட்டு வரலாம். ரெண்டு மூணு நாள் ஆகும்.'' என்று வினவினார்.

கண்கள் பளிச்சிட, ''நீங்க மட்டும் இந்த தடவை போயிட்டு வாங்கம்மா. டாக்டர் எனக்கு ரொம்ப

அலைச்சல் வேண்டாம் என்று சொல்லியிருக்காங்க.'' என்று டாக்டரின் மீது பழியை போட்டாள் மயூரி.

''ஓ அப்படியா? சரிம்மா. இதை தள்ளி போடவேண்டாம். நான் போய் பார்த்துட்டு வந்துடறேன். விஷ்ணுகிட்ட சொல்லிடு.'' என்றுவிட்டுப் போனார்.

இரவு விஷ்ணுவிடம் தங்கை பேசியது, விசாலாட்சி கூறியதென்று அனைத்தையும் கூறியவள், ''நான் போய் பார்த்துட்டு வந்துடவா? இல்லாட்டி அவளே இங்கே வந்தாலும் வந்துடுவா. ரொம்ப பிரச்சனை, கேள்வியெல்லாம் வரும். போயிட்டு வந்துடவா?'' என்று அவனிடம் அனுமதி கேட்டுக் கொண்டிருந்தாள் மயூரி.

விஷ்ணு, ''என்னிடம் எதுக்கு மயூரி கேட்கிற? உனக்கு போகணும்னா போய் பார்த்துட்டு வா. நான் தான் முதலிலிருந்தே சொல்றேனே உனக்கு அவங்க சப்போர்ட் வேணும்னு? அம்மா வேற இங்கேயிருக்க மாட்டாங்க. இப்ப விட்டா அப்புறம் எப்பவோ?'' என்றவன் சிறிது இடைவெளிவிட்டு, ''எத்தனை நாள் மயூரி அங்கே இருப்பே? ப்ளைட் டிக்கெட் புக் செய்யவா?'' என்று விவரம் கேட்டான்.

அவசரமாக, ''இல்லையில்லை. ட்ரைன் தான் வசதி.'' எனவும், விஷ்ணு, ''சரி! சரி! எதுக்கு இப்படி பதறுற? அம்மா எப்போ கிளம்பறாங்க?'' என்று கேட்டுவிட்டு அவள் பதில் சொன்னவுடன், ''அப்போ உனக்கு நைட் சேரனில் புக் செய்றேன். ரிடர்ன் ஜர்னிக்கும் சேர்த்து புக் செய்துடறேன். சரியா?'' என்று அவள் கருத்தையும் வினவினான் விஷ்ணு.

மயூரியும் இதற்கு சம்மதிக்க, அதன் படியே செய்தான் விஷ்ணு. மஞ்சரியையும் அழைத்து மயூரி, தான் வரும்

விவரமெல்லாம் கூறி சிறிது நேரம் தன் தாய் மேகலாவுடன் பேசினாள்.

''நல்லவேளை நீயே இங்கே வர மயூரி. இல்லைன்னா உங்க அப்பாவே உன்னைப் பார்க்க இப்ப கிளம்பி வந்திருப்பார்,'' என்றாள் மேகலா.

''ஏன்மா?''

''நம்ம மறதி மாணிக்கம் மாமா மெட்ராஸ்ல இருக்காரில்ல அவர் செய்த வேலை. அவருக்கு அவரோட வேட்டியவே கட்டியிருக்கோமான்னு தெரியாது. இடுப்புல இருக்கான்னு மறந்துடுவாரு. இந்த அழகில் உன்னை அவரு.. உன் கணவர், கொழுந்தன், மாமியார் எல்லார் கூடவும் ஹாஸ்பிடலில் பார்த்தாராம். கஷ்டம்டி அவரு கூட. எங்கே போய் முட்டிக்கிறதோ தெரியலை?'' என்று அங்கலாய்த்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மயூரியின் முகம் வெளுத்துவிட, இவளைப் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணு 'என்னவென்று' புருவத்தை உயர்த்தினான்.

மாணிக்கம் என்பவரை தான் சில நாட்களுக்கு முன்பு அவள் வைபவை சேர்த்திருந்த மருத்துவமனையில் பார்த்தது. அவரின் மறதிக்கு, தான் ஒரு நாளில் நன்றி உரைப்போம் என்று மயூரி கனவிலும் நினைத்ததில்லை.

அசட்டுச் சிரிப்பு சிரித்து வேறு பேச்சுக்கு மாறிய மயூரி, மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு போனை வைத்தாள்.

வந்து உட்கார்ந்தவளிடம் 'என்ன?' என்பது போல பார்வையைச் செலுத்திய விஷ்ணுவிடம், ''அன்னைக்கு ஹாஸ்பிடலில் எங்க சொந்தக்காரர் மாணிக்கம் மாமாவை காண்பிச்சேன் இல்ல? அவரு ஊருக்கு போயிருக்கும் போது அப்பாக்கிட்ட சொல்லியிருக்கார் போல. யாரோட

நல்ல நேரமோ.. அதை முழுசா வீட்டில் நம்பலை. நல்ல வேளை நான் இப்போ இந்த சமயத்தில் அங்கே போறது.'' பெருமூச்சு விட்டாள் மயூரி.

''ஓ... உங்க வீட்டில் ஒண்ணும் பிரச்சனை இருக்காதே மயூரி?'' அக்கறையாகக் கேட்டான் விஷ்ணு.

''ஒண்ணும் இருக்காதுன்னு தான் நினைக்கிறேன். மஞ்சு எல்லாத்தையும் 'பட், பட்'ன்னு சொல்ற டைப். மோகன் அப்படியே அப்பாவோட வாரிசு. எந்த தப்பு நடந்தாலும் அது பொண்ணுங்களோட தப்புன்னு சொல்ற வன். அம்மா... பாவம் அப்பாகிட்டேயும் ஒண்ணும் சொல்ல முடியாது. மஞ்சரிகிட்டேயும் வாங்கிக் கட்டிக்க பயம்.'' வீட்டில் உள்ளோர்களின் நினைவில் கண்கள் மின்ன கூறினாள் மயூரி.

ஆர்வத்துடனும், மயூரியின் முகத்தில் மின்னும் புன்னகையையும் ரசித்தவாறே கேட்டுக் கொண்டிருந்தான் விஷ்ணு. ''மயூரி! நீ அவினாசியிலிருந்து வந்ததும் பொட்டிக் திறக்கிறதுக்கு வேலையெல்லாம் செய்ற மாதிரி இருக்கும். நல்ல இடத்தில் அருமையான கடை கிடைச்சிருக்கு. புரோக்கர் கால் செய்திருந்தார். நான் போய் செக் செய்துட்டு வந்தேன். நல்லா இருக்கு. நாளைக்கு வந்து பாரு. உனக்கும் பிடிச்சிருந்தால் நீ வரதுக்கு முன் என்னவெல்லாம் செய்யணுமோ அதை செய்து வைச் சிடறேன். சீக்கிரத்தில் அதை ஆரம்பிச்சிடலாம்.'' என்றாள்.

'வெறும் வாய் வார்த்தையாக இல்லாமல் எனக்காக என்னவெல்லாம் செய்கிறான் இவன்?' என்ற எண்ணம் தோன்ற அவனை வாஞ்சையுடன் பார்த்தாள் மயூரி. அவளின் பார்வையில் வேறுபாட்டை உணர்ந்த விஷ்ணு 'என்ன?' என்பது போல் பார்க்க, சட்டென பார்வையை மாற்றி விலக்கிக் கொண்டாள் மயூரி.

அவளைக் குறுகுறுவென்ப பார்த்த விஷ்ணு அதற்கு மேல் அந்த பேச்சை வளர்க்காமல், அலுவலகத்தில் நடந்ததைப் பற்றிக் கூறலானான்.

விசாலாட்சியும் இனிதே அவரின் உறவினரைப் பார்க்கச் செல்ல, மயூரிக்கு வீட்டினரைப் பார்க்கப் போகும் குஷி வந்துவிட்டது. அவர்களுக்கு வாங்கிய பரிசுப் பொருட்களை எடுத்தோமா, மருந்தை எடுத்தோமா என்று அங்குமிங்கும் அலைந்துக் கொண்டிருந்தாள்.

சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த விஷ்ணு, ஒரு நிலைக்கு மேல் அவளின் தோளைப் பற்றி, ''மயூரி! ஷ்..ஷ்,,காம் டவுன்.'' என்று அழுத்தமாகக் கூற, மயூரி சின்னப் பிள்ளையைப் போல் சிரித்தாள்.

''சாரி விஷ்ணு. எனக்கே நான் ரொம்ப எக்ஸைட்டா இருக்கிறது புரியுது. பட் இது என்னோட பயத்தை மறைக் கிறதுக்கான ஒரு வழின்னு நினைக்கிறேன். அம்மா ஏதாவது கேட்டா என்ன செய்றது விஷ்ணு?'' என்று அவனிடமே கேட்டாள் மயூரி.

அவளை மேலும் கீழும் பார்த்த விஷ்ணு கண்களில் அன்புடன், ''உன்னிடம் ஒரு வித்தியாசமும் தெரியலை மயூரி. நீ இருக்கப் போறது மூணு, இல்லை அப்படி கூட சொல்ல முடியாது முழுசா ரெண்டு நாள் தான். அதை சமாளிக்க முடியாதா? அப்படியே கேட்டாலும்... ரிமெம்பர் யு ஆர் நாட் அட் ஃபால்ட் ஹியர்.'' என்றான்.

அவனின் வார்த்தையில், குரலில் சிறிது தைரியம் அடைந்த மயூரி கிளம்ப ஆயத்தமானாள்.

ரயில் நிலையத்தில் ஆயிரம் முறை பத்திரம் கூறிய விஷ்ணுவிற்கு அப்போது தான் மயூரி மூன்று நாட்கள் தன்னுடன் இருக்க மாட்டாள் என்று நன்றாக உரைத்தது.

குரல் கரகரக்க, ரயில் கம்பியில் இருந்த அவள் கரத்தை அழுத்தி. ''பத்திரமா போயிட்டு வா மயூரி. தைரியமா இரு. என்னால் போன் செய்ய முடியாமல் போகலாம். போய் சேர்ந்ததும் நீ போன் செய். நீ திரும்ப வர அன்றைக்கு நான் வந்து உன்னை அழைச்சுக்கிறேன்.'' என்றான்.

மயூரிக்கும் ஏன் என்று புரியாமல் ஒரு மாதிரியிருக்க, தலையை தலையை ஆட்டினாள்.

''அம்மாவும் இருக்க மாட்டாங்க. நானும் இல்லை. அதனால வேலை வேலைன்னு இல்லாம, சரியான நேரத்தில் சாப்பிடுங்க. ஆபீசுலேயே குடி இருக்காதீங்க.''

என்னமோ இவள் தான் இத்தனை நாள் அவனைப் பார்த்துக் கொண்டவள் மாதிரி பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் அதை விஷ்ணுவிற்கும் கேட்கத் தோன்ற வில்லை. மயூரிக்கும் இதில் ஒன்றும் தப்பாகத் தோன்ற வில்லை.

மயூரிக்குத் தேவையானதை வாங்கிக் கொடுத்து, ரயில் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்திருந்தவ னுக்கு இரண்டு நாட்கள் எப்போது முடியுமென்றிருந்தது.

விரைவில் அவளிடம் கூறிவிட வேண்டும். இப்படி மனதினுள்ளே வைத்திருப்பது பெரும் சித்தரவதையாக இருந்தது. இப்படி பேசினால் குற்றமா? பார்த்தால் தப்பா? என்று எந்நேரமும் பார்த்துப் பார்த்து இருக்க வேண்டியதாயிருக்கிறது. விரைவில் இதற்கு வழி செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான்.

ரயிலில் உட்கார்ந்திருந்த மயூரிக்கு வீட்டு நினைவும், விஷ்ணுவின் நினைவும் [illegible]

நேரங்களில் விஷ்ணுவின் நினைவே பெரிதுமிருந்தது. கையில் இருந்த செல்போனைப் பார்த்தவள் மறுப்பான் எண்ணம் தோன்றுமுன் விஷ்ணுவின் எண்ணை அழைத்தாள்.

''மயூரி!'' ஆச்சரியாக விளித்தவன், ''என்னம்மா? ஏதும் மறந்து வச்சுட்டு போயிட்டியா?'' என்று கேட்டான்.

குரலில் லேசான சிணுங்கலுடன், ''எதையும் மறந்து வச்சுட்டு போனால் தான் கூப்பிடணுமா? நீங்க பத்திரமா வீடு போய் சேர்ந்துட்டீங்களா அப்படின்னு கேட்க கூப்பிட்டு இருக்கக் கூடாதா?'' என்றாள்.

மனமும் குரலும் லேசாகி விட, ''ஓ... அப்படியா? மேடம்! நாங்க தினமும் இந்த வழியில் நூறு தடவை யாவது போறோம். நாங்க பத்திரமா போய் சேர்ந்துடு வோம். நீங்களும் பத்திரமா போய் சேருங்க.'' என்று சிரிப் புடன் சொன்னவன், மேலும் சில நிமிடங்கள் பேச்சை வளர்த்துவிட்டு சந்தோஷமான மனநிலையுடன் போனை வைத்தான்.

திருப்பூரில் இறங்கி, அங்கிருந்து அவினாசி பஸ் நிலை யத்திற்கு வந்த மயூரியை அழைத்துப் போக மோகன் வந்திருந்தான்.

நலம் விசாரிப்பு முடிந்து வீடு வந்து சேர்ந்த மயூரியை மஞ்சரி கட்டி அணைத்துக் கொண்டாள்.

''எப்படிக்கா இருக்க? என்னக்கா? இப்படி இளைச்சுட்ட? சாப்பாடு சரி கிடையாதா மயூக்கா?'' மயூரியைப் பேசவே விடாமல் மஞ்சரியே பேசிக் கொண்டிருந்தாள்.

''நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க? இது தானே வேண்டாம்ங்கறது? நான் அப்படியே தான் இருக் [illegible] குண்டாயிட்ட.'' என்று தங்கையைச்

''ஏய்! போடி அந்தப் பக்கம். நீ வாம்மா. அவனை சாப்பிட, பேச விடாம... இவ ஒருத்தி. படிப்பெல்லாம் எப்படிம்மா இருக்கு? தங்கற இடமெல்லாம் வசதியா இருக்கா? என்னடி முடியெல்லாம் இப்படி பறந்துகிட்டு இருக்கு? எண்ணை தேய்க்கிறதே இல்லையா?'' தாய்க்கே உரிய கவலை அவருக்கு.

''ஆரம்பிச்சுட்டாங்கையா... ஆரம்பிச்சுட்டாங்க.'' அலுத்துக் கொண்ட மஞ்சரி, ''நீ அம்மாகூட பேச ஆரம்பித்தால் பேசிக்கிட்டே இருப்பாங்க. இந்தா காபி. வா. ரூமுக்கு போகலாம் மயூக்கா.'' மயூரியின் கையைப் பற்றி இழுத்தாள் மஞ்சரி.

''அப்பா எங்கேம்மா? வாக்கிங்கா? இருடி வரேன். இந்தா உனக்கு டிரஸ் வாங்கிட்டு வந்தேன். புது ஃபேஷனாம். இன்னும் சில காஸ்ட்யூம் ஜுவல்லரி அது கூட இருக்கு. அம்மா! இந்தாங்க உங்களுக்கு புடவை வாங்கிட்டு வந்தேன். அதுகூட எம்.எஸ் அம்மாவோட பக்தி சிடி செட் இருக்கு. மோகன்! இந்தா உனக்கு டி ஷர்ட். அப்புறம் நீ கேட்டுக்கிட்டு இருந்த ஷூ. காலுக்கு சரியா இருக்கானு சொல்லு. உன் ஷூ சைசுக்கு தான் வாங்கினேன். போட்டு பார்த்துட்டு சொல்லு. அம்மா இதில் அப்பாக்கும் இருக்கு.'' என்றாள்.

மோகன், ''நீயேவா அக்கா இதையெல்லாம் தனியா போய் வாங்கினே? எதுக்கு தனியா அங்கேயும் இங்கேயும் போற?'' ஷூவைக் கையில் வைத்து அழகுப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

விழியை உருட்டிய மஞ்சரியைப் பார்த்து சிரித்த மயூரி, ''ஏன் மோகன்? தனியா போகக் கூடாதா?'' என்றாள்.

''காலம் கெட்டுக் கிடக்கு அக்கா.''

தலையை சரித்து, ''அப்போ நான் வீட்லேயே உட்கார்ந்துக்கவா?'' வினவியவளுக்கு, பதில் சொல்ல முடியாமல் சகோதரன் திணற, அவனுக்கு ஒழுங்கு காட்டிய மஞ்சரி, ''அப்படி சொல்லு மயூக்கா. இவங்களுக்கு வேலைக்கும் போய் சம்பாதிக்கணும். அதே சமயம் யாரும் தம்மையும் பார்க்கக் கூடாது. நாமும் யாரையும் பார்க்கக் கூடாது. ஆனால் இவன் பார்க்கிறதுக்கு மட்டும் நாலு பொண்ணுங்க தெருவில் நடக்கணும். என்ன அநியாயம்டா சாமி இது?'' என்றாள்.

''ஏய்! நீ சும்மா இருக்க மாட்ட?'' மஞ்சரியை நெருங்கினான் மோகன்.

''மோகன்! நில்லு. நீ அப்பா இல்லை மோகன். அவரு பழைய காலத்து ஆளு. நீயும் அப்படியே நினைக்கணும் என்று நினைக்காதே. சரியா?'' புன்னகையுடனே கூறினாள் மயூரி.

''மயூம்மா! ஏதோ ப்ளூபெர்ரி அப்படின்னு புதுசா சொல்றாங்களே? என்னடி அது?'' என்று விசாரித்தார் மேகலா.

''அது ஒரு சாப்பிடற பழம்மா.'' அக்கறையாக விளக்கியவளிடம், ''அதில்லைடி போன் மாதிரி இருக்கே? அது.'' என்றார்.

தலையில் அடித்துக் கொண்ட மஞ்சரி, ''கஷ்டம்மா! உங்களை வைச்சுகிட்டு. அது ப்ளூபெர்ரி இல்லை. ப்ளாக்பெர்ரி. போன் தான். அதுலேயே நெட் வசதியும் இருக்கும்.'' என்றாள்.

''ரொம்ப அலுத்துக்காதடி! நானா காலேஜ் போய் படிக்கிறேன். நீ தானே? உனக்கு தெரியுதான்னு டெஸ்ட் செய்தேன்.'' என்றார் சமாளிப்பு திலகம் திருமதி மேகலா

சிரித்துக் கொண்டே அறைக்கு சென்றவளைத் தொடர்ந்து சென்ற மஞ்சரி கதவை அடைத்தாள்.

என்னவென்று பார்த்த மயூரியின் அருகே வந்த மஞ்சரியின் கரத்தில் கடிதம் போன்று ஒன்றிருந்தது.

அதை மயூரியிடம் கொடுத்தவள், ''அக்கா! போன வாரத்தில் ஒரு நாள் இந்த லெட்டர் வந்திருந்தது. யாரு அனுப்பி இருக்காங்கன்னு தெரியலை. கையெழுத்து தெரியக் கூடாதுன்னு பிரிண்ட் அவுட் எடுத்து அனுப்பி வைச்சிருக்காங்க. சீலும் இல்லை. வீட்டிலேயே வந்து போட்டிருந்த மாதிரி இருக்கு. அந்த நேரத்தில் நான் மட்டும் தான் வீட்டில் இருந்தேன். என்னமோ தோன்ற, அதைப் பிரிச்சு பார்த்தேன். படிச்சு பாரு.'' என்றாள்.

அதைப் படித்தவளின் முகம் இருண்டு, விழிகளில் நீர் கோர்க்க மஞ்சரியைப் பார்த்தாள் மயூரி. கடிதத்தின் சாராம்சம் இது தான் - மயூரி எங்கேயோ ஓடிப் போய் விட்டாள்; திருமணத்திற்கு முன்பே தகாத உறவு வைத்திருக்கிறாள்; என்பது மாதிரி சென்றது கடிதம்.

''மஞ்சரி...'' இவளிடம் என்ன சொல்வது? என்ற யோசனையோடு இழுத்தவளை இடைமறித்து மஞ்சரி, ''மயூக்கா! உன்னைப் பற்றி எங்களுக்குத் தெரியாதா? நீ ஒண்ணும் கவலைப்படாதே. நான் வீட்டில் யார்கிட்டேயும் எதுவும் சொல்லலை. யாரும் நம்ப மாட்டாங்க தான். இருந்தாலும், எதுக்கு தேவையில்லாத பிரச்சனை? இதை உன்கிட்ட சொல்லிடணும் அப்படின்னு தான் உன்னை இங்கே வரச் சொன்னதே. போனில் ஒண்ணும் சொல்ல முடியலை. அப்புறம்...'' சொல்லிக் கொண்டு போனவளை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டாள் மயூரி.

கண்களைத் துடைத்துக் கொண்ட மயூரி, ''என்னை ஒரு வார்த்தை கூட உனக்கு கேட்கணும்னு தோணலையா மஞ்சும்மா?'' என்று கேட்டாள்.

''எதுக்கு அக்கா கேட்கணும்? இது உண்மையாய் இருந்தால் இதை அனுப்பியவனே நேரில் வந்து சொல்ல வேண்டியது தானே? அப்படியே எதுவும் இருந்தா.. சொல்லக் கூடியதாய் இருந்தால்.. நீயே சொல்ல மாட்டியா மயூக்கா?'' என்று எதிர்க்கேள்வி கேட்டாள் மஞ்சரி.

மஞ்சரியின் கன்னத்தைத் தடவிக் கொடுத்த மயூரி வாஞ்சையுடன், ''நீ எப்போ இவ்வளவு பெரிய பொண்ணா ஆனடா?'' என்றாள்.

''ஹ்ம்ம்.... என்ன செய்றது. அப்பா ஒரு பக்கம், மோகன் ஒரு பக்கம், ப்ளூபெர்ரி அம்மா ஒரு பக்கம். வேற வழி?'' போலி பெருமூச்சு விட்டாள் மஞ்சரி.

காலை வேலைகளைத் தாயுடன் சேர்த்து செய்த படியே மகளிர் அணி அடுப்படியில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். மயூரின் தந்தை சுப்ரமணியமும் வாக்கிங் முடிந்து வர அவருடன் பேசி, நலம் விசாரிப்பு என்று எல்லாம் முடிந்து பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுப்ரமணி, ''மாணிக்கத்தைப் பார்த்தியாமா? உன்னைப் பார்த்ததா அவன் சொன்னான்,'' என்று நேரிடையாக விஷயத்திற்கு வந்தார்.

இந்த பேச்சு முதலிலேயே வருமென்று தெரிந்ததால் மயூரியும், ''ஆமாப்பா பார்த்தேன். நான் என் தோழியோட குடும்பத்தில் ஒருத்தருக்கு உடம்பு சரியில்லைன்னு பார்க்க போயிருந்தேன். அவளோட கணவர், மாமியார் எல்லோரையும் பார்த்துட்டு அப்படி சொல்லிட்டார்

போலிருக்கு.'' இதற்கு என்ன பதில் வருமோ என்று பயந்த படியே கூறினாள் மயூரி.

''நான் சொல்லலைங்க? அவரு இத்தனை வருஷமா சரியா எப்படி அவரு வீட்டுக்கே போறார்னே எனக்கு சந்தேகம் தான்.'' என்றார் மேகலா.

''அம்மா! உங்களுக்கும் சந்தேகமா?'' சிரித்தாள் மஞ்சரி.

''பின்ன என்னடி? கல்யாணத்துல அவரைப் பார்க்கிறேன். என்கிட்ட கேட்கிறார் 'என்ன மேகலா? உங்க பொண்ணு கல்யாணத்துக்கு எனக்கு பத்திரிகை வைக்க மறந்துட்டீங்களா? இல்லை நான் தான் வர மறந்துட்டேனான்னு' எங்கே போய் முட்டிக்க?''

எல்லோருடனும் சேர்ந்து சிரித்தாலும், எல்லோரையும் முக்கியமாகத் தாயையும், தங்கையையும் இப்படி ஏமாற்றுகிறோமே என்று மனதிற்குள் பெரிதும் வருந்தினாள் மயூரி. ஆனால் புலி வாலைப் பிடித்தாகி விட்டது. இனி எப்போது விடுவதோ?

''கண்டவங்களும் கண்டதையும் பேசுவாங்க. அதுக்குத் தான் உனக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைச்சுட்டா நாங்க நிம்மதியா இருப்போம்.'' கணவரின் முகத்தைப் பார்த்து மேலே சொல்லலானார் மேகலா.

''நம்ம மஞ்சரியைப் பிடிச்சுப் போய் நம்ம சொந்தக்காரங்க அவளை பொண்ணு கேட்கறாங்க. அந்த பையனும் அவங்க காலேஜ் சீனியர் தானாம். அக்கா இருக்கும் போது தங்கைக்கு செய்ய மாட்டோம்னு சொன்னோம். அந்த பையனோட அண்ணனுக்கே உன்னையும் கேட்கறாங்க. முடிச்சுடலாம் அப்படின்னு உங்க அப்பா நினைக்கிறார். நீ என்ன சொல்ற?'' என்று கேட்டார் மேகலா.

இதென்ன புது கதை? திருமணமா? எனக்கா? விஷ்ணுவின் முகம் ஒரு கணம் அவள் முன் மின்னி மறைந்தது. அவனுக்கு தான் வந்த இறங்கியதும் எஸ்.எம்.எஸ் அனுப்பி தகவல் சொன்னதோடு சரி. இப்போது அழைக்க வேண்டும். அவனிடம் கேட்க வேண்டுமென்று நினைத்தாள் மயூரி. இப்போது எதற்கு அவளுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவனின் நினைவுகள்?

தலையை உலுக்கிக் கொண்டு அவர்கள் பேசுவதில் கவனம் செலுத்தினாள் மயூரி.

மஞ்சரியைப் பார்க்க, அவளோ இதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லையென்பது மாதிரி உட்கார்ந்திருந்தாள்.

''இப்ப தானே மஞ்சரி ஃபைனல் இயர் அம்மா? அதுக்கு மேல அவ படிக்கணும்னு நினைச்சா.. எல்லாம் யோசித்து சொல்றேன் அம்மா.'' என்று கூறிவிட்டு உள் ளறைக்கு சென்றாள் மயூரி.

''என்ன மஞ்சு? உனக்கு விருப்பமா இந்த ப்ரொபோசலில்?''

''அப்படியெல்லாம் இல்லை மயூக்கா. இப்ப தான் கேட்டாங்க. நான் அவனை சில தடவை பார்த்திருக்கேன். பட்...'' தோளைக் குலுக்கினாள் மஞ்சரி.

ஒரு சிறு இடைவெளிக்குப் பின் மஞ்சரி, ''எனக்கு மேல படிக்கணும். எனக்கு என்ன தோணுதுன்னா.. வெளியே எங்கேயும் வேற ப்ரொபோசலுக்கு வீட்டில் ஒத்துக்குவாங்களோ அப்படின்னு நினைச்சு தான் இப்போவே கேட்டு இருக்காங்கன்னு நினைக்கிறேன்.'' என்றாள்.

''இதை நீயே நினைக்கிறியா... இல்லை... அந்த பையனே சொன்னானா?''

மஞ்சரியைப் பார்த்துவிட்டு, ''அவன் தான் சொன்

''ம்ம்.. இந்த பையன் ஓகே. பட்... வெயிட் செய்யணும். அப்படி தானே? உனக்கும் அவனுக்கும்?'' உறுதிப்படுத்திக் கொள்ள கேட்டாள் மயூரி.

''எனக்கு வெயிட் செய்தாலும் ஒண்ணு தான். இல்லை னாலும் ஓகே தான். பட் நான் படிக்கணும்.'' என்றாள் மஞ்சரி.

''சரி! நான் பேசறேன் அப்பாகிட்ட.''

அன்றிரவு தனிமை கிடைத்த போது விஷ்ணுவை அழைத்துப் பேசிய மயூரி, கடித விஷயத்தை தவிர நடந்தவற்றை எல்லாம் கூறினாள். அதைப் பற்றி கூறப் போக தேவையில்லாத பொய்களை சொல்ல நேரிடும் என்பதனால் அதைத் தவிர்த்தாள் மயூரி.

மஞ்சரிக்கு வேண்டுமென்றால் அதை யார் அனுப் பியது என்று தெரியாமல் இருக்கலாம், ஆனால் தனக்கு தெரியுமே? 'எங்கே அடித்தால் எங்கே வலிக்கும் என்று எனக்கு தெரியும்' என்றானே அதைத் தான் இப்போது செய்து இருக்கிறான் துரோகி.

ஆனால் இம்முறை எப்படியோ தெய்வ செயலாக அவனின் குறி தப்பி விட்டது. ஆனால் அடுத்த முறை என்று ஒன்று வருமேயானால், என்ன நடக்கும்? ஆனால் இறைவனின் விளையாட்டில் வைபவிற்கு இன்னொரு முறை விளையாடுவதற்கு சந்தர்ப்பமே இருக்கப் போவ தில்லை என்று தெரிந்தால் மயூரி சந்தோஷப்பட்டிருப் பாளோ?

திருமணப் பேச்சு வார்த்தையைப் பற்றிக் கூறிய பொழுது விஷ்ணு. ''என்னது? ஒரே வீட்டில் கல்யாண ஏற்பாடா? அதெல்லாம் ரொம்ப கஷ்டம் மயூரி. ஒருத் தங்க வீட்டில் ப்ராப்ளம் என்றால்... அது உடனே அடுத்த வீட்டிலும் வெடிக்கும்.'' என்று பகுதி

''ஹலோ.. ஹலோ! பேசிக்கிட்டு இருக்காங்கன்னு தானே சொன்னேன்? அதுக்குள்ள நீங்க என்ன எங் கேயோ போய்ட்டீங்க? நாங்களே இங்கே பேசி அதெல் லாம் இப்போதைக்கு முடியாது. மஞ்சரிக்கு படிக்கணும். வெயிட் செய்றதுன்னா செய்ங்க என்று சொல்லிட் டோம். இப்போதைக்கு எனக்கு அப்படி ஒரு ஐடியாவே இல்லைன்னு சொல்லிட்டேன். மஞ்சரிக்காக தானே அவங்க முதலில் வந்தது. சோ ஒண்ணும் பெரிய ப்ராப்ளம் இல்லை.'' என்று விளக்கினாள் மயூரி.

அந்தப் பக்கத்தில் ஆசுவாச பெருமூச்சு விட்டவன், ''இதை நீ முதலிலேயே சொல்ல வேண்டியது தானே? தேவையில்லாமல் எனக்கு டென்ஷன் ஏத்திட்ட.'' என்றான்.

''வரிசையா தானே சொல்ல முடியும்? அது சரி நீங்க எதுக்கு அத்தனை டென்ஷன் ஆகணும்?''

''ஆ..ஆங்...அது வந்து.. உன்னை நம்பி நான் பணம் எல்லாம் போட்டு கடைக்கு வேலை நடந்துக்கிட்டு இருக்கு. நீ கல்யாணம் செய்துக்கிட்டு போயிட்டா... நான் என்ன செய்றது? உன்னை நம்பி தானே நான் இருக் கேன்?'' என்றான் சிரிப்புடன்.

''வவ்வே... சாப்பிட்டீங்களா? என்ன செய்துக்கிட்டு இருக்கீங்க? உன்கூட பேசறேன் என்று கடிக்கக் கூடாது.''

உன்னைப் பற்றி தான் நினைத்துக் கொண்டு இருந் தேன் என்று சொல்லமுடியாமல் வேறெதையோ சொல்லி மழுப்பினான் விஷ்ணு.

மயூரியின் வீட்டில் உள்ளோர்களைப் பற்றியெல்லாம் விஷ்ணு விசாரித்து முடிக்க, மயூரியும், ''அம்மா கால் செய்து இருந்தாங்களா? எப்போ வராங்களாம்?'' என்று கேட்டாள்.

"இன்னும் ரெண்டு நாள் ஜாஸ்தியா ஆகும் போலி
ருக்கு. உன் கூட பேசணும் அப்படின்னு சொன்னாங்க.
நீ குளிச்சுக்கிட்டு இருக்கே அப்படின்னு சொன்னேன். நீ
முடிந்தால் அப்புறம் போன் செய்து பேசிடு." என்றான்.

"சரி விஷ்ணு! டேக் கேர்! யாரோ வர மாதிரியிருக்கு.
பை." என்று போனை வைத்தாள் மயூரி.



அடுத்து வந்த இரண்டு நாட்களும் மயூரிக்கு
இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது. நடுநடுவே
விஷ்ணுவைப் பற்றிய நினைவுகள் வந்தாலும், அதையே
எண்ணிக் கொண்டு இருக்க முடியாமல் வீட்டில் மஞ்சரி
யும் மேகலாவும் அவளைக் கவனித்துக் கொண்டனர்.

அவர்களுடன் இருக்க இருக்க... குறைந்தப் பட்சம்
தன் தாயிடமாவது தன்னைப் பற்றி கூறியிருக்கலாமோ
என்று தவித்துப் போனாள் மயூரி. இன்னமும் எட்டு
மாதத்தை இவர்களை எல்லாம் தான் பார்க்காமல்,
இல்லை இவர்கள் வந்து தன்னைப் பார்க்காமல் எப்படி
தவிர்ப்பது என்று பரிதவித்தாள். அது சாத்தியமா என்று
கூட இப்போது சந்தேகம் தோன்ற ஆரம்பித்தது அவளுக்கு.

சரியாக யோசிக்காமல் தான் இப்படி எடுத்தேன்
கவிழ்த்தேன் என்று முடிவெடுத்தது புரிந்தது. ஆனால்
காலம் கழிந்து வந்த ஞானோதயத்தால் மயூரிக்கு தான்
சிறிதும் பயனின்றி போனது.

முன்பே கூறியிருந்தாலாவது இவள் மீது இரக்கப்பட்
டிருப்பார்கள். இப்போது போய் சொன்னால் தன் மீதும்

குற்றம் இருப்பதாக நினைப்பார்களோ? நினைத்தால்
என்ன செய்வது? கண்டதையும் நினைத்து மேலும்
மேலும் தன்னைக் குழப்பிக் கொண்டு, அவர்கள்
பாசத்தின் முன் திரும்பவும் கோழையாகிப் போனாள்
மயூரி.

நாளைக்கு என்ன நடக்குமோ என்று தெரியாமல்,
அதைப் பற்றி கவலைப்பட முடியாமல் இருந்தவள்,
இப்போது அடுத்து வரும் மாதங்களில் என்ன நடக்
குமோ, என்ன வெடிக்குமோ என்று மிகுந்த பயத்துடன்
இருந்தாள்.

பேசாமல் விஷ்ணு சொன்னது போல் முதலிலேயே
செய்திருக்கலாமோ? யாருக்கும் ஒன்றுமே தெரிந்திருக்
காது என்று நினைத்தவளுக்கு உடனேயே அந்த
நினைப்பிற்கு தன் மீதே கோபம் வந்தது. ச்சே! எதிர்
காலத்தைப் பற்றிய பயம் என்னவெல்லாம் நினைக்க
தோன்றுகிறது என்று தன்னையே கடிந்து கொண்டாள்.
இந்த நினைப்பிற்காகவும் தன்னை வரும் நாட்களில்
வதைத்துக் கொள்ளப் போவது தெரியாமல்...

இதே யோசனையில் இருந்தவளைப் பார்த்த மேகலா
விற்கு வித்தியாசமாகத் தோன்றியது.

மெல்ல அவளருகில் வந்து, "என்ன மயூரி? அப்
பப்போ ஏதோ யோசனையிலேயே இருக்கே? எதையோ
மனசில் வச்சுக்கிட்டு தவிக்கிற மாதிரியே இருக்கு.
அம்மாகிட்ட ஏதாவது சொல்லணுமாம்மா?" என்று
வினவினார்.

என்ன சொல்வாள் மயூரி? முகத்தை சரி செய்து,
"அதெல்லாம் ஒண்ணுமில்லை அம்மா. என் பிரண்டை
பத்தி நினைச்சுகிட்டு இருந்தேன். அதான்." என்றாள்.

"ஏன்? அவளுக்கென்ன?"

மிகவும் தயங்கி தயங்கி, "இல்லை... அவள் வாழ்க்கையை ஒருத்தன் நாசம் செய்துட்டான். இப்ப என்ன செய்யறதுன்னு தெரியாமல் முழிக்கிறா பாவம்." என்றான் மொட்டையாக.

"உன் தம்பி சொல்றதும் சரி தான்டி. இவ என்ன செய்தாளோ அப்படி நடக்க போனோமா, வந்தோமான்னு இல்லாம இருந்தால் இப்படித் தான்." அவர் என்னவோ நினைத்துக்கொண்டு பொதுவாக சொல்ல, ஏற்கனவே வெளிறியிருந்த முகம் மேலும் வெளிறியது மயூரிக்கு. கொஞ்ச நஞ்சம் இருந்த தைரியமும் கைவிட்டுப் போக செய்வதறியாது விழித்தாள்.

"என்னடி? அவளைத்தானே சொன்னேன்? நீ ஏன் இப்படி பேயறைஞ்ச மாதிரி இருக்கே? நீங்களும் தான் இருக்கீங்க? உங்களை யாராவது ஒண்ணு சொல்ல முடியுமா? உங்களை பத்தி ஒரு சொல் கூட வராமல் தானே வளர்க்கிறேன். சரி நீ சாப்பிட வா." என்று அவரின் வார்த்தைகள் விளைவித்த பாதிப்பை உணராமல் சொல்லிவிட்டுச் சென்றார்.

அதன் பிறகு வந்த நேரமனைத்தையும் நெருப்பில் உட்கார்ந்திருப்பது போலவே கடத்தினாள் மயூரி. பெற்றவர்கள் கண் முன் இல்லாத போது அவர்களிடம் உண்மையை கூறாமல் விடுத்தது மனதுக்கு துன்பமாக இருந்தாலும், இப்போது அவர்களை கண் முன்னேயே வைத்துக்கொண்டு சொல்லாமல் இருப்பது அவளுக்கு மிகவுமே கொடுமையாக இருந்தது.

அதுவும் மேகலா இப்படி கூறியதும் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த தைரியமும் மயூரிக்கு விடை

பெற்று போய்விட செய்வதறியாது திகைத்தாள். பின் எப்பொழுதும் போல் 'நடப்பது நடக்கட்டும்' என்ற மனநிலையிலேயே அங்கிருந்த நாட்கள் செல்ல, எல்லோரும் அவளை சீக்கிரம் திரும்ப வரச்சொல்லி விடைகொடுத்து அனுப்பி வைத்தனர்.

ரயில் சென்னையை நெருங்க நெருங்க மனதில் இனம் புரியாத சந்தோஷம் வந்தாலும், அவினாசியிலிருந்த குழப்ப மனநிலை முற்றிலும் மாறவில்லை மயூரிக்கு.

ரயிலில் இருந்து இறங்கிய மயூரி அங்குமிங்கும் பார்வையை அலையவிட அவள் செவியருகில், "ஹாய் தேர் பிரின்சஸ்!" என்ற மெல்லிய அழைப்பில் முகம் பூவாக மலர திரும்பினாள்.

விஷ்ணு அவள் சிரித்த முகத்தைப் பார்த்து, "ஹாய் மயூரி! எப்படி இருக்கே?" என்றான் குரலே எழும்பாமல்.

அவனிடமிருந்து பார்வையை அகற்ற முடியாமல், "ம்ம்.... நீங்க?" என்றவள், சிரமப்பட்டு பார்வையையும், முகத்தையும் சரி செய்தாள்.

போவோர் வருவோர் இடித்து தள்ளியதில் சுய உணர்வு பெற்ற விஷ்ணு, "போகலாமா? இல்லை இப்படியே இதே ட்ரைனில் திரும்ப உங்க ஊருக்கே போகலாம் அப்படின்னு ஏதாவது ஐடியா வைச்சு இருக்கியா?" என்று கேலியாக வினவினான்.

"ஆமா போறாங்க. நீங்க இன்னும் கொஞ்சம் லேட்டா வந்திருந்தா நான் அப்படியே திரும்ப போயிருக்கலாம். பட்..." தோளை குலுக்கிக் கொண்டாள் மயூரி.

ரயில் வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னமே அங்கு வந்து தவமிருந்த விஷ்ணு மெதுவாக சிரித்தபடி,

''ஆமாம். ரொம்ப லேட் தான். இன்னமும் லேட் செய்யக் கூடாது.'' பூடகமான சிரிப்போடு கூறியவன், அவள் பெட்டியை எடுத்துக்கொண்டு நடந்தான்.

''கல்யாணப் பேச்சை ஒத்தை ஆளா நின்னு தள்ளி போட்டுட்டேன்னு சொல்லு. ரொம்ப சமத்தா ஆயிட் டீங்க நீங்க.'' சிரிப்போடு பாராட்டினான் விஷ்ணு.

அவனவனுக்கு அவனவன் வேலை பிரதானம்!

லேசாக புன்னகைப் பூத்த மயூரி, ''அம்மா எப்படி இருக்காங்க? எப்போ வராங்களாம்?'' என்று கேட்டபடி உடன் நடந்தாள்.

காரை சென்னை நெரிசலில் லாவகமாக செலுத்திய வன், ''அங்கே திடீர்னு வேலை வந்துடுச்சாம். அதனால் இன்னும் ரெண்டு நாள் ஆகும் போலிருக்கு. நீ தினமும் பேசிக்கிட்டு தான இருக்கே?'' என்று அவள் புறம் திரும்பி கேட்டான்.

''ம்ம்.. பேசிக்கிட்டு தான் இருக்கேன். வேற லேட்டஸ்ட் தகவல் இருக்கா என்று கேட்டேன். அப்புறம் ரெண்டு வீடு தள்ளியிருக்கற லக்ஷ்மி பாட்டிக்கு எழுபத்தைந்தாம் கல்யாணம் இருக்கு. இன்னைக்கு அந்த விசேஷத்துக்குப் போயிட்டு வந்துடச் சொன்னாங்க.'' என்று தகவல் சொன்னவள், ''நான் எதுக்கு விஷ்ணு அங்கே? நீங்க மட்டும் போயிட்டு வந்துடுங்க.'' என்று தயங்கினாள்.

''அதெல்லாம் அம்மாக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. அம்மாகிட்டேயே பேசிக்கோ. இல்லை அம்மா வந்ததும் பார்த்துட்டு வந்துடட்டும்.''

விஷ்ணு அவள் வீட்டாரின் நலம், தம்பி தங்கையின் படிப்பு என்று எல்லாவற்றையும் விசாரித்து முடிக்க, அதற்குள் வீடும் வந்திருக்க, காலை நேர வேலைகளை முடித்துவிட்டு விசாலாட்சியிடம் பேசினாள்.

''மயூரி! மறக்காம போயிட்டு வந்துடுங்கம்மா. நம்ம ரிஸ்ஷனுக்கு அவங்க வர முடியாம போயிடுச்சு. அதனால் தான் நாமும் போகலை என்று தப்பா நினைக்கக்குவாங்க. நான் இல்லைன்னா என்ன? விஷ்ணுவைக் கூப்பிட்டுகிட்டு போயிட்டு வா. ரொம்ப பெரிய விசேஷமா பண்ணலையாம். நம்ம தெருவில் ரொம்ப தெரிஞ்சவங்க, சொந்தக்காரங்கன்னு கொஞ்ச பேரைத் தான் கூப்பிட்டு இருக்கிறதா சொன்னாங்க. கொஞ்ச நேரம் போயிட்டு வந்துடுங்க. அவங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கினால் ரொம்ப நல்லது. நல்லதே நடக்கும். என்ன சரியா?'' என்று பேசியே அவளை சம்மதிக்க வைத்தார் விசாலாட்சி.

வேறு வழியில்லாமல் விஷ்ணுவுடன் சென்றவளுக்கு, அங்கே சென்றதும் இவள் வயதை ஒத்தவர்கள், சிறு குழந்தைகள் என்று எல்லோரையும் காண மனம் லேசானது.

லக்ஷ்மி பாட்டியை மணப்பெண்ணாகவும், அவரின் கணவர் லக்ஷ்மணனை மண மகனாகவும் அலங்கரித்து உட்கார வைத்து, சடங்குகள் செய்துக் கொண்டிருந் தார்கள். சுற்றி அவர்களின் குழந்தைகள். பாட்டியின் முகத்தில் தான் என்ன ஒரு சந்தோஷம்?

இதை முதல் முறையாகப் பார்க்கும் மயூரிக்கு எல் லாமே புதுமையாகவும், மன நிறையாகவும் இருந்தது. எழுபது வயதைத் தாண்டி மனம் ஒத்து, மகன், மருமகள், மகள், மருமகன், பேரக்குழந்தைகளோடு மன நிறை வுடன் வாழ்வது என்பது எல்லோருக்கும் வாய்க்கிறதா என்ன? உதட்டில் நிலைத்த புன்சிரிப்போடு நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தாள் மயூரி.

...முடியவும், அங்கிருந்த தம்பதி
யர்கள் ஒவ்வொருவராக மண மக்களின் கால்களில்
விழுந்து ஆசீர்வாதம் வாங்கச் சென்றனர்.

மயூரி அமைதியாக உட்கார்ந்திருக்க, லக்ஷ்மி பாட்டி
யின் மகள் பூரணி, ''மயூரி! என்ன உட்கார்ந்துக்கிட்டு
இருக்கே? போ போய் குங்குமம் வாங்கிக்கோ.'' என்று
விரட்டினார்.

மயூரி திருதிருவென விழிக்க, ''விஷ்ணு! அவ தான்
புது பொண்ணு நீ ஏன்டாப்பா இப்படி தயங்கற? போடா.''
எனவும் விஷ்ணுவிற்கு கேட்கவும் வேண்டுமா? அவ
னுக்கு மறுமுறை சொல்ல அவசியம் இல்லாது போனது.

''வா மயூரி! ஆசீர்வாதம் வாங்கிக்கலாம்.'' என்று
அவளை அழைத்துச் சென்றான்.

வரிசையில் நின்றவளுக்கு, இதிலிருந்து எப்படி
தப்பிப்பது என்று யோசனை ஓடியது. விஷ்ணு ஏதாவது
செய்வானா என்று அவன் முகத்தை ஏறிட, அவனோ
புன்சிரிப்பில் முகம் பிரகாசிக்க எந்த சஞ்சலமும் இல்
லாமல் நின்று கொண்டிருந்தான்.

ஆனால் இத்தனை எண்ணங்களும் இவர்கள் முறை
வரும் வரை தான், மூத்த மணமக்களின் கால்களில்
விழுந்து எழுந்திருக்கும் பொழுது சற்றுமுன் இருந்த
குழப்பமெல்லாம் எங்கோ பறந்து போய், மனம் நிர்மல
மாகி தெளிந்த நீரோடை போன்றிருந்தது மயூரிக்கு.

மயூரிக்கே அப்படி என்றால்.... விஷ்ணுவைப் பற்றி
சொல்லவே வேண்டாம். இப்போதே பாதி திருமணம்
நடந்து முடிந்த மாதிரி மிதப்பில் இருந்தான் அவன்.

விஷ்ணுவையும் மயூரியையும் மனதார வாழ்த்திய
லக்ஷ்மி பாட்டியும் தாத்தாவும், ''பதினாறும் பெற்று பெரு

வாழ்வு வாழணும். கணவன் மனைவியா நீங்க ரெண்டு
பேரும் தீர்க்கமான ஆயுளோட, என்றைக்கும்
சந்தோஷமா இருக்கணும். தீர்க்க சுமங்கலியா இருக்கணும்
டியம்மா.'' என்று அவர்கள் தலையில் மஞ்சள் அரி
சியைப் போட்டு ஆசீர்வதித்து, மயூரிக்கு குங்குமம்
வைத்து விட்டார்கள்.

''உங்க ரிசப்ஷனுக்குத் தான் வர முடியலை. பூரணி
அந்த திருக்கடையூர் பிரசாதம் எடு. இந்தாடா விஷ்ணு.
நீயே உன் ஆத்துக்காரிக்கு அம்பாள் குங்குமத்தை வைச்சு
விடு. இப்ப தான் இந்த காலத்தில் குங்குமம்னு வைக்கிற
பழக்கமே இல்லாம போயிடுச்சே? இந்தா வை.ம்ம்.''
என்று குங்கும கிண்ணத்தை விஷ்ணுவின் முன் நீட்டி
னார் லக்ஷ்மி.

மயூரியின் ஆளுகையில் இருந்த விஷ்ணுவின் மனம்
லக்ஷ்மி பாட்டியின் சொற்களில் உற்சாகமானது. நடுங்கும்
விரல்களால் குங்குமத்தை எடுத்து, மயூரியையே பார்த்த
வாறு அவள் நெற்றியை நோக்கி கைகளைக் கொண்டு
சென்றான் விஷ்ணு.

லக்ஷ்மி பாட்டி குங்குமத்தைக் கொடுத்து, எல்லோர்
முன்னிலையிலும் இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை
யில் தவிக்க விடுவார்கள் என்று மயூரி நினைத்துப்
பார்க்கவேயில்லை. விஷ்ணுவிற்கும் இதே மனநிலை
தானே இருக்கும் என்பது மாதிரி அவள் அவனைப்
பார்க்க, அப்போது விஷ்ணுவின் கண்களும் அவளையே
ஊடுருவியது.

அவனது விழிப் பார்வை மயூரியை முழுவதும் வசியப்
படுத்த, அவளுக்கு விஷ்ணுவிடமிருந்து ஒரு நொடி
கூட பார்வையை அகற்ற முடியவில்லை. சினிமாக்களில்
வரும் மாதிரி விரலை மட்டும் அழுத்துவான், குங்குமம்

வைக்க மாட்டான் என்று மனதின் ஓரத்தில் ஒரு எண்ணம் எழுந்து வருத்தத்தை தோற்றுவித்தது மயூரிக்கு. தான் என்ன நினைக்கிறோம். என்ன எதிர்பார்க்கிறோம் என்று அவளுக்கே அந்த கணத்தில் புரியாத புதிராகத் தான் இருந்தது.

ஆனால் விஷ்ணுவோ எந்தவித தயக்கமோ தடுமாற்றமோ இல்லாமல் ஆனந்தமான மனநிலையுடன் மயூரியின் நெற்றியில் திலகத்தை வைத்தான். திலகத்தை வைத்த பிறகும் இருவரின் பார்வையும் விலகாமல் கலந்திருக்க, மயூரிக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை மெய் சிலிர்த்தது.

விஷ்ணுவிற்கு மயூரியின் சிலிர்ப்பும், அந்த நொடியின் இருவருக்குமான ஏகாந்தமும் பிடித்தமானதாய் இருக்க திலகத்தை வைத்த விரலை சில நொடிகளுக்கு அகற்றாமல் இருந்தான்.

மயூரியின் விழிகள் அவன் பார்வையின் தீட்சண்யத்தை தாள முடியாமல் தாமாக மூடிக் கொள்ள, மனதில் எழுகின்ற உணர்ச்சிகளுக்கு அடிபணியவும் முடியாமல் தவித்தாள். குங்குமத்தை தன் நெற்றியில் உணர முடியா தவிப்பையும் கடந்து மனம் லேசாக, மயூரியின் மூடிய விழிகளில் இருந்து சில கண்ணீர் துளிகள் கசிந்தது.

அதைப் பார்த்த விஷ்ணு லேசாக பதறி, ''மயூரி!'' என்று மெல்லிய குரலில் விளித்தான்.

இமைகளை மெதுவாக மலர்த்தியவள், மெல்லிய புன்னகையை உதட்டில் படரவிட லக்ஷ்மி பாட்டி, ''க்ஷேமமா இருக்கணும் ரெண்டு பேரும்.'' என மீண்டும் வாழ்த்தினார்.

அந்த மங்களமான சுபநேரத்தில் அவ்வாறு நடந்தது இருவரையும் அளவிலா சந்தோ

உள்ளாக்க, நிறைவான மனநிலையோடு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

விஷ்ணுவிற்கு இதுநாள் வரைக்கும் மயூரியின் சம்மதம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற போராட்டத்தி லேயே விருப்பத்தை சொல்ல முடியாமல் போயிற்று. ஆனால் இன்றோ மயூரியின் நிலை விஷ்ணுவிற்கும் தெளிவாக விளங்கியது. இனிமேல் காதலை சொல்வதில் தாமதம் தேவையில்லை என்ற உணர்வில் மயூரியைப் பார்த்தான்.

மயூரியோ மது உண்ட மயக்கத்தில் இருப்பது போல் இருக்கவும், ''அங்கே பறக்கிற வெள்ளைக் காக்கா ரொம்ப அழகா இருக்குல்ல மனு?'' என்று காதோரத்தில் மெல்லிய குரலில் வினவ மயூரி எந்த மறுப்பும் இல்லாமல் தலையை ஆமோதிப்பாக ஆட்டினாள்.

சாலையோரம் ஏதோ வாகனம் செல்லவும் தோளை லேசாக அணைத்தவாறு, ''இந்த பக்கம் வா மயூரி!'' என்று அக்கறைக் குரலில் சொன்னான்.

மயூரி ஏற்கனவே மிதந்த நிலையில் இருக்கும் பொழுது ஏனோ இந்த ஸ்பரிசம் உயிர் வரை தீண்ட இரண்டாவது முறையாக மெய் சிலிர்த்தாள்.

அவளையே கவனித்துக் கொண்டிருந்தவன், ''இன் னைக்கு சென்னை ஊட்டி மாதிரி ரொம்ப ஜில்லுன்னு இருக் குல்ல?'' என்றான் பொங்கிய சிரிப்பை அடக்கிக்கொண்டு.

சுட்டெரிக்கும் வெயிலில் விஷ்ணுவின் கேலியைக் கூட உணராமல் 'ஆமாம்' என்று முன்னைவிட வேகமாக தலையாட்டினாள் மயூரி.

அவளது செய்கை சின்ன குழந்தையை நினைவூட்ட, ''பெரிச்சிருக்கா?'' என்றான் புன்னகையுடன்.

அவனது சரிபபில மேலும் மயங்கியவள் எங்கிருந்தோ ஒலித்த ஹாரன் சத்தத்தில் மீள, ''ஹான்.. என்ன கேட்டீங்க? என்னது பிடிச்சிருக்கா?'' என்று பதிலாக கேள்வி கேட்டாள்.

'ச்சே! கேள்வி கேட்கிற ஆர்டர் மாத்தி இருக்கணும் விஷ்ணு!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன் பூடகமாக, ''கல்யாணம் தான்.'' என்றான். உதட்டில் இருந்த புன்னகை முன்னைவிட விரிந்திருந்தது.

அவன் புன்னகை மேலும் வசீகரித்தாலும் தலையை நன்றாக உலுக்கிக் கொண்டு, ''லக்ஷ்மி பாட்டி கல்யாணமா? ஆமாம். நல்லா இருந்தது விஷ்ணு'' என்று பதில் தந்தாள்.

''கவுத்துட்டாளே!'' என்று சத்தமாகவே சொன்னவன், ''இதுவரைக்கும் நல்லா சமத்தா பதில் சொன்ன மயூரி. ஆனால் இப்போ...'' என்று கண் சிமிட்டி பெருமூச்செறிந்தான்.

அந்த நாள் முழுதும் அதே இனிமையில் கழிய, விசாலாட்சி அடுத்த நாள் காலையில் வந்து சேர்ந்தார்.

தாயுடன் சிறிது நேரம் பேசிவிட்டு ஹோட்டலுக்குச் சென்ற விஷ்ணு ஒருமணி நேரத்தில் திரும்பி வந்துவிட அவனைக் கண்ட மயூரி மிகவும் பதட்டமானாள். ஏனெனில் காலில் ஏதோ அடிபட்டு திரும்பி வந்திருந்தான்.

கார் டிரைவர் செந்தில் உதவ லேசாக விந்தியபடியே காரில் இருந்து இறங்கி உள்ளே வந்தான் விஷ்ணு.

மயூரிக்கு கை கால் லேசாக நடுங்க, ''என்னாச்சு விஷ்ணு? எப்படி திடீர்னு? அதுக்குத் தான் பார்த்து இருங்க... ஜாக்கிரதைன்னு சொல்லிட்டே இருக்கேன். நீங்க கேட்கிறதே இல்லை.'' என்று மூச்சுவிடாமல் புலம்பினாள்.

விஷ்ணுவிற்கு மயூரியின் கேள்விகளில் வலியை மீறி முறுவல் பூத்தது. தனக்கு ஒன்றென்றால் அவள் துடிப்பதைப் பார்த்து அவனுக்கு முறுவல் வந்ததில் ஆச்சரியம் என்ன?

''என்ன மயூரி? காலே போன மாதிரி பதட்டமா இருக்கே?'' என்று கேலியாக வினவியவன், மயூரியின் கண்களில் கண்ணீர் சுரந்ததைப் பார்த்து, ''ஹே! லூசு! என் இவ்வளவு எமோஷனல் ஆகறே? ஒண்ணுமில்லை.'' என்று சமாதானம் சொன்னான்.

அவனுக்கு கால் நீட்ட வசதியாக ஒரு ஸ்டூலை எடுத்து வந்து போட்டவள், ''ஆமாம்! உங்களுக்கு அடிபட்டால் கை தட்டி சிரிக்காமல் அழறேன் பாருங்க. நான் லூசு தான். இப்படி நடக்கிறதையெல்லாம் பார்த்துட்டு எதுவும் செய்ய முடியாமல்.... இருக்கிறேன் இல்லை? நான் லூசு தான்.'' என்று பொங்கிய அழுகைக்கு நடுவில் சொல்லிக்கொண்டே போனாள் மயூரி.

விஷ்ணுவிற்கு அவளது கண்ணீரைப் பார்த்ததும் மிகவும் வேதனையாய் இருந்தது.

''இங்கே வா மயூரி! நான் லூசுன்னு சொன்னதுக்கு சாரி. ஆனால் எனக்கு அடிபட்டதுக்கு நீ என்ன செய்ய முடியும்?'' என்று அவளது புலம்பலுக்கு விளக்கம் கேட்டான் விஷ்ணு.

''நான் போன் செய்து விசாரிச்சால் மட்டும் நான் என்ன, சின்ன பிள்ளையா? தேய்ஞ்சு போன ரெக்கார்ட் மாதிரி ஜாக்கிரதைன்னு சொல்லிட்டே இருக்கியேன்னு சொல்ல வேண்டியது. பாருங்க.... இப்போ அடிபட்டு வந்துட்டு உங்களுக்கென்ன சிரிக்கறீங்க? எனக்கு தானே கஷ்டமா இருக்கு?'' எப்பொழுதும் சுருக்கமாகவும்,

தெளிவாகவும் பேசும் மயூரி இப்பொழுது பதட்டமாக இருப்பதாலோ என்னவோ பொரிந்து கொண்டிருந்தாள்.

விஷ்ணுவின் நிலைமை தான் பாவம். அடிபட்டதால் கூட இத்தனை வேதனை இல்லை. தனக்கு அடிபட்டதால் மயூரி இத்தனை வேதனைப்படுகிறாளே என்ற மகிழ்ச்சியை மீறி கவலை தான் அதிகம் இருந்தது.

உள்ளிருந்து விசாலாட்சி பதட்டமாக, ''என்ன விஷ்ணு? அடிபட்டுடுச்சா? எப்படி? என்றபடியே வந்தார்.

முற்பகல் நேரத்தில் தியானங்கள், பூஜை என்று ஈடுபடுவது விசாலாட்சிக்கு வழக்கம். இன்று பூஜை முடிக்கும் பொழுது விஷ்ணுவின் குரலும், மயூரியின் புலம்பலும் கேட்க பதட்டத்துடன் சீக்கிரமாக முடித்துவிட்டு வந்தார்.

விசாலாட்சிக்கு மகனின் காலில் இருந்த கட்டைப் பார்த்ததும் கண்களில் வேதனை அதிகரித்தது.

''இல்லைம்மா. ஒண்ணும் பிரச்னையில்லை. நம்ம ஹோட்டலில் பின்னாடி எக்ஸ்டென்ஷன் பண்ணிட்டு இருக்கோம் இல்லையா? அங்கே கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டில் இருக்கும் போது காலில் அடிபட்டுடுச்சு. டாக்டர்கிட்ட போறதுக்குள் அஞ்சு நிமிஷத்தில் வீங்கிடுச்சு.'' என்று தேவையான விளக்கங்களை மட்டும் கொடுத்துக் கொண்டிருந்தான் விஷ்ணு.

''என்னப்பா? பார்த்து வேலை செய்யக் கூடாதா? ஃப்ராக்சர் எதுவும் இல்லையே விஷ்ணு?'' என்று கவலையுடன் பேசினார் விசாலாட்சி.

கவலையை போக்கும் விதமாக, ''இல்லைம்மா. லிகாமென்ட் டேமேஜ் ஆனதால் ஆன்கிள் ட்விஸ்ட் ஆகியிருக்கு. ரெண்டு நாளைக்கு கம்ப்ளீட் ரெஸ்ட்

எடுத்தால் சரியாகும்னு டாக்டர் சொல்லியிருக்கார்மா. ஐஸ் வைச்சால் வீக்கம் குறையும். ஒண்ணும் டென்ஷன் ஆகாதீங்க. ஏற்கனவே நம்ம மயூரி மேடம் என்னை லெஃப்ட், ரைட் என்று வாங்கி முடிச்சாச்சு.'' என்று சிரித்தபடியே முடித்தான்.

''ஆமாம்டா. நீங்க எல்லாம் வானத்தில் கண்ணை வைச்சுட்டுத் தான் நடப்பீங்க போல? ஒருத்தன் என்னடான்னா சுவத்துக்குப் பக்கத்தில் இருக்கிற ஸ்டேண்ட் மேலே மோதி மண்டையை உடைச்சுட்டு வந்து நிற்கிறான். இன்னொருத்தன் சின்ன பிள்ளை மாதிரி காலில் அடிபட்டு வந்து நிற்கிறான். என்னவோ நேரமே சரியில்லை....'' என்று தன் பங்கிற்கு புலம்பினார் விசாலாட்சி.

''ஆமாம்மா. யார் வந்த நேரமே சரியில்லை...'' என்று வைபவ் பொதுவாக குற்றம் சாட்டியபடியே நுழைந்தான். 'யார் வந்த நேரமோ' என்பது மட்டும் சுருதி குறைந்து இருந்தது.

எதுவுமே நடக்காத மாதிரி அப்பாவியான முகத்துடன் வைபவ் வரவும் எரிச்சலுடன் ஐஸ் கொண்டு வர செல்வதாகச் சொல்லி உள்ளே சென்றாள் மயூரி.

வைபவ் குன்னூரில் இருந்து நேரே பெங்களூருக்குச் செல்லாமல் விசாலாட்சி ஊருக்குச் சென்று வந்ததை விசாரிப்பதற்கான காரணம் வைத்து சென்னைக்கு வந்திருந்தான். கொஞ்சம் விட்டால் வைபவ் இப்பொழுதெல்லாம் சூரியோதயத்தை சென்னையில் ரசிக்க வந்ததாகக் கூட காரணம் சொல்லுவான்.

விசாலாட்சி தான் சொன்னதையே மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்.

வைபவ் விசாலாட்சிக்கே மயூரியைப் பற்றி உறுத் தலை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், ''இதெல்லாம் இப்போ ரெண்டு மாசமா தானேம்மா நடக்குது? வீட்டில் சச்சரவு, எல்லாரும் ஆஸ்பத்திரிக்குப் போற மாதிரியும் ஆகிடுச்சு.'' என்று ஒவ்வொன்றாக பட்டியல் வாசித்தான்.

''இப்போ ரெண்டு மா..ச...மா தான்.'' என்று யோசனை யுடன் இழுத்தவர், ''நம்ம ஜோசியரை பார்த்து ஏதாவது பரிகாரம் கேட்கலாமே?'' என்று முணுமுணுத்தார்.

விஷ்ணு, ''மறுபடியும் ஆரம்பிச்சுட்டீங்களா? உங்களை எல்லாம் திருத்தவே முடியாதும்மா. எவனோ ஒரு வீணாப் போனவன் வழியில் கம்பியைப் போட்டு வைச் சிருக்கான். கொஞ்சம் சுதாரிக்காமல் இருந்திருந்தால் அடி பலமா பட்டிருக்கும். யார் வந்த நேரமோ ட்விஸ்ட் மட்டும் தான். ஃப்ராக்ச்சர் கூட ஆகலை.'' என்று சாதாரணமாகவே சொல்வது போல் இருந்தாலும் 'யார் வந்த நேரமோ' என்பதில் கூடுதல் அழுத்தமும், சுருதி ஏற்றமும் இருந்தது.

இருவருக்குள்ளும் நடக்கும் இந்த மாதிரியான பனிப் போர் கவலை அளித்தாலும் கண்டும் காணாமலும் இருப் பார் விசாலாட்சி.

இந்த முறை மயூரி மௌனமாக இல்லாமல் விஷ்ணு விடம், ''அந்த வீணா போனவன் கம்பியை தெரிஞ்சு போட்டானோ? தெரியாமல் போட்டானோ?'' என்று வினவி நெற்றிக்கண் பார்வையை வைபவிடம் செலுத்தினாள்.

மயூரியின் பார்வையைக் கவனித்த விசாலாட்சி அம்மாவிற்கு ஒருவிதமான பயம் தோன்றி முகத்தை இருள வைத்தது.

விஷ்ணுவிற்கு காலில் ஐஸ் ஒத்தடம் கொடுத்த படியே விசாலாட்சியைக் கவனித்த மயூரி, ''அம்மா!

என்னாச்சு? போன வாரமே டாக்டர் கொஞ்சம் கூட ஹெல்த் இம்ப்ரூவ்மெண்ட் இல்லாதது மாதிரி தான் பேசினார். பி.பி கூட ரொம்ப மாறிட்டே இருக்குதும்மா. நீங்க ரிலாக்ஸ்டாக இருங்க.'' என்று அக்கறையோடு சொன்னாள்.

சற்று நேரத்தில் ஜோசியரிடம் சென்று வந்த பிறகும் விசாலாட்சியின் முகமே சரியில்லை.

மயூரியும், விஷ்ணுவும் வற்புறுத்தி விஷயத்தைக் கேட்கவும் தயங்கியவாறே, ''நம்ம வீட்டில் கட்டாயம் ஒரு உயிர் இழப்பு இருக்குன்னு சொல்லி இருக்கார்டா. மனசுக்கு வருத்தமா இருக்கு. இன்னும் எதையெல்லாம் தாங்கறதுக்கு இந்த ஜீவனை படைச்சாரோ?'' என்று வேதனைக்குரலில் மொழிந்துவிட்டுச் சென்றுவிட்டார்.

அதைக்கேட்ட மயூரி விசாலாட்சியை விட மிகுந்த கலவரமானாள். மீண்டும் மீண்டும் வைபவ் ''விஷ்ணு இருக்கிற வரைக்கும் தானே?'' என்று சொன்னதே மயூரிக்கு எதிரொலித்துக் கொண்டிருந்தது. கண் முன்னே விஷ்ணு காலில் அடிபட்டு படுத்திருப்பதே அவள் பயத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. நேரடியாக மோதும் பகைவன் என்றால் சமாளிக்கலாம். ஆனால் இந்த வைபவ் தந்திரம் செய்து மறைந்து நின்று தாக்குபவன் ஆயிற்றே?

தொடர்ந்த இரண்டு நாட்கள் ஜீவனே இல்லாமல் மயூரி வளைய வந்தாலும் விஷ்ணுவைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டாள்.

விஷ்ணு தன் கால் ஓரளவு குணமானதும், ''நீயும் ரொம்ப டிஸ்டர்ப்பா இருக்க மாதிரி இருக்கு மயூரி. எனக்கும் வீட் டுக்குள்ளேயே அடைஞ்சு இருக்கிறது ரொம்ப கஷ்டமா இருக்கு. எனக்கு ஊட்டியில் கொஞ்சம் வேலையிருக்கு.

நம்ம ரெண்டு பேர் மட்டும் மூணு நாள் போய் வர லாமா?'' என்று வினவினான்.

விஷ்ணு நிம்மதிக்காக ஊட்டி செல்ல முடிவு செய் தான். ஆனால் ஊட்டி பயணத்தில் அவன் நிம்மதியைத் தொலைக்கப் போவது தெரியாமல்...

17

மயூரியும், விஷ்ணுவும் ஊட்டியை நோக்கிப் பயணம் செய்துக் கொண்டிருந்தனர்.

மயூரி எவ்வளவோ மறுத்தும் தன்னுடைய கால் ஓரளவு குணமடைந்து இருப்பதால் தானே காரை செலுத்துவ தாக சொல்லிவிட்டான் விஷ்ணு. எப்படியாவது ஊட்டி பயணம் முடிவதற்குள் மயூரியிடம் தன் காதலை சொல்லி விடுவது என்று உறுதி கொண்டிருந்தான். அதற்கு இருவரும் மட்டுமான தனிமை மிகவும் அவசியமானது.

விஷ்ணு, மயூரி இருவருக்கும் இடையிலும் நிறைய விஷயங்கள் பேச சுவாரஸ்யமாய் இருந்தன. இருவருமே இடமாற்றம் மனமாற்றத்திற்கான காரணி என்பதால் மட்டுமே ஊட்டிக்கு வருவதால் நிம்மதியைக் குலைக்கும் விஷயங்களை தங்களின் எல்லைக்குள் அனுமதிக்கவே யில்லை.

கையில் விஷ்ணுவின் கல்லூரி புகைப்பட ஆல்பத்தை வைத்துக்கொண்டு மயூரி, ''விஷ்ணு நீங்க இவ்வளவு லூட்டி செய்து இருக்கீங்களா? என்னால் நம்பவே முடி யலை.'' என்றாள் கண்களை விரித்து.

'''நான் லூட்டி செய்பவன்' அப்படின்னு ஏதாவது ஸ்டிக்கர் ஒட்டிட்டா அலைய முடியும்? அதுக்காகத்

தானே மயூரி ஆல்பம் போட்டு எவிடன்ஸ் வைச்சிருக் கிறது.'' என்று சிரித்தபடியே சொன்னான் விஷ்ணு.

மயூரி வித்தியாசமாக விஷ்ணுவைப் பார்த்துவிட்டு சிரிக்கவும், ''என்ன ஸ்டிக்கர் ஒட்ட வைச்சு கற்பனையா? விஷ்ணு! நீயே ஏன்டா உன்னை இப்படி ஜோக்கா ஆக்கிக் கற?'' என்ற ரசனையுடன் அலுத்துக் கொண்டான்.

''ஹே! இதென்ன ராம் அண்ணன் லேடி மாதிரி டிரஸ் பண்ணிட்டு போஸ் கொடுக்கிறார்?

''ஹையோ அது செம கூத்து! நாங்க கல்ச்சுரல்சில் ஒரு ஸ்கிட் போடலாம்னு எல்லா ஏற்பாடும் ஆகிடுச்சு. கடைசியில் எங்க கூட நடிக்க வேண்டிய க்ளாஸ் பொண்ணு கடைசி நேரத்தில் வராமல் சதி பண்ணிட்டாள். அதனால் நம்ம ராம் தான் அன்னைக்கு ரமா ஆக வேண் டிய நிலைமை.''

''இன்ட்ரஸ்டிங். எங்கிருந்து கடைசி நேரத்தில் காஸ்ட் யூம் எல்லாம் பிடிச்சீங்க?''

''எங்க கேங்கில் விக்ரமாதித்தன் போட்டோவில் பார்த்தல்ல?''

''விக்ரமாதித்தனா?'' என்று சந்தேகத்துடன் வினவிய படியே பார்த்து முடித்த புகைப்படங்களை நோட்டம் விட, ''பிரவீனோட பட்ட பெயர் தான் விக்ரமாதித்தன். அதாவது தன் முயற்சியில் தளராத விக்ரமாதித்தன்.'' என்று பெயர் காரணம் சொல்லி விளக்கம் கொடுத்தான் விஷ்ணு.

மயூரி ஏறிட, ''லவ் ப்ரொபோஸலில் தான் அத்தனை முயற்சியும். அவன் அப்படி முயற்சி ஒரே பொண்ணு பின்னாடி எடுத்திருந்தால் பரவாயில்லை. ஆனால் அவன்தான் பார்க்கிற பொண்ணு பின்னாடி எல்லாம்

முயற்சி எடுத்துட்டு இருந்தானே? அப்படி அவன் எடுத்த முயற்சியில் எங்க க்ளாசுக்கு புதுசா வந்த கெஸ்ட் லெக்ச்சர் கலா மேடமும் அடக்கம்.'' என்று உதட்டோர சிரிப்புடன் கேலியாகச் சொன்னான்.

''மேடமை கூட விட்டு வைக்கலையா அந்த விக்ரமாதித்தன்?'' என்றாள் ஆர்வமாக.

''நாங்களும் அதே தான் கேட்போம். புதுசா அட்மிஷன் போலன்னு நினைச்சு முயற்சி செய்துட்டானாம். அந்த மேடமோட வீட்டுக்காரர் போலீஸ் வேற. அது தெரிஞ்சு நாலு நாளைக்கு அவன் நிலைமை 'ஏஸ் ஐ அம் சஃபரிங் ஃப்ரம் போலீசோ ஃபோபியா' அப்படின்னு தான் உளறிட்டு இருந்தான்.'' என்று சுவையாக நடந்த சம்பவங்களைப் பகிர்ந்தான் விஷ்ணு.

அவன் சொன்ன விஷயங்களை வைத்து, ''அப்புறம் நாலு நாள் சென்று க்ளாசுக்கு பொம்பளை வேஷத்தில் தான் விக்ரமாதித்தன் வந்தாரா? நல்லவேளை பிரவீனை பிரவீனான்னு நினைச்சு யாரும் லவ் லெட்டர் கொடுக்கலை!'' என்று மயூரி சொல்ல இருவருக்குமிடையே சிரிப்பு அடங்க வெகுநேரம் ஆயிற்று.

''ஆனால் அந்த ஸ்கிட்டில் ராம் பெர்ஃபாமன்சுக்காகத் தான் எங்களுக்கு முதல் பரிசு கொடுத்தாங்க. இந்த போட்டோவை தான் அவன் கல்யாணத்துக்கு ஃபிரேம் செய்து கொடுக்கப் போறேன்னு ராம்கிட்ட வம்பு செய்துட்டே இருப்பேன். ஹி இஸ் எ வெரி க்ளோஸ் பிரண்ட், க்ளோஸ் பிரண்ட் என்றதும் தான் ஞாபகம் வருது. சுமதி பத்தி ஏதோ சொல்லணும்னு சொன்னியே?'' என்று நினைவூட்டினான் விஷ்ணு.

''ரெண்டு நாளைக்கு முன்னாடி சுமதி மறுபடியும் போன் செய்தாள் விஷ்ணு. அன்பரசு விஷயம் பத்தி

ஏற்கனவே உங்களிடம் சொல்லி இருந்தேன் இல்ல? பாஸிடிவ்வா தான் பேசினாள். அன்பரசுக்குத் தான் ஊட்டியிலேயே ஏதாவது வேலை கிடைச்சால் நல்லாயிருக்கும்னு சொல்லிட்டு இருந்தாள்.'' என்று விவரித்ததை கவனமாக கருத்தில் பதித்தான்.

''நான் எனக்கு தெரிஞ்ச எஸ்டேட்டில் ஏதாவது வேலை இருந்தால் விசாரிச்சு சொல்றேன்னு மட்டும் சொல்லி இ...ருக்...கேன்.'' என்று இழுத்தாள் மயூரி.

மயூரியின் தயக்கமும், சொல்ல வரும் விஷயமும் விஷ்ணுவிற்குப் புரிந்தது.

இருந்தாலும் கேலியாக, ''உனக்கு தெரிஞ்ச எஸ்டேட்டா? எது மயூரி?'' என்று புருவத்தை மட்டும் உயர்த்திவிட்டு, சாலையில் பார்வையைப் பதித்திருந்தான்.

'ரொம்பவே அழுத்தக்காரன் தான்' என்று மனதில் சிரித்துக்கொண்டு, ''எனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஊட்டியில் ஒரே ஒரு எஸ்டேட் தான். அங்கே வேலை எதுவும் இருக்கா முதலாளி சார்?'' என்று பவ்யமாகக் கேட்பது போன்ற பாவனையில் வினவினாள் மயூரி.

''முதலாளி அம்மாவே நீங்க தான். அப்புறம் என்ன? நீங்களே ஒரு வேலை போட்டு கொடுக்க வேண்டியது தானே?'' என்று இயல்பாக பதில் தந்தான்.

என்ன சொல்ல வருகிறான் இவன்? நிறைவேறாத வீண் ஆசையை நாம் இவனுக்கு வளர்த்துவிட்டு விட்டோமோ?

மயூரியின் இதயம் வேகமாகத் துடிக்க, அதை கண்டுக்கொள்ளாத பாவனையில், அவனது இலகு பதிலுக்கு கேலியாக, ''இடத்தைக் கொடுத்தால் மடத்தை பிடிக்கிற கதையெல்லாம் எனக்கு சரிவராது.'' என்றாள்.

ஆனால் மயூரி இப்படி கதை சொல்வது தான் விஷ்ணுவிற்கு சரிவராதே?

இப்பொழுதெல்லாம் மயூரியினிடத்தில் விஷ்ணுவிற்கு தனி சலுகை தான். தன் மறுப்பை, மனதை முகத்தில் அடிப்பது மாதிரி மயூரி விஷ்ணுவிடத்தில் மட்டும் சொல்வதுமில்லை, செய்கையால் உணர்த்துவதுமில்லை. அவளால் முடியவில்லை என்பது தான் பிரதானமான காரணம்.

''இடம் கொடுக்கிறவங்களே மனம் விரும்பி மடத்தை கொடுத்தால்?'' என்று நேரடியாக விஷயத்தை சொல்லாமல் உலகத்தை சுற்றி வந்தான் விஷ்ணு.

மயூரி இப்பொழுது கூர்மையான பார்வை செலுத்தவும், 'விசாலாட்சியம்மா இருக்க பயமேன்?' என்ற மனப்பான்மையில், ''அம்மாக்கு உன்னை ரொம்ப பிடிக்கும் மயூரி. அவங்க உன்னை தான் சின்ன முதலாளியம்மாவா ஆக்கியிருக்காங்க. அதான் சொன்னேன்.'' என்றான்.

எங்கோ வெளியை வெறித்துக் கொண்டே, ''அவங்களோட பெரிய மனசு அந்த மாதிரி எண்ணத் தோன்றுது. ஆனா என்னோட எல்லை எது என்று எனக்கு தான் தெரியணும். எல்லைக்குள்ள நிற்பது தான் எனக்கு அழகு. நல்லது.'' என்றவள், ''சாரி. அதை விடுங்க. நான் அன்பரசு பத்தி சொன்னதை யோசிச்சீங்களா விஷ்ணு? ஏதாவது வேலை இருக்கா?'' என்றாள் மீண்டும் தொடங்கினாள் மயூரி.

''நீங்க ரெக்கமன்ட் செய்யும் போது என்னால் முடியலைன்னு சொல்ல முடியுமா மேடம்?'' என்றுவிட்டு கொஞ்சம் குரலை தாழ்த்தி, ''இந்த உலகத்தில் எதுவும் இலவசமில்லை, அப்படின்னு ஒருத்தங்க தத்துவம் சொன்னாங்க மயூரி. அவங்களை நீ பார்த்திருக்கியா?'' என்றான்.

''அன்பரசு என்ன உங்களுக்கு இலவசமாகவா வேலை செய்து கொடுக்கப் போறார்? அல்லது நீங்க தான் வேலை செய்யாமலேயே பணம் மட்டும் கொடுக்கப் போறீங்களா? அதனால் தத்துவம் எல்லாம் சரியா தான் சொல்லியிருக்காங்க.'' என்று விஷ்ணுவிற்கு தானும் சமாளிப்பில் சளைத்தவள் இல்லை என்று நிரூபித்தாள் மயூரி.

ஊட்டி செல்லும் வழியில் கோயம்புத்தூர் என்று ஏதோ பலகையைப் பார்த்ததும் விஷ்ணு கேலியாக, ''மயூரி! நேரா அவினாசிக்குப் போய் நிறுத்தி, உங்க வீட்டிலும் நம்ம ட்ராமாவை நடத்தினால் எப்படி இருக்கும்?'' என்றான் கண்ணை சிமிட்டியபடியே.

''எப்படி இருக்கும்? வீட்டில் ஒரு பிரளயமே நடக்கும். அவங்க கேட்கிற கேள்வியில் குறைந்தபட்சம் என் உயிருக்கு உத்திரவாதம் இருக்காது. நேரா பரலோகத்திற்கு டிக்கெட் வாங்கிட வேண்டியது தான்.'' என்று தோளை குலுக்கிக் கொண்டு சொன்னாள்.

அவளது உயிர் மயூரிக்கு அலட்சியமாக இருக்கலாம். ஆனால் விஷ்ணுவிற்கு?

சட்டென்று, ''என்ன பேச்சு பேசறே?'' என்று மயூரியைக் கண்டித்த விஷ்ணு சாலையில் கவனத்தைக் கோட்டை விட்டான்.

எதிரே பெரிதாக ஒரு லாரி வளைவில் திரும்ப, கார் மீது மோதப் போவதாக நினைத்து டிரைவர் சீட்டிற்கு அருகில் இருந்த மயூரி, ''வி...ஷ்...ணு!'' என்று கண்ணையும் காதையும் மூடிக் கொண்டு அலறினாள்.

விஷ்ணுவும் சுதாரிப்பாக காரை வேறு திசையில் திருப்ப எதிரே வந்த வேன் டிரைவரும் சடன்

பிரேக் போட்டு நிறுத்தினார். எல்லாம் நடந்து முடிய இரண்டு நிமிடங்கள் தான்.

ஆனால் மயூரியின் நிலைமை மிகவும் மோசமானது. ஏற்கனவே வைபவின் மிரட்டலால் மன உளைச்சல் ஏற்பட்டு அவதிப்பட்டிருந்த மயூரி, இப்பொழுது கண் முன் நிகழவிருந்த விபத்தால் வெலவெலத்துப் போனாள்.

அவளுக்கு முகமெல்லாம் அதிர்ச்சியில் வெளுத்துப் போய் கைகள் நடுங்க ஆரம்பிக்க, விஷ்ணு செய்வதறியாது தவித்தான்.

''மயூ! மயூரி. சாரிம்மா. நான் கொஞ்சம் கவனமா இருந்திருக்கணும். ஒண்ணும் பிரச்சனை இல்லை. இன்னும் ஒரு மணி நேரம் தான்.'' ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு சமாதானம் செய்தான்.

மயூரி கண்களை இருட்டிக் கொண்டு வருவதாகச் சொல்லவும், அருகில் இருந்த குளிர்ந்த நீரை மயூரியைப் பருகச் செய்தான். அவள் கைகளைத் தேய்த்தவாறே, அவளது இருக்கையை பின்னுக்குத் தள்ளி படுப்பதற்கு ஏதுவாக செய்த பிறகு காரை கவனமாகச் செலுத்தினான்.

அடுத்து வந்த ஒருமணி நேர பயணத்தில் மயூரி உணர்ச்சிப் போராட்டத்தின் களைப்பிலோ, அதிர்ச்சி மயக்கத்திலோ கண்களை திறக்கவேயில்லை.

அவ்வப்பொழுது வயிற்றில் 'சுறுக்' என்று மட்டும் வலி வரவும் நன்றாக சாய்ந்து படுத்தாள் மயூரி.

அடிக்கடி, ''ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'' என்று முனகியபடி புரண்டாள்.

விஷ்ணுவிற்கு மயூரியின் நிலை கலக்கத்தை அதிகரித்தது. மனதில் மயூரியின் நலனுக்காக இறைவனிடம் பிரார்த்தனையும் நடந்து கொண்டிருக்க, காரை முடிந்த

வரை கவனமாகவும், வேகமாகவும் நேரே மருத்துவமனைக்குச் செலுத்தினான் விஷ்ணு.

மருத்துவர் பரிசோதனை முடித்துவிட்டு, ''பி.பி கொஞ்சம் லோ ஆகி இருக்கிறதால் தான் மயக்கமா இருந்திருக்காங்க. ஃபீவர் வேற இருக்கு. இன்னைக்கு நைட் ரொம்ப கவனமா பார்த்துக்கோங்க. பயங்கர வீக்கா இருக்காங்க. இன்னும் அட்லீஸ்ட் ரெண்டு வாரத்திற்கு எந்த ஸ்ட்ரைனும் செய்துக்க வேண்டாம். முடிஞ்ச வரைக்கும் பெட் ரெஸ்ட் எடுக்கிற மாதிரி பார்த்துக்கோங்க.'' என்று பல அறிவுரைகள் வழங்கினார்.

விஷ்ணுவிற்கு, தன் கவனக்குறைவினால் தான் மயூரிக்கு இந்த நிலைமை என்ற குற்ற உணர்வு தோன்றியது. எத்தனை சந்தோஷமாகத் தொடங்கிய பயணம்?

அன்றிரவு மயூரியின் அருகிலேயே இருந்து அக்கறையாகவும், கவனமாகவும் பார்த்துக் கொண்டான் விஷ்ணு.

மாத்திரைகளின் உதவியோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் அவ்வப்பொழுது மயூரிக்கு நடுக்கம் ஏற்பட்டது. நடுக்கம் வரும் போதெல்லாம் விஷ்ணு தான் அருகில் இருந்து ஆதரவாகத் தட்டிக் கொடுத்தான்.

சில நேரங்களில், ''விஷ்ணு... விஷ்ணு... விஷ்ணுவை ஒண்ணும் பண்ணிடாதே!'' என்று பதட்டத்தில் உளறலாக முனகல் வந்தது மயூரியினிடத்தில்.

ஆழ்ந்த உறக்கத்திலும் அவளது புலம்பல் நிற்காமல் போகவே விஷ்ணு சமாதானமாக, ''மனு! ஒண்ணுமில்லை மனு. எனக்கு ஒண்ணும் ஆகலை.'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆனால் அவன் சமாதானத்திற்கெல்லாம் அடங்காமல் சற்று இடைவெளிவிட்டு மயூரியின் புலம்பல் பிதற்றலாகவே தொடர்ந்தது.

''விஷ்ணு.... ஜாக்கிரதை. ஜாக்கிரதையா இருங்க. கவனம்...''

''ச்சே! போயிடு! உன்னால் உன் தம்பியையே எப்படி கொல்ல முடியுது?''

''கையை எடு! எடுடா!''

''இல்லை வைபவ்! என்னை பழி வாங்க விஷ்ணுவை ஒண்ணும் செய்துடாதே! நான் போயிடறேன்!''

மயூரியின் நெற்றியை வருடக் கொண்டு போன கை அப்படியே அந்தரத்தில் நிற்க, பேயறைந்தது போல் அவளைப் பார்த்தான் விஷ்ணு.

இவள்.... இப்போது என்ன சொன்னாள்? வைபவா? வைபவ்... பிரசாத்தா? தன் கூட பிறந்தவனா? சப்த நாடியும் ஒடுங்க மயூரியையே வெறித்தான் விஷ்ணு.

தலையில் ஓங்கி அடித்துக் கொண்டவனுக்கு எதையும் நம்ப முடியவில்லை. வைபவா? வைபவா? என்ற கேள்வியே திரும்ப திரும்ப எதிரொலித்தது. ச்சீ! த்தூ... இவனெல்லாம் என்ன மனிதப் பிறவி?

'ஷிட்...ஷிட்!... புல்ஷிட்' என்று பலமுறை எதைத் திட்டுகிறோம் என்று தெரியாமலேயே கத்திக் கொண்டிருந்தவன், மயூரியின் லேசான அசைவில் அமைதியானான். அவள் அருகில் அமர்ந்து அவள் கரத்தை தடவிக் கொடுத்தவனுக்கு வைபவை நினைத்து பெரும் அருவருப்பாக இருந்தது. மயூரியின் இந்த நிலைக்கு காரணமான யாரோ மூன்றாம் மனிதன் மீது இருந்த ஆத்திரம், இப்பொழுது பன்மடங்காக அதிகரிக்க, அவனுக்குத் தெரியாமலேயே மயூரியின் கரத்தை அழுத்தினான். அதில் லேசாக புரண்டு படுத்தவளுக்கு போர்த்திவிட்டு அங்கிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தான்.

அப்படியும் உட்கார முடியாமல், அறையை குறுக்கும் நெடுக்குமாக நடந்தவனுக்கு மனம் உலைக்களமாய் கொதித்தது. ச்சீ! இவனெல்லாம் ஒரு மனிதன்! இவனுடன் தன் தாயின் உதிரத்தைப் பங்குப் போட்டுக் கொண்டு இருந்திருக்கிறோம் என்ற நினைப்பே தன்னையும் டெட்டால் ஊற்றிக் கழுவ வேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவித்தது. டெட்டால் ஊற்றிக் கழுவினாலும் இந்த அருவருப்பு போகாது.

இந்தத் தீயைத் தணிக்க சீதை மாதிரி தீ தான் குளிக்க வேண்டும் போல?

ஊர் பேர் தெரியாதவன் தன் கையில் கிடைத்தாலும் போதுமென்று நினைத்தேன்.... இப்போது ஒரே வீட்டில், கைக்கு எட்டிய தூரத்தில் இருந்து இருக்கிறான். எத்தனை எத்தனை சந்தர்ப்பங்கள்? அவனை அடித்து துவம்சம் செய்ய?

வைபவ் எப்படி இப்படி ஒரு கீழ்த்தரமான காரியம் செய்தான்? என்ன பிறப்பு, வளர்ப்பு இருந்தென்ன? 'தீதும், நன்றும் பிறர் தர வாரா' என்று சொல்லுவார்கள். அது மாதிரி தான்... எத்தனை நற்குடி பிறப்பு இருப்பினும், தீய வழி போக வேண்டும் என்றால் அதற்கு ஆயிரம் வழி இருக்கும் போலும்?

மயூரியின் கடந்த காலத்தைப் பற்றி அறிந்தவன் என்ற முறையில்- அந்த முகம் தெரியா மனிதன் மீது இருந்த கோபம்- 'ச்சே எப்படி ஒரு மனிதனால் தன் சக மனுஷியிடம் இப்படி மிருகமாக நடந்துக் கொள்ள முடிகிறது?' என்ற அருவருப்பு, கோபம் வரையறை இல்லாமல் வைபவின் மேல் திரும்பியது.

இவனா? இவனா? தன்னுடைய ரெட்டையா? மயூரியின் வார்த்தையின் மேல் எழுந்த அவநம்பிக்கை

யில்லை அது. ஒரு பெண்... அதுவும் மயூரி... தூக்க கலக்கத்தில் பிதற்ற வேண்டுமென்றால்... அவள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருப்பாள்? கடவுளே...!

விஷ்ணுவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அந்த பாதகனுடனா இவளை கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக ஒரே வீட்டில் தங்க வைத்திருந்தேன்? கண்களை இறுக மூடி இருந்தவனுக்கு இதை நினைக்கையிலேயே அடிவயிறு பிசைந்தது. சொல்லவும் முடியாமல் மயூரி அங்கு என்ன என்ன கஷ்டங்களை அனுபவித்தாளோ? இந்த பாவத்தைப் போய் நான் எங்கே கழுவுவேன்?

அத்தனை அறிகுறிகள் இருந்தும், தான் எப்படி வைபவ் தான் மயூரி சொன்ன பிரசாத் என்று சந்தேகப் படாமல் போனேன்? முன்பே தெரிந்திருந்தால் மயூரிக்கு இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையைக் கொடுக்காமல் இருந்திருக்கலாமே? மயூரி தன் முகத்தில் அறைந்தது போல் பெயரை சொன்னதும் தான் தனக்கு புரிய வேண்டுமா? ஆனால் சிறிதேனும் கூடப் பிறந்தவனைப் பற்றி எப்படி அவ்வளவு மோசமாக நினைக்க முடியுமென்று தோன்றினாலும், அவனையே அவனால் மன்னிக்க இயலாது போயிற்று.

எத்தனை அறிகுறிகள்? இரண்டு பேரும் முதலில் இருந்தே எலியும் பூனையுமாக இருந்தது, ரிசப்ஷன் பொழுது வள்ளியை காரில் அழைத்து போவதற்கு மயூரி அழுத்தமாக மறுத்தது.... கடவுளே! எத்தனை பெரிய முட்டாள் நான்? நான் அல்லவோ எதுவும் புரியாத ஜடமாக இருந்து இருக்கிறேன்.

மயூரி கடந்து போனதை நினைத்துத் தான் துன்பப் படுகிறாள் என்று தப்பாக அல்லவா நினைத்தேன்?

ஆனால் அவளோ தன் நேரில் நிறகும் நிஜத்தைப் பார்த்தல்லவா ஆத்திரப்பட்டு இருக்கிறாள்? கை முஷ்டிகள் இறுக, அருகிலிருந்த தேக்கு மர டீ டேபிளை ஓங்கி குத்தினான் விஷ்ணு. கையில் ஏற்பட்ட வலி, மனதிலிருந்த வலியை விட மிகவும் சொற்பமாகவே இருந்தது.

வேறு என்ன மாதிரி வேதனைப்பட்டாளோ? கடைசியாக தன் அறையில் நடந்தது தான் என்ன? கண்கள் கோவைப் பழமாக சிவக்க, விஷ்ணுவிற்கு என்ன செய்வதென்று தெரியாமல் யாரை நோவது என்று புரியாமல் சுவற்றில் கை 'விண் விண்' என்று வலிக்கும் வரை குத்தினான்.

ஒன்றையும் கூற முடியாத அளவிற்கா மயூரி தன் மீது வைத்த நம்பிக்கை இருந்திருக்கிறது? கடவுளே...! எத்தனை முறை இந்த இரவில் அவரை அழைத்துவிட்டேன்? விஷ்ணுவின் கண்கள் சூடான கண்ணீரை உதிர்த்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளை, முகத்தில் கோபமும் துயரமும் போட்டி போட பார்த்தவனுக்கு இனி என்ன செய்வது என்ற புரியாமல் குழப்பமே எஞ்சியது.

இந்த ஊட்டி பயணம் எத்தனை மகிழ்ச்சியோடு தொடங்கியது. இனி இவள் முகத்தை எப்படி குற்ற உணர்ச்சியில்லாமல் பார்ப்பது? வைபவுடன், வைபவின் சகோதரனுடனேயே - ஒரே வீட்டில் அதுவும் இத்தனை நாட்கள் இருந்ததே ஆச்சரியம் தான். விஷ்ணுவால் அந்த நேரத்திலும் மயூரியின் துணிச்சலைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

மயூரியிடம் எந்த முகத்தை வைத்துக்கொண்டு 'என்னை திருமணம் புரிந்துக் கொள்கிறாயா?' என்று கேட்க முடியும்? தன் முகத்திலேயே காரி உமிழ மாட்டாளா? காது கொடுத்துக் கேட்க முடியாததை எல்லாம் மயூரி

கேட்டு விட்டால்....? கண்களை இறுக மூடி, தன் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான் விஷ்ணு.

18

காலையில் புத்துணர்ச்சியுடன் விழித்தெழுந்த மயூரி காலைக் கடன்களை முடித்துக்கொண்டு விஷ்ணுவைத் தேடி வந்தாள். அறை இருந்த லட்சணத்தில் மனதின் மூலையில் உறுத்தல் இருந்துக் கொண்டேயிருந்தது. டீ பாய் சரிந்து கிடக்க, சுவற்றில் மாட்டியிருந்த படங்களும் உடைத்தது மாதிரி இருந்தது.

மாத்திரைகளின் விளைவால் இரவு நடந்ததைப் பற்றி எதுவுமே தெரியாமலா உறங்கியிருந்தேன்? முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் ஹாலில் உட்கார்ந்திருந்த விஷ்ணுவைப் பார்க்கையில் அந்த உறுத்தல் மேலும் வலுப்பெற, காலை காபியை அவனிடம் கொடுத்து விட்டு மெதுவாக, ''விஷ்ணு!'' என்று அழைத்தாள்.

நிமிர்ந்து மயூரியைப் பார்த்தவனது சிவந்திருந்த விழிகளில் என்னது என்று சொல்ல முடியாத பாவ மிருந்தது.

பதைப்புடன், ''விஷ்ணு!'' என்று மீண்டும் அழைத் தவள் தயக்கத்துடன், ''நேத்து ராத்திரி... என்ன நடந் தது?'' என்று கேட்டாள்.

ஒன்றும் கூறாமல் அவளையே விஷ்ணு பார்க்க, அப் போது தான் விஷ்ணுவின் கை முஷ்டியை மயூரி கவனித் தாள்.

''ஐயோ! விஷ்ணு! என்னதிது? ரத்தம் கசிஞ்சு இருக்கு? என்ன செய்தீங்க? எப்படி அடி பட்டுச்சு?'' அவன் வலது கரத்தை எடுத்த துடைத்துவிட்டவாறே வினவினாள்.

கைகளை விடுவித்துக் கொண்டு, ''ப்ச்! இது ஒண்ணு மில்லை. சிலரை நேரில் அடிக்க முடியலை. அதை இப்படி தான் ஆத்திக்க வேண்டியிருக்கு.'' சுய வெறுப் புடன் அவன் பேச மயூரிக்கு நெஞ்சம் பதறியது.

''வி...ஷ்ணு!''

வாயை இறுக மூடித் திறந்தவன், முடியாமல் போக, ஆசுவாசப்படுத்திக் கொள்ள அங்கும், இங்கும் நடை பயின்றவாறே, ''ஏன் மயூரி? உன்னால் என்னிடம் கூட சொல்ல முடியாமல் போச்சு இல்ல?'' குரலில் விரக்தி வழிந்தோட கேட்டான்.

அவளுக்கு அவன் எதைப் பற்றி பேசுகிறான் என்று புரிய மயூரி ஒரு கேவலுடன், ''விஷ்ணு!'' என்று விளித்தாள்.

மயூரிக்கு எல்லாமே தெளிவாக விளங்கிவிட்டது. ஆழ்ந்த உறக்கத்தில் ஏதோ உளறியதாக எழுந்த உறுத்தல் நிஜம் தான் போலும்!

விஷ்ணுவிற்கு எல்லாம் தெரிந்துவிட்டது... எல்லாம்!!!

மனம் ஆறாமல், ''என் மேல உனக்கு நம்பிக்கையே இல்லை. அப்படிதானே மயூரி?'' என்றான் வேதனை யுடன்.

ஆரம்பத்தில் அரை நொடியேனும் அவன் மீது நம்பிக்கை இல்லாமல் தான் இருந்திருக்கிறாள். அதை நினைத்து இப்போது மயூரிக்கு குற்ற உணர்ச்சியில் முகம் சிவந்தது.

அவள் முகத்தையே பார்த்திருந்தவனுக்கு அது புரிய, ''இல்லையா? என் மேல நம்பிக்கை

வைக்க முடியாத அளவுக்கு நான் என்ன செய்தேன் மயூரி? என்னையும்...'' வாக்கியத்தை முடிக்காமல் வேதனையுடன் நிறுத்தினான் விஷ்ணு.

கண்கள் கலங்க, ''ஐயோ! விஷ்ணு! ஏன் இப்படி பேசறீங்க? உங்க மேல நம்பிக்கை வைக்காமல் நான் யாரை நம்ப போறேன்?'' என்றாள்.

நம்பாமல் பார்த்தவனிடம் கண்களில் நீர் திரள, ''உண்மை தான். நான் நீங்க வைபவோட கூட பிறந்தவர் என்று தெரிந்ததும் நம்பாமல் சந்தேகப்பட்டது நிஜம் தான். ஆனால் அது ஆரம்பத்தில். அப்புறம் அந்த மாதிரி நினைப்பே எனக்கில்லை. மேலும், நான் சொன்னால் நீங்க ஆதாரமில்லாமல் நம்புவீங்களா என்ற சந்தேகமும் இருந்தது. இதுக்கு நான் எங்கேயிருந்து ஆதாரம் காண்பிக்கிறது?'' அவனின் கோபமானப் பார்வையில் தடுமாறினாள்.

''நீங்க நம்புவீங்க என்று எனக்கு அப்போது தெரியாது விஷ்ணு. ஆனா அதுக்கு பிறகும் உங்ககிட்ட சொல்லாமல் இருந்தது... உங்க எல்லோரோட நல்லதுக்காகவும் தான். அவன் எப்படிப்பட்டவனா இருந்தாலும், உங்க ரெண்டு பேருக்குள் உறவு நல்லா தானே இருக்கு? அது என்னால் கெடறதை நான் விரும்பலை. நான் நேத்து வந்தவ.. நாளைக்கு போயிடுவேன்... போகணும்.'' உறுதியுடன் பேசியவள், விஷ்ணுவின் அசைவால் பாதியிலேயே நிறுத்தினாள்.

''எனக்கு இந்த அளவுக்கு வைபவ் மோசம்னு தெரியாது. பொண்ணுங்க பின்னாடி ஊரு சுத்துவான்னு என்று தான் நினைச்சிருந்தேன். ஆனால்... இப்படி ஈனத்தனமா ஒரு பெண்ணோட வாழ்வையே கெடுக்கும் அளவுக்கு... தெரிஞ்சிருந்தால்....'' பாறையாக இறுகினான் விஷ்ணு.

அவனது பாவனை மேலும் கலவரப்படுத்த, ''அவனை மாட்டி விடாததுக்காக நான் என்னமோ ரொம்ப நல்லவ என்று நினைக்க வேண்டாம். வினை விதைச்சவன் வினை அறுத்தே தீருவான். அவனுக்கு எது ஆனாலும், சாரி டு சே திஸ், பட் ஐ டோன்ட் கேர். ஆனால் அதே சமயம் அதுக்கு நான் பொறுப்பாகவும் விரும்பலை; என்னாலயும் வேண்டாம். இதையெல்லாம் யோசித்து தான் முதலில் சொல்லிடலாம் என்று தோன்றினாலும் பிறகு சொல்லாமல் இருந்தது.'' என்று விளக்கம் தந்தாள்.

''எத்தனை சந்தர்ப்பம் மயூரி? ஒருமுறை கூட சொல்லணும் என்று தோணலையா? உன்னை சொல்லி என்ன? உன்னோட சேர்ந்து உன் கடந்த காலத்தை மறக்கணும்னு நானும் அந்த அயோக்கியனைப் பத்தி அக்கறை எடுத்துக்கலை. இருந்தாலும் நீ அவனை நேரில் பார்த்துக்கிட்டே.... அதை பற்றி மூச்சு கூட விடாமல் இருந்துட்ட...'' மனம் ஆறவே இல்லை விஷ்ணுவிற்கு.

''என் பிரண்ட் ஒரு ஈமெயில் அனுப்பி இருந்தாள். அதில் 'தினக் ட்வைஸ் பிஃபோர் பர்டனிங் யுவர் பிரண்ட் வித் யுவர் சீக்ரெட்ஸ்' என்று இருந்தது. நான் சொல்லப் போகும் விஷயத்தால் ஒரு நன்மையும் இல்லாத போது.... அதை சொல்வதால் என்ன பயன் விஷ்ணு? இது தெரிந்ததால் இப்போ உங்களால் நிம்மதியா இருக்க முடியுதா? உங்க அம்மாவிடம் என்ன சொல்றது? சொல்றதா வேண்டாமா என்று நீங்க யோசிக்கலை?'' என்று வாதங்களை வரிசையாக அடுக்கினாள்.

அப்போதும் அவன் முகம் தெளியாததைக் கண்டு, ''சரி! நான் ஒண்ணு கேட்கிறேன். நீங்க உங்க அம்மாகிட்ட

வருத்தப் படக் கூடாதுன்னு, அவங்களுக்கு எதுவும் ஆகிடக் கூடாதுன்னு தானே? அதே தான் விஷ்ணு நானும் செய்தேன். உங்க மேல நம்பிக்கை இல்லாமல் இல்லை. நீங்க கஷ்டப்படணும் என்றதுக்காக நான் இதை சொல்லலை. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கோணம், நியாயம். அப்போ நீங்க அம்மாக்கிட்ட சொல்லாததைத் தப்பாக நினைச்சாலும்... எனக்கு அதனால தான் ஒதுங்க ஒரு நிழல் கிடைச்சது.'' என்றாள்.

அவளிடம் பருகத் தண்ணீர் கொடுத்து, ''மூச்சு விடாம பேசி பேசியே களைச்சு போயிருப்பே. இந்தா தண்ணியைக் குடி.'' என்று எரிச்சலாகக் கூறியவன், பின் குரல் கடினமுற, ''அன்னைக்கு மேல... மாடியில்... ரூமில் என்ன நடந்தது?'' என்று அவள் கண்களையே பார்த்த வாறு கேட்டான்.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு அமைதிக் காத்தவளை பொறுமை இழந்து வெறித்தவன், ''ப்ளீஸ் மயூரி, ஐ நீட் டு நோ.'' என்றவன் குரல் கரகரக்க, ''அவன்... உன்னை...'' என்று கைகள் இறுக, முடிக்காமல் இழுத்தான்.

அந்த நாள் நினைவில் இன்றும் குரல் தடுமாற, ''இல்லை... இல்லை. நீங்க பயப்படற மாதிரி ஒண்ணு மில்லை. ஆனால்... பக்கத்தில் வந்தான். நான் தான் பக்கத்திலிருந்த மீரா சிலையை எடுத்து...'' என்று தயங்கினாள் மயூரி.

என்ன இருந்தாலும் அவன் ரத்தமல்லவா?

''இவனை நம்பித் தான் நீ... எங்க ரெண்டு பேருக்கும் உறவு நல்லா இருக்கு என்று சொல்ற? தம்பி மனைவி

என்று நிலையில் இருக்கவங்ககிட்ட இப்படி தான் நடந்துப்பாங்களா? வேற என்ன என்ன டார்ச்சர் அனுபவிச்ச அங்கே?'' விஷ்ணு கோபத்தோடு கேட்ட கேள்விக்கு மயூரி பதில் ஒன்றும் கூறாமல் மௌனித் தாள்.

இதுவரை தெரிந்ததற்கே இத்தனை ஆத்திரப்படு கிறான். முழுவதும் சொல்லிவிட்டால் அவ்வளவு தான்.

அவன் மௌனம் தொடரவும், ''அவன் மண்டையை ரெண்டா பிளக்கிற அளவுக்கு அன்னைக்கே போட் டிருக்க வேண்டியது தானே? நீ என்ன தான் மூடி மறைச்சாலும் அவனுக்குக் கட்டாயம் இருக்கு.'' என்றான் வெறுப்புடன்.

விவரிக்க முடியாத உணர்வில் கண்ணில் இருந்து நீர் வழிந்தோட, ''எனக்கு ப்ராமிஸ் செய்து கொடுங்க விஷ்ணு. இந்த பிரச்சனையில் வைபவை நீங்க எதுவும் செய்யக் கூடாது.'' என்று அழுத்தமாக மொழிந்துவிட்டு கரத்தை நீட்டினாள் மயூரி.

''என்னை எமோஷனல் ப்ளாக் மெயில் செய்யாதே மயூரி. ப்ளீஸ்'' என்றான் முகத்தைக் கவனமாக வேறுபுறம் திருப்பியபடி.

''இதை நீங்க உணர்ச்சிவசப்பட்டு எந்த அசம்பாவித மும் நடக்கக்கூடாதுன்னு தான் கேட்கிறேன்.''

''இதுக்கு மேல் என்ன அசம்பாவிதம் நடக்கணும்? அதான் எல்லோர் வாழ்க்கையும் நாசப்படுத்திட்டானே ராஸ்கல்.''

இன்னும் நிறைய மனதில் இருக்கும் ஆத்திரத்தை வார்த்தைகளில் திட்டித் தீர்க்க நினைத்தாலும் சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை.

மயூரி கரத்தை நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து மிகவும் எரிச்சலான விஷ்ணு, அவளது கோரிக்கையை மறுக்கவும் முடியாமல், ''நான் அவனை ஒண்ணும் செய்யலை. போதுமா?'' என்றான் வாய் வார்த்தையில்.

''எனக்கு ப்ராமிஸ் பண்ணி கொடுங்க.'' என்றாள் விடாப்பிடியாக.

''என் மேல்... நான் சொன்னதில் நம்பிக்கை இல்லையா மயூரி?''

''உங்கள் மேல் மலையளவு நம்பிக்கை இருக்கு. ஆனால் ப்ராமிஸ் செய்து கொடுப்பதில் ஒண்ணும் பிரச்சனையில்லையே விஷ்ணு?''

முன் ஒருமுறை அவன் சொன்ன வார்த்தைகளே அவனுக்கு திரும்பி வந்தன. விஷ்ணு மயூரியின் உயிருக்காக சத்தியத்திற்கு கட்டுப்பட சொன்னான் என்றால் மயூரி வைபவை முன்னிட்டு?

விஷ்ணு அளவு கடந்த கோபத்துடன், ''நான் ஊட்டியில் முதலில் சொன்னதே தான் மயூரி. நீ ரொம்ப நல்ல வளா இருக்க. அது தான் ப்ராப்ளம்.'' என்று பல்லைக் கடித்தாலும் மயூரி தன் கரத்தை மீட்டுக் கொள்ளவில்லை.

விஷ்ணுவிற்குக் கட்டாயம் இந்த சத்தியத்திற்குக் கட்டுப்பட முடியாது என்று தெளிவாக விளங்கியது.

''ஏன் மயூரி என்னை இப்படி உயிரோட கொல்ற? ப்ளீஸ்! என்னை அப்படியே விட்டுடேன். இந்த விஷயத்தில் கட்டாயப்படுத்தாதே. என்னால் இந்த விஷயத்தை ஜீரணிக்கவே முடியலை.'' என்றான் வேதனை மிகுந்த கரகரத்தக் குரலில்.

மயூரிக்கு அவனது வேதனை புரிந்தது. ஆனால் மனம் இளகினால் எத்தனை பேரின் வாழ்வு கேள்விக்குறியாகும்?

''ப்ளீஸ் விஷ்ணு எனக்காக! விசாலம் அம்மாவை நினைச்சுப் பார்த்தீங்களா? உங்க ரெண்டு பேரை நம்பி தான் வாழ்ந்துட்டு இருக்காங்க. நீங்க வைபவை காகடிச்சுட்டு ஜெயிலுக்குப் போனால் அவங்க நிலைமை? வைபவை அடிக்கிறதாலேயோ, கொல்றதாலேயோ என்னுடைய இழப்பை சரி செய்ய முடியும்னு நினைச்சால் கோ அஹெட். இத்தனை நாள் எது நடக்கக் கூடாதுன்னு நினைச்சேனோ அது தான் நடக்கணும்னு விதி இருந்தால் யாரால் மாத்த முடியும்? கொஞ்சம் அறிவு பூர்வமா யோசிங்க.'' என்று குரலை உயர்த்திப் பேசிவிட்டு மூச்சு வாங்கவும் அருகில் அப்படியே சோர்ந்து அமர்ந்துவிட்டாள்.

மயூரி சொன்து உண்மை தான். ஆனால் அதற்காக வைபவை அப்படியே விட முடியுமா என்ன? விஷ்ணுவே அறிவுப்பூர்வமாக நினைத்தாலும் உணர்வுப் பூர்வமாக அவனால் இயலாது.

கண்களில் நீர் திரையிட கெஞ்சுதலாக, ''ப்ளீஸ் விஷ்ணு! ஃபார் மீ?'' என்றாள் மயூரி.

எந்த வித உணர்ச்சியுமின்றி மயூரியையே பார்த்துக் கொண்டிருந்தவனின் மனம் அவளது கண்ணீரில் கரைந்தது.

''வாட் எவர் மயூரி! யு வொன். ஆனால்... இனிமேல் அவன் முகத்தில் முழிக்க மாட்டேன். முழிச்சால் கட்டாயம் உன்னிடம் செய்த சத்தியத்தை... காக்க என்னால் முடியாது. ஐ அம் நாட் எ ரோபோ. எனக்கும் எமோஷன்ஸ் எல்லாம் இருக்கு.'' என்றுவிட்டு வேகமாக வெளியேறினான் விஷ்ணு.

சென்னையை நோக்கிய பயணம் ஊட்டிக்கு வந்ததை விட முற்றிலும் மாறுபட்டு இருந்தது. இருக்கும்

மனநிலையில் வண்டியை ஓட்ட முடியாதென்று இப்போது டிரைவரும் வந்திருந்ததால் காரில் தேவையில்லாத பேச்சு வார்த்தையில்லாமல் அவரவர் எண்ணங்களில் மூழ்கியபடி பயணித்தனர் மயூரியும் விஷ்ணுவும்.

விஷ்ணு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சென்னையிலிருந்து கிளம்பி விட வேண்டுமென்ற உறுதிக் கொண்டிருந்தான். ஊட்டியிலோ இல்லை ஹைதராபாத்திலோ தான் இனி. அம்மாவிடம் தான் என்ன சொல்வது, எவ்வளவு தூரம் சொல்வதென்று தெரியவில்லை.

காலையில் விசாலாட்சி அழைத்திருந்த போது மயூரி தான் எடுத்துப் பேசினாள். பேசிய வரையில் வைபவ் அங்கில்லை என்றறிந்து தான் இப்போதே கிளம்பியது இல்லையென்றால் மறுநாள் தான் திரும்ப செல்வதாக இருந்தது.

சென்னை போய் சேரும் போது இரவாகியிருக்க, யாரும் யாருடனும் பேசாமல் படுத்துவிட்டனர். வீட்டிலிருக்கப் பயந்தவன் போல் விஷ்ணு காலையிலேயே எழுந்து மயூரியிடம் கவனமாக இருக்க சொல்லி விடை பெற்று சென்றுவிட்டான்.

விஷ்ணு சென்ற பின், சிறிது நேரம் கழித்து அவன் அறையை சுத்தம் செய்ய மேலே வந்தாள் மயூரி. அவனுடைய அறையில் இருந்த ஷோ கேசில் விஷ்ணு வாங்கிய பரிசுகள், கோப்பைகள் என்று ஒருபுறமும், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் எடுத்தப் பிடித்தமான புகைப்படங்கள் இன்னொரு வரிசையிலும் இடம் பெற்று இருக்கும்.

புகைப்படக கண்காட்சியின் பொழுது மயூரியும், விஷ்ணுவும் ஜோடியாக எடுத்துக் கொண்ட புகைப்படம் பொருத்தப்பட்ட பொருட்கள் வரிசையாக அணிவகுத்து இருந்ததையே சில கணங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஷ்ணு சிரித்தபடி நின்று கொண்டிருந்த புகைப்படத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு நேரில் பேசுவது போல், ''உங்களுக்கு உண்மைத் தெரியாமலேயே இருந்திருக்கலாம் விஷ்ணு. நமக்குப் பிடிச்சவங்க மன்னிக்க முடியாத தப்பு செய்த நம்பிக்கை துரோகத்தில் வெறுப்பு தான் நெஞ்சு முழுக்க இருக்குன்னு நீங்க வருத்தப்படறது கஷ்டமா இருக்கு. என்னால் தானே? எனக்காக தானே விஷ்ணு?'' என்று நெகிழ்ந்த குரலில் மெல்ல சொல்லிக் கொண்டிருந்தாள்.

மெல்ல அந்த புகைப்படத்தை வருடிக் கொடுத்தவள், ''ஒரு வகையில் இந்த நிலையிலும் நீங்க எனக்கு ஆதரவா இருக்கிறது சந்தோஷமா தான் இருக்கு. தேங்க்ஸ்!!! அதைத் தவிர வேறெந்த வார்த்தையும் வரலை. தேங்க்ஸ் சோ மச்!'' என்று கண்கள் பளபளக்கச் சொல்லிவிட்டு புகைப்படத்தை எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு மீதி வேலையைக் கவனித்தாள்.

வேலை முடித்து வெளியே வரும் போது எதிர் அறையிலிருந்து வைபவ் வருவதை முற்றிலும் எதிர் பார்க்கவில்லை. முகம் லேசாக வெளிற விஷ்ணு சொன்னது நினைவில் நிற்க, இப்போது ஏதும் முன்பு மாதிரி ஏடாகூடமானால் விஷ்ணுவைத் தடுப்பது தன்னால் முடியாது என்றுணர்ந்து வேகமாக படிகளில் இறங்க முடிவு செய்தாள்.

வைபவிடம் எந்த வாக்கு வாதமும் வைத்துக் கொள்ள கூடாதென்ற அவசரத்தில் மயூரி படிகளில் துரிதமாக இறங்கினாள். பூந்தொட்டியில் இருந்து கசிந்த தண்ணீர் மார்பிள் தரையில் சரியாகத் துடைக்கப்படாமல் இருக்க, யாருடைய பொல்லாத நேரமோ உணர்ச்சிப் பிடிப்பில் இருந்த மயூரியும் அவசரத்தில் கவனக் குறைவாக நடந்ததில், அவள் கால் வழுக்கி விட்டது.

சற்றே சுதாரிப்பதற்கு முன்னர் நிலைமை கட்டுப் பாடின்றி சென்றுவிட, கால்கள் படிகளில் வேகமாக சறுக்க பாதி இழுத்தும், மீதியை உருண்டும் கடந்த மயூரியிடமிருந்து மெல்லிய முனகல் சத்தம் மட்டும் கேட்டது.

உருண்டு விழுந்த வலியிலும் அதிர்ச்சியிலும் மெது மெதுவாக மயக்க நிலைக்கு மயூரி போக, அவள் கால் பகுதியிலிருந்து குருதி கசிந்தது.

பதறியடித்து அவள் பின்னே ஓடி வந்த வைபவாலும் அவளைத் தடுக்க முடியாது போக, அவளை குருதி வெள்ளத்தில் தான் பார்க்க நேரிட்டது.

வேலம்மாவும் காமாட்சியும் சமையலறையிலிருந்து ஓடி வந்து, ''ஐயோ! மயூரி அம்மா! அம்மா! இங்கே வாங்க.'' என்று விசாலாட்சியை கூவி அழைத்தனர்.

அதற்குள் வைபவும் தனபாலும் மயூரியை அள்ளிக் கொண்டு போய் காரில் போட, விசாலாட்சி பதறி அடித்துக் கொண்டு பின்னோடு ஓடி வந்தார்.

''கடவுளே! ஏன் இந்த பெண்ணை இந்த பாடு படுத்தற? எனக்கு ஒண்ணும் ஆகாதுடா!'' என்று அழுது கண்ணீர் வடித்தவாறே, காரில் உட்கார்ந்தவர் மயூரியை நேராகப் படுக்க வைத்து அசையாமல் பார்த்துக் கொண்டார்.

''அவள் [illegible] வுக்கு போன் போடுடா.'' என்று அழுகையுடனே கூறினார் விசாலாட்சி.

காரை டிரைவர் விரைவாக செலுத்த, வைபவ் மீண்டும் மீண்டும் விஷ்ணுவிற்கு அவனின் செல் போனில் அழைத்தான். முதல் இரண்டு முறை அழைப்பு போக, அடுத்த முறையெல்லாம் உடனே உடனே மேசேஜிற்குப் போனது.

விஷ்ணு, வைபவின் எண்ணைப் பார்த்ததும் கோபத் தில் தன் செல்போனை வீசியடித்ததை அறியாத வைபவ், ''மெசேஜுக்கு தான் அம்மா போகுது. கொஞ்சம் பொறுங்க.'' என்றான் தாயிடம் எரிச்சலாக.

''அவன் ஆபீசுக்கு கால் செய்து சொல்ல சொல்லிடு.'' என்று சொன்னதன் பேரில் விஷ்ணுவின் செயலாளருக்கு போன் செய்து மிகவும் அவசரம் என்று மருத்துவமனை யின் பெயரைக் குறிப்பிட்டு தந்தி முறையில் விஷ யத்தைச் சொன்னான் வைபவ்.

மருத்துவமனைக்கு வந்து சேர்ந்து, பெருத்த பரபரப் புடன் மயூரியை எமர்ஜன்சி வார்டுக்கு அழைத்துச் சென்றனர் மருத்துவச் சிப்பந்திகள்.

அவளிருந்த நிலையைப் பார்த்த டாக்டர் எடுத்த எடுப்பிலேயே, ''ஐ அம் சாரி! குழந்தை.. வி வில் டூ அவர் பெஸ்ட்.'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அருகிலிருந்த பெஞ்சில் தளர்வாய் அமர்ந்த விசா லாட்சி, ''நாராயணா!'' என்று கண் மூடி தலை சாய்த்தார்.

தகவலறிந்த விஷ்ணு அசுர வேகத்தில் காரை செலுத் திக் கொண்டு மருத்துவமனையை வந்தடைந்தான். ரிசப்ஷனில் விவரம் கேட்டு, முடியெல்லாம் கலைந்து

...ஏதோ பெரிய ஆபத்து துரத்துவது போல் விசாலாட்சியை நோக்கி வந்தான் விஷ்ணு.

குரல் நடுங்க விசாலாட்சியின் கரத்தை பற்றுக் கோடாக பற்றிக் கொண்டு, ''என்னம்மா ஆச்சு? மயூரி எங்கே? நான் அவளைப் பார்க்கணும். இப்போ எப்படி இருக்கா?'' என்று கோர்வையில்லாமல் அவசரமாகக் கேள்வியை அடுக்கினான் விஷ்ணு.

அவனைக் கண்டதும் நின்றிருந்த அழுகை திரும்ப வர, ''வந்துட்டியா விஷ்ணு? மயூரி.... குழந்தை.. அடி.. படியில் இறங்கும் போது... வைபவ் தான் பார்த்து...'' என்று எதையும் சரியாக கூற முடியாமல் தேம்பினார் விசாலாட்சி.

விஷ்ணுவின் தோளைத் தொட்டு வைபவ், ''படியில் இறங்கும் போது தடுமாறிட்டா..'' மீதி வாக்கியத்தை முடிக்கும் முன்னர் வைபவின் முகத்தில் பலமாக ஒரு குத்தை ஓங்கி விட்டான் விஷ்ணு.

''ச்சீ.. நீ பேசாதே!'' வைபவின் மூக்கில் ரத்தம் வரும் அளவிற்கு குத்தியவன், மேலும் ஆத்திரத்துடன், ''என்.. முகத்திலேயே முழி..க்...கா..தே! இப்போ என்னடா பண்ணின?'' என்று ஒவ்வொரு சொல்லுக்கும், எழுத்துக்கும் என்று சராமாரியாக வைபவின் மூக்கில், தாடையில், கன்னத்தில் என்று கைக்கு எது அகப்படு கிறதோ அதில் தன் பலங்கொண்ட மட்டும் குத்தினான்.

வைபவிற்கு விஷ்ணு ஏன் அடிக்கிறான் என்று புரிந்தும் புரியாமலிருக்க, 'ஐயோ வண்டவாளம் தெரிந்து விட்டதே?' என்ற உணர்ச்சியில் பதிலுக்கு அவனை அடிக்காமல்,தன்னை தற்காத்துக் கொள்வதிலே மட்டும் ...ான் கவனம் செலுத்தினான்.

விசாலாட்சி பதட்டத்துடன் எழுந்து, ''விஷ்ணு! வைபவ்! விஷ்ணு!'' என்று மாறி மாறி இருவரின் பெயரையும் இரைந்து கூவிக் கொண்டும், அவர்கள் இருவரின் கையையும், தோளையும் பிடித்து இழுத்த வாறும் இருந்தார்.

ஆனால் அவரின் குரல் கேட்காத தூரத்தில் இருந் தான் விஷ்ணு. இரண்டு நாட்களாக மனதில் பூட்டி வைத்திருந்த ஆத்திரம், கோபம் எல்லாமும் கூடவே மயூரி மருத்துவமனையில் வந்து சேரும் அளவிற்கானதும் சேர்ந்து அவனை மிருகமாகவே ஆக்கியிருந்தது.

'என் கையில் கிடைத்தால்..அவன் அவ்வளவு தான்' என்று நினைத்ததை உண்மையாக்குவது போல், அது பொது இடமென்றும் பாராமல், சகோதரன் என்ற உணர் வும் இல்லாமல் மயூரியை இந்த நிலைக்கு ஆளாக் கியவனை தன் வெற்றுக் கரத்தாலேயே கொன்று போடும் அளவில் இருந்தான் விஷ்ணு.

19

விசாலாட்சி தனபாலின் உதவியுடன் இருவரையும் ஒருவாறாக விலக்கிவிட்டும்,விஷ்ணு அவரின் பிடியில் திமிறிக் கொண்டே இருந்தான்.

குரலை உயர்த்தி விசாலாட்சி, ''விஷ்ணு! என்ன செய்ற? இது ஹாஸ்பிடல். இப்படி தேர்ட் ரேட் ரௌடி மாதிரி நடந்துக்கிற? என்ன இருந்தாலும் வீட்டில் போய் பேசிக்கலாம். மயூரி அட்மிட் ஆகியிருக்கற இந்த நேரத் தில் நீ செய்றது கொஞ்சம் கூட நல்லாயில்லை விஷ்ணு.'' ...னார்.

''அவன் என்ன செய்தான் என்று தெரிந்தால்.... அவனை இங்கேயிருந்து போகச் சொல்லுங்க. போகச் சொல்லுங்கம்மா! மயூரி..'' என்று கோபத்தில் ஆரம் பித்தவனின் குரல், முடிக்கும் போது தேய்ந்திருந்தது.

''ரெண்டு பேரும் எதுக்குடா என் கண் முன்னாடி அடிச்சுட்டு சாகறீங்க? அங்கே ஒருத்தி குத்துயிரும், கொலை உயிருமா போராடிட்டு இருக்கா? இங்கே நீங்க ரெண்டு பேரும்... ச்சே!'' என்று கோபமான குரலில், குரலை உயர்த்தாமல் வார்த்தைகளைக் கடித்து துப்பி னார் விசாலாட்சி.

அம்மாவின் பேச்சைக் கேட்டதும் தன் சக்தியெல்லாம் வடிந்தது போல் மடங்கி அங்கேயே விஷ்ணு அமர்ந்து விட, தன் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்ட விசாலாட்சி, வைபவிடம் தீர்க்கமானப் பார்வையைச் செலுத்தினார்.

வீங்கிப் போன முகத்துடனும் ரத்தம் வடியும் மூக் கோடும் நின்ற வைபவிடம், குரலில் அழுத்தத்துடன், ''வைபவ்! நீ கிளம்பி போ வைபவ். நான் அப்புறம்...'' என்று முடிக்காமல் நிறுத்தினார் விசாலாட்சி.

இருவரையும் மாறி மாறிப் பார்த்த வைபவ் ஒரு கூர்த்தால் மூக்கை மூடியவாறே அங்கிருந்து அகன்றான்.

பெஞ்சில் உட்கார்ந்து, சுவற்றில் தலை சாய்த்து, கண்களை இறுக மூடிக் கொண்டிருந்த விஷ்ணுவின் தலையை, கண்கள் கலங்க மெதுவாக ஒன்றும்பேசாமல் கோதிக் கொடுத்தார் விசாலாட்சி.

வைபவ் அங்கிருந்து சென்ற சில நேரத்தில், ஆப ரேஷன் தியேட்டரிலிருந்து சிகப்பு வண்ண விளக்கு அணைய, டாக்டர் வெளியே

பயத்துடனும் பரபரப்புடனும் காத்திருந்த விஷ்ணு விடம் வந்து, ''சாரி மிஸ்டர்! உங்க குழந்தையைக் காப்பாத்த முடியலை. அவங்க விழுந்த வேகத்தில்...சாரி. உங்க மனைவி ஏற்கனவே பலகீனமா இருந்து இருக் காங்க. இப்ப இதுவும் சேர்ந்துடுச்சு எம். ஆர்.ஐ. ஸ்கேன் எடுத்து பார்த்ததுல நல்லவேளை ஹெட் இன்ஜூரி ஒண்ணுமில்லை. காலில் ஒரு ஃப்ராக்சர் இருக்கு. கட்டு போட்டிருக்கு. இப்போ மயக்கத்தில் இருக்காங்க. கொஞ்ச நேரம் கழிச்சு அவங்களை ரூமுக்கு மாத்திடு வாங்க. அவங்க நார்மலுக்கு வர வரைக்கும் அப்சர் வேஷனில் வைச்சிருக்கோம். கன்குஷன் இல்லாம இருக் கணும். அது தான் முக்கியம். வேற ஒண்ணும் பயப்படற துக்கு இல்லை.'' என்று தகுந்த ஏற்ற இறக்கத்துடன் கூறிவிட்டு சென்றார்.

அவருக்கென்ன? இது மாதிரி ஒரு நாளைக்கு எத் தனையோ? எல்லாவற்றுக்கும் உணர்ச்சி வசப்பட்டால் அவராலும் தான் எப்படி கடமையை செய்ய முடியும்? ஆனால் அதைக் கேட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் தான் நெஞ்சு பொறுக்காமல் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது.

டாக்டர் சென்ற பின்பு அங்கிருந்த நாற்காலியில் தன் இதயத்தைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்த விசா லாட்சி, ''கடவுளே...!'' வேறொன்றும் கூற முடியாமல் இதையே மறுபடியும் மறுபடியும் அரற்றினார்.

விஷ்ணுவிற்கே ஆறுதல் தேவையாய் இருக்கும் போது அவருக்கு எங்கேயிருந்து ஆறுதல் அளிப்பது? ஒருவருக்கு மற்றவர் தான் ஆறுதல் என்பது போல், விஷ்ணுவின் தோளில் சாய்ந்திருந்தார் விசாலாட்சி.

சற்று நேரத்தில் மயூரியை அறைக்கு மாற்றிவிட்டுப் போனார்கள். விசாலாட்சியும் விஷ்ணுவும் மயூரி கண் விழிக்கக் காத்துக் கொண்டு இருக்க, விஷ்ணு அவள் தலைமாட்டில் உட்கார்ந்து அவள் நெற்றியை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காலில் மாவுக் கட்டுப் போட்டிருக்க, கீழே விழுந்ததில் இரண்டு கைகளிலும் அங்கங்கே சிராய்ப்புகள் இருந்தது. மருத்துவமனையில் கொடுக்கும் இரவு உடையில் கிழிந்த நாராக இருந்தவளைப் பார்த்த விஷ்ணுவிற்கு கண்களிலிருந்து சூடானக் கண்ணீர் வழிந்து அவள் கன்னத்தில் பட்டுத் தெறித்தது.

அதில் லேசாக கண்விழித்த மயூரியைப் பார்த்து விசாலாட்சி, ''இப்ப எப்படிம்மா இருக்கு? ரொம்ப வலிக்குதாம்மா? எல்லாம் சீக்கிரத்தில் சரியாகிவிடும். நீ ஒண்ணும் கவலைப் படாதேம்மா. எல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுக்க வேண்டியது தான். ''என்று அன்போடு விசாரித்து, அவள் கரத்தை அழுத்திவிட்டு, ''நான் வெளியே இருக்கேன். நீங்க பேசிட்டு இருங்க.'' என்று சென்றார்.

விஷ்ணுவும், மயூரியும் தனிமைக் கொடுப்பது தான் இருவருக்குமே ஆறுதல் என்ற உணர்வில் விசாலாட்சி வெளியில் வந்தமர்ந்தார்.

அவர் சென்றதும் விஷ்ணுவைத் தேடி அலைந்த பார்வையைப் படரவிட்டாள் மயூரி. அவள் தலை மாட்டில் உட்கார்ந்திருந்த விஷ்ணு மெல்ல அவளருகில் கட்டிலில் அமர்ந்து அவள் கரத்தை தன் இருகரங்களுக்குள் வைத்து ஆறுதலாக அழுத்தினான்.

கரகரத்தக் குரலை சிரமப்பட்டு சீர் செய்து, ''எப்படி இருக்கு மயூரி, ரொம்ப வலிக்குதா?' என்றான் இதமாக.

அவனைப் பார்த்ததும், அவனின் குரலைக் கேட்டதும் மயூரிக்கு உள்ளேயிருந்து பெரும் கேவல் ஒன்று வெளிப்பட, ''வி..ஷ்...ணு!'' என்று கேவினாள்.

''ஷ்.. மயூரி!'' அவளை எடுத்து தன் மார்பில் லேசாக சாய்த்துக் கொண்டவன், அவள் தோளை அழுத்தி, ''அழாதேடா.'' என்றவனுக்கும் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

அவனை நிமிர்ந்துப் பார்த்தவள், ''கு..ழந்தை....'' என்று பயத்துடன் கேட்டாள்.

அவனின் இறுக மூடிய உதடுகளையும் மறுப்பான தலை அசைப்பையும் பார்த்தவளுக்கு மேலும் கண்ணீர் அருவி கொட்டியது.

ஒரு குழந்தையைப் போல் அவளை ஆட்டியவன், ''ஷ்..ஷ்..மயூரி...ஷ்.'' என்று மட்டும் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான். வெறும் வார்த்தையால் என்ன சொல்ல முடியும்?''

''என்னால் தான் இப்படி ஆயிடுச்சு. நான் தான் அதைக் கொன்னு....'' முடிக்க முடியாமல் நிறுத்தினாள் மயூரி.

விஷ்ணுவிற்குமே அதில் பெரிதும் வருத்தம் தான். அவனே மயூரியை முதலில் பார்த்த பொழுதில் இருந்து எத்தனையோ முறை கருவை கலைத்து விட சொல்லியிருக்கிறான் தான். ஆனால் நாளடைவில் மயூரியின் மீது அன்பும் நேசமும் வளர ஆரம்பித்த பிறகு, அவளுடைய குழந்தையைத் தன் குழந்தையாகக் கருத ஆரம்பித்து விட்டான் என்பது தான் நிஜம்.

தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி கனவுகளில் திளைக்கும் பொழுது அந்த குழந்தையும் அதில் இடம்

பெற்றிருக்கிறது. வைபவ் பற்றி தெரிந்த பிறகு அவன் மீது தான் கோபம், வெறுப்பே தவிர அந்த குழந்தையின் மீதில்லை. மயூரியின் குழந்தை தன் குழந்தை என்ற எண்ணம் மட்டுமே நிறைந்து இருந்தது.

ஆனால் இப்போது.. நடந்ததென்னவோ நடந்து விட்டது. இனி ஆக வேண்டியதைத் தான் பார்க்க வேண்டும். படிகளிலிருந்து மயூரி விழுந்து விட்டாள் என்றறிந்த போது துடித்த தன் இதயம், மயூரிக்கு தலையில் பெரிய அடியோ இல்லை வேறெந்த பெருத்த பாதிப்போ இல்லை என்றறிந்த பின் தான் சிறிது சமனாகி இருக்கிறது.

பிரசவத்தின் போது தாயா இல்லை சேயா என்ற கேள்வி வரும் நிலையில் 'மனைவி' தான் வேண்டும் என்று சொல்லும் கணவனின் நிலையில் தான் இருந் தான் விஷ்ணு. ஆனால் அதை மயூரிக்குப் புரியவைக்க வேண்டுமே இந்த நிலையில்....?

''ஷ்.... நீ 'எதுக்குமே' பொறுப்பு கிடையாது மயூரி. ப்ளீஸ். உன்னையே போட்டு வதைச்சுக்காதே.'' எதுக்குமே என்றதில் கூடுதல் அழுத்தம் கொடுத்தான் விஷ்ணு.

''இல்லை... நான் தான் அவினாசியில் இருக்கும் போது ஒருவேளை குழந்தை இல்லாமல் இருந்தால்... சூழ்நிலை இன்னும் கொஞ்சம் சுலபமா இருக்குமோன்னு நினைச்சேன். அந்த நினைப்பு தான், ஆரம்பத்தில் இருந்து நான் தான் ஒட்டுதல் இல்லாமல்...'' குரல் தேய்ந்துக் கொண்டே வர பலகீனமாக முடித்தாள் மயூரி.

கரகரப்பான குரலில், ''எல்லோருடைய நினைப்பு தான் நடக்கிற எல்லாத்துக்கும் காரணமா

...து உடம்பை இன்னும் கெடுத்துக்காதே. உடம்பு ...ற வேண்டாமா?'' என்று சிறு பிள்ளைக்கு எடுத் ...ரைப்பது போன்று கூறினான் விஷ்ணு.

இதைப் பேசியதிலேயே தன் சக்தியெல்லாம் வடிய, ...ண்டும் உறக்கமும் மயக்கமும் கலந்த நிலைக்குச் சென்றாள் மயூரி.

கண்கள் கலங்க சிறிது நேரம் மயூரியை சின்னக் குழந்தை போல் மார்பில் சாய்த்துக் கொண்டு தாலாட் டுவது போல் ஆட்டிக் கொண்டிருந்தான் விஷ்ணு. விசாலாட்சி உள்ளே வந்து இருவரையும் கண்ணில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்ததையோ, கண்ணீர் அருவியைக் கட்டுப்படுத்த முடியாமல் வெளியே திரும்பிச் சென்றதையோ விஷ்ணு அறியவேயில்லை.

மயூரியின் வீட்டிற்கு என்னவென்று விஷயத்தை தெரிவிக்க முடியும்? மயூரியின் நிலையோ, விஷ்ணுவைப் பற்றியோ எதுவுமே குடும்பத்தினருக்குத் தெரியாது. அப்படியிருக்கையில் திடீரென்று மயூரி மருத்துவ மனையில் சேர்த்திருப்பது பற்றி எப்படி தெரிவிப்பது?

புரிந்து கொள்வார்களோ? மாட்டார்களோ? மயூரி ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததின் அடிப்படையில் அவள் சகோதரி மஞ்சரியிடம் மட்டும் மருத்துவமனை விவரம் சொல்லி இங்கு வரவழைக்க போன் செய்தான்.

''மஞ்சரி! நான் சென்னையில் இருந்து மயூரியோட... பார்ட்னர் விஷ்ணு பேசறேன்.'' என்று பேச்சைத் தொடங் கினான்.

மயூரியுடன் எந்த மாதிரியான உறவு என்று குறிப்பிட முடியாமல் தயங்கினான் விஷ்ணு. நண்பனா? வழிப் ...? மயூரியின் பால் காதலை சுமந்துக் கொண்

டிருப்பதால் காதலனா? தற்காலிகக் கணவனா? எந்த உறவு என்று சொல்ல முடியாத அளவிற்குத் தான் காரியம் செய்து வைத்திருக்கிறானே உடன் பிறந்த பிறப்பு?

மஞ்சரியிடமிருந்து, ''பார்ட்னரா?'' சந்தேகத்துடன் வந்தது மறுமுனையில் கேள்வி.

''மஞ்சரி! நிறைய கேள்வி கேட்டு பதில் சொல்ற அளவுக்கு நேரமில்லை. நான் சொல்றது உண்மை. தயவு செய்து நம்பு. மயூரியை சீரியஸ் கண்டிஷனில் ஹாஸ்பிடலில் அட்மிட் செய்தோம். ஆனால் இப்போ பரவாயில்லை.'' தொண்டையடைக்க சில நொடிகள் இடைவெளிக் கொடுத்தான்.

''அப்பாக்கிட்ட இப்போதைக்கு எந்த விஷயமும் சொல்ல வேண்டாம் மஞ்சரி. அம்மாவை மட்டும் அழைச்சுட்டு சென்னைக்கு வா. மயூரிக்கு இந்த நேரத்தில் ஃபேமிலி சப்போர்ட் தேவை.'' என்று சுருக்கமாகவும், தேவையையும் சொல்லி விளக்கம் தந்தான்.

அநாவசியமான கேள்விகள் கேட்காமல் நம்பிக்கைக்காக ஒரு சில கேள்விகளை மட்டும் தொடுத்த மஞ்சரி உடனே கிளம்பி வருவதாக தெரிவித்தாள்.

விசாலாட்சி இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார் என்றால் விஷ்ணு மயூரியின் அருகிலேயே இருந்து நலனில் அக்கறை செலுத்தினான். விஷ்ணுவின் உலகத்தில் மயூரியைத் தவிர எதுவுமே நுழையவில்லை. அன்னை வற்புறுத்தலால் மட்டுமே ஒரு நாளுக்கு ஒரு முறையாவது உண்டான்.

மருத்துவமனை ரிசப்ஷனில் மஞ்சரியும், மேகலாவும் மயூரியின் பெயர் சொல்லி விசாரித்

வாடிய கொடியாய் மயூரி படுக்கையில் இருந்ததைக் கண்டதும் மேகலாவிற்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது.

''மயூம்மா!'' என்று கையைப் பற்றிக் கொள்ள, அதுவரை அன்னைக்கு தைரியம் சொல்லிக் கொண்டிருந்த மஞ்சரி கூட இப்பொழுது கண்ணீருடன் நின்று கொண்டிருந்தாள்.

இரண்டு வாரத்தில் இப்படி வாடி வதங்கி மருத்துவமனை படுக்கையில் சந்திக்க நேரும் என்ற எதிர்பாராத அதிர்ச்சியா? மயூரி எதுவுமே சொல்லாமல் பெரிய ஆபத்தைத் தாங்கி நின்றிருக்கிறாளோ என்ற கலக்கமா?

''மயூக்கா! நான் மஞ்சரி வந்திருக்கேன். இப்படி இருக்கிறதை எதிர்பார்க்கவே இல்லையே மயூக்கா?'' என்று காலடியில் அமர்ந்து பாசத்தில் கண்ணீருடன் கதறினாள் சகோதரி.

''மஞ்சரி?'' என்று கேள்வியுடன் விளித்துவிட்டு, "நான் விஷ்ணு!'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''சொல்லுங்க தம்பி. என் பொண்ணுக்கு என்ன ஆச்சு? நீங்க யாரு? ஏதோ மர்மம் இருக்கிற மாதிரி இருக்கு. எதுவா இருந்தாலும் இவளுக்கு நாங்க இருக்கோம். இப்படி என் பொண்ணைப் பார்க்கவா அங்கிருந்து வந்தேன்?'' என்று கண்ணீருடன் புலம்பினார் மேகலா.

மயூரியின் சாயலில் புதிதாக இருந்த பெண்கள் இருவரையும் கண்டு அறைக்குள் நுழைந்த விசாலாட்சி கண்களை விரித்தார். விஷ்ணு தாயை அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு மஞ்சரியை வீட்டிற்கு அழைத்துச் செல்ல சொன்னான்.

மஞ்சரி வீட்டிற்கு செல்ல மாட்டேன் என்று சொல்ல. மேகலா தான் ஓரளவு புரிந்துக் கொண்டு மஞ்சரியை சிறிது நேரம் வெளியே இருக்கச் சொல்லிவிட்டு விஷ்ணுவை ஏறிட்டார்.

எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை விஷ்ணுவிற்கு. ஆனால் எல்லாவற்றையும் சொல்லித் தான் ஆக வேண்டும் என்று மனதில் பட்டது. எதையும் மறைப்பதில் எப்போதுமே அவனுக்கு உடன்பாடில்லை.

''அம்மா! நான் சொல்றதை கவனமா கேளுங்க.'' என்று சொல்லி மயூரியை சந்தித்தது முதல், தன் தாயார் இருவரையும் கணவன்-மனைவியாய் நினைத்து அழைத்து வந்தது உள்பட கருச்சிதைவு வரை அனைத்தையும் சொல்லி முடித்தான் விஷ்ணு.

ஆனால் பாதகன் தன் உடன் பிறந்த சகோதரன் தான் என்று மட்டும் சொல்லவில்லை. வைபவைப் பற்றி மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இல்லை. மயூரி இத்தனை நாள் அந்த பாதகனின் வீட்டில் தான் அடைக்கலம் புகுந்திருக்கிறாள் என்றால் மேகலா துடித்துவிட மாட்டாரா? இப்பொழுது தெரிந்த விவரத்தை வைத்தே முகத்தில் அறைந்து அழுதுக் கொண்டிருக்கிறார்.

''ஐயோ! என் பொண்ணு அன்னைக்கு ஏதோ பிரண்டுக்குன்னு சொல்லி விஷயத்தை சொல்லும் போது கூட எடுத்து எறிஞ்சு பேசிட்டேனே? என் கண்ணம்மா என்ன பாடுபட்டாளோ? இத்தனை கஷ்டத்தையும் மனசுக்குள்ளேயே வைச்சு இருந்திருக்காளே? உனக்கு நாங்க இல்லையா மயூம்மா? என் உயிரைக் கொடுத்து வளர்த்து... ஆண்டவா! உனக்கு கண்ணே இல்லையா?'' என்று சொன்ன மேகலாவிற்கு கண்ணீர் நிற்கவேயில்லை.

ஒரு அன்னையின் கண்ணீரையும் கவலையையும் நேரில் கண்ட விஷ்ணுவின் மனம் மேலும் வருந்தியது. ஒருவன் செய்த குற்றத்திற்கு எத்தனை உள்ளங்கள் உடைந்துவிட்டன? இந்த தாயின் கண்ணீர் எத்தனை ஜென்மம் தொடருமோ?

தாயின் குரல் செவியில் எட்டியதாலோ என்னவோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மயூரி தன் துயில் கலைந்தாள்.

கண்ணெதிரே தாயைக் கண்டதும் பேச்சே வரவில்லை. கண்கள் கண்ணீரை வடிக்க, ''அம்மா!'' என்று எழுந்து உட்கார முயன்றாள் மயூரி.

மேகலா உதவுவதற்குள் விஷ்ணு தன்னியல்பாய் கரம் கொடுத்து மயூரிக்கு உதவி செய்யவும் மகளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு ஆறுதல் சொன்னார் தாயார்.

''மயூம்மா! என்னடா கண்ணா? அம்மாக்கிட்ட சொல்லியிருக்கலாம் இல்ல? நாங்க இருந்தாலும் இல்லாத மாதிரி நிலைமையில் தானே உன்னை நிறுத்தி வைச்சு இருக்கே? யாரும் புரிஞ்சுக்க மாட்டோம்னு இப்படி முடிவு செய்தியா கண்ணா? மூத்தவ அடுத்து வர்றவங்களுக்கு உதாரணமா இருக்கணும்... முன் ஏறு போற மாதிரி தான் பின் ஏறு வரும்னு உனக்கு சொல்லி சொல்லி வளர்த்ததே தப்பு பண்ணிட்டேன் போலம்மா.'' என்று தன் கண்ணீரைக் கூடத் துடைக்காமல் மகளது கண்ணீரைத் துடைத்தபடி பேசினார்.

மகளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று மனதில் இருந்ததைக் கொட்டி பேசினார்.

''இந்த தம்பி எல்லாம் சொன்னதும்மா. நடந்ததில் மயூரி மேல் எந்த தப்பும் இல்லைமான்னு சொல்றாப்புல.

பெண்ணா பிறந்த பிறவிக்கு எல்லாமே தப்புங்கற மாதிரி உங்க அப்பாவும், மோகனும் சொல்லி சொல்லியே உனக்கு வெறுத்து போயிருச்சு போல கண்ணம்மா. ஆரம்பத்திலேயே அந்த மாதிரி பேச்சை எல்லாம் நான் கண்டிச்சிருக்கணும். எங்கே? எனக்கும் 'அடுப்படியே கோவில், ஆம்படையான் குலதெய்வம்னு' வாழ்க்கை ஆகிப் போச்சு. எனக்கே தைரியம் சொல்லி இருக்கிற பொண்ணை இப்படி ஆக்கிட்டானே படுபாவி. கடன் காரன்... அவன் உருப்புடுவானா? நாசமா போயிடுவான். என் பெண்ணை இந்த கோலத்தில் பார்க்கப் பெத்த வயிறு பத்தி எரியுது.'' என்று மூச்சுவிடாமல் கதறினார் மேகலா.

மயூரியும், மேகலாவும் மாறி மாறி நடந்த விஷயங்களைப் பகிர்ந்துக் கொள்ளும் வகையிலும், ஆறுதல் தேடும் விதமாகவும் சிறிது நேரம் பேசினார்கள். மேகலா குடும்பத்தில் கூட யாரிடமும் விஷயத்தை சொல்லாமல் இருப்பது தான் இப்போதைக்கு நல்லது என முடிவு செய்து அதன் படி நடந்தார்.

மயூரியின் தந்தை சுப்ரமணியத்திற்கு மயூரி கல்லூரி விடுதியில் மாடிப்படிகளில் இருந்து விழுந்ததால் விபத்து என்றும் அதனால் நிலைமையைப் பார்த்து, பிறகு அவினாசிக்கு வருவதாக மட்டும் தகவல் சொல்லப்பட்டது.

சில பரிசோதனைகளுக்காகவும், மயூரியின் ரத்த அழுத்தம் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தாலும் மேலும் ஐந்து நாட்கள் மருத்துவமனையில் இருந்த பிறகு விசாலாட்சி மயூரியைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போக முடிவெடுக்க, மேகலா அவினாசிக்கு அழைத்துச்

செல்வதாக நின்றார். இந்த ஐந்து நாட்கள் மயூரியிடம் சரியாகப் பேசக் கூட முடியாமல் தவித்த விஷ்ணுவிற்கு அவினாசி என்றதும் பேரதிர்ச்சியாய் இருந்தது. மயூரியுடன் பிரிவை... அதுவும் இப்பொழுதிருக்கிற மனநிலையிலும், உடல்நிலையிலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஆனால் மேகலாவோ, ''இங்கேயே இன்னும் எத்தனை நாளைக்கு தம்பி இருக்க முடியும்? அவங்க அப்பா இன்னைக்கே போன் மேலே போன் போட்டு எந்த பஸ், எந்த ட்ரெயின் என்று கேட்டுட்டு இருக்கார். இன்னும் தாமதமானால் வீட்டில் இருக்கிற பொண்ணுங்களைத் தேடி அவரே இங்கே புறப்புட்டு வந்துடுவார். நீங்க செய்த உதவி எல்லாத்துக்கும் ரொம்ப நன்றி தம்பி.'' என்று மறுப்பையும், நன்றி நவிலலையும் சேர்ந்தே முடித்தார்.

விசாலாட்சி மூலமாக விஷ்ணு மேகலாவிடம் பேசி மேலும் ஒரு நாள் சென்னையில் விஷ்ணுவின் வீட்டிலேயே தங்க முடிவானது.

மஞ்சரிக்கு சில விஷயங்கள் புரிந்தும், பல விஷயங்கள் புரியாமலும் இருக்க, தனக்கு தெரியவேண்டுமென்றால் அவர்களாகவே சொல்வார்கள் என்று அமைதி காத்தாள். தெரியாத புரியாத விஷயங்கள் தான் மிகவும் பூதாகரமாக இருக்குமென்ற எண்ணத்தில் அவளுக்கு புரியும் படி எடுத்துரைத்தார் மேகலா. அதைக் கேட்டு கண்ணீர் வடித்தவளுக்கு தன் தமக்கையின் மீதிருந்த பாசமும் மரியாதையும் மேலும் கூடியது.

வீட்டிற்கு வந்த மேகலாவிற்கு ஏற்கனவே விஷயம் முழுவதும் தெரிந்திருந்தாலும் இருவரையும் கண்

நிறைந்த அலங்காரத்தில் புகைப்படத்தில் பார்த்த பொழுது திகைப்படையாமல் இருக்க முடியவில்லை. மனதின் ஓரத்தில் தன் பெண்ணிற்கு உண்மையான மணக்கோலம் அமையாதா என்ற ஏக்கமும் எட்டிப் பார்த்தது.

புகைப்படத்திற்கே திகைத்தார் என்றால் அந்த வீட்டில் மருமகள் ஸ்தானத்தில் விசாலாட்சி மயூரியை நடத்திய விதத்தையும், வேலையாட்கள் காட்டிய மரியாதையையும், விஷ்ணுவின் அன்பான அக் கறையையும் கண்டு மேலும் திகைத்தார்.

மயூரிக்கு எல்லாமே கனவு போல் தான் இருந்தது. வீசிய புயல் காற்றில் வேரோடு சாயவிருந்த தன்னை தாங்கிப் பிடித்து நிறுத்தியவன் விஷ்ணு, மொத்தம் இரண்டுக்கும் குறைவான மாதங்கள் தான் அவனுடன் பழக்கம். ஆனால் தன் ஒவ்வொரு செயலிலும் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தான். சுவாசம் எப்படி இயல்பானதோ இப்பொழுது அவனது நினைவுகளும் அவளுக்கு இயல்பானதாய் தான் இருந்தது. ஆனால் அவளிருந்த நிலையில்.... அவளிருக்கும் நிலையில் தயக்கத்தைத் தாண்டி எண்ணங்கள் நீளவில்லை. இப்பொழுது அவனைப் பிரிந்து செல்லப் போகிறோம் எனும் போது அதை நிஜம் என்று நம்ப இயலாமல் தவித்தாள் மயூரி.

மேகலா பொருட்களை எடுத்து வைப்பதில் மும் முரமாய் இறங்க, மஞ்சரி தேவையான உதவியைச் செய்துக் கொண்டிருக்க, ஓய்வு எடுப்பதாகச் சொல்லி தவிப்புடன் படுக்கையில் சாய்ந்திருந்தாள் மயூரி.

விஷ்ணு மயூரியின் அறைக்கதவைத் தட்டிவிட்டு, ''உன்னுடன் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்

மயூரி'' என்று சொல்லவும், மற்றவர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர்.

20

சமீபத்தில் கடந்த நாட்களில் விஷ்ணு மிகவும் சோர் வாகத் தெரிந்தான். கண்ணில் இருக்கும் குறுகுறுப்பு. உதட்டோரச் சிரிப்பு. துள்ளலான நடை என்று அவனிடம் எல்லாம் தொலைந்துப் போயிருந்தன.

கட்டிலை விட்டு எழுந்த மயூரிக்கு வாகாக தோள் கொடுத்து சோபாவில் உட்கார வைத்து, ''உட்கார் மயூரி'' என்று சோபாவில் குஷனை வசதியாக எடுத்துப் போட்டவன், ''அன்பரசுக்கு வேலை கொடுக்க சொல்லி மேனேஜர்கிட்ட சொல்லி இருக்கேன்'' என்று தகவல் சொன்னான்.

''ம். தேங்க்ஸ் விஷ்ணு!'' என்று அவள் சொல்ல, ''இன்னும் தேங்க்ஸ் சொல்ற நிலையில் தான் என்னை வைச்சிருக்கியா மயூரி?'' என்று கரகரக்கும் குரலில் கேட்டு அவளை ஏறிட்டான்.

மயூரி என்ன சொல்வது என்று புரியாமல் குழப்பமான பார்வையை அவனிடம் செலுத்தினாள்.

''அடுத்த வாரத்தில் இங்கே காலேஜில் அப்ளிகேஷன் கொடுக்கணும். மற்ற டாகுமென்ட்ஸ் எல்லாம் ரெடி செய்துட்டியா?'' என்றான் நிதானமாக.

இவன் என்ன புரிந்து தான் பேசிக் கொண்டிருக் கிறானா? நாளை சென்னையில் இருந்து, இந்த வீட்டில் இருந்து நிரந்தரமாக அவினாசிக்கு செல்கிறேன்... அப்படியிருக்கையில்?

''நான் நாளைக்குக் கிளம்ப...'' என்று தொடங்கிய வளிடம், ''என்னாலே நம்பவே முடியலை மனு. என்னால் சத்தியமா நாளைக்கு நீ கிளம்பறேன்னு நம்ப முடியலை. நம்ப முடியலைன்னு சொல்றதை விட நம்ப பிடிக்கலை'' வேகமாக மொழிந்தவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து கையைப் பிடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

''மயூரி! உன்கிட்ட இதைக் கேட்க எனக்கு அருகதை இருக்குதான்னு தெரியலை. என்னை கணவனா ஏத்துப் பியா மயூரி? உனக்கு வாழ்நாள் முழுக்க நல்ல துணையா வருவேன்'' கண்ணில் நீர் மல்க விஷ்ணு சொல்லவும், இணைந்திருந்த கரங்களில் தன் நெற்றியை வைத்துக் கொண்டு மௌனமாக கண்ணீர் வடித்தாள் மயூரி.

விஷ்ணுவால் மயூரியின் மௌனத்தையும், கண் ணீரையும் தாங்கவே முடியவில்லை.

அவளது அருகில் அமர்ந்து, அவளை ஆறுதலாக தோளில் சாய்த்துக் கொண்டு, ''மயூரி! நான் உன்னை மனசார விரும்பறேன் மனு. உனக்கும் என்னைப் பிடிக்கிற வரைக்கும் காத்திருக்கத் தயாரா இருக்கேன்'' என்று மெல்லிய குரலில் அவளது செவியருகில் மனதை வருடும் விதமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவனது குரல் மயூரியின் இதய வீணையை மீட்ட, ''வி...ஷ்...ணு!'' என்று அழைத்தாள். கண்ணீர் அருவி மட்டும் நிற்கவேயில்லை.

சிறிது நேரத்தில் தன்னை சமன்படுத்திக் கொண்ட வள் இருக்கும் நிலை உணர்ந்து லேசாக விலகிக் கொள்ள, விஷ்ணுவிற்கு அவளின் செய்கை வலியை ஏற்படுத்தியது.

''மயூரி!'' என்று அழுத்தமாக அழைத்துவிட்டு காத லுடன் அவளைப் பார்க்க மயூரியால் அதை எதிர்கொள்ள முடியவில்லை.

''எல்லாம் தெரிஞ்சே இப்படிக் கேட்கறீங்களே? இதுக்கு நான் எப்படி சம்மதிக்க முடியும்?'' என்று மன் றாடும் குரலில் வினவினாள்.

''நான் ஏற்கனவே சொன்ன மாதிரி நாம இங்கே... அவன்... முகத்திலே முழிக்கிற மாதிரி சென்னையிலேயே இருக்க வேண்டாம் மயூரி'' என்று அந்த கணத்தில் வைபவ் மேல் எழுந்த கோபத்தை அடக்கியபடி சொன்னான்.

''நோ விஷ்ணு! என்னை விட உங்களுக்கு நல்ல பொண்ணு கிடைப்பாள். நான் புகலிடம் தேடி வந்தவ'' தன் பிடியிலேயே நின்றாள் மயூரி.

விஷ்ணுவிற்கு ஆயாசமாய் இருந்தது. இருப்பினும் தளராமல் புரிய வைக்கும் முயற்சியில் இறங்கினான்.

அவன் சொல்வதைக் கேட்டாலும், ''என் மேல் உங் களுக்கு அனுதாபம் தான் விஷ்ணு வந்திருக்கு. காதல் இல்லை'' என்றாள் வேதனையுடன்.

''மயூரி! எனக்கு உன் மேல் வந்ததுக்குப் பேர் அனுதாபம் கிடையாது. நான் உன்னை 'ஃபேஷன் டுடே' பொட்டிக் ஷாப்பில் ஏற்கனவே பார்த்திருக்கிறேன். உன் பேர் எனக்கு என்னன்னு தெரியாது. உன் முகத்தைக் கூட அன்னைக்குப் பார்க்க முடியலை. ஆனால் அவ்வளவு க்யூரியாசிடி இருந்தது எனக்கு. இதுக்கு முன்னாடி எந்தப் பெண்ணையும் பார்க்கணும்னு ஆசைப்பட்டது இல்லை. முதன் முதலில் உன்னைத் தான் பார்க்கணும்னு ஆசைப்பட்டேன்'' என்று முதன் முதலாக தன் மனதில் பூட்டி வைத்த சம்பவங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

''என்ன விஷ்ணு? தீபாகிட்ட மாதிரி எதுவும் சினிமா கதையைச் சொல்லப் போறீங்களா?'' என்று விரக்தி புன்னகையை உதிர்த்தாள் மயூரி.

''கோவை டீலர் உங்களோட பொட்டிக் ஷாப் இருக்கிற காம்ப்ளக்ஸ் தான் தெரியுமா உனக்கு?'' என்று கேட்டு மயூரி ஆமோதிப்பாகத் தலையசைக்கவும், ''அங்கே வரும் போது பொட்டிக் ஷாப்பில் டிஸ்ப்ளே எல்லாம் பார்த்து ரொம்ப வியந்து இருக்கேன். அதுவும் மயில் மாதிரி எம்ப்ராய்டரி வொர்க் செய்து ப்ளூ, கிரீன் காம்பி னேஷன் புடவையைப் பார்த்ததும் ரொம்ப நல்லாயிருக் கேன்னு ஜஸ்ட் கடையில் எட்டிப் பார்த்தேன். நீ ஏதோ ஸ்டூல் மேலே ஏறி நின்னு, மேல் ஷெல்ப்பில் இருந்து டிரஸ் எடுத்துட்டு இருந்த. உன் முடி ரொம்ப அழகா இருந்ததுடா. நீளமான அடர்த்தி கூந்தலுக்கும், 'ஃபேஷன் டுடே' என்ற பெயருக்கும் இருக்கிற பொருத்தம் பார்த்துச் சிரிச்சுக்கிட்டேன்'' இன்றும் அந்த நாள் நினைவில் மந்தகாசப் புன்னகை தோன்றியது விஷ்ணுவிற்கு.

கேட்டுக் கொண்டிருந்தவள் மௌனமாகவே இருந் தாள். அவளுக்கும் அந்தப் புடவை நினைவில் இருக்கத்தான் செய்தது.

''உன்னால் நம்ப முடியலை இல்லை? ஆனால் அன்னைக்கு, மீட்டிங் முடிச்சுட்டு ஆர்வத்தில் 'ஃபேஷன் டுடே' பொட்டிக் ஷாப் வந்தேன். உன்னைப் பார்க்க ணும்னு ரொம்ப ஆர்வமா வந்தேன்.''

இதை சற்றும் எதிர்பார்க்காத மயூரி கண்களை விரித்தாள்.

''உன்னைப் பார்க்க முடியலை. கடையில் வேற யாரோ இருந்தார்கள். உன் பெயர், அட்ரஸ் எல்லாம்

விசாரிச்சு உன்னை வந்து பார்க்கணும்னு ஆர்வம் இருந்தது. ஆனால்... வாழ்க்கை சினிமா கிடையாதுன்னு என்னை நானே சமாதானம் செய்துட்டு வந்துட்டேன். அப்புறம் தான் ஊட்டியில உன்னைப் பார்த்தது.''

முதல் சம்பவம் பழைய நினைவுகளை மயூரியினிடத் திலும் வரவழைத்தது.

''ஊட்டியில டீ ஷாப்பில் நான் இருந்தபோது அங்கே எதிர்த்தாப்புல பஸ்ஸில் நீ சோகமா கம்பியில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தடா. ஒரு முப்பது செகண்ட் தான் பார்த்திருப்பேன். ஆனால் அன்னைக்கு உன்னைப் பத்தித் தெரிஞ்சுக்க நான் தவியா தவிச்சேன் தெரியுமா? நீ சொன்னால் நம்புவியா என்னனு தெரியாது... ஒரு உள்ளுணர்வு மயூ. 'ஃபேஷன் டுடே' கடையில் உன்னைப் பார்க்கணும்னு எவ்வளவு துடிச்சேனோ, அதே மாதிரி ஃபீலிங் தான் உன்னிடம் பேசணும், உன் கஷ் டத்தைப் போக்கணும்னு இருந்தது. என்னால் இயல்பா இருக்க முடியலை. அப்புறம் தான் தொட்டபெட்டா சிகரத்தில் உன்னைப் பார்த்துட்டு பின்னாடியே வந்தது'' என்று எடுத்துரைத்தான் விஷ்ணு.

அவனது குரலில் பொய்மை இருப்பதாகத் தெரிய வில்லை மயூரிக்கு. இருந்தாலும்...

''இங்கே சென்னைக்கு வந்தும் வேலையே ஓடலை. இல்லாத வேலையை இருக்கிற மாதிரி செய்துட்டு வந்த போது தான் உன்னிடம் இருந்து போன் வந்தது. பிரசாத் அம்மான்னதும் எனக்கு எவ்வளவு ஏமாற்றமா இருந்தது தெரியுமா? அம்மா கணவன் - மனைவியா நினைக்கிறது கூட, நீ என்கூடவே இருக்கிறதுக்கு நல்லது தான் என்று நினைச்சு எதுவுமே மறுத்துப் பேசலை.''

''உங்களோட சூழ்நிலை அப்படி உங்களைக் கட்டாயப்படுத்தி நினைக்க வைச்சிருக்கு விஷ்ணு'' என்று அவனுக்கு சொன்னாளா அல்லது தன்னையே அந்த மாதிரி சமாதானம் செய்து கொள்ள சொன்னாளோ?

''காதல் கட்டாயத்தால் வராது மனு. அப்படி வர்றது காதலாகவும் இருக்க முடியாது. அது உணர்வு தான் கண்ணம்மா. அதுவும் உன்னுடன் ஒரு மாசம் கூடவே இருந்து உன் பழக்க வழக்கங்கள், குணங்கள் எல்லாமே என்னைப் பிரமிக்க வைச்சிருக்கு. நீ இங்கே வீட்டில் அம்மாவிடம் காண்பிச்ச அக்கறை, எல்லாரிடமும் செலுத்திய உண்மையான அன்பு, நல்லதோ... கெட்டதோ உன் முடிவில் நீ காண்பிச்ச தெளிவு, தைரியம் இதெல்லாம் இருக்கிற உன்னை எனக்குப் பிடிக்காமல் இருந்தால் தானே ஆச்சரியம் மனு?'' என்று மனதில் இருந்த விஷயங்களை வெளிப்படையாகக் கொட்டினான்.

இன்னமும் மயூரியின் முகம் தெளிவில்லாமல் இருக்கவும், ''இது கண்டதும் காதல், புரிந்ததும் காதல்ன்னு எல்லாம் என்னால் வகைப்படுத்த முடியலை. ஆனால் என்னை... முழுசா ஆக்ரமிச்சு இருக்க மயூரி. அதை எப்படி நிரூபிக்க முடியும்? நான் என்ன ஆஞ்சநேயரா? ப்ளீஸ்டா என்னைப் புரிஞ்சுக்கோ. ஐ லவ் யூ மனு'' என்று மீண்டும் அருகில் வந்து மென்மையான குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு மனதளவிலேனும் மயூரி எத்தனை முறை ஏங்கியிருப்பாள்...

எத்தனை எத்தனை முறை தன் கனவிலும் நனவிலும் இருவரும் தங்கள் ஆழ் மனதின் ஆசைகளைப்

பகிர்ந்துகொள்வது போல் கனவு கண்டிருப்பாள். ஆனால் ஒவ்வொரு முறையும் தன்னுடைய நிதர்சனம் நினைவில் வந்து, அவள் தலையில் தட்டி 'உனக்கு இந்த மாதிரி பேராசை எல்லாம் கூடாது. நீ அவனுடன் இருக்கும் நேரத்தைப் பொக்கிஷமாக உன்னுள் புதைத்துக் கொள். அது மட்டும் தான் உனக்கு' என்று கூறி இடித்திருக்கும்? இன்று அவள் காதாலேயே அந்த வார்த்தைகளைக் கேட்டும், அதை மறுக்கும் நிலையில் தன்னை வைத்த விதியை நொந்தப்படி, கண்களில் நீர் வழிய அமைதிக் காத்தாள்.

மயூரி கண்ணீர் உகுத்தபடி இருந்ததும், ''என்னைப் பிடிக்கலையா?'' என்று குரல் கடினமுற விஷ்ணு கேட்டதற்கு இடமும் வலதுமாய் தலையசைத்தாள்.

''அப்புறம் என்னம்மா?''

''எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு விஷ்ணு. என் கூட உங்க வாழ்க்கை சேர்ந்தால் உங்களாலேயும் சந்தோஷமா இருக்க முடியாது'' வாய்க்கு வந்த காரணத்தைக் கோர்வையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''உண்மையான காரணம் அது இல்லைன்னு உனக்கும் தெரியும் மனு. நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கையில் சந்தோஷமே இருக்காதுங்கறதைத் தான் புரியாமல் பேசிட்டு இருக்கே...'' என்று ஆழ்ந்த மூச்சை எடுத்து, தலையைக் கோதிக் கொண்டான்.

மயூரிக்கே அவனது முகத்தில் தெரிந்த உணர்வுகளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. இரக்கப்பட்டு அவன் வாழ்வை மேலும் சிக்கலாக்கி விடக் கூடாதே? அவளால், தனக்கு விஷ்ணுவிடத்தில் காதல் இல்லையென்று சொல்லவும் முடியாதுதான்.

எப்போது அவன் மீது காதல் வந்தது என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. ஆனால் முதலிலேயே அவன் மீது நல்ல அபிப்பிராயம் வந்ததாலே தானே, தன் அறிவு எவ்வளவு தடுத்தும், ஆயிரம் எதிர்மறை காரணங்களை அடுக்கியும் அவனுடனும் அவன் தாயுடனும் கணவன் - மனைவியாக வர ஒப்புக் கொண்டது? வைபவை அங்கு கண்டதும் விஷ்ணுவும் அதில் கூட்டோ என்று மனம் பதைத்தது? அவன் அண்ணனைப் பார்க்க வெறுப்பாக இருந்த போதும், விஷ்ணுவின் மனம் வருந்தும் என்ற நினைப்பும் சேர்ந்து தானே அதை அவனிடமிருந்து மறைத்தது? அன்று, அவன் சோர்வாக இருந்த இரவன்று அவன் தலையை ஆதரவாகக் கோதிக் கொடுக்க தன் கைகள் பரபரத்ததே? அவனை விட்டுப் பிரிந்த மூன்று நாளும் எதையோ தொலைத்தது போல் இருந்தது காதல் இல்லாமல் வேறென்ன? அவனைப் பார்த்ததும் அகமும் முகமும் மலர்ந்ததும், அவன் திலகமிட்டதும் சிலிர்த்ததும், அவன் காலில் அடி என்று பதறியதும் அவன் மீது நேசமில்லாமலா?

ஆனால் தனக்கு அவன் மீது அன்பிருக்கிறது என்று உணர்ந்த பின்னும், தன் நிலையை நினைத்தே அவள் தன்னைத் தானே அடக்கியது. இருப்பினும் சிற்சில தருணங்களில் அவளையும் மீறி அவள் உணர்ச்சிகள் வெளிப்பட்டு அவளைக் காட்டிக் கொடுக்கத் தான் செய்திருக்கிறது. தன்னுடைய காதலை அவனிடம் கூறுவதோ, தெரியப்படுத்தவோ விஷ்ணுவிற்குச் செய்யும் துரோகமாகவே கருதித் தான்... அவனுக்கு சொல்வது போலவே எப்போதும் 'தான் இங்கிருந்து சென்று விடுவேன், சென்று விடுவேன்' என்று ஜபித்த தெல்லாம் அவனின் [illegible]

ஒரு கறைப்படாத பெண் தான்... இதை எண்ணும் போதே அவள் நெஞ்சில் உதிரம் வடிந்தது. வேறு வழியில்லை. அவன் வாழ்வும் நிம்மதியும் தான் முக்கியம். அவன் தாய்க்குத் தெரிந்தால்... எப்படி ஒப்புவார் இதை? ஊர் உலகம் என்ன சொல்லும்? கடவுளே! என் மேல் என்ன தவறு? பெண்ணாகப் பிறந்ததைத் தவிர?

''என் மேல் காதல் இல்லைன்னு சொல்லு மயூரி. என்னைப் பார்த்து சொல்லு'' என்று தீவிரமான குரலில் விஷ்ணு கேட்கவும் அசந்து தான் போனாள் மயூரி.

''நான் இன்னைக்குக் கொஞ்சமாவது தலை நிமிர்ந்து நடமாடறேன் என்றால் நீங்க தான் காரணம் விஷ்ணு. அதை என்னால் மறுக்கவே முடியாது. நீங்க கிடைக்க... உங்களை மாதிரி மனசைப் புரிஞ்சுக்கிற துணை கிடைக்கிறதுக்கு உண்மையிலேயே கொடுத்து தான் வைச்சிருக்கணும். ஆனால்...'' என்று தயக்கத்துடன் ஏறிட்டாள்.

தன் கைகளுடன் அவளது கைகளை மென்மையாக அழுத்தி தைரியம் கொடுக்க, ''வேண்டாம் விஷ்ணு! ப்ளீஸ் வேண்டாமே? மத்தவங்க எல்லாம்...'' என்றாள் கண்களில் கண்ணீர் குளமாய் நிரம்ப.

''நம்ம ரெண்டு பேர் மட்டும் தான் முடிவு செய்யணும் மயூரி. உனக்கு இதில் என்ன பிரச்சனை? பிரச்சனை என்னனு சொன்னால் தானே சரி செய்ய முடியும்?''

''எனக்கு நான் தான் பிரச்சனை. எனக்கு வேண்டாம் விஷ்ணு. என்னை... நான் எப்படி உங்களுக்கு?'' என்று சொல்ல முடியாமல் தவியாய் தவித்தாள் மயூரி.

இப்பொழுது மயூரியின் நினைப்பின் மீது கோபம் எழ, ''இத்தனை நாள் சொன்னதை எல்லாம் மறந்துட்டியா

மயூரி? நீ கூட அந்தப் பொண்ணுக்கு பெட்டர் சாய்ஸ் இருந்தால்'' என்று சொன்னியே? நான் பெட்டர் சாய்ஸ் இல்லையா மனு?'' என்று மயூரியையே வேதனைக் குரலில் திருப்பிக் கேட்டான்.

''அன்னைக்கு சுமதிக்கு மட்டும் அட்வைஸ் சொன்ன... நிஜம் தான் மலர்ந்து மணம் வீசும்னு? அட்வைஸ் எல்லாம் மத்தவங்களுக்குத் தானா? மனம் ஒத்த தம்பதியா அன்னியோன்யமா வாழ்ந்து, விதி வசத்தால் கணவனை இழந்தவங்களே மனம் மாறணும்னு ஆசைப்படறோம் இல்லையா? நீ அப்படி கூட இல்லையே...? அப்போ நீ ஏன்மா உனக்கொரு வாழ்க்கையை தேடிக்கக் கூடாது?''

''என் மேல் எந்த உணர்வும் இல்லாமலேயா போட்டோ எக்ஸிபிஷனில் ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்து ரெடி செய்து வைச்சிருந்த?''

''அன்னைக்கு பூ வாங்கும் பொழுது கூட 'நாட் ஃபார் ஹெர் ஸேக்' என்று சொன்னியே கண்ணம்மா?''

''அன்னைக்கு லக்ஷ்மி பாட்டி வீட்டில் கூட நமக்கு கல்யாணமே முடிஞ்ச மாதிரி தான் மனு ஃபீல் செய்தேன். உன்னைப் பார்த்த நிமிஷத்தில் இருந்து எல்லா நினைவுகளையும் பொக்கிஷமா சேர்த்து வைச்சிருக்கேன் மனு'' என்று தேக்கி வைத்திருந்த காதலை எல்லாம் பகிர்ந்தான் விஷ்ணு.

மேலும் மயூரி மறுத்துப் பேசிய விஷயங்களுக்கு விஷ்ணு சமாதானம் சொல்ல கடைசியாக வேதனையான குரலில், ''நடந்து முடிந்ததை மாத்த முடியாது மயூரி. இனிமேல் நடக்க வேண்டிய விஷயங்களைப் பத்தி பேசுடா. வேற ஒருத்தன் செய்த குற்றத்திற்கு

தண்டனை நாம் அனுபவிக்கணுமா? என் பிறப்புக்காக எனக்கு தண்டனையா மனு?'' என்று கெஞ்சுதலாக முடித்தான்.

எத்தனையோ வழிகளைப் பின்பற்றி சமாதானம் செய்தான் விஷ்ணு. அவனது இறுதி கெஞ்சுதலுக்கு மயூரியால் மறுப்பு சொல்ல முடியவில்லை.

இருந்தாலும், ''நாம கல்யாணம்னு முடிவெடுத்தால் விசாலாட்சி அம்மாக்கிட்ட இது விஷயமா எல்லாமே சொல்லணும்னு படுது விஷ்ணு. இத்தனை நாள் ஏதோ காரணங்கள் சொல்லி அவங்களையும் ஏமாத்தி, நம்மளையும் ஏமாத்திக்கிட்டோம். ஆனால் இனிமேல் அப்படி முடியாது. வைபவ் பத்திய விஷயத்தையும் சொல்லிடறது தான் நல்லது விஷ்ணு'' என்று கருத்தை வெளிப்படுத்தினாள் மயூரி.

விஷ்ணு சிறிது சமாதானம் செய்ய முயன்றான். ஆனால் மயூரி வற்புறுத்தவும் விசாலாட்சியை அழைத்து வந்தான்.

''அம்மா! நாங்க உங்ககிட்ட ஒரு உண்மையைச் சொல்லணும்மா'' விஷ்ணு தயக்கத்துடன் பேச்சைத் தொடங்கினான்.

''இந்த தடவையாவது நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு முழுசா கேட்கறேன். ஊட்டியில் வைச்சு தான் எந்த விசாரணையும் இல்லாமல் கணவன் - மனைவின்னு அழைச்சுட்டு வந்துட்டேன்'' என்று குற்றம் செய்தது போன்ற தொனியில் மொழிந்தார் விசாலாட்சி.

இப்பொழுது உண்மையிலேயே அதிர்ந்தனர் மற்ற இருவரும்.

அதிர்ச்சியில் மௌனமாக இருந்தவர்களிடம், ''எனக்கு எப்படித் தெரியும்னு பார்க்கறீங்களா? ஊட்டியில் இருந்து

மதர் போன் செய்து இருந்தாங்க. மயூரி ஆர்ட் ஷோ இடம் பார்க்கப் போயிருந்தபோது அவளிடம் பேசணும்னு சொன்னாங்க. என் மருமகள் தான்னு சொன்னேன். ரொம்ப சந்தோஷப்பட்டு மருமகளா ஏத்துக்கிட்டதுக்கு என்னையே பாராட்டிப் பேசினாங்க. நானும் எனக்குத் தெரிஞ்ச மாதிரியே காண்பிச்சு விஷயத்தைத் தெரிஞ்சு கிட்டேன்'' என்று விசாலாட்சி சொன்ன பொழுது மற்ற இருவருக்கும் அதிர்ச்சியாய் இருந்தது.

மயூரிக்கு அன்று விசாலாட்சி வித்தியாசமாகப் பார்வை செலுத்தியது. பூடகமாய் பேசியது என்று நினைவலைகளில் மோதி மீண்டது. சுமதி சொன்ன விவரத்திலிருந்து மதர் அவளது புது தொடர்பு எண்ணைக் கொடுக்கவோ அல்லது மயூரியின் தொடர்பு எண்ணைக் கொடுத்தது பற்றி தெரியப்படுத்தவோ போன் செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

''ஆனா அதுக்கு பிறகும் நீங்க ஒண்ணுமே என்னைக் கேட்கலையே அம்மா? அப்பவும் என்னிடம் அதே பிரியம் தானே வச்சிருந்தீங்க? எப்படிம்மா?'' கண்கள் கலங்க அவரின் கரத்தைப் பிடித்துக் கொண்டு கேட்டாள் மயூரி.

ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர், ''நான் அதுவரைக்கும் பார்த்ததில் நீ பத்தரை மாத்துத் தங்கம்டா. எல்லோரிடம் பாசமாவும் மரியாதையோடும் தான் இருந்தே. யாரோ ஏதோ செய்ததுக்கு நான் ஏன் உன் னிடம் அதுவரை காட்டிய அன்பிலிருந்து மாறுபடணும்?'' என்றார்.

மீண்டும் தொடர்ந்து, ''நீங்க மட்டும் என்னடாமா? எப்படா நான் கீழே விழுவேங்கற மாதிரி மயூம்மா என்

ரூமிலேயே கீழே துணைக்கு இருந்துட்டா. உன்னை திரும்ப மாடிக்குப் போ என்று சொன்னதை நீயும் மறுத்துக்கிட்டே இருந்தே. அதுக்குப் பிறகு தான் நானும் சொல்றதை விட்டேன். நீங்களா சொல்ற வரைக்கும் பொறுமையா இருக்கலாம் என்று தான் ஒண்ணும் கேட்டுக்கலை'' என்று விசாலாட்சி விளையாட்டாகச் சொன்னாலும் குற்ற உணர்வு மற்ற இருவருக்கும் எழுந்தது.

எவ்வளவு பெரிய உண்மை? முழு பூசணிக்காயை ஒரு பானை சோற்றுக்குள் மறைக்கும் முயற்சியை அல்லவா மேற்கொண்டு இருக்கிறார்கள்?

இப்பொழுது விசாலாட்சி உண்மையாகவே குரலைத் தாழ்த்தி, ''ஆனால்... மயூம்மா உன்னை இந்த நிலைக்கு ஆக்கினது... வை... பவ்... இல்லையே?'' என்று கண்களில் ஏக்கத்துடனும், பயத்துடனும் வினவவும் அந்த அன்னைக்காகவாவது 'இல்லை' என்று சொல்ல மாட்டோமா? என்று இருந்தது மற்றவர்களுக்கு.

விஷ்ணு அன்னையிடம் பதட்டமாக, ''நீங்க ஏன்மா திடீர்னு அவனைப் பத்திக் கேட்கறீங்க?'' என்று வினவினான்.

கண்களில் கண்ணீர் நிறைய, ''என் கண்ணுக்கு, காதுக்கு எட்டாத வரைக்கும் பிரச்சனை இல்லையேன்னு நினைக்க முடியாதில்ல விஷ்ணு? மயூம்மா அன்னைக்கு விலை மதிக்க முடியாத பொருள் திருடினதைப் பத்தி வைபவ்கிட்ட கேட்கிறாள். அன்னைக்கு அவனுக்கு தலையில அடிபட்ட போது கூட ரெண்டு பேருக்கும் ஏதோ பிரச்சனைன்னு தான் நினைக்கிறேன். நீயும் ஹாஸ்பிடலில் அவனை அடிக்கிற. இதை எப்படிக் கேட்பது என்று பயந்து கோழையாகித் தான்... ஆனால்...

என் பையன்... அப்படியா? அப்படி இல்லை தானே?'' என்று மகனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு இறைஞ்சினார் விசாலாட்சி.

அந்த அன்னையின் கையையே அழுந்தப் பிடித்துக் கொண்டு இறுகினாள் மயூரி. அவள் உணர்ச்சியற்ற முகம் விசாலாட்சியின் வயிற்றில் அமிலத்தைச் சுரக்க வைக்க, கண்கள் உதிரத்தை உதிர்த்தது. விஷ்ணுவின் ஆமோதிப்பான தலையசைப்போ கல்லாய் உறைய வைத்தது.

இதயத்தை மட்டும் பாதித்தால் என்னவாகியிருக்குமோ? ஆனால் தலையில் விழுந்த இடி சர்வத்தையும் விசாலாட்சிக்கு பாதித்திருந்தது.

மகன் அன்னையிடம், ''அம்மா! ஏதாவது பேசுங்கம்மா. இப்படி இடிஞ்சு உட்காராதீங்க!'' என்று உலுக்க பேச்சே வரவில்லை விசாலாட்சிக்கு.

சற்று நேரம் சென்று, ''இந்த மாதிரி... இந்த மாதிரி ஒரு காரியத்தையா? பத்து மாசம் சுமந்து பெத்த பையனை ஒழுக்கமாக வளர்க்கத் தெரியலையே எனக்கு? நான் தான் தப்பு பண்ணிட்டேன். மயூம்மா என்னை மன்னிச்சிடு... என்னை மன்னிச்சிடு...'' என்று வயது வித்தியாசம் பார்க்காமல் மயூரியிடம் கெஞ்சினார் விசாலாட்சி.

மயூரி ஆறுதல் சொல்லியும் மனம் ஆறாமல், ''எது இருக்கக் கூடாதுன்னு கடவுள்கிட்ட மன்றாடிட்டு இருந்தேனோ அதுதானே நடந்து தொலைச்சு இருக்கு? நானே பல தடவை கற்பனைக் கூட பண்ணிப் பார்க்க முடியாமல் அப்படி இருக்காதுன்னு முடிவுக்கு வந்திருக்கேன் விஷ்ணு'' என்று வருத்தத்துடன் முறையிட்டார் விசாலாட்சி.

விஷ்ணுவுமே அதே மாதிரி தானே? கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாமல் அவதிப்பட்டு இருக்கிறானே. மகனின் பதிலை எதிர்பாராமல், ''இந்த பெண் பிள்ளைக்குச் செய்த பாவத்துக்கு... கடவுளே! இப்போ கூட யாரு? தான் செஞ்சது குற்றம்னு நினைக்காமல் திமிரு. என்ன கதிக்கு ஆளாக போறானோ? நான் சொல்லி சொல்லி வளர்த்தேனடா? எந்தப் பிள்ளையும் நல்லவன் ஆவதும், கெட்டவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே சொல்லுவாங்களே?'' என்று அரற்றினார்.

விஷ்ணுவும் மனம் கோணாமல், ''அம்மா! நீங்க என்மா உங்க மேல் தப்புன்னு எடுத்துக்கறீங்க? இப்போவெல்லாம் பிள்ளைங்க வீட்டில் கத்துக்கிறதைவிட வெளியுலகத்தில் கத்துக்கிறது தான் ஜாஸ்தியா இருக்கு. நீங்க சரியா தான்மா வளர்த்தீங்க'' என்று அன்னைக்கு ஆறுதல் சொன்னான்.

''மயூரி அம்மா கண்ணீர் வடிச்சு விட்ட சாபமெல்லாம் என் காதிலேயே கேட்குது விஷ்ணு. எதுக்குடா இந்த மாதிரி ஒரு கீழ்த்தரமான விஷயத்தில் இறங்கினான்? பணம் இருக்கிறதால் வந்த திமிரா? ஆம்பளைங்கற ஆணவமா? எதுவா இருந்தாலும் இன்னொரு வாழ்க்கையை நாசமாக்க இவன் யாருடா? பெத்த தாயைப் பத்தி நினைச்சிருந்தால் இப்படி இறங்கி இருப்பானா? நான் எங்கே தப்பு செய்தேன் விஷ்ணு? ஒழுக்கம் பத்தி எத்தனை சொல்லி வளர்த்தேன்?'' என்று சுய அலசலில் வேறு இறங்கிப் புலம்ப ஆரம்பித்தார்.

எப்படி இருந்தாலும் மனமே ஆறவில்லை. அவருக்கு விசாலாட்சியை மயூரியும், விஷ்ணுவுமாய் சேர்ந்து

ஒருவாறு தேறுதல் சொல்லி அவரது புலம்பல் அடங்க வெகு நேரம் ஆயிற்று.

இறுதியில், ''அம்மா! நான் மயூரியை மனசார விரும்ப றேன்மா. கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன். அதுக்கு உங்க சம்மதம் வேணும்மா...'' என்று விஷ யத்தைச் சொன்னான்.

''என் சம்மதம் இருக்கட்டும்ப்பா. நான் தான் மயூரி கிடைக்க குடுத்து வைச்சிருக்கணும்னு சொல்லிட் டேனே விஷ்ணு? நம்ம குடும்பத்துக்கு மயூரி வந்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். ஆனால் மயூம்மா இதுக்கு ஒத்துக்கணுமே?'' என்று வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி சொல்லிவிட்டு, ''அவன் செய்த தப்புக்கு இவனை தண்டிச்சுடாதே மயூரி! என் பையனைக் கல்யாணம் செய்துக்க உனக்கு சம்மதமா? சம்மதம்னு மட்டும் சொல்லு. நான் உங்க வீட்டில் வந்து பேசறேன்'' என்று அவள் விருப்பத்தை வினவினார் விசாலாட்சி.

''எப்ப... எப்படிம்மா உங்களால?'' என்பதற்கு மேல் மயூரியால் ஒன்று சொல்ல இயலவில்லை.

தன் கண்ணீரோட அவளுடையதையும் சேர்த்துத் துடைத்தவர், ''நீ தேவையில்லாமல் உன் மனசைப் போட்டு வருத்திக்காதே மயூம்மா. எனக்கு இதில துளி யும் வருத்தமில்லை. இன்னமும் சொல்லப் போனால் சந்தோஷம் தான். என் மேல் கருணை வைச்சு விஷ் ணுவை எனக்கு மகனாகக் கொடுத்த அந்த ஆண்டவ னுக்கு நான் ரொம்பவே நன்றிக் கடன் பட்டிருக்கேன். இந்த ஜென்மத்திலேயே என்னோட ஒரு பிள்ளை செய்த தவறை இன்னொரு மகன் தானே முன் வந்து, உன்னை விரும்பி திருமணம் செய்துக் கொள்வதில் எனக்கு

நிம்மதியும் சந்தோஷமும் மட்டும் தான். சரின்னு சொல்லி என் நெஞ்சில் பாலை வார்த்துடுடா'' என்று நிதானமாக ஆரம்பித்தவர், முடிக்கும் போது குரல் தழுதழுத்திருந்தது.

விசாலாட்சி தன் விருப்பம் கேட்டு, அவளின் மனதைத் திறந்து பேசிய அந்த கணத்தில் அவளது நெஞ்சம் நிறைய விஷ்ணு தான் நிறைந்து இருந்தான். அவன் காதலின் மேல் இருந்த நம்பிக்கை ஒளி மயூரியின் கசப்பான கடந்த காலத்தை இருள வைத் திருந்தது. அவன் பேசிய வார்த்தைகளும், விசாலாட்சி யின் தன்னலமற்ற அன்பும் மயூரியிடம் இருந்த தயக்கத்தை உடைத்தன.

விசாலாட்சியை இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தவள், என்ன மாதிரி விருப்பத்தை சொல்வது என்று சில நொடிகள் திணறி, விழிகளை நீர் படலம் மறைக்க, ''வீட்டில் பேசுங்கம்மா'' என்று சொல்லிவிட்டு அழகாக நாண புன்னகை சிந்தினாள்.

மலர்ந்த ரோஜா போன்று இருந்தவளையே இமைக் காமல் பார்த்துக் கொண்டிருந்தான் விஷ்ணு. இந்த ஒரு வார்த்தைக்காக, மயூரியின் சம்மதத்திற்காக எத்தனை போராட்டம்? எத்தனை வாதங்கள்? உண்மை அறிந்த பொழுது மயூரியின் சம்மதம் கிடைக்கவே கிடைக் காதோ என்ற நிலையிலிருந்த மனம் இப்பொழுது சொர்க்கமே கரங்களில் கிடைத்தது போன்ற மகிழ்ச்சியில் திளைத்தது.

விசாலாட்சி எழுந்து சென்ற பொழுது முன்னர் இருந்த கம்பீரம் கட்டாயம் அவரிடம் இல்லை. மகன் செய்த குற்றத்திற்காக அவரே குற்றம் செய்த உணர்வில் ...னார்.

விசாலாட்சி மேகலாவிடம் விஷயத்தைக் கூற, அவரும் மிகவும் மகிழ்ந்தார். தன் ஆசை இத்தனை சீக்கிரம் நிறைவேறியதில் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தன் கணவரிடம் விவரம் கூறுவதாகக் கூறினார்.

மறுநாள் மயூரி குடும்பத்தினருடன் விஷ்ணுவும் புறப்பட்டுச் சென்றுவிட விசாலாட்சிக்கு உடல்நலக் குறைவால் இரண்டு நாளில் தான் அவினாசி வருவதாகச் சொல்லி விடை கொடுத்தார்.

விஷ்ணுவிற்கும், மயூரிக்கும் இரண்டு நாட்கள் அவினாசியில் மகிழ்ச்சியுடனும், நிறைவாகவும் சென்றது.

ஆனால் விசாலாட்சியிடம் இருந்து வைபவ் பற்றிய அழைப்பு வரும் வரை தான்...

21

இரண்டு வருடங்களுக்குப் பிறகு -

''செந்தில்!'' என்று உரக்க அழைத்தபடி வீட்டு வாசலில் கம்பீரமாய் வந்து நின்றார் விசாலாட்சி.

மருமகள் மயூரியின் கவனிப்பில் ஆரோக்கியம் முழுவதுமாய் திரும்பி இருந்தது என்பதால் முன்னை விட அவருக்கு எல்லா விஷயத்திலும் சுறுசுறுப்பு, நிதானம், தெளிவு தான்.

''அம்மா! நம்ம மஞ்சரி அம்மாவை லைப்ரரி வரைக்கும் கொண்டு போய் விட போயிருக்கான் செந்தில். இப்போ வந்துடுவான்'' என்று பதில் சொன்னபடி ஓடி வந்தார் தோட்ட வேலைகளைச் செய்யும் தனபால்.

விசாலாட்சி அம்மாவின் அடுத்த கேள்விப் பிறப்பதற்கு முன், ''மஞ்சரி அம்மாவோட ஸ்கூட்டி சர்வீஸ்க்கு கொடுத்து இருக்குதும்மா. அடுத்த வாரம் வைபவ் அய்யா நினைவு நாளைக்கு அன்னதானம் ஏற்பாடு செய்துட்டு வந்துட்டேன்மா'' என்று வரிசையாகப் பட்டியல் வாசித்தார்.

''சரி தனபால். நீ இன்னைக்கு சீக்கிரம் கிளம்பணும்னு சொன்னேல்ல? வேலை முடிஞ்சதால் கிளம்பிடு'' என்று சொல்லி முடிக்கும்பொழுது செந்தில் காருடன் வந்து நிற்க, அவரைக் கேள்வியாகப் பார்த்தார் விசாலாட்சி.

''மஞ்சரி அம்மாக்கு லேட்டாகும்னு சொல்லி என்னைப் போகச் சொல்லிட்டாங்கம்மா. அவங்க ஆட்டோவில் வந்துடுறாங்களாம்'' என்றார் செந்தில்.

காரில் ஏறி அமர்ந்த விசாலாட்சி, ''மேடவாக்கம் டேங்க் ரோடு போகணும் செந்தில்!'' என்று சொல்லி விட்டு கண்களை மூடி அமர்ந்தார்.

செந்தில் மறுபேச்சில்லாமல் காரை செலுத்த விசாலாட்சியின் சிந்தனை ஓட்டம் சில வருடங்களுக்குப் பின்னால் சென்றது.

வைபவும், விஷ்ணுவும் பொது இடத்தில் சண்டையிட்டுக் கொண்ட நாள் இன்னும் பசுமரத்தாணியாய் நெஞ்சில் பதிந்திருந்தது. அதுவும் அந்த சண்டைக்காரன் காரணம் தெரிந்த கணத்தில் உயிர் பிரியும் வேதனைக் கூட உணர முடியாமலேயே இருந்திருக்கலாம். ஆனால் விவகாரம் முழுமையாகத் தெரிந்த பிறகு, விசாலாட்சியின் தாய்மை, பெண்மை இரண்டுமே வைபவை மன்னிக்கவே இல்லை.

இருதயத்தில் உள்ள வால்வு பிரச்சனையால் ஒரே ஒரு பிரசவம் தான் என்று முடிவான பொழுது அடைந்த வருத்தமெல்லாம் கடவுளின் அனுக்கிரஹத்தால் ஒரு பிரசவத்திலேயே இரண்டு குழந்தைகள் பிறந்த பொழுது மட்டற்ற மகிழ்ச்சியாக பெருகியது. திருமண வாழ்க்கையில் சில வருடங்களுக்குப் பிறகு கணவனுடன் வாழ்க்கை அர்த்தமற்றுப் போன பொழுது கூட குழந்தைகளின் தாய் என்ற நிலையில் தன்னையே சமாதானம் செய்து கொள்ள முடிந்தது.

தன் மகன் போரில் புறமுதுகிட்டு உயிரிழந்தான் என்றறிந்த பொழுது தன் உடலிலிருந்து அவனுக்கு பால் புகட்டிய மார்பகத்தை வெட்டி உயிரை விட முன் வந்தாளாம் வீரத்தாய். விசாலாட்சிக்கும் தன் உயிராய் வளர்த்த மகன் இன்னொரு பெண்ணிற்கு துரோகம் செய்திருக்கிறான் என்று தெரிந்த வினாடி வீரத்தாயின் மனநிலை தான். உயிர் இருப்பினும் நடை பிணம் தான்.

விஷ்ணுவிற்கு வந்த ஆத்திரத்திற்கு இரண்டு அடி அடித்தாவது தீர்த்துக் கொண்டான். விசாலாட்சிக்கு இருக்கும் குற்ற உணர்வை வைபவை கொலையே செய்தாலும் போக்க முடியாது தான். ஆனால் அதையும் செய்ய முடியவில்லை. அதைச் செய்யவும் ஒரு துணிவு வேண்டுமே? இறப்பு என்பது இவன் விஷயத்தில் சுலபமான தண்டனையாகவே அமைந்திருக்கும்.

தன்னால் முடிந்தது தனக்கு இனி எப்போதும் ஒரு மகன் தான் என்றும், வைபவை இனி வீட்டுப் பக்கமே வரக் கூடாது என்று கூறி, அவனிடம் ஒரு வார்த்தைக் கூட பேசாமல் புறக்கணித்தது தான். ஆனால் எல்லோரும் அவினாசி சென்ற இரண்டாவது நாள் வைப

விற்கு விபத்து என்ற செய்தி கிடைக்கவும் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு பெங்களூர் விரைந்தார்.

சாலை விபத்தில் எதிரே மோதியிருந்த வாகனத்தில் ஒருவர் ஆள் அடையாளமே தெரியாத நிலையில் உயிர் இழந்திருக்க, கவலைக்கிடமான நிலையில் வைபவ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

மருத்துவர்கள், ''தலையில் பலத்த அடி, ரத்த சேதம், மூளைக்குச் செல்லும் சில நரம்புகள் துண்டிக்கப்பட்டு இருக்கின்றன. உயிர் பிழைத்தாலும்...'' என்றெல்லாம் நிறைய சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மயூரி வாழ்நாள் முழுவதும் இந்த வீட்டில் இருக்க வேண்டிய பெண். அவளுக்கு நடந்த விபத்தை முற்றிலும் மறக்க வேண்டும். மயூரி மறந்தாக வேண்டும் என்று சொல்லி கண் முன்னால் வைபவ் நடமாடினால்? என்ற பொழுதில் பெரிதுவக்கும் என்ற நிலையில் மகன் வைக்கவில்லை என்றாலும் இப்படி ஒரு நிலையில் நிறுத்தி விட்டானே?

சில நிமிடங்கள் கண் மூடி நிதானமாக யோசனை செய்தார். பின்னர் தெய்வமாகப் பார்த்துக் கொடுத்த இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதென்று தீர்க்கமான முடிவு எடுத்தார். அந்த முடிவில் அவரது கம்பீரமும் திரும்பியது.

தன் இளைய மகனுக்கு போன் செய்து, ''விஷ்ணு! வைபவ் நம்மை விட்டுப் போயிட்டான்'' என்று உணர்ச்சியற்ற குரலில் விவரித்துவிட்டு, ''நான் இங்கே ஃபார்மாலிட்டீஸ், மற்ற எல்லாம் முடிச்சுட்டு வரேன். நீ அங்கே எல்லாருக்கும் சொல்லியனுப்பிவிட்டு சென்னைக்கு வந்திடு'' என்று பணித்துவிட்டு, தானே எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வந்தார்.

விஷ்ணு அரை மனதுடன் மருத்துவமனைக்கு வருவதாகச் சொன்னபொழுது கூட விசாலாட்சி சந்தேகம் வராத விதத்தில் தடுத்து நிறுத்தினார்.

* * *

''அம்மா!'' என்று செந்தில் அழைக்கவும், ''இங்கேயே நிறுத்திடுங்க செந்தில். இன்னொரு இரண்டு மணி நேரம் சென்று போன் பண்றேன். இப்ப நீங்க வீட்டுக்குப் போகலாம்'' என்று விட்டு காரிலிருந்து இறங்கினார்.

கார் கண்ணுக்கெட்டிய தூரத்தில் மறைந்ததும் சற்று தூரம் நடந்தார். அவரது கால்கள் ''இன்ஸ்டிட்யூட் ஆஃப் மெண்டல் ஹெல்த்'' என்ற வளாகத்தை நோக்கி முன்னேறின. மிக உயரமான அடர்த்தியாய் வளர்ந்திருந்த மரங்களுக்கு இடையே மிகவும் சொற்பமான மனிதர்களே நடமாடிக் கொண்டிருந்தனர்.

பழக்கப்பட்டது போல உள்ளே சென்ற விசாலாட்சி மருத்துவரைச் சந்தித்து சிறிது நேரம் உரையாடிய பிறகு, ''வைபவைப் பார்த்துட்டு வந்துடலாமா டாக்டர்?'' என்று வினவினார்.

''போன தடவைக்கு இந்த முறை எந்த இம்ப்ரூவ்மென்ட்டும் இல்லை மேடம். ரெண்டே ரெண்டு தடவை மட்டும் விஷ்ணு, விஷ்ணு என்று சொல்லி இருக்கிறார்'' என்று பெரிய சுவர்களுக்கு இடையே இருந்த பாதையில் முன்னே நடந்தார்.

அவரைத் தொடர்ந்த விசாலாட்சி, ''சுவற்றில் முட்டி கட்டு போட்டு இருந்தீங்களே? தலையில காயம் எப்படி இருக்கு டாக்டர்?'' என்று வினவினார்.

''காயம்... பரவாயில்லை. ஆனால் ட்ரீட்மெண்ட் கொடுக்கிறதுக்குத் தான் எந்தப் பயனும் இருக்க மாட்டேங்குது. மூளையில் இருக்கிற சில செல்கள் ரொம்ப பலகீனமா ஆகிட்டே இருக்கிறதும் நல்ல அறிகுறி இல்லை. சாரி டு சே திஸ், குட் டு கோ ஃபார் ஃப்யூ மோர் மந்த்ஸ் மேபீ.'' என்று இரும்புக் கதவுகளைத் தாண்டி அழைத்துச் சென்றார்.

ரெஜிஸ்டரில் கையெழுத்து இட்டதும், அங்கிருந்த அட்டெண்டரிடம் அறை சாவியைப் பெற்றுக் கொண்டு உள்ளே தனியறைக்கு அழைத்துச் சென்றார்.

மங்கலான வெளிச்சத்தில் கைகளால் முழங்கால்களைக் கட்டி, அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான் வைபவ். மொட்டைத் தலையில் ஆங்காங்கே புரையேறிய காயங்களும், சில ஆறாத காயங்களில் பிளாஸ்திரிகளும் போடப்பட்டு இருந்தது. இருவரும் நுழையும் அரவத்தில் நடுங்கியவன் கண்களில் ஜீவனே இல்லாமல் வெறித்துக் கொண்டிருந்தான்.

அந்த நான்கு சுவருக்குள் மட்டும் எழுந்து நடக்க முடிகின்ற வகையில் அவனுடைய கைகள் மட்டும் இல்லாமல் கால்களும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தன. காயங்களை எல்லாம் காட்டி சிகிச்சையளிக்கும் முறைகளை விவரித்துவிட்டு மருத்துவர் வெளியில் காத்திருக்க விசாலாட்சி மகனை ஐந்து நிமிடங்கள் வெறித்தார்.

அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும் என்பது இவன் விஷயத்தில் எவ்வளவு உண்மை? எதுவுமே பேசவில்லை. இப்பொழுதும் அதே புறக்கணிப்பு தான். வைபவைப் பார்க்கும் பொழுது வயிற்றில் மீண்டும் அமிலம் சுரக்க, கன்னங்கள் கலங்கி

தொண்டையை துக்கம் அழுத்தியது விசாலாட்சிக்கு. எங்கே தவறு செய்தேன்...?

கண்ணாடியைக் கழற்றிக் கண்களை முந்தானையால் ஒற்றிக் கொண்டவர் ஆழ்ந்த மூச்சுகளை எடுத்து வெளியேறினார்.

மீண்டும் மருத்துவரிடம் பேசி விடை பெற்றதும் சிறிது நேரம் அந்த வளாகத்திலேயே நடைப் பயின்றார்.

* * *

அங்கே வீட்டில் -

மயூரி சமையலறையில் இரவு உணவுக்கான வேலையில் ஈடுபட்டிருந்தாள். அவினாசியிலிருந்து ஏற்கனவே அவள் தாய் மேகலா, தந்தை, தம்பி எல்லோரும் சென்னைக்கு வர காலையிலேயே கிளம்பி விட்டிருந்தார்கள். இன்னும் சில மணி நேரத்திற்குள் அவர்களும் வந்து சேர்ந்துவிடுவார்கள்.

நாளை விசேஷத்திற்கு என்னென்ன தேவை என்று வேலம்மாவிற்கும் காமாட்சிக்கும் நன்கு தெரியுமென்று அவர்களைக் கடை வரை அனுப்பியிருந்தாள் மயூரி.

எண்ணெய் குளித்து முடித்த ஈரக் கூந்தலை கோடாலி முடிச்சு போட்டிருந்த மயூரியைப் பின்னோடு வந்து அணைத்துக் கொண்ட விஷ்ணு. அவள் கேசத்தில் சூடியிருந்த முல்லை சரத்தின் வாசத்தை முகர்ந்தவாறே, ''ஹாய் தேர் பிரின்செஸ்!'' என்று மெல்லிய குரலில் கூறி, அவள் கழுத்து வளைவில் முத்தமிட்டான்.

அவன் தலையில் தன் தலைக் கொண்டு லேசாக இடித்துவிட்டு, ''ஹாய் தேர் மை பிரின்ஸ்!'' என்றாள் மயூரி.

''ஹொவ் இஸ் மை லிட்டில் ஏஞ்சல்?'' மயூரியின் மணி வயிற்றை வாஞ்சையுடன் தடவி

மயூரி இப்போது மூன்று மாதக் கர்ப்பிணி பெண். அவளைக் கண்ணுக்குள் வைத்துத் தாங்கினார்கள் விஷ்ணுவும் விசாலாட்சியும்.

அவன் கையோடு தன் கரத்தையும் சேர்த்து, ''அவங்களுக்கென்ன? அம்மா வயிற்றில் நல்லா ஜம்னு இருக்காங்க ராஜா குட்டி'' என்றாள் மயூரி.

இருவருக்குள்ளும் இது எப்போதும் நடப்பது தான். விஷ்ணு, மயூரி மாதிரி குட்டி பாப்பா தான் வேண்டுமென்று சொல்ல, மயூரி தனக்கு விஷ்ணு மாதிரி குட்டி பையன் தான் வேண்டுமென்று அடம்பிடிக்க, வெற்றி யாருக்கென்று அவர்களைப் படைத்த அந்த இறைவனுக்கே வெளிச்சம்.

''எண்ணெய் சட்டி விஷ்ணு. பத்திரம்'' என்றவள், ''என்ன உங்க வேலையெல்லாம் முடிஞ்சுடுச்சா? இந்த பக்கம் காத்து வீசுது?'' வடையைப் போட்டுக் கொண்டே கேட்டாள் மயூரி.

''ஹே! இது அநியாயம். நான் இங்கே வந்தாலே உன்னைத் தொந்தரவு செய்றேன் அப்படின்னு அடிச்சு துரத்தாதது ஒண்ணு தான் குறை மாதிரி நடந்துக்குவே? உனக்கு ரெண்டு பக்கமும் பாடி கார்ட் வேற நம்ம வேலம்மாவும் காமாட்சியும். எப்படா அவங்க ரெண்டு பேரும் கிளம்புவாங்க என்று இருந்தேன். மஞ்சரியும் லைப்ரரி போயிருக்கா. அம்மாவும் இல்லை. நாம மட்டும் தான் இருக்கோம். உன்னை நான் என்ன செய்தாலும் கேட்க இங்கே யாருமில்லையே? ஹா ஹா ஹா!'' நம்பியார் மாதிரி அவளை சுற்றி வளைத்த இரண்டு கரத்தையும் சேர்த்து தேய்த்துக் கொண்டான்.

சிரித்துக் கொண்டே, ''அச்சோ விஷ்ணு! ரொம்ம்ம்ம்ப கொஞ்சம் காப்பாத்துங்க இந்த

வில்லன்கிட்ட இருந்து'' என்று மேலும் அவனை பின்னோடு நெருங்கினாள் மயூரி.

சிரித்துக் கொண்டே அவளை இறுக்கி அணைத்தவன், ''யாமிருக்க பயமேன் குழந்தாய்?'' என்று அபயம் அளித்தான்.

தன் தாடையை அவள் தோளில் வைத்து அழுத்தியவன், ''இப்பவெல்லாம் கடையில் விக்கிற பூவில் வாசமே இல்லை தெரியுமா மனு?'' கள்ளச் சிரிப்போடு கூறினான் விஷ்ணு.

அடுப்பைப் பார்த்துக் கொண்டு வேலை செய்துக் கொண்டிருந்த மயூரிக்கு அவன் முகத்திலிருந்த சிரிப்பைப் பார்க்க முடியவில்லை. வேலையில் கவனமாக இருப்பினும் அவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று உசுப்ப, ''ஏன்?''என்று கேட்டாள்.

''பின்னே! உன் வாசத்திற்கு முன் அதெல்லாம் பிச்சை கேட்கணும் தெரியுமாடா செல்லம்ஸ்?'' என்று மீண்டும் அவள் கழுத்து வளைவில் முத்தமிட்டான்.

''அய்யே! வழியுது. துடைங்க'' சிரிப்போடு கூறினாலும் மயூரியின் முகத்தில் மகிழ்ச்சியே நிரம்பி வழிந்தது.

''ஹே! இங்கே அவனவன் அவனோட ஃபீலிங்க்சை அப்படியே.. கொட்டிக்கிட்டு இருக்கான். உனக்கென்னா கிண்டலா இருக்கா?'' என்றவன், ''பாரு உனக்கு தான்...'' என்றபடி அவள் இடுப்பில் சொருகியிருந்த முந்தானையால் மெதுவாக அவள் நெற்றியிலும், முகத்திலும் லேசாகப் பூத்த வியர்வை முத்துக்களை அன்புடன் துடைத்துவிட்டான்.

''இந்த சமையலை அப்புறம் பார்த்துக்கக் கூடாதடா? ஏன் இப்படி ஸ்ட்ரெஸ் செய்துக்கிற?'' அக்கறையுடன் கேட்டான் விஷ்ணு.

''நான் ஒண்ணும் பெருசா செய்யலை விஷ்ணு. எல்லா மேல் வேலையும் ஏற்கனவே செய்து வச்சுட்டாங்க. நான் இதை மட்டும் தான் செய்றேன். நைட் அம்மா வந்த பிறகு, இங்கே வந்து நிற்க வேண்டாமில்லை. எல்லோரும் சேர்ந்து பேசிக்கிட்டு இருக்கலாம் அதான். இந்த குழம்பை மட்டும் கூட்டி வச்சு இறக்கினா போதும். அவ்வளவு தான் விஷ்ணு.''

அவளைத் தாண்டி கையை நீட்டி, ''நீ கூட்டவும் வேண்டாம். பெருக்கவும் வேண்டாம். இதெல்லாம் அப்புறம் செய்துக்கலாம். நீ முதல்ல வா'' என்று அடுப்பை அணைத்து விட்டு, அவரை இரு கரங்களிலும் ஏந்தினான்.

அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு மயூரி, ''அச்சோ! என்ன வினு! விடுங்கப்பா, யாராவது வந்துட போறாங்க. நான் நடந்து வர மாட்டேனா?'' என்று கூறிய எதற்கும் செவி சாய்க்காமல் அவளை அப்படியே தூக்கிக் கொண்டு போய் சோபாவில் உட்கார வைத்தான்.

''கதவு மூடியிருக்கு. யாரும் இங்கே இல்லை. யாரும் வந்தாலும் சத்தம் கேட்கும். அப்படியே வந்தாலும் என் மனைவியை நான் தூக்குகிறேன். அவங்களுக்கு என்ன போச்சு? நீ பேசாம இரு'' என்று அவள் வாயை அடைத்தான்.

சோபாவில் அவளை உட்கார வைத்து, அவள் மடியில் படுத்துக் கொண்டவனின் கேசத்தைக் கலைத்து விளையாடினாள் மயூரி.

மயூரி, ''நீங்க சொன்னால் சரிங்க சார்!'' என்று விளையாட்டாகக் கூற, கேசத்தில் அலைந்த அவள் கரத்தை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்திய விஷ்ணு,

''உனக்கு இந்த நேரம் ஏதாவது ஆசை இருக்கா மனு? ஏதாவது உனக்கு வேணுமாடா? சொல்லு'' என்றான் காதலுடன்.

''அதென்ன இந்த நேரம் ஸ்பெஷலா?''

''இப்போ நீங்க மூணு உயிர் இல்ல? அதான் இந்த நேரம் ஸ்பெஷல்?''என்று கொஞ்சலாகச் சொன்னவன், ''மூணு எப்படின்னு யோசிக்கிறியா தங்கம்ஸ்? ஏற்கனவே நீ என்னையும் சுமக்கிறதால ரெண்டு உயிர், இப்போ குட்டிப் பொண்ணும் சேர்த்து மூணு. போதுமா?'' என்று விளக்கம் சொல்லவும் பூரித்தாள் மயூரி.

அவன் நெற்றியோடு தன் நெற்றியை வைத்து அழுத்தியவள், ''எனக்கு தான் நீங்க இருக்கீங்களே? இதுக்கு மேல எனக்கு வேற என்ன வேணும்? ம்ம்..?'' என்று அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

''ஹச்... ஹச்.. ஓவர் புகழ்ச்சி உடம்புக்கு ஆகாதடி செல்லம்ஸ்.'' என்று கண் சிமிட்டிக் கொஞ்சியவன், ''சொல்லு. உனக்கு என்ன வேணும்னு சொல்லு'' என்று அவன் பிடியிலேயே நின்றான்.

அவள் யோசிப்பதைப் பார்த்ததும் விஷ்ணு, ''அம் மாடி! நீ அன்னைக்கு மாதிரி பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி பூ தான் வேணும்னு கேட்கா தேம்மா. உன் வினு பாவமில்லையா?'' என்று சிரித்தான்.

மயூரியும், ''ச்ச.. ச்ச.. நான் ஒரு தடவை கேட்டதை அடுத்த தடவை கேட்பதே இல்லை. தெரியாதா உங்களுக்கு?'' என்றவள் சற்றே இடைவெளிவிட்டு, ''நான் இந்த தடவை அதியமானோட நெல்லிக் கனியைத் தான் கேட்கலாம்னு நினைச்சேன்'' முகத்தை நேராக வைத்துக் கொண்டு சொன்னாள்.

''அம்பேல் மயூ! அம்பேல். நான் வரலை இந்த விளையாட்டுக்கு. என்னை விட்டுடுடா. நான் இப்படியே ஒரு முழம் பூவிலேயே என் காலத்தை ஓட்டிடறேன்'' என்று சிரித்தான்.

கூட சேர்ந்து சிரித்தவள், அவன் தலை முடியை விளையாட்டாக இழுத்து, ''கஞ்ச பிசுநாறி!'' என்று அவன் கன்னத்தை வலிக்காமல் கிள்ளினாள்.

''இப்படி நீங்க அதியமான நெல்லிக்கனி, முல்லைக் கொடிக்கு பாரி தந்த தேர், மனுநீதியின் ஆராய்ச்சி மணி என்று கேட்டதுக்காக சரித்திரத்தில் இருந்து மீண்டும் சரித்திரம் படைக்க இந்த விஷ்ணுவால் முடியாதுடா.'' விஷ்ணு குறும்பாகச் சொல்லவும் அழகாக அழகு காட்டினாள் மயூரி.

மயூரியின் விரல்களுக்கு சொடுக்கு எடுத்தவன், ''பின்னே! வாய் கொடுத்து மாட்டிக்கிறது நான் தானே? அதான் ஜகா வாங்கிட்டேன்'' என்று சிரித்துவிட்டு, ''சரி! உன் பிரண்ட் சுமதியும், அவங்க கணவர் அன்பரசுவும் வராங்களா நாளைக்கு? ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்ப ணுமா?'' என்று கேட்டான்.

''இல்லை. அவ இப்ப வரலையாம். எஸ்டேட்டில் ஏதோ வேலை நடக்குதாம். அப்புறம் வரேன் என்று சொல்லிட்டா. இன்னொரு சந்தோஷமான விஷயம். அவளும் இப்போ ப்ரெக்னெண்ட்டாம். கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருந்தது விஷ்ணு. இன்னொரு குழந்தை வந்தால் அன்பரசு அபிஷேக் மேல காட்ற பாசத்தில் ஏதும் குறை வந்துடுமோன்னு பயந்துட்டு இருந்தால்ல? அதை தெரிஞ்சுக்கிட்டு அவர் ஆபரேஷன் செய்ய போயிருக்கார். இவளுக்கு ரொம்ப கஷ்டமா போச்சாம்.

இப்போ தான் குட் நியூஸ் சொல்லியிருக்கா. ரொம்ப நல்ல ஜோடி இல்ல விஷ்ணு?'' கண்கள் மின்ன சொன்ன வளையே இமைக்காமல் பார்த்தான் விஷ்ணு.

அவன் பார்வையை உணர்ந்தவளுக்கு சற்றே முகம் சிவக்க, ''என்ன விஷ்ணுகுட்டி அப்படி பார்க்கறீங்க? புதுசா எதுவும் இருக்கா இங்கே?''என்றாள் குரலே எழும்பாமல்.

''ம்ம்...நீ தினமும் பார்க்க புதுசு புதுசாவே தெரியுறடா'' கிசுகிசுப்பாகக் கூறியவன அவள் கழுத்தை வளைத்து தன் முகம் நோக்கி இழுத்து, அழுத்தமாக அவள் அதரங் களில் முத்தமொன்றை வைத்தான்.

மூச்சு வாங்க விலகிக் கொண்டவள், அவனை தன் மார்போடு அணைத்துக் கொண்டு, அவன் தலையில் தன் தாடையை வைத்து அழுத்தி, ''நான் ரொம்ப கொடுத்து வைத்தவ தெரியுமா?'' என்றாள் கிசுகிசுப்பாக.

சடாரென்று முகத்தை நிமிர்த்தியவன், ''ஹே! நான் தான் ரொம்ப கொடுத்து வச்சிருக்கேன். நீ என்ன ப்ளேட்டையே மாத்துற?'' என்றான் குறும்பு சிரிப்புடன்.

''இல்லை. நீங்க கிடைக்க நான் தான் கொடுத்து வெச்சிருக்கேன்'' கொஞ்சினாள் மயூரி.

எழுந்து அமர்ந்தவன், ''ம்ஹூம். அதென்னமோம்மா நான் தான் உன்கிட்ட நிறைய கொடுத்து வைச்சிருக் கேன். அப்படியே கணக்கை காந்தி கணக்குல எழுத லாம்னு நினைப்பா உனக்கு?'' அவளின் உதட்டை வருடிக் கொண்டே கேட்டவன், மிக மெல்லிய குரலில், ''நேத்து மாடியில், நம்ம ரூமில்....'' என்று ஆரம்பித் தவன், தொடர்ந்து, ''அதையெல்லாம் திரும்பக் கொடுத்துடணுமாக்கும்'' என்று கண் சிமிட்டிச் சிரித் தான்.

லைப்ரரி போய்விட்டு திரும்பிய மஞ்சரிக்கு கணவன் மனைவி இருவரும் மாறி மாறி 'நான் தான் கொடுத்து வைத்தவர்' என்று சத்தமாகச் சொன்னதும் மட்டும் காதில் கேட்க, ''அப்பா.. ஆரம்பிச்சுட்டாங்கையா... ஆரம்பிச்சிட்டாங்க. நீங்க ரெண்டு பேருமே ரொம்ப கொடுத்து வைச்சவங்க தான். நாங்க ஒத்துக்கிறோம்ப்பா'' என்றபடியே வந்தாள்.

மஞ்சரி சென்னையில் முதுநிலை பயோ - டெக் னாலஜி சேர்ந்திருந்தாள். இவர்கள் வீட்டிலேயே தங்கிக் கொண்டு கல்லூரிக்குப் போவது அவளுக்கும், விஷ்ணு வின் வீட்டிலிருப்போருக்கும் மெத்த சந்தோஷம். தனக்குப் பிடித்த அக்காவின் வீட்டில், இப்போது அவள் அளவுக்குப் பிடித்த அக்கா கணவரின் வீட்டில் தங்கி கல்லூரி செல்வதில் மிகுந்த சந்தோஷம்.

கணவன் மனைவி இருவரும் ஒருவர் மற்றவர் மீது வைத்திருக்கும் பாசத்தையும் நேசத்தையும் கேலி செய்தாலும், அதை எப்போதும் பார்த்து ரசிப்பாள் மஞ்சரி.

''பாரு பாரு. மஞ்சரியே நம்ம ரெண்டு பேருமே தான் கொடுத்து வச்சு இருக்கோம்னு சொல்றா. நல்லா கேட்டுக்கோ'' மயூரியின் புறம் திரும்பி கண் சிமிட்டி னான் விஷ்ணு.

''ஷ்... சும்மா இருங்க விஷ்ணு நீங்க...'' கன்னம் சிவக்க அவனிடம் கூறியவள், மஞ்சரியிடம் திரும்பி, ''வா மஞ்சரி! புக்ஸ் எல்லாம் கிடைச்சதா?'' என்று இயல் பாகக் காட்டிக் கொள்ள கேட்டாள்.

''ம்ம். கிடைச்சது மயூக்கா! இன்னும் அம்மா வர லையா? நான் அவங்க வரதுக்குள்ள வந்துடணும்னு

சீக்கிரம் சீக்கிரமா வந்தேன். இந்தா உனக்குப் பிடிச்ச ஜாதிமல்லி. வாசனையா இருந்ததேன்னு வாங்கிட்டு வந்தேன்'' என்று மயூரியிடம் கொடுத்தாள்.

''நாட்டாமை மஞ்சரியே தீர்ப்பு சொல்லி எனக்கு ஒரு முழ பூவுக்கும் காசை மிச்சம் பண்ணிட்டாங்க!'' என்ற கேலியுடன் மயூரியிடம் இருந்து லேசாக விலகி, விரிந்த புன்னகையோடு மனைவியை நோக்கினான்.

மயூரியும் வாய்விட்டு சிரிக்க முடியாமல் சமாளிக்கும் விதமாக, ''அமைதி அமைதி'' என்று சொல்ல மஞ்சரி விழித்தாள்.

மஞ்சரியிடம் கேலியாக விஷ்ணு, ''பாண்டியன் அரசவையில் விட்ட வாதத்தை தொடரலாம்னு மயூரியின் கூந்தலில் இயற்கையிலேயே நறுமணம் இருக்கிறதை சொல்லிட்டு இருந்தேன். நீ என்னவோ நெற்றிக் கண் திறப்பினும் குற்றமே பாணியில் ஜாதி மல்லி வாசனையா இருக்குன்னு சொல்லிட்டு வந்ததும் சிரிப்பு'' என்று உண்மையைக் கலந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

''நம்பிட்டேன் மாமா. நம்பிட்டேன். உங்க காதல் காவிய காதல் தான்னு அப்போ அப்போ இப்படி சரித்திரத்தைப் புரட்டி ஆராய்ச்சி செய்ய வேண்டாம்'' என்று மஞ்சரி சொல்லவும் முன்னை விட சிரிப்பு பீறிட்டது மற்ற இருவருக்கும்.

மாமாவுடன் இருக்கும் பொழுது அக்காவின் முகத்தில் எப்பொழுதும் பூரிப்பு இருந்து கொண்டே இருக்கும்.

அடிக்கடி தன் அக்காவிடம், ''மாமா மாதிரி ஒருத்தர் கிடைக்க நீ புண்ணியம் செய்திருக்கணும் மயூக்கா. எத்தனை பொண்ணுங்களுக்கு அன்பான கணவன்

கிடைக்கிறாங்க? எனக்கு உன்னளவில் பாதியாவது கிடைக்குதான்னு பார்ப்போம். அதுக்குத் தான் வாரம் தவறாமல் நெய் விளக்கு ஏத்துறேன். பார்க்கலாம்'' என்று கண் சிமிட்டுவாள்.

அதே நேரம் தன் தந்தை ஸ்தானத்தில் வைத்திருக்கும் மாமாவிடமும், ''அக்கா மாதிரி ஒரு மனைவி கிடைக்க, யு ஆர் சோ லக்கி. தெரியுமா மாமா?'' என்றும் சொல்லுவாள்.

இன்றும் அதே மனநிறைவோடு பார்த்தாள் மஞ்சரி.

பொதுவாகப் பெண்களுக்கு தந்தை மாதிரி குணங்கள் உள்ள கணவன் வர வேண்டும் என்று விருப்பம் இருப்பது இயல்பு தானே? இங்கும் தந்தை ஸ்தானத்தில் விஷ்ணு மஞ்சரிக்கும், மோகனுக்கும் முன் மாதிரியாக இருப்பதில் பூரிப்பும், பெருமையும் மயூரிக்கு.

''வெளியே அம்மா சத்தம் கேட்குது மயூக்கா'' என்று துள்ளலோடு வாசலுக்கு விரைந்தாள் மஞ்சரி.

22

மயூரிக்குப் பூச்சூடல் நடக்கவிருக்கும் காலை பொழுது மிகவும் அழகாக புலர்ந்தது. சூரியன் கிழக்கில் மெல்ல மெல்ல விழித்துக் கொள்ள, பறவைகள் தங்கள் இரையைத் தேடி நகர் வலம் நடத்திய வண்ணம் இருந்தன.

தன் அருகே, தன்னை இறுக்கிக் கொண்டு கண்ணயர்ந்து கொண்டிருந்தவனைக் காதலுடன் பார்த்தாள் மயூரி. மெல்ல எழுந்து அவன் தாடையில் முத்த

மிட்டவள். அவன் மார்பில் தன் கையிலிருந்து உதிர்ந்திருந்த மருதாணியை மெதுவாக அவன் துயில் கலையாமல் ஊதிவிட்டாள்.

உதிர்ந்திருந்த மருதாணியைப் பார்த்தவளுக்கு முன் தினம் இரவு நடந்தது நினைவிலாடி புன்னகையை வரவழைத்தது. மஞ்சரி முதல் நாள் மாலை நூலகத்திலிருந்து வந்ததில் இருந்து, அங்கு மேஜையில் இருந்த மருதாணியைப் பார்த்து மயூரியை அதை அப்போதே வைத்துக் கொள்ள சொல்லிக் கொண்டிருந்தான் விஷ்ணு.

மஞ்சரி தான், ''இப்ப வேண்டாம் மாமா. இப்போவே வைத்தால் சாப்பிட, கொள்ள கஷ்டமா ஆகிடும். நைட் வைச்சு விடறேன் மயூக்கா'' என்று சொல்லிவிட்டாள்.

அவினாசியில் இருந்து எல்லோரும் வந்துவிட அதன் பிறகு மயூரிக்கும் விஷ்ணுவிடம் தனிமையில் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மகள் கருவுற்ற பின் முதன் முதலாகப் பார்க்க வந்த மேகலாவிற்கு மிகுந்த சந்தோஷம். அந்த மூன்று மாதத்திற்கும் சேர்த்து இந்த ஒரு இரவில் பெண்ணை தாங்கோ தாங்கென்று தாங்கினார். எப்போதும் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்கும் சுப்ரமணியம் கூட அவளைப் பார்த்து லேசாக கண் கலங்கினார்.

விசாலாட்சியும் அதற்குள் வந்துவிட, ஒரே நலன் விசாரிப்பும், பேச்சும், சிரிப்பும் பின்பு உணவும் முடிந்து, அதன் பிறகு மஞ்சரி மயூரியின் இரண்டு கரங்களிலும் மருதாணி வைக்க என்று, இரவு உறங்க மிகவும் நேரமாகிவிட்டது.

தங்கள் அறைக்குள் நுழைந்த மயூரியை அணைத்துக் கொண்டு விஷ்ணு, ''ஐ லவ் யூ மனு செல்லம்!'' என்று சொல்லிவிட்டு அவள் நெற்றியிலும், வயிற்றிலும் முத்தம் கொடுத்தான்.

கிசுகிசுப்பான குரலில், ''அச்சோ வினு! கையெல்லாம் மருதாணி வினு! உங்க சட்டை மேலெல்லாம் அப்பிட போகுது'' என்று மயூரி சொன்னாலும் விஷ்ணுவிடம் இருந்து விலகவில்லை.

''நீ இப்படி சொல்லுவேன்னு தெரியும். அதுக்கு தான் நான் உன்னை சாயந்தரமே மருதாணி வைக்க சொன்னேன். அக்கா, தங்கை இரண்டு பேருமே என் பேச்சை கேட்கலை'' என்று அலுத்துக் கொண்டான் விஷ்ணு.

''ஓஹ்...''

''ஆமா... இப்ப நல்லா ஓஹ் போடு. புருஷன் ஒண்ணு சொன்னால் அதை அப்படியே கேட்டாதானே ஒரு நல்ல மனைவிக்கு அழகு'' என்றவாறே அவள் காது மடலை செல்லமாகக் கடித்தான்.

''வினு! என் கையில் இருக்கிறதெல்லாம் அழியப் போகுது. மஞ்சரி அப்புறம் என்னை உண்டு இல்லைன்னு செய்துடுவா. ப்ளீஸ்! என் செல்லமில்ல?'' குரல் உள்ளே உள்ளே போய்க் கொண்டிருந்தது மயூரிக்கு.

அவனையும் அணைக்க முடியவில்லை. எல்லை மீறும் அவன் கரங்களையும் தடுக்கும் வழி தெரியாது தவித்தாள் மயூரி.

அப்படியும் முடியாமல் அவளின் கரம் லேசாக அவன் பிடரி முடியில் பட, ''வினு! ஷூ... பாருங்க உங்க

முடியெல்லாம் ஆக்கிட்டேன். விடுங்க வினு'' அதைத் துடைக்கும் பேர் வழியென்று கையிலிருந்தவற்றை மேலும் கலைத்துக் கொண்டாள் மயூரி.

''அதனால என்னடா? இது ஹென்னா கண்டிஷனிங். பார்லர் போய் செய்றதை நீ வீட்டிலேயே செய்து விடற. அவ்வளவு தானே? சரி விடு'' என்று அவளைத் திருப்பி பின்னிருந்து அணைத்துக் கொண்டான்.

அணைத்த படியே ஒற்றை சோபாவில் அமர்ந்து, அவளைத் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டு அன்றைய கதையைப் பேசினான்.

அலுப்பு மிகுதியில் தான் அப்படியே உறங்கியிருக்க வேண்டும். சோபாவில் உட்கார்ந்தது தான் அவளுக்கு நினைவில் இருக்கிறது. எப்போது கொண்டு வந்து படுக்க வைத்தானோ தெரியவில்லை. பாவம்.. மெல்லிய முறுவல் அவள் அதரங்களில் படர்ந்தது.

தன் கணவனின் உறக்கம் கலையாமல் அவன் முதுகுக்கடியில் சிக்கியிருந்த தன் கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு எழுந்து குளிக்கப் போனாள். மயூரி குளித்து முடித்து வந்த பின்னும் புரண்டபடி படுத்திருந்தவன், அவள் வெளியே வந்த சத்தத்தைக் கேட்டு மெல்ல விழி திறந்தான். அவளைப் பார்த்து புன்னகைத்த படியே ஒற்றைக் கரத்தை நீட்ட, அதைப் பற்றிக் கொண்டு கட்டிலில் அவன் அருகில் வந்தமர்ந்தாள் அவனின் தர்ம பத்தினி.

அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டவன் அவளைக் கட்டிக் கொண்டு வசதியாகப் படுத்துக் கொண்டான்.

அவள் மடியில் புதைந்திருந்த முகத்தை நிமிர்த்தாமல், தூக்க கலக்கத்தில், ''ஹாய்! குட் மார்னிங்!

சீக்கிரமே எழுந்துட்டியா?'' மெல்லிய முனகலாக வார்த்தைகள் முடியும் முன்னே சின்ன கொட்டாவி எட்டிப் பார்த்தது விஷ்ணுவிற்கு.

அவன் காதோரம் கேசத்தை ஒதுக்கி விட்டவாறே, அவன் கன்னத்தில் முத்தமிட்டு, ''ஹாய்! குட் மார்னிங் வினு! சீக்கிரம் இல்லை சார். இதுவே லேட் தான். நேத்து படுக்க லேட் ஆகிடுச்சு இல்ல? எழுந்துருங்க. மோகன் நேத்தே உங்ககிட்ட சொல்லிக்கிட்டு இருந்தானே? கடைக்குப் போகணும் மாமான்னு. ம்ம்... மறந்துடுச்சா?'' என்றாள்.

''ம்ம்.. ம்ஹ்ம்ம். இன்னும் கொஞ்ச நேரம். ப்ளீஸ்டா செல்லம்ஸ்'' என்று சிணுங்கியவனை எழுப்பிக் குளிக்க அனுப்பிவிட்டு கீழே வந்தாள் மயூரி.

சிறிது நேரத்தில் விஷ்ணுவும் கீழே வர, மோகன், ''என்ன மாமா.. ஷாப்பிங் போகலாம் என்று சொல்லியிருந்தேனே? அப்படியே எனக்கு கொஞ்சம் புக்ஸ் வாங்கணும். சாப்பிட்டுட்டு போகலாமா?'' என்று கேட்டான்.

அவன் சென்னை வந்துவிட்டாலோ, இல்லை விஷ்ணு அவினாசி போனாலோ எப்போதும் இருப்பது விஷ்ணுவோடு தான். அவனின் குணம் இந்த இரண்டு வருடத்தில் சிறிது மாறியிருந்தது.

இப்போதும் தன் சகோதரிகளிடம் 'ஏன் தனியா போறீங்க?' என்று கேட்பது தான். இருந்தாலும் அதில் முன்பிருந்த 'ஆண்' என்ற ஆதிக்கம் குறைந்து, அதில் 'உனக்காக நான் இதை செய்ய மாட்டேனா? கொடு. நான் செய்கிறேன்' என்ற அன்பும் அக்கறையுமே நிறைந்திருந்தது.

''ம்ம்... ஃபங்ஷன் முடிஞ்சதும் போகலாம் மோகன். இரு உன் அக்காவிடம் ஏதும் ஹெல்ப் வேணுமான்னு கேட்டுட்டு வந்துடறேன்'' என்றபடி மயூரியைத் தேடிச் சென்றான்.

''மயூரி! நான் ஏதாவது செய்யணுமாடா? மோகன் வெளியே கூப்பிடறான்.'' எனவும், ''இல்லை விஷ்ணு. இப்போ ஒண்ணும் வேலையில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் தீபாவும் ராம் அண்ணாவும் வரேன்னு சொன்னாங்க. நீங்க போயிட்டு வரதுனா வாங்க'' என்றாள் மயூரி.

''இல்லையில்லை. நாங்க ஈவ்னிங் போயிருக்கிறோம். சொல்லு. நாங்களும் ஏதாவது செய்றோம். நீ போய் அங்கே உட்கார்'' என்றான் அக்கறையாக.

''சொன்னால் கேட்கவே மாட்டேங்கறாப்பா. போ. கூட்டிக்கிட்டுப் போ'' என்றார் அங்கிருந்த விசாலாட்சி.

மஞ்சரியும் மேகலாவும் ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்டனர்.

''மஞ்சரி! முதல்ல நீ உங்க மாமாவை இங்கேயிருந்து கூட்டிகிட்டு போ'' என்றாள் மயூரி.

மஞ்சரி, ''ஏன்? நாங்க எல்லோரும் வேணா வெளியே போயிடறோம். என்ன மாமா?'' எனவும், மேகலா, ''சும்மா இருடி. இங்கே ஒண்ணும் வேலையில்லை மாப்பிள்ளை. மயூரியும் ஒண்ணும் செய்யலை. சும்மா தான் பார்த்துக்கிட்டு இருக்கா'' எனவும், அரை மனதாக அடுப்படியிலிருந்து வெளியேறினான் விஷ்ணு.

சிறிது நேரத்தில் ராமும் தீபாவும் அவர்களின் இரண்டு மாதக் குழந்தை கோதையுடன் வந்தனர். நலம் விசாரித்து முடித்து, எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் போது

ராம், ''விஷ்ணு! என் பிட்டர் ஹாஃப்.. சாரி சாரி பெட்டர் ஹாஃப்பும், என் பொண்ணு கோதையும் சேர்ந்து என்னை படுத்தற பாடு இருக்கே? எப்போ பார்த்தாலும் சிணுங்கல்... தூக்கியே வைச்சிருக்கணும்னு'' என்று அழும் தன் குழந்தையை தூக்கிக் கொஞ்சியபடியே சொன்னான்.

உடனே தீபா வெகுளியாக, ''என்ன ராம்? நான் தூக்கியே வைச்சிருக்கணும்னு சொன்னதே கிடையாதே? ஏன் இப்படி..'' என்று சொல்லி முடிப்பதற்குள் சுற்றி இருந்த மற்றவர்கள் சிரித்தார்கள்.

ராம் தன் மனைவியை காதலுடன் ஏறிட்டு, ''என் பொண்ணு கூட சீக்கிரமே வளர்ந்துடுவா போல இருக்குடா. ஆனால் என் மனைவி... ம்ஹூம்..'' என்று சொல்லி சிரித்தான்.

தீபா ஒன்றும் புரியாமல் அப்பாவியாக, ''இப்போ நான் என்ன சொல்லணும் மஞ்சரி?'' என்று தன் ஆசானை துணைக்கு அழைத்தாள்.

இப்பொழுதெல்லாம் மஞ்சரி தான் தீபாவிற்கு ஆசான். விளக்கம் தருவதற்கும், ராம்-விஷ்ணு கூட்டணிக்கு பதில் தருவதற்கும் இலவசமாக மஞ்சரியிடம் தான் பயிற்சி.

''தீபா! இதெல்லாம் நீயே தான் சமாளிக்கணும்'' என்று தோளைக் குலுக்கிவிட்டு விழாவிற்கு தேவையானதை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் மஞ்சரி.

''ராம் தான் எப்போ பார்த்தாலும்..'' என்று தீபா தொடங்கவும், ''அம்மா! தாயே புண்ணியவதி! தெரியாமல் சொல்லிட்டேன். இனிமேல் சொல்லவே மாட்டேன்!'' என்று எங்கே சபையில் வைத்து தன் மனைவி எல்லாவற்றையும் எடுத்துவிட்டு விடுவாளோ என்ற

பயத்தில் கோதையை விஷ்ணுவிடம் கொடுத்துவிட்டு கையெடுத்துக் கும்பிட்டான் ராம்.

''ஹையா! சமாளிச்சுட்டேன் பார்த்தியா மஞ்சரி!'' என்று தீபா வெற்றி வாகை சூடும் ஆசையில் சொல்ல வும் முன்னைவிட அதிகமாகவே சிரித்தார்கள்.

கோதை கூட தன் பொக்கை வாயைத் திறந்து புன்னகைத்தது கொள்ளை அழகாக இருந்தது.

''அம்மாடி! போதும் ராசாத்தி! நீ உன் கே.வி. அண்ணனிடம் ஏதாவது கதை கேளு'' என்று நண்பனை மாட்டிவிட்டான் ராம்.

''ஏன்டா? இப்போவெல்லாம் தீபா எல்லா கதையை யும் ஃபிங்கர் டிப்ஸில் வைச்சிருக்கா. முன்னாடி மாதிரி எல்லாம் சொல்ல முடியலை'' என்று புன்னகைத்து விட்டு மயூரியைப் பார்த்து சிரித்தான்.

''நீங்க தான் எல்லா படத்திலேர்ந்தும் கதையை எடுத்து ரீல் சுத்தினா.. எனக்கு கதையெல்லாம் தெரியா தாக்கும். நான் கேட்க மாட்டேனே? மயூக்கா கையில் இருக்கிற மருதாணி ஏன் கலைஞ்சிருக்குன்னு நான் கேட்கவே மாட்டேனே? அதுக்கும் ஏதாவது தமிழ் பட டைரக்டர் படம் எடுத்து வைக்காமலா இருந்திருப்பார்?'' என்று நீண்ட வசனம் தீபா பேசவும் சிரிப்பலை மீண்டும் எழுந்தது.

மருதாணியின் சிகப்பை விட மயூரியின் கன்னங் களில் இருந்து நாணத்தால் ஏற்பட்ட சிகப்பு கூடுதல் அழகாய் இருந்தது.

விஷ்ணு, ''இதெல்லாம் லேட்டஸ்ட் மருதாணி ஃபேஷன். குர்த்தா-குர்த்தி பத்தி தெரியாதவங்களுக் கெல்லாம் இதைப் பத்தியும் தெரியாது'' என்று தன்

மீசையில் இருக்கும் மண்ணை அவசரமாகத் துடைத்துக் கொண்டான். கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையே?

''அப்படியா மயூக்கா?'' என்று தீபா கேட்கவும் மயூரி புன்னகை மட்டும் சிந்தினாள்.

சிரிப்பும், பேச்சுமாக அனைவரும் கூடியிருந்தது மயூரி கருவுற்ற மூன்றாம் மாதத்தில் நடத்தும் பூச்சூடல் விழாவிற்காக, பெரிய விழாவாக எடுக்கவில்லை என்றாலும் முக்கியமான உறவுகளையும், நண்பர்களை யும் அழைத்து ஏற்பாடு செய்திருந்தனர்.

மேகலா, தன் மகளுக்கு செய்ய வேண்டிய எல்லா விசேஷத்தையும் செய்து அழகு பார்க்க வேண்டும் என்று எல்லாம் முறைப்படி செய்தார். ஐந்தாம் மாதம் பால் கஞ்சி, ஏழாம் மாதம் சீமந்தம், ஒன்பதாம் மாதம் வளைக் காப்பு என்று இப்பொழுதே நீண்ட பட்டியல் வாசித்துக் கொண்டிருந்தார்.

பூச்சூடல் விழாவிற்கு குறித்த நல்ல நேரமும் வர, மயூரியை அலங்கரித்து அழைத்துக் கொண்டு வந்து மனையில் உட்கார வைத்தனர்.

விஷ்ணு பொட்டிக் கடையில் முதன் முதலாகப் பார்த்திருந்த மயில் எம்ப்ராய்டரி புடவையையே மனைவிக்காக இந்த விழாவிற்கு தேர்வு செய்திருந்தான்.

மயூரியின் அழகு தாய்மை அடைந்ததில் கூடுதல் பொலிவுடன் மிளிர்ந்தது.

காதலுடன் மனைவியையே ரசித்துக் கொண்டிருந் தான் விஷ்ணு. மூத்தவர் லஷ்மி பாட்டி முதல் விசா ... வரை மயூரியின் கூந்தலில் பூச்சூடி, நலுங்கு

வைக்க கணவன் என்கிற முறையில் விஷ்ணுவையும் பூச்சுட அழைத்தனர்.

தன் மனைவிக்கு பூச்சூடும் தருணத்தில் விஷ்ணுவின் நெஞ்சம் காதலில் பூரித்ததை அவனது கண்கள் பிரதிபலித்தன.

பூச்சூடல் முடிந்ததும் விசாலாட்சியின் கோரிக்கையை ஏற்று பூரணி, "அலைபாயுதே கண்ணா!" என்று பாடத் தொடங்க மற்ற விருந்தினர்களில் ஒரு சிலருக்கு தங்களுக்குத் தெரிந்த பாடலை பாடி மயூரியை மகிழ்வித்தனர்.

மயூரி, 'வினு! அந்தப் பாட்டை பாடுங்களேன், எனக்காக!' என்பது போல் கணவனைப் பார்க்க விஷ்ணுவும் புரிந்து கொண்டு பாடத் தொடங்கினான். அந்த ஆனந்தமான தருணத்தில் மனைவியின் கோரிக்கையை ஏற்காமலா?

"நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா!
நின்னைச் சரணடைந்தேன்!
நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்.

பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்
என்னை கவலைகள் தின்ன தகாதென...
நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்.

மிடுமையும் அச்சமும் மேவி என் நெஞ்சில்
குடிமை புகுந்தன, கொன்று [illegible]

நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்.

துன்பம் இனி இல்லை, சோர்வில்லை
சோர்வில்லை, தோற்பில்லை
அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட
நல்லவை நாட்டிட, தீயவை ஓட்டிட
நின்னைச் சரணடைந்தேன், கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்."

விஷ்ணு பாடி முடித்ததும் மயூரிக்கு கணவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

அந்த விழாவில் விதம் விதமாக உணவு தயாரிக்கப்பட்டுப் பரிமாறப்பட, மஞ்சரி, மோகன், வள்ளி என்று அனைவரும் விருந்தினர்களை உபசரிப்பதில் கவனம் செலுத்தினர்.

வள்ளி இப்பொழுது 'மயூரி கலெக்ஷன்ஸ்' பொட்டிக் ஷாப்பிலேயே வேலை செய்துக் கொண்டிருந்தாள். மயூரிக்குத் தொடக்கத்தில் உதவியாய் இருந்தவள், இப்பொழுது தன் திறமையையும் வளர்த்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறாள்.

விருந்தினர்கள் முன்னிலையில் விஷ்ணுவைக் கட்டிக் கொள்ள முடியாதே என்று தவித்த பொழுது தீபா தான் புகைப்படம் எடுப்பதாகச் சொல்லி உதவிக்கு வந்தாள்.

"அண்ணன்! வாங்க.. வாங்க! உங்க ரெண்டு பேருக்கும் போட்டோ செஷன். இன்னைக்காவது ஆர்ட் ஷோவில் தயங்கின மாதிரி இல்லாமல் ரெண்டு பேரும்

நல்லா சேர்ந்து நில்லுங்க பார்ப்போம்.'' என்று கேமராவை எடுத்து வைத்துக் கொண்டு சொல்லிக் கொண்டிருந்தாள்.

ராம், ''அப்போவே குட்டி விஷ்ணு, மயூரிக்கு முன் யோசனையா இடம் விட்டு நின்ற என் நண்பன் இப்போ அப்படியெல்லாம்...'' என்றவன் முடிக்காமலேயே நிறுத்திவிட்டான்.

ஏனெனில் அங்கே விஷ்ணுவை மயூரி அணைத்து அவன் மார்பில் சாய்ந்தபடி இருக்கும் புகைப்படத்தை தீபா எடுத்துக் கொண்டிருந்தாளே?

ராம், ''டேய்! நண்பா! இருந்தாலும் நீ ஊமை படமெல்லாம் ஓட்றதை இன்னும் நிறுத்தலையா?'' என்று கமென்ட் சொல்லவும் தான் லேசாக மயூரி தன் கணவனிடம் இருந்து விலகினாள்.

''மனு! நம்ம தான் ஒரு நாளைக்கு நாலு காட்சிகள் இல்லையா?'' என சளைக்காமல் கிண்டல் செய்யவும் அவன் நெஞ்சில் வலிக்காமல் குத்திவிட்டு நகர்ந்துவிட்டாள் மயூரி.

விழா முடிந்து புடவையை மாற்றிக் கொள்ள போகலாமா என்று மயூரி பார்க்க, விஷ்ணு அவளுக்கு மட்டுமே புரியும் வகையில் 'வேண்டாமென்று' கண் ஜாடை செய்தான். தன் கணவனின் முகத்தில் தெரிந்த காதலில், அன்பில் மகிழ்ந்தவள், சந்தோஷத்துடனே வளைய வந்தாள்.

சற்று நேரம் சென்று விருந்தினர்கள் அனைவரும் சென்ற பிறகு விஷ்ணுவும், மோகனும் ஷாப்பிங் கிளம்ப முடிவு செய்தனர்.

மயூரியிடம் வந்தவன், ''நான் சொல்றதுக்கு இல்லை என்றதும் இந்த புடவையை மாத்தி...

இன்னைக்கு இதோட இரு செல்லம்ஸ்'' என்று ரகசியம் சொல்லிவிட்டுத் தான் சென்றான்.

தீபாவும் ராமும் கோதையுடன் இரவு உணவு உண்டு விட்டு கிளம்பிச் சென்றனர்.

இரவு வேலைகளை முடித்துவிட்டு மயூரியைத் தன் கையணைப்பிலேயே தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றான் விஷ்ணு.

அறைக்கு வந்து கதவைச் சாற்றியவளை இறுக அணைத்துக் கொண்டான். மயூரிக்கும் அவன் மன நிலை புரிய, மன நிறைவோடு அவனுடன் ஒன்றினாள். சடங்கு ஆரம்பித்ததில் இருந்து தன் கணவனின் பார்வை தன்னையே சுற்றி வந்ததை உணர்ந்தே இருந்தாள் மயூரி.

அவள் நெற்றியில் முத்தமிட்டு, ''தேங்க்ஸ் டா செல்லம். நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? உன்கிட்ட என்னோட அன்பை சொல்லி... அதை நீ ஏத்துக்கிட்ட அன்றைக்கு, நமக்கு கல்யாணமான நாள், நான் அப்பாவாக போறேன் என்று தெரிந்த நாள்.. இப்போ இன்றைக்கு. தேங்க்ஸ் டா'' என்றான் மிருதுவாக.

ஒன்றும் பேசாமல் அவனை மென்னகையுடன் பார்த்துவிட்டு இன்னமும் அழுத்தமாக அவன் தோளில் சாய்ந்தாள் மயூரி.

அவளைத் தன் வலுவான கரங்களில் ஏந்திக் கொண்டே போய் கட்டிலில் கிடத்தியவன், தான் சாய்ந்தவாறு உட்கார்ந்துக் கொண்டு அவளைத் தன் மார்பின் மேல் சாய்த்துக் கொண்டான்.

''இந்த சேலையில் நீ எவ்வளவு அழகா இருக்கேன் தெரியுமா மனு? உன் பெயருக்கு ஏற்ற மாதிரியே மயில்

வண்ண சேலை, அதை கட்டியிருக்கவங்களும் அழகு... அதை வடிவமைச்சவங்களும் அழகு'' ஒரு விரலால் அவள் கன்னத்தில் கோலம் போட்டவாறே கொஞ்சினான் விஷ்ணு.

மெல்ல தன் உதட்டை வருடும் விரலைக் கடித்தவள் கிசுகிசுப்பாக, ''ம்ஹூம்... அதை எனக்கு வாங்கித் தந்தவங்க தான் அழகு. ரொம்ப அழகு'' அவன் மார்பில் அழுத்தமாக முத்தம் ஒன்றை வைத்து, ''இங்கே ரொம்ம்ப ரொம்ம்ப அழகு'' என்று மீண்டும் அங்கே உதட்டைப் பதித்து உணர்ச்சி வசப்பட்டாள்.

அவளை ஒரு வேகத்துடன் இழுத்து அவள் அதரங்களை சிறை செய்தவன்... மூச்சுக் காற்றுக்கு அவசியம் ஏற்பட்ட போது தான் விடுவித்தான்.

தன் கழுத்து வளைவில் முகம் புதைத்திருந்தவளின் முதுகை ஆதரவாக வருடியவன், ''ஐ லவ் யு டா கண்ணம்மா!'' என்றான்.

சில நிமிடங்கள் லேசான கொஞ்சல்களிலும் வருடலிலும் இனிமையாக கரைந்தன.

''மனு! நீ இன்னும் உன் ஆசையை சொல்லவேயில்லை? நேத்துல இருந்து கேட்டுக்கிட்டே இருக்கேன் இல்ல? அதைப் பத்தி நேத்து பேசலாம்னா நீ அதுக்குள்ள தூங்கிட்ட. எனக்காக சொல்லுடா.''

அவனின் மார்பை வருடிய கரம் ஒரு கணம் நின்று பின் திரும்ப தன் வருடலைத் தொடர்ந்தது.

அந்த ஒரு நொடி தயக்கத்தை உணர்ந்தவன், அவள் கரத்தை எடுத்து இதழ் ஒற்றி, தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டான்.

''என்னடா தயக்கம்? ம்ம்.. எதுவானாலும் சொல்லு. என்னால் முடிஞ்சா கண்டிப்பா செய்றேன்'' என்றான்.

''இல்லை... நம்ம ட்ரஸ்டில் இருந்து உதவித் தேவைபடறவங்களுக்கு ஹெல்ப் செய்றோம் இல்லையா? அது மாதிரி வாழ்விழந்த பெண்களுக்கும் நாம உதவி செய்யலாமே வினு? ஒரு அமைப்பு மாதிரி உருவாக்கி, அங்கே அவங்களுக்கு தேவைப்படும் உதவியை, நம்மால் முடிஞ்சதை செய்யலாமே? சும்மா பண அளவில் மட்டும் அந்த உதவி நிற்காம, அவங்க சுய தொழில் செய்யவோ, இல்லை கவுன்சலிங் வேணும்னா கவுன்சலிங்குக்கு ஏற்பாடு செய்றதுன்னு.. நாம செய்யலாமே?'' என்றாள் மயூரி.

மயூரிக்கு விஷ்ணு கிடைத்தது போல் எல்லாருக்கும் கிடைப்பது சாத்தியம் என்று சொல்ல முடியாது. ஆனால் பெண்களுக்காக உருவாக்கும் அமைப்பு ஏதாவது ஒரு வகையில் உதவிக்கரமாய் இருக்கும் இல்லையா?

அவளைப் பெருமையுடன் பார்த்தவன், ''ரொம்ப நல்ல விஷயம் தான் மயூ. கண்டிப்பா செய்யலாம். நாமே கூட நம்மால் முடிஞ்ச நாளைக்கு கண்டிப்பா அங்கே போய் ஃபிஸிக்கல் ஹெல்ப்பும் செய்யணும்'' என்றான் ஆர்வமாக.

மகிழ்ச்சியுடன் அவன் தாடையில் முத்தமிட்டவளைப் பார்த்து புன்னகைப் புரிந்தவன், ''என்ன பேரு வைக்கலாம்? மயூரி டிரஸ்ட் என்று புதுசா ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டான்.

''ம்ஹூம். வேண்டாம் வினு. மயூரி கலெக்ஷன்ஸ் என்று தானே நான் பொட்டிக் நடத்தறேன்? கோதை டிரஸ்ட் என்று வைக்கலாமா?'' என்று கண்கள் மின்ன கேட்டாள்.

''ரொம்ப சரி. ராமையும் சேர்த்துக்கலாம். வெரி குட் மயூ!'' என்று அவளைப் பாராட்டினான் அவள் கணவன்.

''தேங்க்ஸ் வினு!'' சந்தோஷத்துடன் கூறியவளைக் குறும்பாகப் பார்த்தான் விஷ்ணு.

அவனின் பார்வையில் மாற்றத்தை உணர்ந்து மயூரி லேசாக முகம் சிவக்க, கிசுகிசுப்பான குரலில், ''என்ன?'' என்று அவள் கன்னத்தை புறங்கையால் வருடிக் கொண்டே கேட்டாள்.

''உன் வினுக்கு தேங்க்ஸ் எல்லாம் இப்படி தான் சொல்றதா மனு? ம்ம்..?'' புருவத்தை உயர்த்திக் கேட்டவனிடம்,''பின்னே எப்படி சொல்லுவாங்களாம்?'' என்று கேட்டாள் மயூரி.

அவனின் கரங்கள் அவள் கழுத்தை வருடிக் கொடுத்துக் கொண்டிருக்க, ''நான் எப்படி சொன்னேனோ அப்படி தான் சொல்லணும்'' என்றான் சிரிப்புடன்.

''நான் சரியா அதை கவனிக்கலை போல. எனக்கு மறந்துடுச்சு'' சிரிப்பை அடக்கியபடிக் கூறினாள் மயூரி.

''அட... விஷ்ணு நீ வேஸ்ட் டா. நீ ரொம்ப தத்தி ஸ்டூடண்ட் மயூ!'' என்றவன், சிரிப்புடன், ''சோ உனக்கு இன்னைக்கு பனிஷ்மென்ட். நோ க்ளாஸ் டுடே!'' என்று கண் சிமிட்டினான்.

அவன் நெஞ்சில் குத்தியவள், ''ரொம்ப நல்லது. குட் நைட்'' என்று திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

''ஹே! இது ரொம்ப அநியாயம்டி'' என்றவன், ''இரு! முதலில் பாப்பாவுக்கு குட் நைட் சொல்லிட்டு வந்து உன்னை கவனிச்சிக்கிறேன்'' என்று குனிந்து அவள்

வயிற்றில், ''குட் நைட் குட்டி மனு! ஸ்லீப் டைட்!'' என்று சொல்லி முத்தமிட்டான்.

இப்பொழுது மயூரியின் பார்வையில் செல்ல கோபம் தெரிய, ''சரி சரி! குட் நைட் குட்டி வினு! ஸ்லீப் டைட்!'' என்று சொல்லி மீண்டும் அழுத்தமாக முத்தமிட்டான்.

''நம்ம தான் ஏற்கனவே டீல் வைச்சிருக்கோம் இல்ல கண்ணம்மா? அதனால்.. குட் நைட் குட்டி மனு, குட் நைட் குட்டி வினு! ஸ்லீப் டைட்!'' என்று இப்பொழுது முத்தத்தின் எண்ணிக்கை அதிகரிக்க மெய் சிலிர்த்தாள் மயூரி.

தன் வயிற்றில் இருந்த கணவனின் கேசத்தில் விரல்களை விட்டு அளைந்தவளை நிமிர்ந்து அன்புடன் பார்த்தான் விஷ்ணு.

''உங்க ஸ்ட்ராட்டஜி எனக்கு தெரியாதாக்கும்? ஒண்ணுன்னு ஆரம்பிச்சு இப்போ...'' என்று சிணுங்கியவளின் இதழ்களில் லேசாக இதழ் ஒற்றினான்.

பின்பு கேலியாக, ''உனக்கு பொறாமை! உன்னால் குட்டீஸ்க்கு முத்தம் கொடுக்க முடியலையேன்னு பொறாமை!'' என்று மெல்ல அவளை நோக்கி குனிந்து அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

''யார் சொன்னா என்னால் குட்டீஸ்க்கு முத்தம் கொடுக்க முடியாதுன்னு? கொடுக்கவா?'' என்றவள் அவன் மார்பில் முத்தம் தந்து அர்த்தப் பார்வைப் பார்த்தாள்.

மயூரி வயிற்றில் சுமந்தால் விஷ்ணு நெஞ்சில் சுமக்கிறானே?

அவளது செய்கையில் நெகிழ்ந்தவன் மயூரியை செல்லமாக கடித்து, ''இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை? திரும்பியா படுக்கிறே? உன்னை...'' என்று கிசுகிசுத்தான்.

மெதுவாக அவளைத் தன் புறம் திருப்பியவன், அவள் முகத்தில் தன் விரல்களால் நெற்றி, கண், மூக்கு, உதடு என்று முகமெங்கும் பாதை வகுத்தான். துடிக்கும் அவள் உதடுகளில் சில நொடிகள் விரல்கள் இளைப்பாற, அதற்கு மேல் தாங்காது என்பது போல் அவனின் இதழ்கள், விரல் ஏற்கனவே வகுத்த பாதை வழியே மெல்ல மெல்ல முன்னேறி, தங்கள் இறுதி இலக்கை எட்டியது. அதுவரை வந்ததே பிரம்ம பிரயத்தனம் போன்று தங்கள் இணையைக் கண்டுவிட்ட சந்தோஷத்தில் அங்கிருந்து அவனின் இதழ்கள் இப்போதைக்கு விலகுவதாகவும் தெரியவில்லை.

ஆனால் நாம் இங்கிருந்து அவர்களுக்கு தனிமை கொடுத்து விலகிக் கொள்வோம்.

மனம் விரும்பியவர்களை, தங்கள் மனதை விரும்பியவர்களைக் கரம் பற்றி அன்பு நெறியில், துன்பமும் சோர்வும் இல்லாமல் என்றும் மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்தும் அந்த இனிய தம்பதிகளிடமிருந்து நாம் இங்கே விடை பெறுவோமாக!!!